உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

கருவூர்ப்புராணம்.

கருவூர்ப்புராணவசனம்.

இவை

கோயமுத்தூர் வித்துவான்

கந்தசாமிமுதலியார் அவர்களாலும்

நேகமம் வித்துவான்

முத்துநாகப்பமுதலியார் அவர்களாலும்

திருத்தப்பட்டு

ஷை கந்தசாமிமுதலியார் அவர்களால்

சென்னை:

இந்து தியலாஜிகல் யந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டன.

விரோதிஸு ஆடிமீ

விலை ரூபா-க.

உ

சிவமயம்.

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

திருக்கருவூர்த்திருவானிலை.

பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

தொண்டெலாமலர்தூவியேத்தநஞ்
சுண்டலாருயிராயதன்மையா
கண்டனார்கருவூருளானிலை
யண்டனாரருளீயுமன்பரே. (க)

நீதியார்நினைந்தாயநான்மறை
யோதியாரொடுங்கூடவார்குழைக்
காதினார்கருவூருளானிலை
யாதியாரடியார்தமன்பரே. (உ)

விண்ணுலாமதிசூடிவேதமே
பண்ணுளார்பரமாயபண்பினர்
கண்ணுளார்கருவூருளானிலை
யண்ணலாரடியார்க்குநல்லரே. (ங)

முடியர்மும்மதயானையீருரி
பொடியர்பூங்கணைவேளைச்செற்றவர்
கடியுளார்கருவூருளானிலை
அடிகள்யாவையுமாயவீசரே. (ச)

பங்கயம்மலர்ப்பாதர்பாதியோர்
மங்கையர்மணிநீலகண்டர்வான்
கங்கையார்கருவூருளானிலை
யங்கையாடரவத்தெம்மண்ணலே. (ரு)

தேவர்திங்களும்பாம்புஞ்சென்னியின்
மேவர்மும்மதிலெய்தவில்லியர்
காவலர்கருவூருளானிலை
மூவராகியமொய்ம்பரல்லரே. (௬)

பண்ணினார்படியேற்றார்நீற்றர்மெய்ப்
பெண்ணினார்பிறைதாங்குநெற்றியார்
கண்ணினார்கருவூருளானிலை
நண்ணினார்நமையாளுநாதரே. (௭)

கடுத்தவாளரக்கன்கயிலையை
யெடுத்தவன்றலைதோளுந்தாளினா
லடர்த்தவன்கருவூருளானிலை
கொடுத்தவன்னருள்கூத்தனல்லனே. (௮)

உழுதுமாநிலத்தேனமாகிமா
றொழுதுமாமலரோனுங்காண்கிலார்
கழுதினான்கருவூருளானிலை
முழுதுமாகியமூர்த்திபாதமே. (௯)

புத்தர்புன்சமணாதர்பொய்யுரைப்
பித்தர்பேசியபேச்சைவிட்டுமெய்ப்
பத்தர்சேர்கருவூருளானிலை
யத்தர்பாதமடைந்துவாழ்மினே. (௧௦)

கந்தமார்பொழிற்காழிஞானசம்
பந்தன்சேர்கருவூருளானிலை
யெந்தையைச்சொன்னபத்தும்வல்லவர்
சிந்தையிற்றுயராயதீர்வரே.

திருச்சிற்றம்பலம்.

௳

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கருவூர்ப்புராணம்.

பாயிரம்.

கணபதி வணக்கம்.

இன்னதிப்பெற்றித்தோன்றற்கேற்பனவிலையென்றேது
மன்னுமப்பொருளியாவுமலைவறத்தெரியுமாறு
முன்னவன்புழைக்கைநால்வாய்முக்கணன்செக்கர்மேனிப்
பொன்னவிர்கமலம்பூத்தபூங்கழல்போற்றிசெய்வாம். (௧)

பாயலுந்திருவுமுந்திப்பாலனுந்துயிலுஞ்செங்கண்
மாயனும்வேறுவேறுதிசைதிசைமயங்கிமாழ்கத்
தூய்பாற்கடலைவாங்கித்துதிக்கையாற்சிதறுந்தெய்வ
நாயகற்கன்புசெய்துநான்றமிழ்நடத்தலுற்றேன். (௨)

சபாபதி.

வேறு.

நீர்தந்தகமலமலரயனெடுமாலமரர்தருநீழல்வைகும் [றக்
போர்தந்தகுலிசன்முதலியர்பரவப்புலியுமொருபணியும்போற்
கார்தந்தகுழலிமயவனிதைமுகமலர்ந்துவிழிகளிப்பநாளுஞ்
சீர்தந்தகனகமணிமன்றுளெம்பேரொளியைச்சிந்தைசெய் (௩)

பசுபதீச்சுரர்.

மேவருதத்துவசித்தியடைந்துதத்தமெய்யுணர்ந்துவிமல ஞான, மூவகையாருயிர்விளங்கிமுதிருமன்பால்வழங்குமொ ருமுத்திவாழ்வைப், பாவனைகடந்துநின்றபரஞ்சுடரைப்பசுப திநாயகனைமுன்னைத், தேவர்கடேவைக்கருவூர்ச்சிவக்கொழுந் தையிதயமலர்திகழவைப்பாம். (உ)

வடிவுடையம்மை.

நதிகாட்டும்புனற்கழனிவளங்காட்டவறங்காட்டுநலஞ்சே ர்வஞ்சிப், பதிகாட்டும்பசுபதியோரிடங்காட்டவலங்காட்டும் பரையைமேலாங், கதிகாட்டுங்கருங்குயிலையருள்காட்டுங்கய பிரண்டுகாட்டுந்தூய, மதிகாட்டுமடமயிலைவடிவுடையநாயகி யைவணங்கிவாழ்வாம். (௩)

தலவிநாயகர்.

அஞ்சுளாரணியெழுத்தோராறுளார்சடையிற்கண்ட
நஞ்சுளாரணியபாகநயந்துளார்ஞானம்பூத்த
நெஞ்சுளாரணிபயந்தநிறைமதக்கவுட்டுநால்வாய்
வஞ்சுளாரணியமேவுங்களிற்றினைவழுத்தல்செய்வாம். (௪)

முருகக்கடவுள்.

உரைதருசுருதிவேதவுபநிடதத்தினுச்சிப்
பரையருள்விழிகளிப்பப்பார்விசும்புய்யத்தோன்றி
வரைபகமுருக்கிவெஞ்சூர்மாமுதறடிந்துமுந்நீர்க்
குரைகடல்குடித்தவைவேற்குமரனுக்கன்புசெய்வாம். (௫)

நந்திதேவர்.

அந்திவான்பிறையுமானுமடன்மழுப்படையுமேந்திச்
சந்திவீழுரிவைபோர்த்ததனிமுதலுருவந்தாங்கிப்
புந்திமாலகலஞானபோதகவெயில்விரிக்கு
... ஈரவிநாடிநமதிருணவிவுசெய்வாம். (௬

பாயிரம்.

திருஞானசம்பந்தர்.

பொன்புனைகமலச்செல்விபோற்றுபேரெழிலூர்தூய
வன்புநல்லறமுங்கற்புமவயவமாகஞான
முன்புருவுமைந்தபேதைமுற்றியவென்புக்காவி
பின்பருளிபுரிந்தகாழிப்பிள்ளைதாட்கன்புசெய்வாம். (௭

திருநாவுக்கரசர்.

சூழிமால்யானைதாழப்பிணித்தகற்றுணைந்தாழா
தாழிவாய்மிதப்பமேலாமைந்தெழுத்துணர்வினோங்கிக்
காழிவாழ்ஞானம்பூத்தக்கவுணியக்கொழுந்தைநட்ட
வாழிவாகீசர்வாசமலர்ப்பதம்வணங்கல்செய்வாம். (௮

சுந்தரமூர்த்தி.

வெள்ளியங்கிரியைநீங்கிநாவலூர்மிளிரத்தோன்றி
யொள்ளியதோகைபாகன்சாதனத்தோட்டிக்குள்ளாய்த்
தெள்ளியபரவையாழ்ந்துசங்கிலிசிமிழ்ப்புற்றுசு
தள்ளியகளிற்றின்பாததாமரைதலைமேற்கொள்வாம். (௯

மாணிக்கவாசகர்.

துன்றிருணீங்குமாறுஞ்சுடரொளிதோன்றுமாறு
முன்றிருமறைகாணாதமுதலெழுந்தருளிப்பார்மேற்
றன்றிருஞானபாதமளித்தலுந்தனையுணர்ந்த
தென்றிருவாதவூரன்சேவடிசென்னிசேர்ப்பாம். (௧௦

தண்டியடிகள் மற்றை நாயன்மார்.

உண்டிதானஞ்சமணர்சேடமுண்டுயர்வுபூண்ட
தண்டிதாள்போற்றிசெய்துதனிமுதல்விழியிற்றோன்றுங்
கண்டிதார்மார்புதிண்டோள்கரங்களங்கன்னஞ்சென்னி
கொண்டுதாமணிவோர்யாரேயவர்பதங்குறித்துவாழ்வாம். (௧௧

பூதிசாதனர்.

தெண்டிரைப்புவனிவானம்பாதலந்திகழ்வோர்தம்மிற்
பண்டிருவருங்காணாதபரமனுக்கன்புபூண்டு
வெண்டிருநீறுபால்வெண்ணிலவெனமிளிரப்பூசி
மண்டிருள்சீக்குந்தொண்டர்பதமலர்வழுத்தல்செய்வாம். (௧௨

இதுவுமது.

அக்கமாமணிவெண்ணீறைந்தெழுத்திவையடைவுசேரத்
தக்கபேரன்பினூர்ந்துதரித்துணர்ந்தவர்தம்பாதச்
செக்கமலத்துக்கேற்றபணிவிடைதிருத்தினோர்தாம்
புக்கவர்க்கேவலாற்றும்புனிதர்தாள்போற்றிபோற்றி. (கங)

எறிபத்தர்.

மறிவைத்தகரனுக்கன்பர்கொடுவருமலரைச்சிந்தும்
வெறிவைத்தகளிரும்பாகும்வீடவெங்கணிச்சிவீசிச்
செறிபத்தரிடையூறீர்ந்துசிவநெறிவழாதுசெய்யு
மெறிபத்தரிணைத்தாளுள்ளத்திருத்தியெம்மிடர்கடீர்வாம். ()

புகழ்ச்சோழநாயனார்.

அளவிலாநிலைநாதற்குச்சேதிமமாதியாற்றிக்
களமதினோராகீர்ந்தசடைத்தலைகாண்டலும்பொற்
கிளர்முடிமிசைபரித்துக்கேழ்கிளரெரியின்மூழ்கும்
வளர்புகழ்ச்சோழனார்தம்மலரடிமுடிமேல்வைப்பாம். (கரு)

கருவூர்த்தேவர்.

ஊர்ந்தனங்கருவூரன்னையுதரத்திலினியூராமை
சார்ந்தனங்கருவூரென்னத்தவந்தினைத்தாற்றித்தக்கோ
ரார்ந்தநங்கருவூரெந்தையாணிலையடிகள்பாதஞ்
சேர்ந்தநங்கருவூர்த்தேவர்சேவடிசென்னிசேர்ப்பாம். (கசு)

அகம்படிமைத்தொண்டர்.

பிணித்தபூங்கொடிசூழ்வஞ்சிப்பிஞ்ஞகனினிதுவைகு
மணித்தகடிமைத்தசோதிவயங்குபொற்சினகரத்தி
னணித்தனபதிபோல்வாழ்க்கையடைந்தகம்படிமையாகப்
பணித்தகுற்றேவலாற்றும்பரிசனர்பதங்கள்போற்றி. (கள)

மெய்கண்டசந்தானத்தார்.

மொழிவழியொழுகுமன்பர்முன்புறுகருப்பையுந்திச்
சுழிவழியிழியாவண்ணந்துணைப்பதமிதவைநல்கி
விழிவழியருளினேற்றுமெய்கண்டசந்தானத்து
வழிவழிவருவோர்காமர்சேவடிவணங்கிவாழ்வாம். (கஅ)

...ஞானியார்.

கதமலமுவிற்றே... ழூதினங்கருதுர்தூயர்
சிதமலரிதயவாவிமுகிழ்ப்பினுஞ்சிவபுரக்கோ
சதமலர்வதனவாசான்சத்தியஞானிஞானப்
பதமலர்தமியேனுள்ளத்தடங்கமழுபான்மைத்தாமால். (கக)

புராணவரலாறு.

வேறு.

அரனருட்கொண்டருணந்திசனற்குமரர்க்குரைப்பவவர் வியாதர்க்கோதத், தரமொடவர்சூதமுனிதனக்குரைத்தபுராணத்துட்டகைமைசான்ற, வுரைகருவூர்ப்பெருமைபலவுயர்பிரமகைவருத்தபுராணத்திற்பார், விரவுசிவக்ஷேத்திரகாண்டத்துபரிபாகத்தில்விளம்புமன்றே. (உ0)

அறையுபரிபாகத்திலீரைம்பானிருநான்குமறைந்தபின்னர், முறையில்வருமத்தியாயத்தி லுரைபெருமைவடமொழியைவிண்ணோ, ரிறையருளின்மூழ்குமறையவர்முதலமுதுக்குறைவோரெவருந்தென்கா, லுறைமலயவரைக்கிழமைத்தவமுனிவனிசைத்தமிழினுரையென்றுறால். (உக)

உரைக்குதியென்றுரைத்தசதுமறைக்கிழவர்முதலியசீருரணிஞ்மிக்கோ, ரிரைக்குமிசைத்தமிழ்புனையிந்நூற்குறைவுதீர்த்தெடுப்பழிரனுந்தீரத்தாற், சருக்கமிருபஃதாலேவகுத்தகவற்பாவினமாய்த்தயங்காநின்ற, விருத்தவியல்யாப்புறுதிபயக்கநல்லோர்வியக்கவெனவிளம்பினேனால். (உஉ)

இந்தநூற்றருவடசொல்வித்துழியங்குரித்தெனதுநாவினெய்துஞ்,சந்தமார்தமிழ்க்கவிதைப்பணையேந்திமெஞ்ஞானச்சாகைதாங்கி, யந்தநாதாந்தவொளியாகிலைநாதன்கருணையணிகாப்பாக, வந்துநீர்வஞ்சிவனத்தொளிபூத்த புராணமெனவளர்ந்ததன்றே. (உ௩)

யாதுகாரணங்கருவூர்ப்புராணமிசைப்பதற்கினாளென் னின்முன்னே, ரோதுகாதைகளனைத்துமத்தலத்திற்பாதகர் சென்றுறினுஞ்சிவன், நீதுருவகைமுத்தராவரிஃதுண்மையெ னுந்திறத்தால்யானுங், கோதுறுதவனெய்தியுய்வதுகாரணமா கக்கூறலுற்றேன். (உச)

முத்தநிரைத்தொளிகவினுமுழுமதிவெண்குடைச்சகரர் முரிமுந்நீ, ரித்தரணிபுரந்ததன்மேன்மூவைஞ்ஞூறெண்ணேந் தாமெல்லையாண்டி, லத்தர்பசுபதிநாதர்சந்நிதானத்திலருளன் பர்கேட்ப, வுத்தமநற்பொருட்கருவூர்ப்புராணநிலைநிற்கவென வுரைத்ததன்றே. (உரு)

நூற்பயன்.

சுருதிமறைதொடராதபசுபதிநாதன்சரிதைத்தொடர்பி னென்று, கருதியுளங்கேட்குநர்தாமுத்தியடைகுவரெனநூல் கழறிற்றென்று, னிருமலராயவைமுழுதுஞ்செவிப்புலனுக்கமு தமெனநிறையநல்கிப், பருதியெதிரிருளின்மலவிருளிரிப்போர் பெறும்பயன்யார்பகரற்பாலார். (உசு)

அவையடக்கம்.

அருள்விரவுசுரபிதருசராசரங்களனைத்தினையுமறிவுநெஞ்ச, மொருவொருபுன்மாப்படைப்பலென மனமுன்னுதன்மா னுமு ரவுநூலிற், பொருவிலர்சொற்றிடுங்கருப்பபுரிவடசொற்புரா ணத்தைப்பொதியவெற்பின், மருவுசெழும்பசுந்தமிழின்வகுத் துரைப்பனெனத்துணிந்துமதித்ததம்மா. (உஎ)

மையறுநூற்கடறினைத்தாகமத்துறையிற்படிந்தமதிவல் லோர்முன்னர், வைதயலலங்காரவதிமூலமுகட்டிற்புணர்பெரு மான்சரிதைவிரூல், வெய்யவன்புல்லியசொல்லும்விழுமியவா ம்விழுமியசெல்வத்தின்மிக்கோர், செய்யபொருண்முடிதகிலு ங்கைக்கொளுவாரப்பொருளின்சிறப்பான்மன்னே. (உஅ)

வேறு.

யானைமுதலடுங்களத்தினெறிபத்தர்நெடுங்களத்தின்
மானவடிவாளிடத்தான்மகிழும்வடிவாளிடத்தான்
கானுறுமான்பொருந்தத்தான்கரங்கொளுமான்பொருந்தத்தா
னணைநகர்வஞ்சியானடையிலருள்வஞ்சியான். (உகூ)

தூயொளிமேவிரும்பரசன்சுரரயன்மால்விரும்பரசன்
காயுவரிவிடமிசைந்தான்கௌரியுறவிடமிசைந்தான்
றீயர்புரம்பொருவில்லான்றேவர்தமிற்பொருவில்லா
னுய்கருவூராகியானிசைகருவூராதியான். (௩0)

ஆனிலையாரவிர்துவசரலரவன்மாலவனகந்தை
யானிலையாரழலுருவமருவிநிமிரணிகருவூ
ரானிலையாரடிகளுக்காளாவீர்காளடன்மேதி
யானிலையார்கூவர்நெடுஞ்சூலடுதொழிற்காளாகீரே. (௩௧)

பாயிரம் முற்றுப்பெற்றது.

வராககிரிச்சருக்கம்.

வேறு.

நீற்றுவாலொளிமேனியின்பாலொளிநிறைவெள்
ளேற்றுவார்கொடியுயரியவிறையவன்சரிதை
சாற்றுவாய்மையன்சூதமாமுனிவரன்றவங்க
ளாற்றுவார்திகழ்நைமிசாரணியத்தையடைந்தான். (க)

அடைந்தவேலையிற்சவுனகராதியாமுனிவர்
மிடைந்துசென்றெதிர்தழீஇக்கொடுமிகவளவளாவி
யுடைந்தவார்கடலொலித்தெனவேத்தெடுத்துரைத்துக்
கிடந்தவன்பொடுகொணர்ந்துதம்மிருக்கையிற்கெழுமி. (உ)

ஆயிடைத்தவிசேற்றிநின்றருக்கியமுதவிச்
சேயிடைப்படர்கவலையின்வருத்தங்கடீர்த்து
நீயிடைப்படயாங்கள்செய்தவமெனநிகழ்த்தித்
தாயிடைப்படாரினியநன்முகமனுஞ்சாற்றி. (ங)

வேதநூற்கடற்கரைகண்டவியாதனேயனைய
சூதமாதவசுதைமதிக்கண்ணிசூழ்வேணிப்
பூதநாயகன்புண்ணியபுராணத்திற்போக்குங்
காதலோமிகவுடையயாங்கழறலொன்றுளதால். (ச)

நன்றுசொல்லினீர்நனிதவமிழைத்துமுக்குறும்பும்
வென்றுநாற்பொருண்மேற்படுகேள்வியின்மிக்கீர்
மன்றுளார்புரிவைதிகசைவத்தின்வழியி
னின்றுளாரலால்யாவரேகதியிடைநிலைப்பார். (ரு)

வேறுதேவுளனுயர்கதிதருமெனவிரும்பி
யூறியாவையும்யாரையும்வந்துழியொடுங்க
வீறுகாண்பவன்மேற்றுவித்தளிக்குவனென்று
லாறுசேர்சடிலத்தனேநித்தனென்றறிதிர். (சு)

சிவன துண்மையைந்தெழுத்துமே திகழ்திருவெழுத்து
சிவனைநோக்கிநின்றூக்கிய தியானமேதியானஞ்
சிவனதன்பருக்காட்படுஞ்செல்வமேசெல்வஞ்
சிவனதக்கநீறணிந்திடுஞ்சின்னமேசின்னம். (௭)

அங்கணன்றலத்தாற்றியவறங்களேயறங்க
டிங்கள்வேணியன் சந்நிதித்தீர்த்தமேதீர்த்தம்
புங்கவன்றனக்காற்றியபூசையேபூசை
சங்கரன்றனையேற்றியசரிதமேசரிதம். (௮)

அன்னவாகலானவிர்மதிக்கொழுந்தமுதிறைக்கும்
பொன்னவாஞ்சடைப்புங்கவன்சரிதையின்முதியோர்
சொன்னவாறுகேட்பதுமுயன்றீருளந்துணிவா
லென்னைநீர்வினவியதனைமொழிமெனவிசைப்பார். (௯)

வாதராயணனருண்மொழிவழிபயில்கேள்விச்
சூதமாதவசுடர்மணித்தொகுதியுமகிலுஞ்
சீதவார்பொழிற்சிகரியிலருவிகொண்டிழியும்
வேதநீடுருவாயதோர்வெள்ளியங்கிரியில். (௧௦)

மாலயன்புரந்தரன்றவம்புரியுமாமுனிவர்
மேலவானவர்தானவர்விஞ்சையரியக்கர்
நூலினுண்ணுணர்வுடையவர்பூசுரர்நோன்மை
சாலுமாதிரக்கிழவருஞ்சென்னிதாழ்ந்திறைஞ்ச. (௧௧)

நிறையுமன்புடன்சனகருநெக்குநெக்குருக
வறைதரும்புகழ்ச்சனந்தரரஞ்சலிதிருத்த
மறைவனந்தருசனுதனர்வணங்கிவாழ்த்தெடுப்பக்
குறைவருஞ்சநற்குமரருட்குழைந்துகைகுவிப்ப. (௧௨.)

உலகெலாந்தரும்பரம்பரையொருமருங்கிருப்ப
வலகினூன்மொழிக்குமரவேணனந்தலையமர
நிலவுநீடுதத்துவம்புணர்ந்தகன்றுநின்மலமா
யிலகுபேரொளிக்குள்ளொளியாகியவிறைவன். (௧௩)

கமைத்தவம்புரிமயன்கண்டுகற்கவுமரிதாச்
சமைத்தபொற்சினகரத்திடைத்தாபதருளம்போ
லமைத்ததூயவத்தாணிமண்டபத்தினுளரிமா
ணிமைத்தமாமணியாதனத்தினிதுவீற்றிருந்தான் (௧௪)

தலைவன்மாமணியாதனத்திருந்துழிதலத்தின்
றொலைவில்கேள்வியன்சநற்குமரன்றொழுதெழுந்து
நிலையினிற்றலுந்திருவுளத்துணர்ந்தருணிமலன்
கலைபயின்றுணர்நந்திபாற்கடைக்கணோக்கருளி. (௧௫)

வருகநந்தியாம்வைகுநற்றலங்களும்வளனு
முருகுமன்பினன்சநற்குமாரன்றனக்குணர்வு
பெருகநீயறைகுதியெனப்பிஞ்ஞகனருளா
லருகணைந்தவம்முனியொடுந்தனதிடனணைந்தே. (௧௬)

எந்தைநின்னுழையருள்சுரந்திசைப்பதற்கியைய
முந்தையெத்துணைத்தவமிழைத்தனன்முனியென்னாச்
சிந்தைவைத்துநற்றானங்கடெளிவுறவோதி
விந்தைசேர்தலப்பெருமையும்விளம்பமேயினனால். (௧௭)

ஓதுதொல்பதியவற்றினுளுதியர்கோனாட்டின்
மீதுயர்ந்தவாம்பிரவதிநதிக்கரைமிசையிற்
றாதுபோதுமிழ்வஞ்சுளாடவியெனச்சாற்று
மாதிமாபுரச்சிறப்பினையன்றுரைத்தனனால். (௧௮)

அம்மநுண்பொருளதன்பயனகத்திளைப்பரிதா
லெம்மனோர்புலன்றெளிவுறவிரித்தினிதெவையுஞ்
செம்மையாலொருபொருளிருகாற்செப்புகென்றார்
மும்மையுந்தெரிசவுநகர்முதலியமுனிவர். (௧௯)

சொற்றவாசகங்கேட்டலுஞ்சூதமாமுனிவன்
முற்றநோற்றமாமுனிவிர்நீராதலான்முதல்வ
னுற்றவாதிமாபுரித்திறனோதுகென்றுரைத்தீர்
மற்றையாருமக்கொப்புளார்முனிவரின்மன்னோ. (௨௦)

தீருதற்கரும்பாவங்கடீரும்வெண் டிரைசூழ்
பாரினுட்பெருந்திருவரும்படித்தமைகேட்பிற்
சாருதற்கருங்கதிவருஞ்சத்தியமென்றால்
யார்கொலத்தலக்கதையினைவரையறுத்திசைப்பார். (உக)

இன்னணஞ்சிலவுண்மைகள்பயக்குமாறியம்பிப்
பன்னருந்தவவியாதனைப்பன்முறைபரவி
யன்னவன்பதநினைந்தவனுரம்பெருகிச்
சொன்னவாறுகேட்குதிரெனச்சொல்லுகின்றனனால். (உஉ)

வேறு.

புனிதவெண்ணீறுநிலவுதல்போலப்புனிற்றிளம்பிறைநிலா விரிக்குந், தொணிகெழுமந்தாகினிநனிபுனையுஞ்சுடர்முடியடி களையிறைஞ்சிப், பனிவரைமேருவுயரியகயிலைப்பருப்பதமெ னப்புகழ்நிறுவித், தனிநெடுங்கவிகைநிழற்றுசேரலர்கோன்றங் கியகொங்குநன்னாடு. (உ௩)

முதியவர்தொழும்பேரூர்சதுமறையோர்முறைதொழுந்தி ருவவிநாசி, வதிதருபவானிகூடல்செங்கோடுவெளர்கொடுமுடி நெடுமாயன், விதிபுகழ்முருகன்பூண்டிவெள்விடையோன்வெ ஞ்சமாக்கூடலுமேனைப், பதிகளுமுளவந்நாடுதன்றென்பாற் பன்றிவெற்பொன்றுளதன்றே. (உச)

குடுமிதொட்டிழியுங்கவிழ்தலையருவிதாழுதல்குளிர்பசும் பொதும்பர், நெடுமலர்பொதுள்பைந்தளிரிளங்கொம்பர்நீணு திநிரைநிரைபொதுப்ப, நடுமுகடகல்வான்புழைபடுவழியினறு மணிகொழித்தெறிதிவலைப், படுதிரைசுருட்டியலைத்தெழுங்க ங்கைப்பாய்புனலொழுகுதன்மானும். (உரு)

கானலந்திகழ்தண்டலையதன்புறனுங்கழிபெருமுழையுள வேனு, மூனலனுகருமுழுவைவெம்பேழ்வாய்பிலமெனத்திறந் திடுமொருசார், தேனலன்பருகிப்புனமெறிந்துழுநர்சிறுகுடிப் பெரியதொல்வளஞ்சே, ரேனமால்வரைதானென்னினும்யா னைமலையெனத்திரிதருமொருசார். (உசு)

எழிலிகண்டுயிலுங்குவட்டயன்மேயுமிரலைவானுயர்முதுடணையு, முழுமதிக்கரையைப்பிணையெனத்தாவமுரட்புரிக்கோடுசென்றுரிஞ்சிப், புழைபடுவழியினிழிசுதையமுதம்பூங்குறக்கொடிச்சியர்தினமு, முழுகலுமுகந்துநுகர்தலும்யாவுமதுவெனின்மொழியுமாறெவனோ. (உஎ)

நிறையரமகளிர்பொன்னகர்துறந்துசாரலினிலைத்தல, கொய்வார், பிறைதவழ்சாரற்கொடிச்சியர்விசும்பிற்பெயர்ந்துகற்பகமலர்கொய்வார், குறைவறுதிருவுந்தொழிலுநல்லெழிலுங்குணங்களுமொருங்குளவிவரை, யறிவரிதெனினுங்கண்ணறிவிக்குமன்றிமற் றர்கொலோவறிவார். (உஅ)

தளர்நடைத்தென்றறிரிவனவொருசார்சந்தனச்சோலைகளொருசார், கிளர்பசும்புயல்கண்டுயில்வனவொருசார்கின்னரமிதுனங்களொருசார், வளரமைதரளஞ்சொரிவனவொருசார்மதமிபஞ்சொரிவனவொருசா, ரிளகுதேனிழிபுமிருலினமொருசாரிறவுளர்குரம்பைகளொருசார். (உகூ)

பலவிதஞ்செறிதாபரங்களினாலும்பஃறலைமுடிகளினாலுங், குலவுபூஞ்செடிப்பைங்கொடிகளினாலுங்குகைகளின்றொகைபலவானு, மலமடைதுநர்பாற்றெறிததலினாலுமாழைநுண்ணுதிபலவானு, மூலவுசிர்வாலகில்லியரென்னுமொருவகையிருடிகளாலும். (கூ0)

கண்ணுறக்காண்போருண்ணிகழ்பாவங்கலந்திறவூர்ந்தரலானும், புண்ணியச்சாந்தங்கண்டிகைபுனையும்புனிதமாமுனிவரரானு, மெண்ணருங்கோடிசித்தர்களானும்யாவையுந்தருந்திறலானுந், தெண்ணிலாமுடியோனுறைதலினாலுந்திப்பியமலையெனத்திகழும். (கூக)

வேறு.

முன்பதன்வரன்முறைமொழிந்துநூல்பயி
லன்பினன்காசிபன்மரபிலாயவன்
மன்பதைபரவுசீர்வராகமாமுனி
யென்பவன்றுறவினிலேதமில்லவன். (கூஉ)

வாலியவடிசிலோர்பாதிமற்றையோர்
கால்வயினறும்புனலயின்றுகால்விட்டுக்
கோலியவிரதமேற்கொள்ளும்பான்மையா
லேலுறுமிரதர்காணெனவுமெய்தினோன். (௩௩)

ஆற்றருநோன்புகளாற்றியாடல்வெள்
ளேற்றினன்றிருவருட்கேற்பச்செய்குவன்
சாற்றருநான்மறைக்கடவுட்டாழ்ந்தவ
னீற்றணியுயரியநெறிவழாதவன். (௩௪)

சரியையுங்கிரியையுந்தவறிடாதிழைத்
தரியஞானந்தனையடைகுவானதற்
குரியயோகங்களையுஞற்றவேண்டினன்
விரியுநான்மறைவழிவியந்துநோக்குறா. (௩௫)

பூவருநான்முகன்புகழவிண்மிசைத்
தேவருமதிசயந்திளைப்பச்சிந்தைதேர்ந்
தோவருமருந்தவருவகைமீக்கொள
மேவருமக்கிரிமேவினனரோ. (௩௬)

தேங்கருடதும்பியசிவமுணர்ந்தவ
னீங்கருகுற்றிலைநெடியவன்னியின்
பாங்கரிற்பரசிவயோகலிங்கமொன்
றுங்கமைத்தருச்சனைவிதியினாற்றியே. (௩௭)

சொலற்கருந்தவமுனியாற்றுந்தூய்மையால்
வெலற்கருங்காமனைவென்றுகண்ணுதன்
மலர்க்குழலுமையுடன்விடையின்வந்துள
நிலைப்புறுமிருந்தவன்முன்புநின்றனன். (௩௮)

கண்டனன்பரவசக்கடலுட்டாழ்ந்தனன்
கொண்டனன்புளகம்வாய்குழறிமாமுனி
யண்டருங்காண்பருமமுதையள்ளிநின்
றுண்டனன்கண்களாலுவகைபூத்தனன். (௩௯)

அந்நிலையாவினீடுவைசவந்தண
னுன்னிலையாமுவந்தனமுவப்பிலா
வென்னிலையாற்றவமிழைத்தல்சாற்றென
முன்னிலையாச்சிலமொழிவதாயினன். (௪0)

அய்யநின்றொண்டருக்கடியனாகலி
னுய்யநின்சரியையுமுஞற்றியேற்றுடன்
றுய்யநின்சேவடித்துணையிற்றூய்மலர்
செய்யருங்கிரியையுந்திளைப்புற்றேனினி. (௪௧)

அருள்வழியுனதுதாட்கமலவாய்மலர்ப்
பொருள்வழியடைதரும்பொருட்டுமாசிலாத்
தெருள்வழியோகமுட்டெளியுமாறெனக்
கிருள்வழிதீர்தரவியம்புகென்றலும். (௪௨)

பூவைபங்கினனருள்பூத்துமாதவத்
தேவரிலெழுவரிற்றிசைகொளெண்மரின்
மேவருபுலனொரீஇவினைக்குநோன்பினு
னீவலியுடையையாநிகழ்த்துவாமென. (௪௩)

வேறு.

மருவுமியமமுடனியமம்வயங்காதனம்வாயுவின்கூற்றாற்
பெருகிநிலைத்தவாயாமம்பிரத்தியாகாரம்பற்றி
விரவிவருதாரணைகருணைவிளைதியானஞ்சமாதியெனப்
பொருவின்முனிவவட்டாங்கயோகம்வகையிற்புதன்றன்பால்.

விரியவுரைப்பக்கேட்டிசதுவேதமுனிவபிழைநூறு
புரியுமவர்பாற்பீடையினைப்புரியாதிருத்தல்பொச்சாப்பை
யொருவியுரியபொருளுரைக்கவுயர்தேசிகனையாலயத்தைக்
கருதிநவிற்றுபொய்யினைமெய்யெனவுட்கொடுகட்டுரைகழறல்

படிவந்துறினுமேலோர்பாலெவர்க்குமாறுவிளையாமை
முடியவுயிருனருந்தாமைமுடிப்பானெனினுமுயறவங்கள்
படியினெழுங்குவழுவினர்பாற்பருகாதொழிதலருகமலா
வடிசில்சுவைகளவைபலவுமயிலாதிதயமருவருத்தல். (௪௪)

தன தமுல்லைமனைக்கிழத்திசயனத்தெய்தித்தழுவினுமே, நனைமென்குழலிபுனைதொடிக்கைகறு மெலவிரன்மெய்தொடினுநனி, மனமதுவர்த்தல்புணரினுந்தான்விலக்குநாளின்மரு வாமை, சினவுகொடுதெறதெறவரினுமவன்பால்வைரந்தினை யாமை. (சஎ

மகளிராகிசபொருளாசைமண்ணினுசைமறந்தமன்றி நிகழுமாறுதுறவறங்கைவரினுமொருவனிகழ்கருத்து [ற்சென மகனில்வாழ்க்கையொழுக்கமுமாராய்ந்தாய்ந்தகன்றபின்னரி நிகழ்வுதீரப்பூசித்திடன்மற்றியமநியமமிசைக்குதுமால். (சஅ)

வெருளியறுகையறிவிலார்தம்மையொறுத்துவிளம்புகினுந் தருதியொடுமூண்ணுற்புனலாலுடலின்மாசுதனைமாற்றல் பகுதிபெறத்தெண்ணீராற்றற்பணஞ்செய்திடுதலாரியனை மகிழ்மாதவரைவணங்கியவர்வழங்குமேவற்றலைநிற்றல். (சகூ)

மின்னுமொளிவாளுறைகழித்துவிரைவினெதிரியெதிர்புகுந் தன்னுருயிரையீர்ந்திடினுஞ்சலியாதுகிப்பொறைநிறுவி [து யின்னுணமதுமுதிர்கொடுநோய்வினையினீட்டமிரிந்தவென முன்னுநிற்றலெஞ்ஞான்றுமுனிவுநீங்கிநெறிமுயங்கல். (ருo)

சீதநதியிற்புனிதமுறத்தினமுங்குடைதல்சிவாகமங்க ளோதன்மறையின்வழிநிற்றலுளத்திலுவகைபூத்திடுதல் கோதிலரியமாதவங்களிழைத்தல்குளிர்பூந்துணர்கொடுநம் பாதமலரின்வழிபடுதனியமம்வேதபாரகனே. (ருக)

வேறு.

வேற்றொலியச்சமிசைமுதலாயவிரவுருதமலமேபெறுத ற், கேற்றதோரிடத்தில்வரிப்புலித்தோன்மானிலகுதோற்றவி சின்மீதிருந்து, சாற்றுமாதனமாறவைபிறவிருப்பத்தனவலக் காற்புறமதனை, யாறறலினிடக்காலுள்ளுறக்கவானிலமைத்து ளமலைவுருதமைந்து. (ருஉ)

வலதுசெஙகரத்தின்புறமிடக்கரத்துள்வைத்தபின்வட திசையாத, லலதுபூருவதிக்காயினுநோக்கியிற்றுதல்பதுமவா தனந்தா, னிலகுமாயாமமெண்ணிரண்டெண்ணுங்கிரண்டெ னவியையுமாத்திரையு, ளுலவுயிர்வைத்தமுறையினைச்சுழுனை பிந்தலையிலைகளினுறவே. (ருங)

நிரப்பியேகும்பித்துடனிரேசிக்கமீளவும்பிங்கலைநிரப்பி, விருப்புறக்கும் பித்திடைவழிபோக்கலன்றியும்விளம்பிலாயாமந், தரிப்புறுசகற்பமகற்பமென்றிரண்டாஞ்சகற்பமதுறுதியானத்தி, லருத்திவைத்தியற்றலதுபலனுகுமகற்பமற்றவையலாதியற்றல். (ருச)

ஐந்தெழுத்தறைதல்சூத்திரரேனைமூவரோமனுவறைந்தியற்றன், மந்திரவழக்கமாத்திரையின்னும்வகுக்குறுமெழுத்தினுக்கங்ஙன், றந்தமாத்திரையேகொளல்விதிபிறழ்ந்துசாற்றுமாத்திரைகளுமுளவா, லிந்தவாறிருப்பக்கும்பகாதிகள்விட்டியற்றினமிரியம்வெம்பாவம். (ருரு)

கைத்தறித்தித்தல்புளிப்பனதிரளக்காய்ந்தபாலுருள்சுரையாதி, துய்த்திடாதருந்தறுய்ப்புளியுதரபந்தமேற்றுவக்கிமெய்யாவி, யுய்த்திடற்கொருக்கலொருத்திடாதருந்துமளவுறும்பாதகமூட்டி, வித்தவன்பாவம்விளிவருந்தவனமுளவெனிலிளவெரீர்மிசைக. (ருசு)

இன்னணம்யோகமியற்றிலாயாமமினிமுனிபிரத்தியாகார, மன்னுமோரைந்தும்விளைவுறுமீட்கைதாரணைமனத்தையிந்திரியந், தன்னுழிமடக்கிநமதடிவைத்தல்சாற்றுதுந்தியானநான்மறையும், பன்னரும்பதத்தினினைவுறநிறுவிப்பார்த்திடல்சமாதியும்பகர்தும். (ருஎ)

இலங்குமாதாரமெனநிராதாரமெனவிவையிரண்டுமேயோகம், நலங்கொளாதாரநவிற்றியதியானநனியிராப்பகலறுமிட்டுப், பலன்றருநமதுதாண்மலருயிருட்பார்த்திடலதுநிராதாரம், மலர்ந்தநற்சமாதியடைந்திடிற்சித்தியாமனைமைம்புலாதிகளும். (ருஅ)

எண்வகைச் சித்தியடைந்திடுஞ்சமாதியெய்திஞேரேனமாமுனிவ, நண்ணுமிப்பொருப்பியோகவெற்பாதிஞான்றிலுண்டாயதுநணுகிப், பண்ணருந்தவங்களாற்றியோகினீபெருக்கின்மாலயனிமையோரு, மண்ணருஞ்சமாதியடைந்துமுத்தியினையடைகுவையெனப்பகர்ந்தருளி. (ருக)

வேறு.

மேவரும்யோகினுள்விளைவுபோக்கலா
லேவருமகிழும்யோகீசனின்பெய
ரோவறவாழியென்றருளியும்பர்கோன்
காவலர்திகழ்திருக்கைலைமேவினன். (கoo)

விடையவன்போதலும்விடைகொண்டெம்முனி
யிடையறயோகினையியற்றிமுத்தியை
யடைதலாலவ்வரைப்பெருமையாய்ந்துளக்
தடையறயாவரேசாற்றும்பான்மையார். (கoக)

அராகமற்றரன்பதமகத்துட்காண்பவ
னிராகமீண்மறைதெரியேனமாதவன்
பராகமீறணிபவன்பரித்தலாற்பெயர்
வராகமாகிரியெனவழங்கிற்றெங்கணும். (கoஉ)

சுடர்முடிக்கேழன்மால்வரையின்றோற்றமுந்
திடவரைசார்ந்தமாமுனிவன்றிண்மையு
மிடனுறக்கிளத்தினமிலங்குவெண்டிரை
படருமாம்பிரநதிப்பான்மைபேசுவாம். (கoங)

வராககிரிச்சருக்கம் முற்றுப்பெற்றது.

ஆக சருக்கம் உ-இ, திருவிருத்தம் - கoச.

ஆம்பிராவதிநதிச்சருக்கம்.

வைத்தமனைவியரொக்கன்மரபினர்மக்கடுணையினர்பக்கலே
மெத்தவொழுகியவித்தைவழியில்விருப்பகனியுறுசித்தமே
பத்தர்பரவுகருப்பபுரிவருபச்சைவடிவொருபக்கனுர்
நித்தர்பசுபதியத்தர்பதமலர்நித்தநினைபவர்முத்தியே. (க)

வேறு.

அந்தவரைச்சூழலினுமேமணிமாநகருமொருகாலஞ்
சிந்துபுனற்கார்மழைதிறம்பத்தெருமந்துயிருளுணங்குதலு
மெந்தைகைலைக்கிரிமிசையினிமையம்பூத்தவுமைமென்றேட்
சந்தமொழுகுகுவவுமுலைத்தலைவிசிவாண்முகநோக்கி. (உ)

மதிவாணுதன்மாமதுரமொழிவணிதைகேழல்வரைசூழ்ந்த
பதியாவுளமற்றவைமுழுதும்பாறவருடமுயிருலந்த
விதுநாண்மருவியவ்வசலத்தெழுநீர்காறுநினதுகலை
நதிநீடுருவம்வரவமைத்துநணுகுவாயிவ்வழியென்ன. (ங)

தண்கூவிளைசூழ்சடாமௌலித்தலைவன்வாய்மைத்தலைவிபரீத்
தெண்கூறுறுபிருங்கிமுதலியனகணங்களிறைஞ்சிவரப்
பண்கூர்கனிவாயரமாதர்பாவையாயம்பரவிவரத்
திண்கூர்கரிகேசரிதிரியுஞ்சிகரிவராககிரிமருவி. (ச)

ஞாலமுய்யத்தனதருளைநதியினுருவாய்வரஞரலை
வேலைகாறுமமைத்தனளவ்வேளைவிரவுமாமுனிவ
ரேலமாவினுருவமெடுத்திழைத்தாரிழைத்தற்கரியதவங்
கோலமடவார்கொடிவடிவங்குலவினாரந்நதிசூழ. (ரு)

தானுயுலகமளிப்பவளுஞ்சயிலமொருவிக்கைலையின்க
னுளதுநாட்டொடங்கியருணதியையம்பாநதியென்றும்
வானும்பிரநீழலின்வருதலாலாம்பிரமாநதியென்றும்
நானுவிதமாநவிலுவரந்நதியின்வளன்யார்நவிலுவார். (சு)

கெர்ப்பபுரிவந்தனைபுரியக்கிளர்வான்சுரபிநெடுங்கைலை
வெற்பையொருவிவராககிரிமேவிநதிதீரத்தலங்க
ளற்பொடருச்சித்தாண்டாண்டுற்றரியதவங்களாற்றுதலாற்
பொற்புமலியாம்பிரவதியாம்பொருனையெனவும்புகலுவரால்.
வேதமுனிவீரதன்பெருமைவிரைமென்கமலவிரிஞ்சனுக்கு
மோதவரிதர்தளிர்மேனியுலவுமதிவாண்முகவுண்கண்
மாதுபாகன்முகையவிழ்ந்ததார்துறுமலரிதழிப்
போதுவிரவுசடாமௌலிப்புனிதசீரிற்புகழெய்தும். (எ)

வானமுறைதெள்ளமுதமொலிமலிநீருருவமாகிவரை
தானோரேணியாயிழிந்தசைலப்பொருளையாவையும்வரன்றி
யீனமறமுன்பயந்தபயோததியைக்காணாவேற்றிறைஞ்சப்
போனதெனமால்வரைதொடங்கிப்புணரியளவுகிமிருமால். (௯)

பஞ்சானனங்கொண்டடலுழுவைநெடுந்தோல்போர்த்து
ப்படர்சடைநீ, ரெஞ்சாதணிந்துமானேந்தியிமிழ்தேனிதழிம
லர்புனைந்து, மஞ்சார்பவ்வவிடமிசைந்துமால்வெள்விடைமே
ற்கொண்டுமெதிப், பிஞ்சார்சடிலப்பெருமானைப்பொருவியாறு
பெருகுமால. (கo)

ஆருந்துதிக்கையாலொருபாலணிகோடேந்தலால்யானை
சாருமுகங்கொண்டரவுமணிதரித்தலாற்றண்டழைசெவியாற்
சேருந்தானம்பகர்ந்தோடைமிசையிற்செறிதலால்விசும்பும்
பாரும்புகழைங்கரநால்வாய்முக்கட்பகவனிகருமால். (கக)

குன்றுதொறுநின்றாடிவள்ளிக்கொடிசூழ்ந்துயர்வான்குல
வேழந், துன்றியாறுமுகங்கவினித்துணர்ப்பூந்தோன்றிவெட்
சிகுரா, மன்றலகமழ்பூங்கடம்புவெள்வேலவயங்கிமஞ்ஞைமே
ற்கொளலா,லென்றும்வளமைதிகழ்ந்தியையாவென்றிவேலோ
ற்கியையுமால். (கஉ)

முல்லைமணந்துபாறயிர்நெய்முகந்துமுருகுகாற்றுதுணர்க்
குல்லைபுனைந்துபுள்ளூர்ந்துகுளிர்பூம்பூவையுருவெடுத்து
மல்லன்ஞாலமளந்துமருதூடுதவழ்ந்துவளையணிந்து
பில்குதிரைப்பாலுததியிற்கண்வளர்ந்தபீதாம்பரற்பொருவும்.()

செங்கோல்வெள்ளோதிமமுயர்த்துத்திசைநான்கினுந்த
ன்முகம்வைத்துக்,கொங்கார்செழும்பொற்றகட்டகட்டுப்பொ
குட்டுக்கொழுந்தாமரைவிரவிப், பொங்கார்கலிசூழ்கிடந்தநெ
டும்புவனநனிபேர்தரப்படைத்துச், சங்கார்தடக்கைமாலுந்தி
தரவந்துதித்தோன்றனைமானும். (கச)

தேவதாருவரசிருக்கைதிகழ்ந்துசிறுகட்பெருங்கோட்டுத்
தாவிலொருத்தலூர்ந்துசெம்பொன்றழுவுதானநிலைவகி
மேவுமணிவச்சிரம்படைத்துமேலோர்பணியும்படிகுலவி
யோவிலாதசயந்தனையேயுதவிவாசவனையுறழும். (கரு)

பொருவிலாரமுமிழ்கழையுள்வாங்கிப்பொறிமாஞ்சிமிறார்த்து
மருவென்கமலநறுங்குவளைமௌவல்சூதமசோகுமணஞ்
செருகுமலரம்பிடைமிடைந்துசிறுகாலூர்ந்தார்கலிமூழ்கிப்
பெருகுமீனந்துவசமுறக்காட்டிவேள்போற்பிறங்குமால். ()

வேறு.

முன்புளநெடுங்கரைகரைந்திறமுனிந்தே
கொன்பணிலமுந்தரளமுங்கொடுநடந்தே
தன்பரிவினாலழிவுறாமைதலமுய்யப்
பொன்கெழுமுவானிமிர்புதுக்கரைசுமக்கும். (கள)

வேங்கைமலர்செண்பகமிடைந்தொளிருமென்பூ

மாங்கனியுமிழ்ந்தநறவம்புனலின்மேலிட்
டோங்குதிரையாம்பரவதியென்பதுபுதுக்கும். (கஅ)

வண்பொழிலின்மாநறவமாந்திவரித்தும்பி
பண்பயில்வயர்ந்துபறவைத்தொழின்மயங்கி
விண்படர்தலின்றிநதிமீதுசெலலாற்க
ளுண்பவருய்யார்சிறிதுமுண்மையெனல்காட்டும். (கக)

வேரிறவருந்தருவின்மீதுகுருகொன்று
நீரினிறையாற்சுழியினாழ்தல்வினைநீடிச்
சாருதலெண்ணாதுபிறர்தம்முயிர்வதைப்பச்
சேருழியலக்கணுறுதீமையினைமானும். (உ0)

மண்டுபுனல்வீழ்கரியைவௌவியொருபுள்ளுத்
தண்டலிலவாயிவர்தல்சக்கிரியைக்காணூஉக்
கொண்டபகைதீர்கெனக்கைகூப்பிக்கடறாழ்ந்த
பண்டைவரைவிண்டனிபறப்பதுகடுக்கும். (உக)

ஓடுபுனலூடுபுலிபூருவனதவழ்வ
பாடுநனிதத்துவபறப்பனநடப்ப

காடுநடைகொண்டெனல்காண்பனகடுக்கும். (உஉ)

ஒரொருமருங்குபுனலோங்குபதின்காதம்
பாருறுபைங்கூழ்முதலபாய்திரையிரங்க
வாரமொடெழுந்திவலையால்விளையுமென்றால்
யாரிலகுகுருதநதியின்றிற னிசைப்பார். (உங)

தோழிலகுகோதைமணியாரநகைதுப்பு
நீடுமிதழ்தூயவிளநீர்முலைநிகர்ப்ப
மாடமலிசோழவளநாடுதிகழ்பொன்னிக்
கோடிலகுசேடியொடுகூடிவிளையாடும். (உச)

வேறு.

பல்வளனின்னதிகழுமாண்பொருளைப்பாங்கரினறுமணி கொழித்துக், கல்லெனவொலித்துநெடுந்திரைசுருட்டுங்கரை மிசைத்துறைதொறுங்கவினு, மல்லன்மாஞாலமுழுதொருங்கு ணர்ந்துவணங்குவிண்டவழ்மதிக்கண்ணிச், செல்வநாயகன்வீ ற்றிருக்குநற்றனமவற்றினுட்சிலதெரிந்துரைக்கேம். (உரு)

துறுமயிர்க்குன்றிமணிவிழிக்கேழற்சுடர்ப்பெருங்கிரியை முன்படைந்த, மறுவறுதவத்தின்வராகமாமுனிவன்மாநதிக் கரையினேர்சோதிக், குறிநிறீஇநறியகொழுமலர்சிதறிக்கும் பிடும்யோகலிங்கத்தை, யறிவுமீதூரப்பணிபவர்யோகத்தடைந் துபேரின்பவீடடைவார். (உசு)

வானவர்முனிவர்ருடியர்சித்தர்வாலகில்லியரொடியக்கர் தானவர்பிரமசாரியரில்லஞ்சார்ந்தவரில் லுடன்வனத்துப் போனவர்முழுதுந்துறந்தவர்யோகர்பூசுரர்நிருபரிவை ரானவர்சேரனு தியர்குதமாநதியாதியினமைந்து. (உஎ)

மணிகளிற்பொன்னில்வெள்ளியிற்சிற்பவடிவினிலிரதவா தத்தி, லணிகிளர்சிலையின்மணலினீடுருவினமைத்தனவளப்பி லவிலிங்கம், பணிவதற்கெளிதன்றரியமாதவங்களாற்றிடிற்ப ணியலாம்பணிந்தாற், பிணியிடையூறுமூப்பொரீஇப்பிறவிபெ யர்ந்துபின்ஞகன்பதம்பெறலாம். (உஅ)

சூர்முதறடிந்தசுடரிலைநெடுவேற்சுராதிபனொருபெருங்கோட்டுப், போர்முகத்தடக்கைப்புங்கவன்செங்கட்புள்ளுயர்த்தவன்மறைக்கிழவன், கூர்முகவயிரவாட்படையிழுவன்முதலியர்குறுகினின்றிறைஞ்சும், நீர்முகந்தலைக்கும்வேணிநீடிலிங்கநிகழ்த்திடிலளப்பிலவுளவால். (உ௯)

மறைபயில்கௌசிகன்பரத்துவாசன்வயங்குகாசிபன்றுருவாசன், குறுமுனிததீசியத்திரிவசிட்டன்கோதமனுரோமதன்கபில, னறையுமத்தியனாரதன்பராசரன்காலவுமுனிவியாதனுதியர்தாஞ், செறிநதிப்பாங்கரருச்சனைபுரியுமிலிங்கமோரளப்பிலதிகழும். (௩0)

தாமநாற்றியதண்டரளமேபோலத்தடமலர்மடலவிழ்பூகச், சோமநாதத்திற்றண்சுடர்க்கலையோன்றுகளறுமுனிவரன்றலைவி, காமர்பூங்குழலியால்வருஞ்சாபந்தொலைவுறக்கடிமலர்மழைதூ, யேமறவழுத்துஞ்சோமநாதப்பேரிலிங்கமொன்றுளதிசைக்கரிதால். (௩௧)

வாழ்தலமதனுக்கடுத்ததக்ழ்பாலின்வளரிளம்பிறைக்கொழுந்தரவு, தாழ்சடைகழுமுட்கரந்திகழனந்தகணேசனென்றிருமிலஞ்சாற்றுஞ், சூழ்சுடரிலிங்கந்தனைநனைமலர்தூய்த்தொழுபவரெழுபவந்தொலைந்து, காழ்படுமிடறுஞ்சுடருமிழ்மூன்றுகண்களுங்கவினவீற்றிருப்பார். (௩௨)

கொக்கிறகொளிருங்குடிலவான்சடிலக்குழைதவழ்செவிகொடுநெஞ்ச, மைக்கணிந்தொழுகுமிடற்றுவாகீசனெனும்பெயர்மருவிலிங்கத்தைச், செக்கமலத்தன்முதலியர்வழுத்துஞ்சேவடிச்சிவபெருமானைத், தக்கவன்பொடுபோற்றுநர்முதுக்குறைவுசார்ந்துசாரூபமேயடைவார் (௩௩)

தென்றிசைவடபாற்சமஞ்செயப்பொதியஞ்சேருழித்தமிழ்முனிகருவூர்ப், பன்றிவெற்புடையான்பொருனையின்குடபாற்கரையில்வெண்பால்புரைமணலை, யன்றுகைக்குவியாலருச்சனைபுரியுமவிரொளியகத்தியவிலிங்க, மொன்றுளததனைநன்றுறப்பணிவோரொளிர்பரகதியினையுறுவார். (௩௪)

இருளறநிமிருமொருபெருஞ்சுடராயிலங்குகாஞ்சேசனெ ன்றிசைக்கு, மருளுருவிலிங்கமொன்றுளததனுக்கடுத்தவேத்தி ராரணியத்தின், மருவுமோரிலிங்கமுளதிமையவருமறைபயின் முனிவரும்வழுத்தக், கருணைகூரிலிங்கங்களைவழிபடுவோர்கதி யினையெளிதினிற்காண்பார். (௩௫)

திங்களங்குழவிக்கோடுரிஞ்சியதண்சினைமலர்ப்பொதும்ப ரிற்கமஞ்சூன், மங்குல்கண்படுக்கும்புரிசையுந்தரளமணிநிலா விரிக்குமுன்றிலுஞ்சூழ், கொங்கணேசத்திலிலிங்கமொன்றுள தக்கொழுமலர்க்கொன்றைசூழ்வேணி, யங்கணனுமங்கொங்க ணேச்சுரன்சென்றடிதொழுபவர்சிவனுவார். (௩௬)

•கந்தநீடளகத்தவளவாண்முறுவற்கவரிதழ்க்கௌரிபங்கு றையு, மெந்தைகாளீசனிணைமலர்ப்பாதமிடையறவிரவுநண் பகலுஞ், சந்திரசேகரத்திற்புதுப்புனல்பெய்துதண்ணலர்கொ ய்தருச்சிப்போர், பந்தவாணவத்தினிருட்படாங்கிழித்துப்பட ரொளிப்பரப்பையேகாண்பார். (௩௭)

கடவுள்வான்மிசையிஞெளிவளர்தாராகணங்கடாம்வழிப டுபிழிதோய், மடலவிழ்கடுக்கைத்தாரகேச்சுரனைமாநதிகொ ணர்ந்தமஞ்சனநீ, ரிடர்கெடவாட்டிமலர்மழைபொழிவோர்யா வராயினுமுடுக்கணங்க, ளுடனுறைந்தமலபரசிவரூபமெடுத்து மாபதியுலகுறைவார். (௩௮)

வலிகெழுதக்கன்றலையறுத்தொருத்தன்மறுதலையளித்த வாள்வீரன், பொலிசிவகணங்களுடன்மரீஇமறுவில்பூசனைபுரி தருவிரிவான், சலிலநீள்வேணிமௌலிவீரேசன்றுமரைக்காம ரஞ்சரண, மொலிவரவாழ்த்திவணங்கினோரிணங்கியுறைகுவர் முத்திவீடுண்மை. (௩௯)

பண்ணிவர்கிளவித்தவளவாண்முறுவற்பவளவாய்குவளை யுண்கருங்கட், பெண்ணிடங்கலந்துபிள்ளைவெண்டிங்கட்பிள விளைச்சடைமிசைச்சுலவி, விண்ணுயர்குடுமிக்கோயில்வீற்றி ருக்கும்விசாலலிங்கந்தனைவிழைந்து, தண்ணளிபெருகியுருகிய ஞ்சலிப்போர்சலிப்பறப்பெறுவர்சாரூபம். (௪௦)

விரிதலைக்கருங்காய்கெட்டிலைப்பருஉத்தாள்விண்ணுயர்கூ ந்தலம்பெண்ணை, மருவியசீழற்சேதிமத்துறையுமறுவறுகாட்சி நாயகனை, யொருபொழுதேனுந்தொழுபவர்சுழல்காற்றூசல்பா ருருள்சகடுறழக்,கருவினிற்சுழலார்பொருவிடைத்துவசன்கம லமென்பதநிழற்புகுவார். (௬௧)

ஓங்கலுட்குழையப்பசுந்துழாய்ப்படலை்யுரம்பொலிசாயகம் பூட்டித்,தூங்கெயின்மூன்றும்புகையெழமுறுவற்சுதையிளநில வுமிழ்கனிவாய்த்,தேங்கமழிதழித்தொடைதுயல்வருந்தோட்டி லருலேச்சுரனெனுநாமந், தாங்கியவிலிங்கந்தனைநினைந்திறை ஞ்சுந்தகையினர்முத்திசார்குவரால். (௬௨)

இப்படித்தலங்கள்பலவுளவிப்பாலேதமலாதமாபுரமா, மப்படிநீவிரஷறந்தொல் பதியுமதுவுயிரனைத்தையுந் தரலாற், செப்பருங்கருப்பபுரியெனும்பெயருந் திகழ்வுறச்செப்புவரதனு, ளொப்பருமிலிங்க மைந்துளவைந்து மொளியருளீந் திடுமிலிங் கம். (௬௩)

உரைத்திடுமைவற்றுளாதிநாயகனென்றொருசிவலிங்கம்வன் மீகத், தருத்தியினுறையுமதனுளெம்மிறைவனைத்தொழிலியற் றுவனெல்லாம், விரித்துரைக்குநர்யார்மேலதுகிடப்பவிளம்பு மத்தலமெனுமாதி, புரத்திலக்கினிமாதிரத்திலாரணங்கள்புக ழொருதலனுளதறைதும். (௬௪)

மறிதிரைச்சூதமாநதிக்கரையில்வடக்கில்வஞ்சுளேசனென் றுரைக்கும், குறியுளததன்பாற்குணக்கினீடரசவனத்திடைக் குறுகினான்மறையோர், வெறிமலர்பொழியமுனிவரரிறைஞ்ச . மேதினிமாதவர்மகிழ்வோ, டறிதுயிலமர்ந்துமரகதவரைபோ லச்சுதனன்கொடுபொலியும். (௬௫)

வஞ்சுளாடவிக்குத்தரகுணக்காகவாம்பிரவதிநதிமதிபோல், விஞ்சுமாமணிமுத்தாறுகாவேரிமேவுழிமேவுமேவுதலா,லெஞ்ச லறிருமுக்கூடலென் றிசைப்ப ரிசைக்கு மத்தலனிடையிமை யோ, ரஞ்சன்மால்போற்றுமிலிங்கமுண்டதனையருண்மணியீச னென்றறைவார். (௬௬)

தேமலிதரங்கமிரங்குழுவகையசெழுநதியொருங்கெழலானு, மாமணியீசனவைநபெப்பொலிந் துவைகுதலானுமத்தலத்தைப், பூமலிகமலவிரிஞ்சன்மான்முதலோர்புண்ணியத்தலனெனவிரித்துப்,பாமலிமறையிற்பகர்ந்தனரென்றல்யாவரேபகுத்துரைக்கிற்பார். (௪எ)

அந்நதிகூடுமிடத்துழிப்புதுநீராடினோரத்தலச்சிறப்பை, நன்னரிற்றுதித்தோர் துதித்தவை கேட்போர்நான்மறை மிருதியாகமங்க, டொன்னெறிப்புராணமோதினோர்சுவர்க்கமெய்துவர்சுடர்மணியீசன், சந்நிதானத்திலுறைஞ்சினோர்ஞானத்தலைவராய்ப்பரகதிசார்வார். (௪அ)

ஆவணிமாதத்தவிர்மதிபருதிமண்டலத்தமையுநாண்மகநாண், மேவினுமேவாதொழியினுந்திருமுக்கூடலின்விரிபுனற்படிந்தோ,ரோவறநூறுபகீரதிபடிந்தோர்க்குளபயனுதவிமெதனிற், கோவெனும்பசுபதீச்சுரர்முன்னர்குடைந்துளோர்பலன்குணிக்கரிதால். (௪௯)

சூதமாநதியங்குலிதொடிஇச்சிரமேற்றெறிப்பினுந்தொன்றுதொட்டெழுமுற், பாதகந்தீருமெனிற்பவுத்திரராய்ப்படிந்துதர்ப்பணமவைமுற்றிக்,கோதறுதிருவஞ்செழுத்தையுச்சரித்துக்கொள்ளுநர்கொள்ளுநரபதத்தை,வேதநான்முகனேவிளம்புமற்றன்றிவியாதனேவிளம்பிடலவேண்டும். (௫௦)

இந்தமாநதியிற்சலமலாதிகள்விட்டிழிசவுசாதிகண்முடித்தோர்,தந்தசுத்திகள்செய்துமிழ்ந்துளோராடைதணந்துபுக்கவரெச்சிலிட்டோ,ரந்தினீரதிரப்படிந்துளோர்பூப்புவந்திடின்மூழ்கிடுமகளிர், மூழ்குறவியலாதனபலவியன்றோர்யாவருமூழ்குவர்நிரயம். (௫௧)

செய்வனயாவுங்கரைமிசையாற்றித்திகழிணைத்துகின்மருங்கசைத்துங், கொய்ம்மலர்தூவிநிலனுறத்தாழ்ந்துகுளிர்புனலதிர்வுறுதாடி, மொய்கரையிவர்ந்துபுலர்துகில்புனைந்திமுறையில்வெண்ணீறுமெய்ப்பூசிப், பெய்வனதானமியன்றனபெய்வோர்பிஞ்ஞகன்பெரும்பதம்பெறுவார். (௫௨)

புதியதண்ணீர்த்தம்வந்துழிநறியபுதியபட்டாடைபொன்னுடை, விதிமுறையிழைத்தபூணணிமணிகண்மிளிர்பசும்பொன்மலர்பெய்து,பதிவுறவமைத்தவிம்பமுன்னிட்டுப்பனிமலர்ச்சிகழிகைசாத்திக், கதிதருங்கங்கைமந்திரமியற்றி யிறைஞ்சினோர்கதிவழிகாண்பார். (௫௩)

பூரணையிரவிமண்டலத்தாலோன்பொருந்துமிழ்கிரணகாலத்திற், பேர்பெறுமத்தோதயமகாவுதயம்பிறந்தநாட்டந்தைதாய்பக்கஞ், சீர்கெழுவெதிபாதத்தினீராடிற்றிசைமுகன்முதலியதேவ, ரேர்கெழுபதங்கடமிலரசியற்றியீற்றிலின்புறுங்கதிநிலைப்பார். (௫௪)

பொலியுமந்நீரிலாடியோர்நாட்டாம்பூலமெட்டெட்கணைநல்கின், மலியுநால்வேதமோதிறைக்களித்தப்லனுறீஇவண்சிவபுரியின், மெலிவறத்தேவாண்டாயிரமருவிமீளவுத்தமமறைக்குலத்தி, லொலிகடற்புவியிலுதித்துமெஞ்ஞானமுணர்ந்தரன்பதத்துயர்ந்திடுவார். (௫௫)

அந்தணனொருவன்றனக்கொருபகலத்தீரத்திலடிசிலிட்டுண்டோன், முந்துறவீரைஞ்ஞூறுகுண்டலந்தோய்முதுமறைவேதியர்க்களித்த, சிந்தைதேர்பலத்தைச்சேருவனன்றித்திலோதகம்பண்ணினோன்பிதுர்க்க,ளிந்திரபதத்திலரசுவீற்றிருப்பாரென்னில்யாரதன்றிறனிசைப்பார். (௫௬)

வரைவரையறமீக்கிளர்பெருங்கேழல்வரையினை வணங்கினோர்வணங்கித், திரையெறிசூதநதித்துறைசேரத்தீர்த்தங்கள்குடைந்துளோர்குடைந்து, கரைமருங்குறைதண்ணடவிவெள்விடையூர்கடவுளாலயங்கள்கண்ணுற்றோர், புரையறுபதத்திலெய்துவர்மூவேழ்சுற்றமும்பொன்னுலகெய்தும். (௫௭)

சென்றுநீர்குடைந்தோர்பிறந்தைநீடருவின்வேரறச்சிதைத்தெறிதரங்கந், துன்றுமாநதியின்சரிதையையாசான்சொற்றவாறுரைத்தனம்புலத்தைக், கொன்றுமாதவங்களிழைத்துமுக்குறும்பைஞானநாந்தகங்கொடுகுறைத்து, வென்றுவாழ்முனிவீரென்றனன்கேள்விமேதகுசூதமாமுனிவன். (௫௮)

ஆம்பிராவதிநதிச்சருக்கம் முற்றுப்பெற்றது.

ஆகசருக்கம் ௩-இ, திருவிருத்தம்-கஉ௨.

சராசரச்சருக்கம்.

ஒருகிரிமாசுணமுலையமகோததியுதவியகார்விடமெழுகி
போதில், வெருவியமாலயன்மகபதியோர்பதம்விழைகலமேலை
யர்பதமேவோ, நிருமலமாயளவிடலரிதாய்நினைவயர்விலதாய்ந்
றைசுடராகி, யருவுருவாயொளிர்பசுபதிநாயகரடியவர்சேர
வையடைவோமால். (௧)

வேறு.

சூழ்தவமுனிவர்தம்மைமீளவுஞ்சூதனோக்கிப்
போழிளமதியவேணிப்புங்கவன்றங்கும்வஞ்சித்
தாழ்விலாத்தலத்தின்முன்னர்ச்சராசரமுதித்தவாறு
வாழ்வுறக்கேண்மினென்றுமாமுனிவழங்கலுற்றான். (௨)

பரசிவனருளிற்சோதிபடர்பெருங்குடிலைதன்னின்
மரபுடனுதவிந்துவருஞ்சாதாக்கியம்பின்றோன்றி
யருளுமீசுரந்தான்சுத்தவித்தையையளிக்குமாயை
தருமொருபுருடகாலநியதியும்வரையுஞ்சார. (௩)

கலைதனிலவித்தைதோன்றியிடுமெராகத்தைமுற்று
மிலகுமக்கலையின்மூலப்பிரகிருதியும்வந்தெய்தி
யுலவுமுக்குணமுஞ்சித்தமுந்தரவுதிக்கும்புத்தி
யலைவில்சித்தத்திற்புத்தியாங்காரமளிக்குந்தானே. (௪)

ஆதிதைசதவாங்காரம்வைகரியாங்காரம்பூ
தாதியாங்காரமாகுந்தைசதவாங்காரத்தி
லோதுசோத்திராதியைந்துமுதித்திடுமனமுந்தோன்றுங்
கோதில்வைகரியாங்காரங்கொடுக்கும்வாக்காதியைந்தும். (௫)

சத்தாதியுதித்திடும்பூதாதியாங்காரந்தன்னிற்
சத்தாதிவானுங்காலுந்தழலும்வெண்ணீரும்பாரு
முய்த்தாரவுதிக்குமாற்றாலுதவிடுமெவற்றுட்பாரிற்
கொத்தாருந்தோற்றநான்மைகுலவியேழ்பிறவியாமால். (௬)

எழுவகைப்பிறவிபார்ப்பாரிரவிபுள்ளரசுபாந்தள்
செழுமலர்மகரந்தேனுசெப்பியவிவையேழாதி
யிழிதொழினீசர்விண்மின்மினியேநாகரமாம்வண்டு
கெழுமியசயிலங்கீடங்கிளருநாயிவையீருகும். (எ)

நூறுமாயிரமுங்கொண்டநுவல்பதினொன்றுவானேர்
ரேறும்ப்பதுநாற்கானீரெழுவனபறப்பவொன்பான்
வீறுமானிடர்பத்தொன்பான்றுபரமினிர்பன்னோந்து
கூறிலூர்வனவிவ்வாறுகுலவுவயோனிபேதம். (அ)

இப்படிச்சராசரங்களிருநிலமியலுமேல்லை
துப்புறுகமலப்புத்தேடயிற்சுவைகூருமல்லி
னெப்புவனங்களுந்தாழ்ந்திடப்பிரளயம்வந்துற்ற
தப்பிரளயத்தின்பேரந்தரப்பிரளயமென்பாரால். (கூ)

அந்தரப்பிரளயத்திற்சராசரமனைத்தும்வீந்து
சிந்தலுமறிவுநீங்கித்திசைமுகன்றுயிலுணர்ந்து
முந்துறப்படைத்தயாவுமுடிந்தவோவெனக்கவன்று
நொந்தனன்படைப்பிலின்னுமேன்மனநோன்மைமிக்கான். ()

கைவரலின்றிவென்றியிழந்தனன்கவலுநெஞ்ச
னைவரலுதித்துநொந்துநதிமதிபுனையும்வேணி
மைவருகண்டன்றண்டாமரைமலர்ச்சரணம்போற்றி
யுய்வரவனிச்சைபெற்றுலொழிந்துறுதெனவெழுந்தான். (கக)

நோக்கினன்கைலைபோகிநுணுகிடைவருத்திவெற்பின்
வீக்கிளமுலையினுளோடரசுவீற்றிருக்குமேலோன்
பூக்கமழ்கமலப்பாதஞ்சென்னியிற்பொலியத்தாழ்ந்து
தேக்கெறிமலர்கணீவிச்சிவசிவபோற்றிபோற்றி. (கஉ)

போற்றியென்றெடுத்திசைத்துப்புனிற்றிளம்பிறையெயிற்றுக்
கூற்றுயிர்குடித்தகொற்றக்குருமணிக்கழற்கால்வெள்ளை
யேற்றுயர்கொடியினுயுன்னேவலிற்றமியேன்பாரி
னூற்றுவித்தனதொலைந்தநாயினேன்றுயில்வுகூர. (கங)

ீட்டவைவிதிப்பினுன்றனருளலால்விதிக்கலாமே
சேட்டிளந்திங்கள்வேணிச்சிவபெருமானேயென்றுத்
தோட்டலர்கமலப்புதேளிரந்துகைதொழுதுநிற்ப
வாட்டநீதவிர்கென்றண்ணல்வாய்மலர்ந்தருளிப்பின்னர். ()

சராசரமுதிப்பமுக்கட்டனிமுதனினைத்தலுஞ்சீர்
விராவியதேனுவானமொருவிவேதண்டமேவிப்
புராதனப்புனிதபோற்றிபுண்ணியப்பொருளேபோற்றி
பராபரபோற்றியாதுபணிவிடையெனமுனிற்ப. (௧௫)

வருதிநீசுரபிதொல்லைமறையவன்போலவேலை
பொருதிரையாடைஞாலத்தெமையருச்சனைபுரிந்து .
தருகுதிசராசரங்களனைத்தையுமெனமுன்முழா
விரைமலர்தூவித்தேனுவிடையொடும்போயிற்றன்றே. (௧௬)

அங்கதுபோயபின்றையலரவணிலவுவேணிப்
புங்கவனளினபாதமீளவும்போற்றிநாக
கங்கணசராசரங்கள்விளிவுறக்கண்டவென்பாற்
றங்கியபாவந்தீரத்தக்கவாறருளுகென்றான். (௧௭)

தடாகமாமலரின்வைகுஞ்சதுமறைமுனிவவாய்மை
கடாவலாயுரைத்துங்கேட்டிகருத்தையம்புலத்திற்போக்கி
விடாதொருங்கெழுந்துசென்றும்பிரவதிவிரிநீராற்றின்
வடாதெனவிசைக்குந்தெய்வவஞ்சுளாரணியஞ்சூழ்ந்த. (௧௮)

ஆதிமாபுரத்திற்போகியாரணப்பொருளியாவு
மோதிமாவேள்வியாற்றியருச்சனையுஞற்றிலோங்கன்
மாதிஞேடெதிர்ந்துகேட்டவரமுனக்கருள்வோமாங்குப்
போதிநீயெனப்புக்கான்றன்புரியின்மாதவத்தின்மிக்கான். ()

ஈங்கிதுகிடப்பவெந்தையருள்வழியையந்தென்று
பூங்கயிலாயத்தென்சார்மருவியாம்பூசையாற்றத்
தீங்கறுதலன்யாதென்னத்தேர்தலுமகதிவீணை .
தாங்கியகமலச்செங்கைநாரதன்றமியனுகி. (௨௦)

போகுயர்குடுமிவெள்ளிப்பொருப்புயர்புனிதற்போற்றற்
கேகுமந்நெறியிற்காணாவிருவிசும்பொருவியேழை
பாகனைப்பரவப்போமிப்படர்நெறிகவன்றுநின்றாய்
நாகிளஞ்சுரபியுற்றவாறெவணவிற்றுகென்றான். (௨௧)

திவவியாழ்முனிவவெந்தைசராசரஞ்சிருட்டிதெண்ணீ
ரவனியிற்போகென்றானாலவைபடைப்பதனுக்கேற்ற
தவலருஞ்சிறப்பின்மிக்கதலனியாதெனக்கவன்றேன்
கவலுறுமெனதுநெஞ்சந்தெளிவரக்கழறுகென்ன. (௨௨)

யாம்புகலுதுங்கேள்யாருமிசைப்பதற்கரியதூய
வாம்பிரநதிதீரத்தின்வஞ்சுளாரணியமென்னு
மேம்படுதலனுண்டாங்குமேவினர்விழைந்தயாவுந்
தாம்பரிவுடனளிக்குஞ்சத்தியமின்னுங்கேட்டி. (௨௩)

அத்தலந்தனினீராடினாரவரமலராவ
ரத்தலந்தனில்வதிந்தோரவர்கண்மாதவத்தராவ
ரத்தலந்தனிற்பிறந்தோரவர்களேயமரராவ
ரத்தலஞ்சராசரங்களளித்திடுமாற்றலாகும். (௨௪)

மற்றொருதலத்திற்போகிமாதவமுறைவழாமை
முற்றொருங்கியற்றினாலுமுத்தொழின்முற்றாவஞ்சி
நற்றலனெய்தியாதிநாயகற்பூசையாற்றிற்
பற்றிடுமளவின்முற்றும்படைப்புறப்போகென்றானால். (௨௫)

என்றியாழோங்குசெங்கைநாரதனிசைப்பத்தேனு
நின்றுளாதரமீதூரநெடுநிலனிழிந்துநாடிச்
சென்றுளார்வினைகடீர்க்குஞ்செறிமயிர்க்குறுந்தாட்கேழற்
குன்றுளார்வியப்பவந்தக்குவட்டினைக்குறுகிற்றன்றே. (௨௬)

மாற்றருங்கேழல்வெற்புமாநதித்துறையும்வைகுஞ்
சேற்றிகழ்விழிபங்காளன்சிவசினகரங்கண்மேவிப்
போற்றொடுமடைந்ததாதிபுரத்தினையருளப்போற்றா
வேற்றதோர்பதியைச்சேர்தல்பசுவினுக்கியல்புதானே. (௨௭)

மருவிவெண்டிரைகொழிக்குமானதிப்பதுநீராடித்
திருமலராய்ந்துகொய்துசிவபரம்பரனைப்பூசை
யருமறைவிதியினூறறுவானகந்தெரிக்குமேல்வை
ருவிசும்பிடையினின்றோர்வாக்கெழுந்திசையாநிற்கும். (௨௮)

ஆழியசுரபிகேண்மோவஞ்சுளாரணியஞ்சூழ்ந்த
ஆழிகடணந்தவாதிபுரமிதென்றுரைக்கும்வேத
மேழிருநிலனும்போற்றுமித்தலத்திடையோர்புற்றிற்
சூழொளிவி.·வீடிப்பாதலத்திருந்துதோன்றி. (௨௯)

திவ்வியவிலிங்கமென்னத்திகழுமோரிலிங்கம்வைகு
மவ்விலிங்கத்தினுமமவிரொளியாதிநாதன்
வவ்வியயாவுநல்கும்வந்தனைபுரிதியென்னுக்
கவ்வையினுணரக்கூறிக்கரந்ததுமீளவானில். (௩0)

அம்மொழியமிர்தந்தேனுவஞ்செவிநிறையமாந்தி
விம்மிதம்பெருகிஞானவெள்ளத்துண்மூழ்கிநாளு
மெம்மறைகளுநின்றேத்தும்புற்றினதிடஞ்சார்வுற்று
மும்முறைவலன்வந்தன்புமூகிழ்ப்பமெய்விதிர்ப்பநோக்கா. ()

குடம்புரைசெருத்தருங்குஞ்சுரைநறுங்கொழும்பாலாட்டித்
தடம்பணைப்பொதுள்வனத்துப்பத்திரநறியதண்டே
னடங்குபன்மலர்கவியன்பமுதூட்டிநெஞ்சி
னிடங்கொளுமறைபழிச்சியிறைஞ்சிவந்தனைகளாற்றும். ()

பூசையிவ்வாறுதேவவருடமோர்மூன்றுபோற்றி
யாசைகூர்நாளினோர்நாளழல்விழியுழுவைமென்றோற்
றாசரையசைத்தோன்செய்யசுடர்மணியரவுதிங்கள்
வாசநீர்மிலைந்தவேணிமௌலியின்வாமந்தன்னில். (௩௩)

ஒருகுளம்புருஞ்சியூறுபடுதலுமுளங்கவன்று
வெருவிநெட்டுயிர்ப்புவீங்கிமெய்நடுநடுங்கிவாளி
யுருவியதென்னமாழ்கியுருகிவாய்புலர்ந்துசூழ்ந்த
தருவினையெனவெம்பீழைக்கடலினுளாழ்ந்ததன்றே. (௩௪)

வேறு.

அஞ்சியஞ்சியகலும்மனுகிடும்
மெஞ்சியாவியிழக்கவெழுந்துயர்
கெஞ்சினுன்றலைப்புண்டுநெடுங்கணீர்
மஞ்சினூடிழிமாரிகவிழ்த்திடும். (கூ௫)

விழுமழுங்குமலம்வருந்துவிம்முமீண்
டெழுமுணங்குமிரங்குந்தரங்கிகின்
றழுமெம்மண்ணலுக்கன்பிலர்போற்கொடும
பழுதுசெய்தனனென்னும்பனிப்புறும். (கூ௬)

ஓதலாவதென்னுற்றுணர்வோர்பெறக்
கோதலாதனநல்குங்குழகன்பாற்
றீதலாமையிழைத்திலன்றீமையே
ணுதலாலெனக்கார்கொலொப்பாவரே. (கூ௭)

வேதனுக்கரிதாமுடிமேலன்ப
ராதரத்துடனீரலரேற்றினு
ரேதமுற்றியயான்வடுவேற்றினேன்
பூதலத்திடையார்புகழ்பூண்டுளார். (கூ௮)

இன்னகூறிப்பழிபுரியிவ்வுடன்
மன்னவாழ்வதுவாழ்க்கையன்றேயெனு
வுன்னவ்வேல்வையிலிங்கத்தினுேங்கொளி
முன்னவன்பசுமுன்னரிற்றோன்றியே. (கூ௯)

நீவருந்தல்வருந்தனின்பாலெமக்
காவதோர்விளையாட்டிதுகேட்டியாற்
பூவர்தூய்நமைப்பூசைபுரிகுநர்
பாவமாற்றினும்பற்றறுப்பாமரோ. (௪0)

விரியுநீருலகத்தினில்வெவ்வினைத்
துரிசறும்படிதூயவராய்த்தினம்
வரிகொளாய்மலர்கொண்டெமைவந்தனை
புரியிலெப்பிழையும்பொறுப்பாமரோ. (௪௧)

பாசவேரைப்பறிக்குமெம்பாதத்தி
லாசையாரறியாதுசெய்வெம்பிழை
மாசுவந்ததந்தோவெனின்மற்றவர்
பூசையாற்பொறுப்பாம்பொல்வெய்தவே. (சஉ)

தூயையீயுந்தொடர்மனவாக்குட
லாயமூன்றுமறியாநுசெய்பிழை
போயயாமும்பொறுத்தனம்பூணிகேண்
மேயபூசனையாற்றும்வியப்பினல். (சங)

நம்மைஞாலம்பசுபதிநாயக
னெம்மையாளுடையான்கருணேசுரன்
மும்மைநாமமுழுவதுமோதிடச்
செம்மையாம்வரந்தந்தனந்தேனுவே (சச)

மீளவும்மிறைவேண்டியநல்வரங்
கேளெனக்கயிலைக்கிரியின்பசுந்
தாளதாமரைநான்முகன்முன்றுயின்
மூளுமல்லின்முடிநதசராசரம். (சரு)

சேரநீதருகென்றுசெவ்வாய்திறந்
தாரவையவருளினையாதலிற்
பாரினுட்படைப்பிற்றிணைப்பான்மைகள்
சோருழுவகைசொல்லெனப்போற்றலும். (சசு)

வேறு.

யாமுறையி(டு)னுக்கவாசிதென்கீழ்பாணிருதிதிக்கிவைகளி னிடையிற், றுமினிதுரையுஞ்சராசரச்சுவடுதேழைதருப்ரளய க்தோறும், பூமகன்முதலாப்படைப்புழிநம்மைப்பூசனைபுரிந்து நம்மருளாற், காமர்சூழ்வுறுமவ்வடிகளின் குறிப்புக்கண்டுகெண் டிவ்வணம்படைப்பார். (சஎ)

அச்சுவடுகளைத்திப்பியவடிவமமைவரவாதியினமைத்தாம், வைச்செம்மயிதயத்தவைகளைநோக்கிவணங்குநர்பிறந்தைவாரு திவீழ்ந், தெய்ச்சிளைப்புறும்பொய்வாழ்க்கையின்யாக்கையெடு த்திடலொழிந்திமையவரும், பச்சைமாயனும்வேதனுக்தொழு முத்திவீட்டினைப்பரித்துவாழ்குவரால். (சஅ)

அளிவிளைசுரபிநீயமர்சுடைட்டினடைவடைவெமதருடங் குந், தெளிவரவுருக்குந்தொழிலொருங்குணர்ந்துதிகழ்வுறத்தி ருத்துகென்றருளி, யொளிவளர்பவளச்சடாடவிப்பெருமா ளுேங்கொளிவளரிலிங்கத்திற், றளிர்புரைமேனிக்கருணையந் தடங்கட்சாம்பவியுடன்மறைந்தனனால். (௪௯)

நெக்குநெக்குருகிநெடுங்கணீருகுத்துநிருமலனவ்விலிங்கத் திற், புக்கிடுமளவுஞ்சிவசிவபோற்றிபோற்றியென்றிளம்பிறை யறுகு, கொக்கிறகணியுஞ்சடிலனைப்போற்றிவிடையொடுங் கோக்குலக்கபிலை, தெக்கணமணுகிச்சராசரச்சுவடுதெரிதருமெ ல்லைசார்ந்ததுவே. (௫௦)

ஆண்டையினெய்திச்சுவடுகண்ணேக்கியருமறைச்சிரத் தின்மேலொளிரும், பாண்டரங்கனைத்தனுள்ளுளேவிழித்துப் பார்த்துமீளவும்வியனுலகைக், காண்டலுங்கமலக்கடிமலர்ப் பொகுட்டுக்கடவுள்வேதியனுளங்கவல, வேண்டியவாறேசரா சரமனைத்துமுதித்தனவிம்மிதம்பெருக. (௫௧)

பூத்திடவுதித்தசராசரமனைத்தும்பொசித்திடலுள்ளிடை த்தெரிந்து, நீத்தவார்சடிலநிருமலனுறையுநீடிருக்கோயிலினுத க்கின், மீத்திகழமுதந்தானெனத்திரண்டவெண்ணெய்மால்வ ரையினைவிதித்துத், தீர்த்தமொன்றதன்கீழ்பால்வகுத்ததுவத் தீர்த்தமுந்தேனுமாதீர்த்தம். (௫௨)

செப்பருங்கபிலைதருநவநீதச்சீதமால்வரைக்கிணைசெப்பின், முப்புவனங்கடம்மிலொன்றின்றென்மொழிவதற் கெவன்கொல ப்பெருமை, யெப்புவனங்கடோறுந்தொறும்விளைகட்கேதுவா யுதித்தபல்லுயிர்க்குந், துய்ப்பனயாவுமளிப்பதுகயிலைச்சுடர்க் கிரிநிகர்ப்பதுசிறப்பால். (௫௩)

விட்புலன்மலிநீர்வைப்பிவைமுழுதும்வெதும்பவெவ்வழலெ ரியெழினுந், தட்பமோர்சிறிதுந்தணப்புறுதலைபைந்தளிர்புரை மேனிமென்கோதைக்,கட்கருங்குவளைக்கதிர்நிலாமுறுவற்கௌ ரிபங்கினன்மடற்கைதை, முட்செருக்கியவாலெயிற்றுவெம்பா ந்தண்முடியினன்வடிவமேவியது. (௫௪)

காண்பதற்கிதயங்கருதிடின்முக்கட்கடவுடனுலகளிப்பது தாட், சேண்படுநெறியிற்றேய்வுறாநடப்பிற்சிவனுடனிருத்தரு தணுகி, மாண்புறக்காணிற்பரம்பரனுருவம்வழங்குவதருச்சனை புரியிற், பூண்பதற்கரியபதமளிப்பதுவப்பொருப்பையார்குணி த்தளவிடுவோர். (௫௫)

அலகிலவாயசராசரமனைத்துமார்கலியாடைசூழ்கிடந்த
மலர்தலையுலகின்வளனுடன்பொலிந்துவாழுநாட்பசுபதிநாத
னிலகியகமலபதமிசைமீட்டுமேருச்சனையியற்றியக்கயிலை [தால்.
தொலைவிலவரனுமிறைதிருவருளுஞ்சூழ் வுறத்துறக்கமேவிய

பொருவறுஞ்சுரபியருச்சனைபுரியுங்காலையிற்போழிளமதியு, முருகுயிர்த்தறுகாற்சுரும்பிசைமுரற்று மொய்மலர்க்கடுக்கையு முடித்த, திருமுடிபுறுபடக்குளம்புறைக்கமிதிக்கவுந்திருவு ளத்தெண்ணூ, தருள்சுரந்திடலாற்கருணைநாயகனென்றமல னையுலகெலாமறையும் (௫௭)

வரன்முறைவழியேபிரளயந்தோறுமாய்ந்தவைவழங்கலா னுதி, புரமதுதனைத்தொல்வேதமுங்கருப்பபுரியெனப்புகன்றி டுமென்றால், விரவுமேதினியினுளதலன்களினும்விசிட்டமித்த லமிகுதவத்தி, னுரவியதொல்சீர்முதுக்குறைவினருமுறைவத ற்காண்மேம்விழைவார். (௫௮)

ஞாலமாதியவந்துதிப்பதன்முன்னர்நவிலுதற்கரியபேரொ ளியாய், மூலமாய்முளைத்தபசுபதியிலிங்கமுறிதிரைப்புடவியி ன்முளைத்த, வேலுறுமிலிங்கமெவற்றினுமதிகமுண்மையென் றுரைத்தனன்வியாதன், சாலுறவையமிலையிதற்கையஞ்சாற் றினேரிழிகுலத்துதிப்பார். (௫௯)

பார்புகழ்பசுபதீச்சுரனென்னும்படரொளியிலிங்கத்தின் கீழ்பாற், ஞர்புனைகோடியிலிங்கமொன்றதன்கீழ்சார்கயிலாயநா யகனென், றேர்புனையிலிங்கமொன்றதன்றென்பாற்கரியமாலீ சனென்றிசைக்கு,மோரொளியிலிங்கமதற்கொருசார்வஞ்சுளே சனென்றுரைக்குமோரிலிங்கம். (௬௦)

இலங்குமெய்ச்சோதியியல்புடைப்பஞ்சவிலிங்கமுந்திவ் வியவிலிங்க, மலங்குநீராடைமருங்கின்மீதிசைத்தவத்தலத்த ன்றியோர்வேறு, தலன்களினின்முலத்தலப்பெருமைசாற்றி டற்கரிதுமுப்பகையும், புலன்களும்வென்றமுனிவிர்காளென் னச்சூதமாமுனிவரன்புகன்முன் (சுக)

சராசரச்சருக்கம்முற்றுப்பெற்றது.

ஆ சருக்கம் ச- ஆ, திருவிருத்தம்-உகரு.

அலங்காரவதிச்சருக்கம்.

மண்ணினுளனிடையெண்ணவரியனவண்மையுளபொரு ளமன்னுமே, யுண்மையொளிதரவுண்மையருள்பெறுமுண் மையதுவருமுண்மையே, கண்ணிதொடைசேணயண்ண லுயிர்கவ ர்கண்ணரழல்புரைவண்ணனார், விண்ணினுயரியதண்ணமதிநி கர்வெண்ணெய்வரைதனைநண்ணுமே. (க)

வேறு.

இந்தவாறுரைத்தமுனிமுகநோக்கிமுகமனேடேத்தியா ண்டு, முந்தமாதவமாற்றிச்சிவார்ச்சனையைவரன்முறையின்மு ற்றினான, முந்துமாவரங்களுடன்முத்திவீடடைந்தோரை யுரைத்தியென்னுப், பந்தவாணவப்படலங்கிழித்தத்வமுனிவரர் தாம்பகரலுற்றார். (உ)

பகர்ந்தசவுனகராதிமுனிவர்முகஞ்சூதமுனிபார்த்துப்பாச, மிகழ்ந்துமுழுதொருங்குணர்ந்திருச்சனைகளியற்றி னேர்க்கெ ல்லையின்று,லுகந்துபராசரன்றவத்திலுதித்தெமையாளொருகு ரவனுண்மைஞான, மகந்தெளியமொழிந்தவையிலறிந்தவாறு ரைத்துமெனவறையலுற்றான். (ங)

தெண்ணிலவுதவழ்வேணிச்சிற்பரனையொருகாமதேனுஞா
ன, முண்ணியமவழிபாடுபுரிந்துசராசரமுழுதுமுதவியும்பர்,
விண்ணிலதுபோயினதுசொற்றனமுன்றுஞனவரைமிசையின்
வைகும், பண்ணிவர்சொல்லலங்காரவதிமுதலோர்புரிந்தடை
ந்தபரிசுசொல்வாம். (௪)

மூதண்டமுகடுருஞ்சிமுழுநிலவுபரப்பிமறைமுழங்குவெ
ள்ளி, வேதண்டநெடுமுடியினமலனொருபாலரசுவீற்றுவக்குங்,
கோதண்டமுறழ்புருவக்கருணைபொழிகுருமணிப்பொற்குழை
கடாழுங், காதண்டவருநெடுங்கட்கௌரிதலைவனைநோக்கிக்க
ழறுகின்றாள். (௫)

எவர்க்குமுடலுயிருணர்வாயிருந்துமளவிடற்கரியவிறை
யேயாற்றுந், தவத்தினுளேதவமரியதவந்தெரியவடியேற்குச்
சாற்றுகென்னச், சிவத்தசெழுங்கனிமொழியாயரியதவஞ்
சிவார்ச்சனைமற்றதுதான்செப்பிற், பவக்கடலைக்கடத்திமுத்தி
க்கரையேற்றிவிடுவதற்கோர்பகுதியாமே. (௬)

இருவரறிவதற்கரியவொருபொருளேயிருநிலத்தினொரு
வாதுன்னைப், பொருவறுபூசனைபுரிதற்கிவ்வுழியென்றடியேற்
குப்புகலுகென்னக், குருவயிரமணியிமைப்பவருவிகொழித்தெ
றியிமவான்கொம்பேதொல்லை, யருமறைகள்பழிச்சும்வஞ்சுளா
ரணியத்தேகுதியென்றருள்செய்தானால். (௭)

வேணிநாண்மதிக்குழவியிலைந்தபரம்பரனைவிடைகொண்
டுதேவி, வாணிநாமகளுமலர்மகளுமலர்தூவியிருமருங்குமொய்
ப்பச், சேணிசேர்மகளிரரமகளிர்முதலாயசேடியர்களீண்டக்,
காணியாகியவஞ்சுளாரணியத்திடைப்புக்காள்கைலைநீங்கி. ()

குற்றேவலிற்றழைக்குங்கோற்றொடிவேற்றுணைவிழியார்
குறுகிநிற்ப, மற்றேவல்பலவாற்றுமணிநிலவுநகைமாதர்மருங்கு
மொய்ப்பப், நற்றேவமகளிர்முதலியமடவார்பணிவேட்டுநயந்து
சூழ, வுற்றேவன்முலைநாரிதானேயாராதனைக ளுஞற்றலோ
ர்ந்து. (௯)

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR ... 600 090

புதுநீர்மஞ்சனமாடிப்புண்ணியவெண்பொடிமேனிபொலி யப்பூசி, மதியார்வண்டுணுமுன்னர்மலர்கொய்துநீர்த்தூம்பில்வ டித்துப்பெய்து, முதிர்வாசமலிதெய்வைமுதலபல்திரவியமுமு றைபினேந்தி, யிதுகாலமெனப்பசுபதீச்சுரனைவழிபடவினித யம்போக்கி. (௧௦)

ஐந்துவகைச்சுத்திமுற்றிச்சோடசத்தில்வழுவாமையருச் சித்தேத்தும், பைந்தொடியைமுகநோக்கிப்பசுபதிநாயகன்கரு ணைபாலித்தான்போல், வந்தனையாற்றுநராரிதுவருதியலங்கார வதிமங்கையென்னச்,சந்ததமும்பிரியாமையுடனமைத்தானோ ர தவிசிற்றலைமைமிக்கான். (௧௧)

ஆயகாலையிற்சிறைவண்டறைதருவெண் கமலமலரகட்டு வைகுந், தூயவாணியுஞ்சுருதிமறைமிருதியாகமங்கள்சொற்ற வாற்றான், மேயபூசனைபுரிந்துவிமலனருட்பணிதலைமேற்கொ ண்டுதண்டேன், பாயுநீடொருவனத்திற்பன்முறைமாதவம்வி ழைவிற்பயில்வதானாள். (௧௨)

விளரிபாடியசுரும்புபசுந்தேனுஞ்செந்தேனின்மேய்ந்து மூழ்கு, முளரிவாயரசாட்சிபுரிதிருவுமுகிழெருக்குமிதழித்தா ரும், வளர்சடாடவிப்பெருமான்மலர்த்தாளில்வந்தனைபன்மு றைவழாமைக், கிளர்விறற்றினைத்தருளின்வழியொருசார்மா தவத்திற்கெழுமலுற்றாள். . (௧௩)

விஞ்சைமாதருமமுதமொழுகுகுழலிசைமதுரமிழற்றுங் கிள்ளை, யஞ்சொலாரணங்கினருமலங்காரவதியுடனாரணங்க ளேத்தும், வஞ்சியாநிலைநாதன்றனைநனைமென்மலர்தூவிவழி பாடாற்றி, நெஞ்சமேவலிற்போக்கிநித்தமாதவமிழைக்குநினை வில்வாழ்ந்தார். (௧௪)

அலங்காரவதிமதிவாணுதலிகலைவாணியரவிந்தைமீதி, னிலங்காரமுலைவனிதையிவர் புரிவந்தனைபுகன்றுமிளநீராடை த், தலங்காணுநளினமலர்ச்சதுமுகனைம்முகவன்றனைப்போற் றிப், புலங்காயுநனிதவத்தீர்பூசைபுரிந்தவைதெரியப்புகலலுற் றும். (௧௫)

அலங்காரவதிச்சருக்கம் முற்றுப்பெற்றது.

ஆக சருக்கம் ரு - இ, திருவிருத்தம் - ௨௨அ.

பிரமச்சருக்கம்.

கமழ்சோலைசீலமலர்வாவிமேவுகருவூரராதிபுரனார்
நமையாளுநாதர்மறையோதுபாதர்நவநீதசீதவரையா
ருமைநேசர்தேசுபொலிபூசையாசையுறையாதுமேதசமுழல்வீர்
யமபாசமோசமலநாசமேனியுறவீசிலேதுபுகலே. (௧)

வேறு.

புண்டரிகநாண்மலர்த்தோட்டகட்டுநடுப்பொகுட்டிலரசி
ருக்கும்புத்தேள், கண்டுயிலிற்சராசரங்களுயிருலப்பக்கவன்
றுதிருக்கயிலைபோகி, யண்டர்பிரானருளியவாறங்கரிற்சிலப
கன்மாமகங்களாற்றித், தண்டலைசூழ்கருவூரிற்றலைவனைவந்த
னைபுரியச்சார்தல்வேண்டி. (௨)

செய்யசூட்டஞ்சிறைவெள்ளோதிமத்தின்வெரிநிடையிற்
றிகழவெய்தித், துய்யமாமுனிவரருமிமையவருநனிதவருஞ்
சூழ்ந்துபோற்ற, வையமீதிழிந்துவளர்வஞ்சுளாரணியத்தினெ
ல்லைகாணு, வையன்வாழ்பதியிதெனவூர்திவிடுத்தரகரவென்ற
ஞ்சலித்தான். (௩)

அரகரவென்றஞ்சலித்தமறைக்கிழவனேத்தொலியுமமரர்
யாருங், கரகமலமுகிழ்ப்பமொழிகுளறொலியுமாதவத்திற்கரு
ணைவைத்த,விரகமுனிவரரார்ப்புமேனையோர்மிடைந்திறைஞ்
சுமொலியுமாக, வரதனுறைதருகருவூரெழுந்தெழுநீர்க்கடலொ
லியுமறைத்தமாதோ. (௪)

பின்னிமறிதிரையெறியாம்பிரநதியிற்படிந்துபிதாமகன்
றொல்வேத, முன்னிவிபூதியுமக்கமணியுமுடல்கவினவுமை
யோர்பாகன்றன், சந்நிதியிலரகரசங்கரபோற்றியெனும்வாய்
மைதழைப்பநண்ணிச், சென்னியுறப்பன்முறைதாழ்ந்தனனெ
ழுந்துசெழுங்காமதேனுமுன்னம். (௫)

படைத்தசராசரச்சுவடுேவநீதப்பருப்பதமும்பார்த்துவெள்ளை,விடைத்துவசனருளுடையோர்க்கியாதியலாதெனமனத்துள்வியந்துவாசத், தொடைத்துளவோனும்பிமலர்த்தோன்றிஞெனித்தலனைத்தொழமுன்னுற்றிக், கிடைத்ததவப்பயனிதுவென்றமலனருச்சனையன்புகிளர்த்தலுற்றான். (சு)

கத்தேறுகனிதிரைப்பாற்கடலினமுதயின்றிமையாநாட்டம்பெற்ற, புத்தேளிர்மிடைந்துபுடைப்பணிகேட்பப்பூங்கமலப்பொருட்டுப்புத்தேள், கொத்தேறுகொழுமலரின்குவைகணறுங்குறடுருஞ்சுந்தெய்வைவாசச், சுத்தோதகம்பளிதமுதலதிரவியங்கொணர்ந்துதுணியுமன்பால். (எ)

தொல்லைஞான்றுதித்தசராசரந்தொலையவருபாவத்தொடர்புமேரு, வில்லைவாங்கிப்புரமூன்றெரித்தவனையன்றிவிதிக்குவலென்றுன்னு, மெல்லையாண்டுறுபுகரும்படைப்பனகண்டுயிலின்மறந்திடலுமெல்லா, மொல்லைதீர்ந்திடல்வேண்டுமுளத்தினுய்வழிபாட்டிலுறுதிபூண்டே. (அ)

இருக்காதிமறையங்கமாகமங்களியம்பியவாறியைந்துபூசைப், பெருக்காசைக்கடன்மேன்மேலும்பெருகிக்கரைபுரளப்பெருமான்செம்பொன், மருக்காலுமலர்த்தாளில்வைத்தமனுதிகளைவிடாதவணிறுத்தித்,தருக்கானமனச்செருக்கைத்தள்ளிஞன்பரவசமாக்கடலிற்றுழ்ந்தான். (கூ)

தாழ்ந்தமனமைம்புலவேடக்குறும்பருர்வழியிற்சாராவண்ணம், வாழ்ந்துருகியூசியுங்காந்தமும்போலவந்தனையில்வழாமைபற்றிச், சூழ்ந்துவிழிநீரருவிசொரிதரவானந்தநெடுந்துழனியாற்றி, யாழ்ந்தனன்ராசதமொருவிச்சாத்துவிகமடைந்துதுதியறையலுற்றான். (க0)

வேறு.

உருவேயருவேயொளியேசரணமுணர்வேயுணர்வாருணர்வேசரணங், குருவாய்வெளியேவருவாய்சரணங்கொடுமால்விடமார்மிடறுசரணங்,கருமாகரிவீழுரியாய்சரணங்கருவேரறவேவருவாய்சரணந், திருமாலறியாவிறையேசரணந்திருவாநிலையாய்சரணஞ்சரணம். (கக)

யுகமீறுமிலாவமலாசரணம்மொளியுமொளியாவொளியே சரணம், முகமாயிரமாமுதலேசரணம்முறையேதமர்தாயிலி யேசரணம், அகனேபுறனேயிலனேசரணம்மடியார்துயர்தீர டிகேள்சரணஞ், செகநாயகனேசிவனேசரணந்திருவானிலையா ய்சரணஞ்சரணம். (கஉ)

பவளாசலமேனியனேசரணம்படிநீரெரிகாலவெளியே சரணந், துவளாவொளிர்மாமணியேசரணஞ்சுகஞானபராபர னேசரணம், நவநீதசிலாவிறையேசரணந்நடுமேலொடுகீழுமி லாய்சரணஞ், * சிவனேசிவதேசிகனேசரணந்திருவாநிலையாய் சரணஞ்சரணம். (கஙு)

வேறு.

இவ்வண்ணஞ்சதுமறையோன்சரணமெனவேத்துதலுஞ்
செவ்வண்ணச்சிவபெருமான்சிவலிங்கத்திடைநின்று
முய்வண்ணத்தெழுந்தருளியுகந்தனைநின்பூசையெனு
மெய்வண்ணத்துறுவரங்கள்விழைந்தவைகேட்குதியென்றான்

அலகிலருமறைக்கொழுந்தேயானந்தசுகோதயனே
நிலவுகுணங்குறிகடந்தநிருமலனேயிருவினையின்
மலதிமிரமுனிபருதிவானவர்க்குமேலவனே
யுலவுசததளமணவுனுகளமலரடிபோற்றி. (கரு)

புன்மையேன்கண்படையிற்புவியசராசரங்கள்பொன்றுந்
தன்மையால்வரும்பாவந்தலைவருமெனுமகந்தை
தொன்மையாம்படைப்புமறந்திடவுருலையவருளுகென
மன்மயானத்தாடிவழங்கியருள்புரிந்தருளி. (கசு)

மறைமுனிவிவ்வுழிநீவளர்வேள்வியொன்றியற்றி
நிறைகலைவாணியைமன்றனிகழ்த்திநமதருணிலையி
னறைதிரைநீரவனிமுதலியதருதியடைவினெனு
விறையருளும்பணிதலைமேலிருத்தியிறைஞ்சினனகன்றான். ()

வண்ணருமாநதிக்கரையுத்தரத்தவஞ்சுளேசனுக்கு
நண்ணுகுணக்கெனவாதிநாயகர்க்கவாசியென
வண்ணல்வரிவிற்கெழுமுன்றம்புவிமுமாயிடைநற்
புண்ணியமாதீர்த்தமெனவொருவாவிபொலிவித்தான். (கஎ)

நியமித்தவவளகத்தினிமலனையாவாகித்துக்
கயமொத்தவவ்விலஞ்சிக்கரைமிசைமாதவமாற்றி
யியமொத்தமுழக்கெழவிண்ணிமையவரேத்தெடுப்பமறை
நயமொத்தநான்முகனவனீதக்கிரிநணுகி. (௧௯)

அவ்வரையுநீசியின்கண்ணாரழல்வேள்விக்குண்டஞ்
செவ்விபெறநியமித்துத்திகழ்யூபத்தறிநிறுவி
யெவ்வமறுதிரவியங்களெல்லாமும்வருவித்துப்
பவ்வநிகரியமடுவிற்பங்கயன்மீளவுநணுகி. (௨௦)

புனல்படிந்துமணித்தசும்பின்புதியநறும்புனல்பெய்து
பனகணுநிலைநாதன்மௌலியிற்பன்முறையாட்டி
நினைவினருச்சனையாற்றிநிமலனனுமதிபெற்றுக்
கனகநீள்கருப்பனுயிர்கனவேள்விக்களம்புக்கான். (௨௧)

ஆயிடைநான்முகன்வேள்விதொடங்கினனென்றத்திரியும்
பாயுதநிருகர்முனியும்பரத்துவாசனும்புலத்தைக்
காயும்வியாதனுஞ்சுகனுங்காசிபனுங்கோசிகனுந்
தூயவசிட்டனும்பிருகுந்துருவாசமாமுனியும். (௨௨)

வாமதேவனுந்ததிசிமாமுனியுங்கண்ணுவனும்
[illegible]ாமதேற்கியனுஞ்சாபாலியுஞ்சாண்டில்லியனு
மாமறைரோமதனுமுபமன்னியனுஞ்சங்கணனுங்
காமருசீர்ப்பராசரனுங்கௌதமனுஞ்சுதீக்கணனும். (௨௩)

காசின்மிருகண்டுவுமார்க்கண்டனும்விபாண்டகனு
மாசில்விச்சுவாவசுவுமரீசியும்வாமத்திரியு
மேசில்கௌண்டின்னியனுமெழில்வாலகில்லியருந்
தேசுறுமட்டாக்கிரனுந்தெக்கணனும்புலத்தியனும். (௨௪)

சனகனுஞ்சனந்தகனுஞ்சனந்தரனுஞ்சனற்குமர
னெனவருநான்மறையவருமெண்டிசையிலுறைபவரும்
புனைதவநாரதமுனியும்புண்டரிகமாதவனு
மனல்வளர்தத்தாத்திரியுமங்கிராமுனிவரனும். (௨௫)

டுய்முனிவரனையவருமெய்தினர்விஞ்சையரியக்கர்
பொய்முனிபூசுரர்பிறரும்புகுந்தனர்பொங்கலெநெஞ்ச
மைமலிகந்தரன்மலர்த்தாள்வணங்கினர்வந்தனையாற்றி
செய்மலிவேள்விக்களத்தினிரைநிரைதொக்கணைவுற்றார். (உசு)

நெருங்கினாயாவரையுமுகனேர்ந்துமுகமன்னியம்பி
மருங்கின்முறைமுறைதவிசுவழங்கிமலர்மறைக்கிழவன்
கருங்கயமொன்றுரித்தோன்பொற்கழலைமனத்தவிசிருத்தி
யருங்கலையாரணம்பயின்றாரழல்வேள்வியாற்றினன். (உஎ)

ஆற்றியவிப்பாகமவரவர்க்கமைவுவரமரபி
னூற்றமறநணியுதவியுலகீன்றவுத்தமியைப்
போற்றியிளம்பிறைவேணிப்புனிதனுநிலைநாதன்
கூற்றினுயிர்குடித்தமலர்க்குரைகழற்றாமரையிறைஞ்சி. (உஅ)

முழவசனிமுழக்கவிண்ணோர்மொய்மலர்மாமழைபெய்யப்
பழமறைவேதியராசிபகரமுனிவரரேத்த
விழவுமறுகிடையூர்ந்துவிரித்சழல்சான்றாகவயன்
மழலைமொழியமுதொழுகுங்கலைவாணிமணநயந்தான். (உகூ)

நாமகளைவேட்டபெருநயப்புமிறையருள்சிறப்பும்
பூமகனுட்கொடுபெருமான்பொலிந்துறையவ்வுழிநறிய
மாமணியாலிழைத்தசினகரமொன்றுவகுத்ததற்குத்
தேமணியத்தனுடலைகடிகழ்தருதென்கீழ்பாலில். (௩௦)

முத்தலைவேற்பத்திரையைமுழுமணிச்செண்டாயுதனை
வைத்தவர்வைகிடக்கோட்டம்வகுத்துவஞ்சுளாடவிரு
முத்தலனைமுழுதுமெழிலமரர்கோன்பதிபோல
வித்தகர்மீதூரவிதித்தனனெவையும்விதிப்போனே. (௩௧)

விதித்தபூணடகச்சிகரிமேருவெனவொருதிருத்தேர்
மதித்தனன்மூவுலகுறைவோர்வரமுரசமறைவித்துத்
துதித்தெழுபங்குனித்திங்களுத்திரத்தி லுயர்கருவூர்ப்
பதித்தலைவர்க்கிதத்தவிழாப்பொலிவுபெறப்பணுவித்தான். ()

இவ்வாறுசராசரங்களியற்றிவரம்பலபெற்றுச்
செவ்வாய்வெண்ணகைவாக்கின்றிருவுடனன்மறைக்கிழவன்
சைவாகமத்தெளிவின்றலைவன்விடைதலைமேற்கொண்
டெவ்வானவரும்போற்றவெய்தினன்றனதுலகம். (௩௩)

வேறு.

பைந்துழாய்ப்படலைபுனைபரந்தாமனிலஞ்சிநறும்பதுமப்போதில், வந்தவேதியன்வேள்விக்குண்டம்விளைந்துவிதிவழிபிறசாத்துஞ், சிந்தையார்முத்திவீடடைகுவ மந்திரமின்றித்தெளிவில்லாத, புந்தியார்வாளாமெய்பூசிடினுஞ்சிவகணத்திற்பொலிந்துவாழ்வார். (௩௪)

முளரிநான்மறைத்தலைவன்மழலைவரிவண்டிரங்கமுருகுநாறுந், துளபமால்விடையவனைத்தொழுதுவழிபடலுரைத்தாஞ்சுருதிநூலிற், களர்பராசரன்றவத்தினுதித்தெமையாள்வியாதனருட்கிளைபாகன், றளசரோருகமிறைஞ்சிப்பதரிவனஞ்சார்ந்தபடிசாற்றுகின்றாம். (௩௫)

பிரமச்சருக்கம் முற்றுப்பெற்றது.

ஆக சருக்கம் ௩ - ௦, திருவிருத்தம் - ௨௩௩.

பதரிவனச்சருக்கம்.

கஞ்சச்செழுமலரஞ்சிப்புனலளறுறவேகவினுவவரிமாலா, யெஞ்சிப்புடவியிடந்துட்கவலைகொடினநேடவுமரியனநூலோர்,நெஞ்சப்பொருளினவன்பர்க்கெளியனநிலைநாடகநவிலுவசீர்சூழ், செஞ்சொற்றெரிதமிழ்வஞ்சிப்பதியுறைதிருவாதிலையிறையவர்தாளே. (௧)

வேறு.

ஆணடனைமாமுனிவருமர்ச்சனையாற்றியண்ணலருள்
வேண்டியிருக்கையினகன்றாருண்மறைவியாதமுனி
பூண்டநிரந்தரம்பரனைப்பூசைபுரிவதுகருதி
மாண்டமனத்தினனாகிவரதனையேத்துபுகின்றான். (உ)

ஏத்தலுமாமணிமன்றினெழிநடனம்புரிஞானக்
கூத்தனிமயாசலப்பைங்கொடியொருபங்கினனாகிப்
பாத்தனிரதங்கூடவும்பால்புரைவெள்விடைமீதிற்
பூத்தனனற்சுடரிலிங்கத்திடைநின்றும்போந்தருளி. (ங)

நெக்குருகியிறைஞ்சுவியாதனைநிமலன்விழிசாத்தி
மிக்கதவமறைமுனிவவிழைந்தமைகேட்குதியென்ன
நக்கவனையருச்சித்துநனிதவமாற்றிடவீண்டு
தக்கதலனருளெனச்சசிபுனைவேணியன்சாற்றும். (ச)

உற்றுரையுநமதிருக்கையக்கினிதிக்குத்தரபாற்
சிற்றிலைநன்கனிப்பதரிதிகழ்வனமொன்றுளதவணி
னற்றவமைவகுதியென்னாநவிற்றுநகுதலைதரித்தோன்
மற்றவனுக்கருள்வழங்கிவளர்குறியினிடைப்புக்கான். (ரு)

எந்தையருளியவாற்றாலேதமுனிவியாதமுனி
முந்தைமலமுருக்கியமாமுனிவராருமறைக்கேள்வி
மைந்தர்பலர்புடைநெருங்கமலர்ப்பதரியாணிறைந்த
வந்தவனந்தனக்குரியவாச்சிரமமெனவடைந்தான். (சு)

வேறு.

இரந்தையவ்வினமென்னினுமிலஞ்சிமாதுளைவேய்
நரந்தைசம்பிரநாளிகேரஞ்சுரபுன்னை
செருந்திதாதகிசெண்பகம்பாதிரிபலாசு
குருந்துசந்தனங்குங்குமங்குரவுதக்கோலம். (எ)

வில்லுவம்பலாவாசினிவிளாக்கரவீர
நெல்லியாம்பிரம்பிப்பிலநீர்வஞ்சிகியமங்
குல்லைமல்லிகைதருக்கத்திவெட்சிகுங்குலிய
முல்லைபித்திகைமுதலியமரஞ்செடிமொய்க்கும். (அ)

கொன்றைமுன்னரோரெரிமரங்குலவுதன் மாலை
துன்றுகாலையினதன் மிசைப்புட்குலந் துவைத்தல்
கன்றுழைக்கரன்முன்றிலிற்கார்த்திகைத் தீப
நின்றெழும்பொழுதன்பர்களார்ப்பனநிகரும். (௯)

நலம்பெய்வெட்சியினிறைவுறமலர்ந்த தண்ணறும்பூ
சிலம்பிநூலினுண் மறைந்ததனிடையொளிதெரித
லலம்புநீர்முடியந்தணனழல்புரைமேனி
யிலங்குவெண் டிருநீற்றினூடிருத்தலையேய்க்கும். (௧௦)

தூங்கணங்குரீஇக்குடம்பைகணிரைநிரைதொக்குத்
தேங்கமழ்ந்தபூம்படப்பைகடொறுந்தொறுஞ்செறித
ருங்கருந்தவமுனிவரர்தனித்தனியொடுக்க
மாங்கமைத்துமாதவம்பலவாற்றுதல்கடுக்கும். (௧௧)

நீடருந்தவமிழைக்குநர்நெக்குநெக்குருகிப்
பாடலேடவிழ்த்திருகணீர்பனித்திடலன்றி
மாடணைந்தபூநந்தனவனங்களுந்தினமு
மேடவிழ்த்துளநெகிழ்வுறநெடுங்கணீரிறைக்கும். (௧௨)

மூற்றெருங்குணர்ந்தாற்றியநோன்பர்முக்குறும்புஞ்
செற்றுநல்விரதம்புரிபலன்கொடுதிகழ்வார்
மற்றையோரவரன்றியுமவ்வனமரங்க
ளுற்றமாவிரதம்புரிபலன்களோடுறையும். (௧௩)

மோனமாப்புலனடக்கிநீண்மூச்சவித்திருக்கு
ஞானவாட்படைத்திறலினர்நான்மறைமுடிவு
போனகேள்வியாமுதுக்குறையவர்பொறிதேற
வீனவல்வினைக்கிழங்ககழ்ந்தினிதுவீற்றிருப்பார். (௧௪)

கறையெறிந்தவெண்பல்லினர்கமலனும்வெட்க
மறையெறிந்துசேப்பொழுகியவாயினர்விதிக்கோ
லுறைதரும்புனற்குண்டிகைக்கையினருரத்திற்
செழுமுந்நூல்னர்மரவுரித்துகினர்திகழ்வார். (௧௫)

வேறு.

முருகுயிர்க்கும்பசுந்தென்றன்முளரியசோகந்தளவ
மருமலர்ச்சூதங்காவிமதுகரங்கோகிலங்கிள்ளைச்
§செருமுதன்மாதவர்க்குடைந்துதேர்விசிகங்ாரிசின்னம்
பரிவிடுத்துப்படைமாரன்புறங்கொடுத்தபான்மையதே. (கசு)

பாண்மிளிரமறையாடும்பனவர்குறுஞ்சாலைதொறு
நாண்மலர்செங்கனிதருப்பைநன்கமைத்துப்பாந்தளுமிழ்
சேணவிர்செங்கதிர்விரிக்குஞ்செய்யமணிச்சுடரேற்றி
மாணவர்போற்செம்முகத்தகருமந்திவழிபடுமால். (கஎ)

வேறு.

முதுநான்மறைமகராலயமூழ்கிப்பவங்கீக்குந்
துதியாகமநதித்திம்புனறோய்ந்தேதமகற்றும்
புதிதாந்தருமம்பூத்தபுராணத்தடம்படிந்து
கதிநீடிருந்துறைசேர்ந்துநெஞ்சுவகைக்கரைகாணுர். ()

செறியுந்தவமுனிவோர்மனத்திமிரந்திசைபோகி
மறியும்படியுதயஞ்செயுஞானச்சுடர்மான
வெறியுந்தியமலர்க்கானிடைவீங்கும்மிருளிரியப்
பொறியுந்துபையரவின்மணிபொழியுங்கதிர்நிலவும்.(கக)

வேறு.

இன்னதாபரமக்கொடிமுதலியயாவு
மின்னகாலத்திலின்னவையளிக்குமென்றியம்ப
லின்னகாலமென்றொருகாலத்திலீயு
மின்னபல்வளத்தருவனப்பெருமையாரிசைப்பார். (உ0)

அந்தநீள்வனத்தாயிடையளவின்மாணுக்கர்
சிந்தைதேரருந்தவத்தினர்திசைதிசைமொய்ப்பப்
மைந்துழாய்முகிற்கலையெனவரும்பராசரன்றன்
மைந்தனவ்வழிவைகினன்மழைவளஞ்சுரப்ப. (உக)

---

§ செருமுதல் - எதுகைநோக்கிவந்தது.

வேறு.

அணுகுமுனிவரனெழுநாவழற்கிறைவன்றிசைமாழை
நணுகுநதிக்கரையருகினுதக்கெனநான்மறைகொழுந்தி
னுணுகுபொருளுருவரசொன்றுளததன்கீழ்நுவலவரு
மணிகொடுதெண்டிரைகொழிக்குமொருதீர்த்தம்வயங்குமால்.

செவ்விதரும்பிப்பிலமாதீர்த்தமதன்றுறைபடிந்து
நவ்விவிழியுமைபாகனருச்சனையினலந்திளைத்து
வவ்வியகாயத்திரிமாமனுவினுளவுறுப்பனைத்தும்
வெவ்வினைதீர்தரவருளிவேதியருக்களித்தருளி. (உரு)

வியாதமுனிவரன்பதரிமிளிர்வனமேவியதுரைத்தாம்
புயாசலரெண்டிசைப்பாலர்புணரிவிடநுகர்பெருமான்
மயானநடனவிற்பாதமலரிலருச்சனையாற்றித்
தியானமனந்திளைத்தடைந்தபடிதெரியச்செப்புவாம். (உசு)

பதரிவனச்சருக்கம் முற்றுப்பெற்றது.
ஆக சருக்கம் எ-இ, திருவிருத்தம் - உஅஎ.

திக்குப்பாலகச்சருக்கம்.

செறிகானடைந்துசிரமார்புடைந்துதெளிநீர்குடைந்துசகமேல்
வறிதேதிரிந்துதவமேபுரிந்துமதிநூல்புரிந்துதிரிவீ
ருறுவோரிறைஞ்சிமலர்தூவவஞ்சியுறுவார்விரிஞ்சனெடுமா
லறியாதமுன்பரணிமாலையென்பரருளீயுமன்பரெனுமே. (க)

வேறு.

வயிரவாட்படையுழவன்மடலவிழ்கற்பகமலராற்
கயிலைநாயகன்மலர்த்தாள்கருவூரிலருச்சித்து
வெயிலுலாவியமௌலிவிண்ணவருக்கரசாகிப்
பயிலுநீள்கனகவுலகெய்துவரம்படைத்ததனால். (உ)

வெய்யகதமெழரிக்கடவுள்விமலனைவந்தனையாற்றிச்
செய்யமகங்களுக்குரிமைதிகழ்தென்கீழ்த்திசையடைந்தான்
பையரவனடியின்வழிபாடுபுரிந்தருமறலி
வையமெலாநடுவனெனத்தென்றிசையாள்வரம்பெற்றான். (௩)

திருமருவுமாயனுடன்றிருகுசினத்தினனாகிப்
பொருதமுராசுரன்மரபிற்பொறிவிழிக்காருடற்பேழ்வா
யருவரையினுறழ்திணிதோளக்கினிபக்கணனென்னு
நிருதனுதவியசிறுவனிகழ்வலியினாற்பெரியன். (௪)

ஒருவரவனுடனெதிர்ப்போருடற்றிமலைவுறுவலியும்
பொருதிறனுமின்மையினாற்புனைந்தனன்றற்சயனெனும்பேர்
தருமமனஞ்சலிப்பமறந்தலையெடுப்பக்கொலைபடைத்த
கருவியுணவினுந்துயிலுங்கனவிலுங்கைநெகிழாதான். (௫)

அடவியிடைத்தழல்வேள்வியாற்றுநருக்கிடர்விளைத்தும்
புடவியிற்பல்லுயிர்யாக்கைப்புலவுவாய்கமழநுகர்ந்
துடல்வளரக்கொலைவளர்த்துமுறுவராச்சிரமமெரி
படவிளித்துநிசாசரரைப்பரிசனரைப்பரிந்தளித்தும். (௬)

பழித்தொழில்கள்புரிந்துபெரும்பாவமுருவமைந்தெனக்
கழித்தனன்சில்பகற்சின்னாட்கானகமுங்கனவரையுஞ்
செழித்தனனிவ்வாறுதிரிதினத்தொருஞான்றரியநுதற்
கிழித்தவிழியினன்வைகுங்கெருப்பபுரிதனைக்கண்டான். (௭)

அதிர்திரைநீருலகினுளவாரணியங்களிற்சிறந்த
விதுவுமொருவனங்காண்டுமெனவடையுமேல்லையினின்
மதுரமொழுகியகனிவாய்வடிவுடைநாயகிபாகன்
பதுமமலர்ப்பதமுனிவர்பழிச்சிவழுத்திடல்காணா. (௮)

அத்தலத்தின்விசிட்டமோவலதவன்முற்பவத்திழைத்து
வைத்ததவப்பயன்கொல்லோமனம்புத்தியாங்காரஞ்
சித்தமெனுங்கரணங்கடிரிபின்றித்திரியாநாட்
கைத்தலத்தினெடுத்தபடைக்கலந்துறந்தர்ச்சனைபுரிந்தான். ()

கரமுகிட்பவிழியருவிகவிழ்க்குகிசரர்கோமான்
பரசிருத்துகரமுக்கட்பகவனருளியபேற்றான்
முரசதிரகிருதியெனமுடிபுனைந்துதென்றிசைமேற்
கரசிருக்கைபடைத்தனனர்ச்சனைப்பயன்மற்றெளிதன்றே. ()

மாரிகொடுதெளித்தமலன்வந்தனையாற்றுபுவருணன்
பாரியவேணியனருளாற்பச்சிமதிக்கரசுய்த்தான்
சீரிய வுமனலனரன்சேதிமத்தினலகிட்டுப்
பேரியல்வந்தனையாற்றிப்பெற்றனனுத்தரமேல்பால். (கக)

அளகையர்கோனணியிழைகடிருத்தியருச்சனையாற்றி
வளகிலவுமிருகிதியும்வடதிசையும்வரப்பெற்றா
ணிளமதிவேணியன்பாதமீசானன்வழிபடலா
லுளமகிழ்வினிறையுருப்பெற்றுத்தரகீழ்த்திசையுற்றான்.(கஉ)

எண்டருதிக்குறைபாலரிணர்தூவியருச்சித்துப்
பண்டருளின்வழிகிலைத்தபரிசுரைத்தாமயனுதித்த
முண்டகநாபித்திருமான்முனிவர்முதலியர்கீல
கண்டனைவந்தனைபுரிந்தபடிதெரியக்கழறுவாம். (கங)

திக்குப்பாலகச்சருக்கம்முற்றுப்பெற்றது.

ஆ சருக்கம் அ - இ, திருவிருத்தம் - ௩௦௦.

கடவுளாருச்சனைச்சருக்கம்.

முடிசூட்டுசெய்யசடைவீட்டில்வெள்ளமுகநீட்டமெள்ள
நகுவார், வடிவேற்றதையலொருகூற்றினல்லமகிழ்வாழ்க்கை
செய்யமகிழ்வார், கொடியேற்றுவெள்ளைவிடையேற்றர்சைவர்
குடியேற்றமுள்ளகருவூ,ரடியார்க்குநல்லரடியேத்தவல்லரருள்
வாய்த்தசெல்வரவரே. (க)

வேறு.

வண்டளர் தண்டளபமுகில்வண்ணனழல்புரைவண்ணன்
முண்டகச்சேவடியினருச்சனைவழாமையின்முற்றி
யண்டர்பிரானருளினலவ்வுழியாயிரந்தோட்டுப்
புண்டரிகமலர்மகளைப்புதுவதுவையாற்றினன். (உ)

மலர்மகளைவேட்டமணிவண்ணன்மதிமுடிவள்ள
லலர்கமலப்பதம்போற்றியவனியளிப்பதுபெற்றாங்
குலவைதிகழ்பிபிலமாதீர்த்தமதனுத்தரத்திற்
குலவியுறுதுயில்கூர்ந்துகொழுமுனியரோடமைவுற்றான். (௩)

ஆரணமோறங்கமுடனமலனையர்ச்சனையாற்றிப்
பேருலகின்றரின்னசெயினின்னபெறுவரெனச்
சீரியசெவ்வியவாய்மைசெப்பிநெல்வரம்பெற்றுப்
பாரோமுப்புவனங்களெங்கெங்கும்பயின்றிடுமால். (௪)

பரவுசராசனனவாயுபக்கனபக்கன்பிருங்கன்
விரவியவத்திரிகீரன்னனமிளிர்தூம்பரநன்முனி
யுரனுறுகணுதமுனியுயர்தீர்க்கசிவகனு
மருமறைமாதவன்முதலோரளவின்முனிவரரெய்தி. (௫)

உறைந்துதழற்கிறைதிசையினெள்ளரிவேள்விகளோம்பி
நிறைந்தநெடுமூச்சவித்துநிற்குநிலைமையினிலையா
வறைந்துமறையுணர்வுதுறந்தைம்புலவேடரைமுருக்கிச்
சிறந்தசிவகதிவாய்ப்பத்திகழுமருந்தவமுற்றி. (௬)

திசைதிசைகடோறுமமர்ந்தசிவலிங்கமுறைநிறுவி
யிசைதருபூசனையாற்றியெழில்வளர்கோடீச்சுரனை
யசலவஞ்சுளேசனைமானணிகைலைநாயகனை
நசைபெறுசோமேச்சுரனைநன்குறவந்தனைபுரிந்தே. (௭)

ஊனிலையீக்கையின்வாழ்க்கையுளத்தினருவருத்துதறித்
தேனிலையின்றூயமலர்கொய்துசிவானந்தவொளி
யானிலைநாயகனருளினுதரமுற்றருச்சித்து
வானிலையுமிருக்கதிநல்வரம்படைத்துமகிழ்சிறந்தார். (௮)

குருகுபெயர்க்குன்றமுஞ்சூர்க்கோக்குருவுந்தடிந்தா வி
டருகுசுடரிலேகெடுவேற்பண்ணவனண்ணலேயேத்தி [ப்
முருகுயிர்க்குகறுந்தொடையன்மொய்ம்மலர்கொண்டருச்சித்து
பெருகுதிரைகொழித்தெறியாம்பிரவதியின்றீரத்தில். (௯)

குணமொடுதன்னுடல்குழையக்குனிசிலேநாரியிற்பூட்டுங்
கணைவிழுசெய்மைத்தாகமேல்பாலிற்கறைமிடற்றே ரு
ணணைதருமாசிலேக்கீழ்பாலலர்கோபிதாரவனத்
துணவமுதமயமிதெனவொருதீர்த்தமுதவினான். (௧௦)

அத்தீரத்தறுதொழிலந்தணர்மருவியருமுனிவர்
மொய்த்தீண்டியாச்சிரமமுறைமுறையாய்வகுத்தமைத்து
மெய்த்தேவர்வியப்பெய்தவேள்விதினைத்தைந்தெழுத்துள்
வைத்தேறுசிவகாயத்திரியெனுமந்திரம்பயின்றே. (௧௧)

கன்னிகாரக்கொழுந்தண்கடிமலர்த்தாதகிகுறிய
வன்னிகூவிளையிதழிவாசிகையின்சடைகள்சாத்திச்
சென்னியானுறத்தாழ்ந்துதெளியமுதகானவிலை
பன்னியாரணம்பரவிப்பரகதியினணைவுற்றார். (௧௨)

ஆம்பன்சூழ்தருபதியிலவிர்கிலாக்கதிருமிழுஞ்
சீதகலைமதியாரல்சிந்தைகூரியன்சிறந்த
பீதகன்சாவகன்வசிட்டன்பிறங்குமயனிவர்தத்த
மாதவத்திற்குறிசிறுவிவழுத்திவரம்படைத்துயர்ந்தார். (௧௩)

வேறு.

அரக்கிதீவிழித்தாடகையடல்கொளுமயுதநீடரிமானிற், செருக்குதிண்வலித்திறலினள்பசுபதிச்சிவபரம்பரன்முன்னர், பெருக்குதீர்த்தமொன்றமைத்ததிற் குடைந்திளம்பிறையணல் கறைப்பாந்த, ளெருக்குநீண்முடியிறைதிருப்பதமலரேத்தி வந்தனையாற்றி, (௧௪)

வலிகெழுந்திறற்கோளரிக்குருளையின்மாரிசனெனுநாமம், பொலிகெழும்புதல்வனையுயிர்த்துயர்த்துவெண்பொடிவிலவுமிழ் மேனிச், சலிலமேனியன்றருபெருவரங்களுமாவையுந்தலைப் பெய்த, வொலிபுனற் புடவியிற் றனதிருக்கையினுறைந்தனள் சிறந்தம்மா. (௧௫)

வரிசிலைக்கொடிச்சேரனும்புலிக்கொடிவளவனுமலிநீர்சூழ்
விரிதலைப்புவியுயரியகயற்கொடிமீனவர்பெருமானுந்
தெரிவதற்கரும்பசுபதிநாயகன்சேவடிதனிற்பூசை
புரிதவத்தினாற்றிரிபுவனங்களும்புகழ்நிதீஇப்புரந்தாரால், ()

புரந்துநானிலமொருகுடைநிழற்றிவான்புனிற்றிளம்பிறைவாச
கரந்தைநீண்முடிக்கடவுளாலயமுதலியபணிகைப்பற்றி [க்
யரந்தைதீர்தரப்பற்பகலாற்றிவிண்ணமரர்களெதிர்போற்ற
நிரந்தபொன்னுலகடைந்துயர்கற்பகநீழலினுறைவுற்றார். (கஎ)

கோடிலிங்கம்வந்தனைபுரிபலந்தருங்கோடிலிங்கனையன்பி
னூடிகந்தமாருதந்தவழ்பொதிகைமாநற்றவமுனிவேதம்
பாடிவந்தனைபுரிந்தடிபோற்றினன்பச்சிமத்திசைதன்னி
னீடிநின்றொளிவருணனுமருச்சனைநிரந்தரம்புரிந்தானால்.(கஅ)

கயிலைவந்தடைகுநர்க்கருள்புரிதிருக்கைலைநாயகன்பாதம் [தார்
வெயிலிலங்குமென்றாழ்மதிமுதலியர்விழைந்தருச்சனைசெய்
துயின்முருந்தனேரியர்க்கிறைகரியமாலீசனைத்தொழுதுய்ந்தா
ரயின்மழுப்படைவஞ்சுளேசன்றனையாரிடர்தெரிசித்தார். ()

எம்பிரான்பசுபதிமுதலியசிவலிங்கவந்தனைசெய்தோ
ரம்புராசிசூழவனியிற்பற்பலரறிந்தவாறரைகுற்றாந்
தம்பிரானடித்தாமரையிருதயத்தடத்தலர்தரவானத் [ன்.
தும்பரேத்தவாற் றியதவமுனிவிர்காளென வுரைத்தனன்சூத

வேறு.

திருமருமார்பினன்முதலதீர்த்தருச்சனைசெய்து
பொருவில்வரம்பெற்றதிறன்புகன்றனன்பூதலம்போற்று
பிருகுமுனிவரன்மரபிற்பிறங்கியபார்க்கவனிறைபான்
மிருதசஞ்சீவினிமனுப்பெற்றுயர்ந்தபடிவிளம்புவாம். (உக)

கடவுளருச்சனைச்சருக்கம்முற்றுப்பெற்றது.

ஆக சருக்கம் ௯-இ, திருவிருத்தம்-௩௨௧.

சுக்கிரனுபதேசம்பெற்றசருக்கம்.

மருத்துளவனைச்சதுமறைக்கிழவனைக்கதிர்மணிக்குலிச
னைப்பிறரையே, யருத்திகொடளித்தருள்விளைத்தொருகணத்
துழியழித்திடுமுதற்பரமனா, ரெருக்கிளமதிச்சடைமுடித்தவர்
நடித்தவரிருக்குமையிடத்தமலனார், செருக்கவுணர்முப்புரமெ
ரித்திடுசிரிப்பினர்திருக்கரபுரத்திறைவரே. (௧)

வேறு.

அசுரர்புரோகிதனென்னவந்தவதரித்தபுகர்முனிவன்
விசுவமெல்லாம்படைத்தளித்துமீளவொடுக்கியவிமல
பசுபதிகோயிலிற்பவனதிசைப்பதரிப்பாலடைந்து
வசுவளர்வேள்வியினாப்பண்வயங்குமொருமலர்த்தாளில். (௨)

பெருவிரலைநிலனூன்றிப்பிறங்குமற்றையொருதாளை
மருவுகுறங்கிடைச்சேர்த்திமலர்க்கைசிரமிசைமுகிழ்த்துப்
பொருவருமைம்பொறிகளுமைம்புலன்களும்போக்கறநிறுவி
யொருமைவரமனாதிவழியொழுகாமேநிலைபெற்று. (௩)

[துச்
சீரெழுத்துப்பொர்ரும்யாக்கை நிலையெனத்தோய்ந்தயனெழுத்
சோரெழுத்துட்படநோன்பின்றுறைபடிந்தோருளம்படிந்த
சீரெழுத்தினுட்சிறந்ததிருவெழுத்தைத்தினையும்வகுத்
தோரெழுத்துக்கோரிலக்கமாகவுளத்துருவேற்றி. (௪)

வேறு.

காலகாலனைத்தெரிவரும்பொருளினைக்கமலனோர்சிரமு
ண்க, பாலமேந்தியகையனைமெய்யனைப்பைந்துளவனைக்கோ
த்த, சூலபாணியைமனாதிகட்கனாகொணாத்தோன்றலைத்தொ
லைவில்லாக், கோலம்வேறுவேறாகி யொன்றாகிய குணமிலாக்
குணத்தோனை. (௫)

அஞ்செழுத்தொருவடிவெனவோங்கியவமலனையழிவில்லாச்
செஞ்சுடர்ப்பரம்பரமனையசலனைச்சிற்சொரூபனைஞான
நெஞ்சகத்தினுளேற்றியவிளக்கினைநிமலனைநிலைபெற்ற
பஞ்சவத்தையுமொருவிநின்றுடியபசுபதிப்பெருமானை. (௬)

கோட்டிளம்பிறைக்கொழுந்துவெம்பணியலைகொழித்தெ
றிதிரைக்கங்கை, காட்டுவேணியனாகவுங்கதமெழரிக்கலைமதிக்
கதிரென்றாழ், நாட்டமூன்றினனாகவுமாகமேனணுகலார்புர
மூன்றும், வாட்டுபுன்னகைமுகிழ்த்தசெவ்வாயினனாகவும்மணி
வாய்த்த. (௭)

மகரவார்குழைவளரொளித்தோடிலைவயங்கு நான்மறைவா
பகருந்துணைச்செவியினனாகவும்பண்ணவனயன்மாய [ணர்
னகரம்யாவுமற்றழிந்தொழியாவகைநரலையிலெழுநஞ்சம்
புகரறும்படிபுனைதருகந்தரனாகவும்பொலிவெய்த. (௮)

திணிகொளெண்புயனாகவுமான்மழுச்செறிகரன்றிரிசூல
மணிகரன்வரதாபயனாகவுமழல்விழிப்புலியாடை
பணிநெருங்கியகச்சினனாகவும்பாரிலோர்பதமூன்றித்
தணிவிலாதொருபதமெடுத்தாடியசம்புவாகவுநண்பால். (௯)

தூமவார்குழைத் துடியிடைப் பணைமுலைச் சுதைநிலாநகைத்
வாமபங்கினனாகவுமத்தனாரீச்சுரவடிவாயு [தோகை
மோமெனுந்திருவெழுத்தினனாகவுமுணர்வறுமொலிவீறுஞ்
சாமவேதநீடுருவினனாகவுந்தனித்தனிதியானித்தே. (௧௦)

தெளிவிலங்குநெஞ்சகமிகநெகமதித்தெண்ணிலாவென வோங்
மொளிவிளங்கியசங்கவன்பங்கயன்புங்கவருவப்பெய்த [கு
வளிவிளைந்துளகடவுளைவருடமீரைம்பதுபிறழாமை
வளிநுகர்ந்துமெய்வருந்தவுமலைவறமாதவம்புரிநாளில். (௧௧)

போற்றிநானிலம்புரிசிவசிதனிற்புனிதமாதவமுன்னி
யாற்றிநான்மறைசாற்றியபார்க்கவனவனெதிரடர்வெள்ளை
யேற்றினுயகெவடிவுடையிமகிரியிறைவியோர்புடைதோன்றத்
தோற்றினனயனரிமுதலியருளந்தோற்றியுந்தோற்றுதான். ()

இந்தமாதவமிழைத்தனைமகிழ்ந்தனம்வருகபேரெழில்வெள்ளி
சிந்துதெண்டிரைமாநிலத்தாருயிர்சிதைந்தவாசிதையாமை [ச்
வந்துதோன்றியமிருதசஞ்சீவினிமந்திரம்விழைவுற்றாய்
தந்தனம்மெனச்செவிப்புலப்படவதுசாற்றினன்றனிநாதன்.()

சொற்றபின்னரின்வெள்ளியைநோக்கிநீசுங்கவதொழுதெம்பா
லுற்றமந்திரமசுரருக்குரைத்திடலொழிகுதியெனவாய்மை
முற்றநல்கியுய்குதியெனவவன்சிரமுடிமிசைப்பதஞ்சேர்த்திப்
பெற்றமூர்பெருமானிலிங்கத்தினுட்பெட்புடன்மறைந்தானல்

வேண்டுநல்வரம்விழைந்தவைவேண்டியுவிளங்கொளிப்
புகர்ப்புத்தேள், பாண்டரங்கனம்பசுபதிநாயகன்பங்கயமலர்
ப்பாதம், பூண்டவன்பொடுமென்புநெக்குருகிடப்பூசைபன்மு
றையாற்றி, யாண்டநாயகனருளியவிடையொடுந்தன்பதிய
டைந்தானல். (கசு)

அடைந்தசில்பகலகன்றபின்னமரருமசுரருமடுபோரின்
மிடைந்தகாலையின்வேலையின்மந்தரமேருவிற்பணிபூட்டிக்
கடைந்ததெள்ளமுதாசனர்க்குறும்பிசிதாசனர்கடற்றனை
யுடைந்துவீந்ததுகண்டனன்விண்டவழொளிகவினியவெள்ளி

நெளிந்ததெண்டிரைப்பாற்கடற்பிறந்துவாணீணிலம்பனி
ப்பெய்தச், சுளிந்தநஞ்சமுதுண்டிருண்மிடற்றினன்றுகளறந
ணிநல்குந், தெளிந்தசிந்தைதேர்மிருதசஞ்சீவினித்திகழ்மந்தி
ரங்கொண்டு, விளிந்ததானவர்யாரையுமெழுப்பினன்விண்ண
வர்வெரூஉக்கொள்ள. (கஎ)

கண்டவானவருளங்கவன்றுலந்தவக்கடுந்தயித்தியர்தம்
மைக், கொண்டவாவெனிச்சுங்கவனெழுப்பினன்குறையிலை
வர்க்கென்னப், பண்டைகான்மறைப்பொன்னவனிருக்கையிற்
படர்ந்துபண்ணவர்யாருமம், வண்டவம்புதாட்பங்கயமிறைஞ்சி
னர்வந்தவாறுரைசெய்தார். (கஅ)

புலவர்வாசகங்கேட்டலுஞ்சுரர்குருபுனிதமாதவத்தின்ற
வலகில்கேள்வியன்கசன்முகநோக்கிநீயவிரொளிப்புகர்தன்பா
லுலவிவேவிய புரிந்துவீடியவுயிரொப்பனவுதவுஞ்சீர் [ன்.
நிலவுவிஞ்சைகற்றீண்டணைகுதியெனநிகழ்த்தினனிகரில்லா

அந்தணன்சுதன்றனக்கறைதலுஞ்சுரராருயிர்தருவிஞ்சை, மந்தணங்கொடுகற்றுவந்தாலழல்வளர்மகத்தவிப்பாக, முந்தையோர்க்குதவியபடிதருகுது முறைமையினெனவாசான், றந்தமைந்தனுஞ்சிந்தைநொந்தகன்றனன்சல்லியன்றனதில்லின். (உ0)

தகுவர்மந்திரிசரண்சரணெனமுறைதாழ்ந்தெழுந்திருசெங்கை, முகிழ்வரும்படிவணங்கலுஞ்சங்கவன்முகமலர்ந்திவனன்பி, னெகிழுநெஞ்சினனெனத்தெரிந்தருகிடைநீவருகெனவாய்மை, மகிழ்வுசெய்திவண்வந்ததென்மொழிகெனமறையவன்சேய்கூறும். (உக)

அய்யநின்பணிக்குரியமாணாக்கரிலாயவாறடித்தொண்டு
செய்யவந்தனனெனப்பளிங்குளந்தெளிவரவிழைவுறச்செப்பி
வையமேற்பணியாவுளபுரியினுமனஞ்சுளியாதாற்றி
மெய்யுறுஞ்சுரர்பருவமோராயிரமேவியங்குறைகுற்றான். (உஉ)

ஏவலின்றலைநிற்குமக்கசனிடத்திலங்கொளிப்புகரின்ற,தேவயானியென்றொருமகள்சிந்தையைத்தவன்றினம்வரல்வேண்டிப், பூவர்சோலைபுக்கெனக்குநீமறையவபுதுமலர்கொடுகித்தம், வாவெனும்பணிமொழியவம்மொழிப்படிவழாதளித்திடல்செய்வான். (உங)

தேனரற்றுமென்மலர்கொடுவருந்தொறுஞ்சிந்தைசெய்தவன்செய்ய, வானனத்தைநோக்குபுபலகலைவலோயங்குலியுளர்யாழின், கானவித்தைகளிசைக்குதியெனுமணிக்கனங்குழைசெவிதாழ்ப்பத், தானிசைத்திடல்புரிகுவனின்னணஞ்சார்ந்தொழுகனுமோர்நாள். (உச)

ஆனினம்பரித்திடல்புரிந்தந்தணனருளியகசன்போய
கானிடைத்தயித்தியர்குழீஇயிவன்புகர்கடிமலர்ப்பதம்போற்றி
வானவர்க்கெலாமளிப்பமீட்டுயிர்தருமந்திரம்பெற்றுய்ந்தா
னூனுடற்கொடுவரிக்கிரையாகமற்றுயிரொழிக்குவமென்று.()

சென்றுவெவ்வழற்றயித்தியர்பொன்றருஞ்செல்வனைச்செறுத்தாவிக், கொன்றுவீற்றுவீற்றுயறிந்தடுபுலிக்குழுவினுக்கிரையிட்டா, ரன்றுநள்ளிருளடைந்தும்வந்திலன்கசனடுத்ததென்னெனமாழ்கி, நின்றுநெட்டுயிர்த்தவிரிழைதந்தைபானிகழ்த்தலுமவனொந்து. (உசு)

வெள்ளிபொன்மகன்வருகெனவிளித்தரன்விளம்புமந்திரங்கூறப், பள்ளியிற்றுயிலுணர்ந்தவனெழுந்தெனப்பார்க்கவற்கெதிற்புக்கா,னள்ளிருட்பிழம்படுத்தும்வந்திலையுனக்கடுத்ததென்னதையிங்ஙன், றெள்ளியோயறை கென்றலும் விளைந்தவை செப்பினன்மறைச்செம்மல். (உஎ)

பின்புமோர்பகற்சுக்கிரனேவலிற்பீதகன்றருமைந்தன்
முன்புபோற்பசுமேய்ப்புழித்தயித்தியர்மூரிநீர்க்கடனுப்பண்
வன்புறப்புகுத்தினர்புகருணர்ந்தவன் வரவழைத்தலும்வந்தாங்
கின்பவாரிதிளைழ்கினன்மீளவுமேகினன்பளிங்கேவ. (உஅ)

நிருதராயிடைக்கரந்தருமறையவனிரைநிரைதொகமேய்ப்ப, வருதலுங்கடல் வளைந்தெனச்சூழ்ந்தனர் வாய்மடித்திருகையாற், குருதிசோர்தரக் குத்தினர்மாய்த்தனர்குறைத்துடறனையீர்ந்து, பெருநெருப்பிடைமடுத்தனரெரித்தனர்பிசைந்தனர்பொடியாக்கி. (உகூ)

கும்பமொன்றினிற்பெய்துபைந்தருவளர்கோநகர்மிசைவைகு, மும்பருண்சுரையுடன்கலந்திலங்கொளியொன்றியோனுவப்பெய்தச், செம்பொன்வட்டிகைவாக்கிமுன்வைத்தனர் வஞ்சனைச்செயலெண்ணு, நம்பினன்றினங்கொணர்ந்தளித்திடலெனநறுமதுவினிதுண்டான். (௩0)

அற்றைஞான்றுநண்பகற்பொழுதொருவியதலைடந்ததுக ருங்கங்குன், முற்றநோற்றவந்தணன்மகன்வந்திலனெனமதி முகம்வாடிச், சிற்றிடைப்பெருமுலையினள்கவலையிற்றெரும்வர லுறல்காணுப், பெற்றசுக்கிரன்வருந் தலைதிருந்திழைப்பிடிந டையெனப்பேசி. (௩௪)

வருகவந்தணனெனைத்திருமந்திரமனந்திளைத்திடுவெள்ளி [ப் திருவயிற்றிருந்தெழுந்தடிகேள்வருந்திறனெனக்கருளென்ன பொருவில்பாற்கவனிவ்வினையம்புரிபுரையர்யாரெனவுள்ளங் கருதிவெவ்வியவசுரர்கைதவமெனக்கருத்துறவுணர்ந்தானல்.

அறிந்துவனறனக்காங்கிலைநாயகனளித்ததொன்மறையங் கஞ், செறிந்தமந்திரமுளத்திடைமொழிந்திடிற்றெளிந்ததை வயின்போழ்ந்து, பிறந்துவந்துபின்னம்மையும்பிழைத்திடல் புரிந்திடும்பெரிதென்று, விறந்துளோர்தருமம்மனுப்போத கத்திசைத்தனன்வருகென்ருன். (௩௫)

சுங்கவன்சடலம்பிளந்துதித்தனன்ருன்மறைக்கசன்வெள்ளி யங்கிறந்ததுகண்டனன்காண்டலும்மளித்தமாமனுவாய்ந்து தந்தவசுறுயிரெழுப்பலுமெழுந்தவச்சல்லியன்மகிழ்வெய்தி யிங்குநீகுருபுத்திரனெனும்பெயர்புதுக்கினையெனப்பேசி. ()

யாவரர்யினுமிச்சுரைபருகினேரிருநிலந்தனில்வானிற் பாவகாரியரற்பசண்டாளராய்ப்படரெரிநிரயத்தின் மேவுவாரெனச்சபித்தனன்பாற்கவன்வியாழமாதவன்றந்த தேவைநோக்கிநின்னிருக்கையிற்செல்கெனச்செல்கவென்றெ ழுபோதின். (௩௭)

வேறு.

தெளிமறைப்புகர்தருதேவயானிவந்
தளியவென்றனைப்புதவதுவையாற்றுகென்
றெளிவளர்கசன்றனக்குரைப்பமற்றவன்
குளிர்மலர்புனைகருங்குழலைநோக்குரு. (௩௮)

மாதுநின் ருனைதயென் குரவன்மற்றவ
ளேதருவயிற்றில்யானுதித்தல்கண் டுநீ
யேதமூர்பழிமொழியிசைத்தின்றேழையாம்
பேதையரெனப்பகர்பெயர்நிறுத்தினை. (௩௭)

பொன்மகனிம்மொழிபுகலலும்புகர்
தன்மகள்சபித்தனடந்தைமூந்துற
நின்மனநிலைபெறநெகிழுமன்புடன்
சொன்மனுவுனக்கதுசேர்கவென்றரோ. (௩௮)

தந்தைசொன்மந்திரந்தணக்கவென்றனை
நீந்தனையறைந்தனைநெடுங்கணுய்மறை
யந்தணர்மணநயவாமையன்னிய
மைந்தர்தோள்சேர்கெனவைதுபோயினன். (௩௯)

போயபின்வேறொருபுனிதவேதியற்
காயதொன்மந்திரமறைந்துவிண்மிசை
வீயுயிரெழுப்பியவிஞ்சையாற்கசன்
பாயொளிசேரவிப்பாகம்பெற்றனன். (௪0)

என்றுசுக்கிரனரனிடத்திலிம்மனு
வன்றுபெற்றுயர்ந்தவாறறைந்துமாதவந்
துன்றியசூதமாமுனிவன்றொல்புலன்
வென்றதாபதருடன்மீட்டுங்கூறுவான். (௪௧)

சுக்கிரன் உபதேசம்பெற்றசருக்கம் முற்றுப்பெற்றது.

ஆக சருக்கம் ௧0-க்கு, திருவிருத்தம்-௩௯௨.

முசுகுந்தச்சருக்கம்

நலமலிபோதாகுழையணிஅதாநடனவினோதாமலர்மீதா
னிலகெழின்மாதார்மனைதனிலேதானிரவொருதூதாயிசைபாதா
கலைதெரிவேதாகமநவில்கீதாகாரபுரநாதாகணநாதா
வுலகினுண்மாதாவயனிடைபோதாதுனதருளேதாபரநீதா. (௧)

வேறு.

மாதவமுனிவிர்காள்வாதனைப்புகர்
போதமோடருச்சனைபுரிந்ததோதிறுங்
கோதறவணிமுசுகுந்தன் பூசைசெய்
தாதரமுறவடைந்ததுவிளம்புவாம். (உ)

வேறு.

வருக்கையிலாயத்தேனீவருமிருல்கிழித்துவண்டேன்
பெருக்கையிலாயமந்திப்பிணவுடன்கடுவன்போந்து
தருக்கையிலாயுங்கேயுஞ்சாரல்வாய்த்தவத்தோர்போற்றுந்
திருக்கையிலாயமென்னுந்திகழ்சிலம்பிடையோர்ஞான்று. ()

பூவினூதேனிற்பாலிற்பொருவில்யாழிசையிற்றோய்ந்து
பாவினையாமைநல்கும்பனிமொழிக்கௌரியோடுங்
கூவினைசூழல்வாய்ப்பூங்கொன்றையணிருக்குமெல்லை
காவிளையாடலுற்றகாரெழின்முசுக்கடம்பில். (௪)

கரிமுகச்செம்மேனேற்றைமுசுக்கலையொன்றுகன்னி
யுருவமுமெந்தைமெய்யும்புதைதரவுயர்வில்வத்திற்
பெருகிலைகொய்துகொய்துபெய்திடப்பிறங்கலீன்ற
திருமகள்காணுவுள்ளந்தியங்கிவெஞ்சீற்றமிக்காள். (௫)

மாதுநீவெருளலெம்மைவழிபடாநிற்கும்வில்வ
மீதுறுமுசுவையென்னுவிழிறுதற்பெருமானந்தப்
போதுணர்வதற்குநல்கப்பொருக்கெனவிழிந்துச்செம்பொற்
றூதுகுமிதழிவேணித்தலைவனைத்தாழ்ந்ததன்றே. (சு)

எந்தையெம்பெருமானின்னையன்னையம்பிராட்டிதன்னைச்
சிந்தனைபுரிதலின்றிச்சிறுதொழிற்புன்மைசெய்தே
னந்தவெம்பிழைதீர்க்கென்னுவடிதொழுதிறைஞ்சவண்ணல்
வந்தனையெனக்கொண்டாநீவருந்தலைமுசுவென்றோதி. (எ)

...ந்மைவழுத்துசீரானீணிதிவரைக்கூழொன்றாழ்
வானவன்குலத்துட்டோன்றிமணிமுடிமிலைச்சிவையந்
தாஞெருகவிகைநீழற்றங்கவாழ்குதியென்றந்தக்
கூனல்வெண்பிறைதண்கங்கைக்குடிஞைவான்சடிலன்கூற. ()

ஏத்துமாமுசுவிலைசக்குமிருவினைப்பயன்றடுப்ப
நீத்தவெம்பிறவியார்த்துநிகழ்வுழியடியேற்காங்கு
தீர்த்தநிற்பரசும்பூசையுணர்வுநீராமைதோன்ற
மாத்தலனருளியிந்தவதனமும்வழங்குகென்ன. (௯)

முசுக்கலைமொழியவேணிமுடிக்கலைமதியோன்கூறும்
வசுக்கலைமறையோனற்றிமதிக்கலைமகளைவேட்டுப்
பசுக்களையுதவுங்கற்பபுரியெனும்பதியிற்பானு
விசித்திரமரபிற்றோன்றிமேவுதியிவையாங்கென்ன. (௧௦)

அங்குரைநிகழ்ந்தவாற்றனஃறிணையுருவநீங்கிப்
பொங்குதொல்லுலகந்தன்னிற்புனிதமாமறைஞன்குக்
தங்குமாறங்கமாறுசாத்திரமுதலவாய
செங்கலைபலவுமுய்யத்திகழுயர்திணையிற்றோன்றி. (௧௧)

நிறங்கடையளவிற்சேர்ந்தநீள்விழிமன்னர்சூழக்
கறங்கடையலாநிதானங்கரிபரிகொணர்ந்துசெம்பொற்
புறங்கடையுணங்கிநாளும்போற்றுசெம்பருதிவேந்தாய்
பிறங்கடையெனப்பாருய்யப்பிறந்தனன்கருவூர்தன்னில். ()

சூரியன்குலத்துட்டோன்றிச்சுதைமதிற்றோற்றம்போலச்
சீரியகலைகளுஞ்சீர்த்தியும்பெருந்திருவுமோங்கி
மூரிவேலரசர்போற்றமுசுகுந்தனெனப்பேர்தாங்கி
வாரிநீருலகமேத்துமணிமிளிர்மௌலிசூடி. (௧௩)

வேறு.

வானிலைத்தூரிரவியொளிவளர்கனகமணிக்குடுமி
யாநிலைக்கோயிலிலடிகளடிகளருச்சனையாற்றி
நாநிலத்தினகுவிடையோனற்றனமும்பிறவுந்
தானிலைத்தென்புருகமுறைதாழ்ந்துவழிபடல்புரிந்தே. (௧௪)

எல்லைதீருடலுயிரினுணர்வறவெங்கணுமுலவித்
தொல்லைநான்மறைமுடியிற்சுடருமொளியருளுருவாய்
வல்லைநேர்முலையிமவான்மகள்காணநணிபுரியுந்
தில்லைநாடகவமுதைவிழிகளாற்றினைத்தருந்தி. (௧௫)

பொன்னாரூர்மனத்தினனாய்ப்புனிதமாதவம்புரியுந்
தென்னாரூர்தனிலேகிச்செழும்பவளக்கொடிசிவணி
மின்னாரூர்மதியரவுமிலைந்தவிரிசடைமௌலி
துன்னாரூர்சுடுமுறுவற்சுருதிநாயகற்போற்றி. (௧௬)

அருமறையீரணியமுதலாயதலனருச்சித்து
மருமலர்மானுயர்தவஞ்செய்வளநகர்மீளவுமருவிப்
பொருவிடையூர்ந்துயர்த்தியபுற்றிடங்கொண்டபுண்ணியனை
யொருபொழுதும்பிரியாமையருச்சித்தாங்குறையுநாள். (௧௭)

பொன்னகரிலயிராணிபொம்மன்முலைப்போகநுகர், மன்
னவன்பாசறைக்களத்தின்மலைந்துமருவலர்க்குடைந்து, வெந்
நிடவொற்றாலுணர்ந்துவிரைவினாற்படையொடும்போய்த், து
ன்னலரைக்கடிந்துடலக்கண்ணனைத்தோழமைகொண்டே.

காசைமலர்புரைமேனிக்கருந்துழாய்முகிலிடத்தி
லோசைமறையாகமங்களோதியவாறுனாற்றுபெரும்
பூசைமுதற்கொண்டருளிப்போகிநனிதவப்பயனா
லாசையுடனருச்சிப்பவமர்கின்றபெருமானார். (௧௯)

நீரூர்வெண்டிரையாழிநிலமகளுக்கணியாய
வாரூரினெழுந்தருளவளித்தருளியலர்மடந்தை
சீரூரவ்வூரதனிற்சில்பகல்வீற்றிருந்துசெழுங்
காரூரும்பொழில்சூழுங்கருவூரின்கண்ணுற்றே. (௨௦)

வேறு.

வந்துபைந்தளிர்ச்சீறடிப்பேரல்குன்மடந்தை
சந்துமூழ்குபூண்முலைச்சுவடழுந்தியதடந்தோட்
கொந்துயிர்த்துநுண்டுளிநறவூற்றுபூங்கொன்றை
பிந்துவேணியெம்மடிகளையிறைஞ்சிவைகினனால். (௨௧)

இன்னணம்பொதுக்கடிந்துலகளித்திடுமேல்வை
யன்னவூர்திகண்படைகொளும்யாமினியடுப்பப்
பின்னல்வெண்டிரையந்தரப்பிரளயம்பாரிற்
றன்னலுஞ்சராசரக்குழுமுழுவதுந்தொலைத்த. (௨௨)

MAHAMAHOPADHYAYA
... U. V. SWAMINATHA IYER LIBRARY

தொலைந்தபின்னரிற்சுருதிவேதியன்றுயில்கங்குல்
புலர்ந்ததந்தரப்பிரளயம்போயதப்போழ்து
லலர்ந்தவேணியனருளினாலார்கலியாடைத்
தலந்தயங்குறத்தந்தனன்சராசரமனைத்தும். (௨௩)

அனைத்துமொய்மலர்ப்பொதியவிழ்த்தாய்பிழிமாந்திக்
கனைத்துவண்டிமிர்கமலனைக்கடுப்பவேவகுத்து
நனைப்பசுந்துழாய்ப்புயலெனமனுநெறிநடாத்தி
யெனைத்துமுற்றொருங்குணர்ந்தவனினிதுவீற்றிருந்தான். ()

இருக்குமப்பருவத்துதித்திருவிசும்புலக
முருக்குதிண்டிறற்பெருவரச்சூரனைமுதிர்போர்ச்
செருக்களத்திடைச்சுடர்வடிவேலினாற்செகுத்து
மருக்கடம்பன்மீண்டுயர்பரங்கிரியில்வந்தெய்தி. (௨௫)

மாகமென்களிற்றணங்கினைவதுவையாற்றிடுதன்
மேகவூர்தியொற்றனுணர்ந்தாயிடைமேவி
யேகநாயகன்முதலபுத்தேளிரையிறைஞ்சிச்
சீகரத்தநீர்வஞ்சியிற்போந்தனன்செம்மல். (௨௬)

போந்துநற்சிவபுண்ணியத்தெளிவுநீர்ப்புணரி
நீந்திமுப்பொருட்கரையறிந்தருட்டுறைநீடி
யேந்துதற்கருந்தவம்பலவிழைந்துவீட்டின்ப
மார்ந்துளோர்ப்பணிந்துறைந்தனனளப்பில்பல்காலம். (௨௭)

அடியர்பாலருள்பழுத்தவெம்மானிலையடிகள்
கடிநறுமலர்ப்பதத்தினிற்கமழிணர்தூவி
யொடிவில்கேழ்விமாலயன்முதலியருணர்வொண்ணு
முடிவிலாதபேரானந்தமுத்திமேயினனால். (௨௮)

அறிவிலோர்முசுவமலன்மேல்வில்வமென்றழையை
வெறிதிலிட்டிவாறடைந்ததென்றால்விடைப்பாக
னறியமென்மலர்த்தாளினிலதுகொடுகெலைவதீ
ருறுதியால்வழுத்துநர்பெறும்பேற்றையாருரைப்பார். (௨௯)

ஆதலாற்கருவூர்க்கிணையாயதோர்தலனுந்
தீதிலாநிலைநாயகற்போலொருதேவு
போதுசூழ்சினைவில்லுவம்போலொருபூவு
மோதநீருலகத்திலின்றென்பர்நூலுணர்ந்தோர். (௬0)

மேலைவானுருஞ்சிரசதவெற்பினோர்முசுவன்
சூலபாணியைப்பராய்க்கருவூர்தனிற்றோன்றி
ஞாலமுய்வுறவருத்தவாநவிற்றினமிப்பாற்
பாலலோசனன்றலத்துளதீர்த்தங்கள்பகர்வாம். (௬௧)

முசுகுந்தச்சருக்கம் முற்றுப்பெற்றது.

ஆக சருக்கம் ௧௧ - இ, திருவிருத்தம் - ௬௧௭.

தீர்த்தச்சருக்கம்.

வண்டுநாண்மலர்ப்போதுண்டுவெழுத்தநாவுண்டுவொழ்த்திக்
கண்டுநாடுதற்குநாட்டமுண்டிருகரங்கள்கூப்ப
வுண்டுநான்மறைதேர்வஞ்சியொருவனுண்டுறுதிபூண்டு
தொண்டுநோம்புரிதுநெஞ்சேதுயருண்டேதுணிவுகொண்டே. ()

வேறு.

சூதன்றவத்தோர்முகநோக்கினன்மீட்டுஞ்சொல்லும்
வேதம்பயின்மாமுனிவீர்விடைப்பாகன்வஞ்சி
நாதன்றலனிற்றிகழ்தீர்த்தமுந்தீர்த்தநாடிக்
கோதங்கறமூழ்குநர்பேற்றையுங்கூறக்கேண்மின். (௨)

பிரமன்றருகாசிபகோத்திரட்பேறிதென்ன
வரவந்தவன்காலவமாமுனிமாசிலாத
வுரமென்புரிநூலினன்கோதமைதீரத்துற்றோன்
பரமன்பதபங்கயம்பற்றியபற்றின்மிக்கோன் (௩)

நன்றென்பினனும்மறைக்கேள்வியன்ஞானபோதஞ்
சொன்னேன்மையர்பாற்றொடர்பாயவன்றூய்மைபூண்டு
தன்னேகைகொண்டன்னையர்தந்தையர்தங்கண்மாட்டு
முன்னேதுகுற்றேவலிற்சிந்தைமுயன்றுவைத்தோன். (௪)

பொற்பாவையையொத்துவிளங்கியபொற்புமிக்காள்
கற்பாலுயர்பன்னியறந்தலைகாப்பநாளு
மிற்பாலிருந்தேதமுறாதவளோடுமன்புற்
றற்பாயவன்மேவியவாச்சிரமத்தைநோக்கி. (௫)

ஈவத்துதியானமளிக்குதியென்றுநித்தன்
மேவத்துதியாவும்விளம்புவிளங்கிவெய்ய
பாவத்துதியாமைமெஞ்ஞானப்பரப்பினுற்ற
தேவத்துதியாம்பெயர்த்தொன்மறைசெப்புமேலோன். (௬)

சீலங்குணமன்னுணர்வுண்மைசெபந்தியான
மேலன்பன்வெறுப்புவிருப்பிலன்மேயமூன்று
காலங்களும்வென்றவனைம்புலக்கள்வர்வீசுஞ்
சாலங்களைநூறுதவப்படைதாங்குதக்கோன். (௭)

சென்றான்கடைவாயிற்சென்றுழிச்சேர்ந்துமுன்றி
னின்றார்சிலர்கண்டனர்துண்டநிலாவெண்டிங்கட்
பின்றாழ்சடைப்பிஞ்ஞகன்போல்வரெனப்பெயர்ந்து
பொன்றாமறைகூறியகாலவற்போற்றிமாதோ. (௮)

துவராடையன்றண்டினன்குண்டிகைதூங்குங்கையன்
பவராசிபறித்தவிரத்தனற்பண்புமிக்கோன்
றவரானவரிற்றலையாயவன்சால்பின்வேறு
கவராமனத்தோனடைந்தானெனக்கட்டுரைத்தார். (௯)

வேறு.

அதிதியர்வந்தனர்கொலெனவகன்மாந்துபுறனணையுமள
வின்ஞானத், துதிதிகழுமுனிதேவத்துதியெனவுள்ளுணர்ந்த
சுரநதிநிலாத்தண், மதிதவழ்வேணியனம்பிற்பொன்னடிசாத்
தினனென்னமகிழ்வுதூங்கி, யெதிர்சிறுகைசிரமுகிழ்ப்பவெழுந்
தருள்கவிங்கெனக்கொண்டிருக்கைசார்ந்தான். (௧௦)

இறுதிநடுமுதலகன்றவிறையவனியெனத்தவிசிலேற்றி
மென்பூ, வறுகரிசிகொடுபோர்த்தியாசமனுர்க்கியமளித்தஞ்சலிக
ளாற்றி, நெறியில்வருமினைப்பாற்றித்திருவுளத்துக்கேற்றபடி
நிகழ்த்தவாற்றுன், மறுவறுமென்கனிமூலமமுதேற்றியேற்ற
முகமன்கள்கூறி. (கக)

யாண்டிருந்திங்கெழுந்தருளிற்றெனத்தீர்த்தயாத்திரை
யிற்போகின்னைக், காண்டலின்வந்தனமென்னவெத்தலனுற்
றெத்தீர்த்தங்கள்நீர்வேறுய்ப், பூண்டமுறைதமியேனுக்கரு
ளுகெனமலவிருளைப்புறனிற்போக்கு, மாண்டமனத்தினன்
றேவத்துதிகாலவனைநோக்கிவழங்கலுற்றுன். (கஉ)

போதார்பைந்துணரின்மணமுயிர்க்குநறும்பொதும்பரிற்
செம்முகத்தமந்தி, மீதார்தண்பணிக்குடைந்துசுடர்மணித்தீயெ
னக்காயவிரைந்துசெல்லுங், கேதாரத்தொருதீர்த்தப்புட்கர
மென்றுளததனைக்கெழீஇயாட, லாதாரமெனப்பணிந்தோர்மு
த்திவீடடைகுவரீதுண்மையாமால். (கங)

யாக்கையிழந்தவர்முத்தியடைகாசிப்பதியில்வனையுமிழ்திர
த்து, வீக்குதிரையதிர்மந்தாகினிநதியிற்பாலவயிரவர்தாமேவிக்,
காக்குமணிகன்னிகையென்றொருதீர்த்தமது கடவுட்டீர்த்தமற்
றைப், பூக்கிளர்வேதியன்முதலோர்தொடுதீர்த்தமனந்தமுளபு
கலுங்காலே. (கச)

விரியுமறைபழிச்சுபிரயாகைதனில்விளங்குதிரிவேணிதீர்
த்த,மரியகயைதனிலுரியபிதுர்தீர்த்தமலம்புதியில்வன்னிதீர்த்
தந், தெரிசெய்மணிகூடத்திலொளிர்திரிபுட்கரதீர்த்தமுதலதெ
ண்ணீர், நருமதைகோதாவிரிகாளிந்திதுங்கபத்திரைபார்நலங்
கொடீர்த்தம். (கரு)

பருப்பதத்தம்பாதீர்த்தம்பலன்றருமாளவ்வியத்திற்பானு
தீர்த்தம், விருப்புறுசத்தாரணியமிளிர்பிரமதீர்த்தமலர்மிசையி
ன்வைகுந், திருப்பொலிகாளத்திதனிற்பொன்முகலியாகாச
தீர்த்தஞ்செம்பொன், றருப்பொலிபிற்பாசகத்திற்றங்கியவாரு
ணதீர்த்தஞ்சாற்றுங்காலே. (கசா)

ஆலங்காட்டேட்டுகதீர்த்தம்மணிகாஞ்சியிலணேவேசவதி யாதி,சிலங்காட்டெண்ணிலதீர்த்தம்மருணுசலத்திலயன்றிஜேத் ததீர்த்தங், கோலங்காட்டியதுர்க்காதீர்த்தமுதலியதீர்த்தங்குல வுஞான, மூலங்காட்டியவிருத்தகிரியின்மணிமுத்தநதிமுதல தீர்த்தம். (கஎ)

ஞானவானந்தநிருமலன்கனகமணிமன்றிஞப்பண்ஞாலம், வானநான்மறைதுதிப்ப நடநவிலுமவிரொளிதன் மணிப்பொற் கோயிற், கானவோருழியமலவடிவாயசிவகங்கைமுதலாவந்த ண், டேனவாவும்பொழில்சூழ்தில்லையிலெண்ணிலதீர்த்தந்திக ழுமன்றே. (கஅ)

செய்யதிருவாரூரிலுளதேவதீர்த்தமுதலியதீர்த்தங்க [த்த டுய்யமறைவனத்தின்மத்தியானமணிகன்னிகைதொல்வேததீர் மையறநீடியகோடிதீர்த்தமுதலியதீர்த்தம்வானநாட்டி லேயர்புகழ்புகலூரிலக்கினிதீர்த்தம்முதலாவளவிறீர்ததம்.(கக)

தேவர்தொழுஞ்சுவேதவனத்தினிற்காயத்திரிதீர்த்தந்திரு மால்விண்ணோர், யாவருமெண்சாய்க்காட்டிற்சாயாதீர்த்தங்கட ஆரியமதீர்த்த, மோவொருகாளியிற்பிரமதீர்த்தமயிலாடுதுறை யோவாதுற்ற, காவிரியிற்றுலாத்திங்கடனிற்கங்கையுதித்திடு மோர்கடவுட்டீர்த்தம். (உ0)

புள்ளிருக்கும்வேளூரிற்போர்கெழுவேற்படைக்குமரன்பொ ருவிறீர்த்தந், தெள்ளிருக்குகிகர்பணேத்தோட்டாடனையாற்றி கழ்தீர்த்தந்தெளிவோர்சிந்தை, யுள்ளிருக்குமொருவனுவடுது றையிற்சுரபியினுலுற்றதீர்த்தங், கள்ளிருக்குமலர்ச்சோலைவீழி மிழலையிற்றிகிரிகவினுந்தீர்த்தம். (உக)

மடைவயலிற்கயல்பாயும்வாஞ்சியத்திற்சூரியனல்வயங்குந் தீர்த்த, மிடைமருதூரினிற்றிகழ்காருண்ணியதீர்த்தந்தரங்க மிரங்கியாரப், புடையெறிகாவிரிதனிற்றைப்பூசமுதலியதீர்த் தம்புனிதவெள்ளே, விடையவனுகீச்சுரத்தின்மிளிர்தோகைமயி லூர்திவிதித்ததீர்த்தம். (உஉ)

, வயங்குகும்பகோணத்திலுலகுய்யமறைபயின்மாமகமென்றங்க, ணியங்குதிரைக்கன்னிகாதீர்த்தமலையெறிதருகாவிரியினேமி, முயங்கியதீர்த்தஞ்சத்திமுற்றத்தின்முத்தலைவேன்மொழியுந்தீர்த்தம், புயங்கனுறைவலஞ்சுழியிற்பொன்னிவலஞ்சுழித்தெறியும்புனிததீர்த்தம். (உரு)

ஐயாற்றிற்பஞ்சநதிமுதலியதீர்த்தங்களுளவானைக்காவின், மெய்யாயசம்புநதிசூரியபுட்கரணிமதியினிருந்தீர்த்தஞ், செய்யார்தண்புனலூட்டிற்சேட்டிளம்பூங்கொன்றையினந்திங்கட்கண்ணி, பையாடலரவணிவோன்றலங்களெல்லாந்தீர்த்தமுளபகருங்காலே. (உச)

பெருக்கூடலின்றிமலர்ப்பெண்ணணங்குநாமகளும்பிறங்கிவைகுந், திருக்கூடலுறையறைநீர்த்தெண்ணிலாமதிவேணிச்சிவஞேர்பங்கின், மருக்கூடலங்கோதைமுன்றிகழ்பொற்றாமரைமாதீர்த்தம்வந்தோர், கருக்கூடலொழிவைகைமுதலியதீர்த்தங்களுளகருதுங்காலே. (உரு)

மனுக்கோடியெழுவகையுமறைநான்குமாகமமும்வகுத்தசோதி, பினுக்கோடீரனைமாயன்பின்றொடரும்பிரமகத்திபெரிதினைக்கு, மனுக்கோடியிடவருச்சித்துய்ந்தகந்தமாதனத்திலணிசேர்சேதுத், தனுக்கோடியிலக்குமணதீர்த்தமுதலியதீர்த்தந்தயங்குமன்றே. (உசு)

நற்றாலம்வீசும்புறைவோர்சரணெனவந்தடையவவர்நலிவுமுற்றிச், செற்றாலநுகருமணிமிடற்றிறேன்ஞானதேசிகனாய்மன்னி, யுற்றாலநீழலினுன்முனிவரருக்குண்மையுணர்வுரைத்தோன்வைகுங், குற்றாலமெனுந்திரிகூடாசலத்திற்சித்ரநதிகுலவுமாதோ. (உஎ)

நெல்வேலிநாதனருள்விழிநோக்கும்பொருனையிற்றீர்நிறைதொல்வேதச், சொல்வேலியிடுஞ்சிந்துபூந்துறையென்றொருதீர்த்தந்துலங்குமங்கண், வல்வேலியெனவம்புபணைக்கொங்கைவடிவுடைமாதுமைதன்முன்ன, ரெல்வேலியிடுமேமபுட்கரணியெனுந்தீர்த்தமிலங்குமன்றே. (உஅ)

மலயமால்வரைப்பொருனைமூலத்தில்வருஞ்சருவதீர்த்தம
ற்றைத், தலையிலோதருவாமதீர்த்தம்வாணாசுரன்சொற்றயங்கு
தீர்த்தந், தொலைவில்பாதகந்தீர்க்குஞ்சுருதிமறைதொழும்பாவ
நாசதீர்த்த, நிலவுதீர்த்தம்பிறவும்பலவுளவாலினைத்தெனயார்நி
கழ்த்தற்பாலார். (௨௯)

அந்தவரைப்பாங்கரினோங்குபுவயங்குந்தூங்கருவியத்தி
தீர்த்த, முந்துதிரைகொழுத்தெறிதாம்பிரபன்னிமாநதியினு
யர்தீரத்தி, னெந்தைபிரானுறைதலன்மற்றெண்ணிலவுள்ளன
த்லன்களியாவுஞ்செய்ய, விந்தைபயிறருதீர்த்தமளவிலவா
ம்விரித்துரைக்கிற்பெருகுமேலோய். (௩௦)

குமரிதனிற்கன்னிகாதீர்த்தமுதலியதீர்த்தங்குலவும்வீறிச்
சமர்புரிநேமியன்வைகுமனந்தபுரந்தனிலறமாந்தன்மதீர்த்த
மமரர்புகழ்கேரளத்திற்பாண்டிமோதீர்த்தமாண்டடைந்தோர்பா
கமரடங்கத்தெறுபாவதீர்த்தமுதலியதிகழுங்கருதுங்காலே[வக்

மாகன்னல்வேலிசெந்நென்மலிபழனமொலிதிரைநீர்வாவி
சூழுங், கோகன்னமிசைக்கோடிதீர்த்தமுதலியதீர்த்தங்குவவு
க்கொங்கைப், பாகன்னமொழிமடவார்பயிறருமென்னடைக
ண்டேபதுமப்போதி, ஞகன்னநடைபழகுமுவளகஞ்சூழ்கொங்
குவளநலஞ்சேர்நாட்டில். (௩௨)

திருக்காஞ்சிநதிகுடகநதிமுதலதீர்த்தங்கடிகழுமன்றிப்,
பெருக்காழிபொருவுதிரை யாம்பிரமாநதி தீர்த்தம்பிறங்குகொ
ன்றை, மருக்காலுமலர்வேணித்தலம்பலவத்தலங்கடொறும்வ
யங்குந்தீர்த்த,மிருக்காதிமறைமிருதிபுராணமிவையளவிலவெ
ன்றிசைக்குமன்றே. (௩௩)

அந்நதியுத்தரதீரத்தகண்டபரிபூரணமாயசலமாகி, நன்
னதிநாண் மதிவேணியாகிலநாதன்வைகு நளினப் போதிற்,
பொன்னதிதோய்வாவிகளிற் பொலிதருதென் கருவூரிற்புனித
மேனிப், பன்னதிவெண்டிரைகொழிக்கும்புண்ணியதீர்த்தங்க
ளுளபகரின்மாதோ. (௩௪)

தீர்த்தச்சருக்கம் முற்றுப்பெற்றது.

ஆக சருக்கம் ௧௨ - இ, திருவிருத்தம் - ௪௨௭.

தலதீர்த்தச்சருக்கம்.

பைந்தொடிபங்கினர்கருப்பபுரியாரன்றுபாண்டியன்மா
ற்றடிக்குமுடம்பெடுத்தார்பார்த்தன், வெந்திறல்வில்லடிக்குமு
டிபொறுத்தார்வேடனெச்சிலுக்குமிச்சைசெய்தார்வீதிதோறு.
மிந்தனங்கூறினர்கூறிவளைகள்விற்றாரிளையான்றன்குடிமாறனி
ல்லம்புக்கா, ரந்தணன்செந்தமிழ்க்கிரவுநடந்தாரென்றாலரிய
யன்றேடற்கரியாரானவாறே. (க)

வேறு.

என்றுதொல்புவியிலீசன்றலனுமத்தலங்களெய்தி
யொன்றியதீர்த்தம்யாவுமொன்றறவுரைத்தவாய்மை
துன்றுமாமுனிவன்றேவத்துதிதனைநோக்கிப்பாசங்
கன்றிவீந்திடநோன்பாற்றுங்காலவமுனிவன்கூறும். (உ)

தொல்லைநான்மறைதேர்தேவத்துதிமுனிவரனுந்தொல்லோ
னெல்லைதீர்தலங்களுந்தீர்த்தங்களுமிசைத்துப்பின்னர்
வல்லைநேர்முலைபங்காளன்வஞ்சுளாரணியமென்னு
நல்லெழின்மூதூர்தன்னைநவிற்றியதெவன்கொலென்ன. (௩)

நீவினவியதுநன்றுநினையன்றிநின்றுளாரிப்
பூவினில்வினாயதும்யாம்புகன்றதுமின்றுநோன்பிற்
றாவின்மாமுனிவமுன்னைத்தோற்றியதலனியாவு
மோவியோவாததக்தப்பதிமுழுமறையுமோதும். (௪)

ஆதலினந்தனையாதிபுரமெனவறைதலானும்
வேதநான்முகவர்கற்பந்தொறுந்தொறும்வியந்துதித்து
மாதவமிழைத்தெல்லாருமடைவுறவகுத்தலான்மெய்ப்
போதகர்போற்றுங்கர்ப்பபுரியெனப்புகறலானும். (௫)

அளக்கரும்பொருளாய்ஞானானந்தமாயமுதாயன்ப
ருளக்கணுக்கன்றித்தோன்றாவொருபரம்பரமனென்றுந்
துளக்கமிலிலிங்கமென்னத்தோன்றியாருயிர்கட்கெல்லாங்
கிளக்கருமிச்சாஞானக்கிரியையைநடத்தலானும். (சு)

ஒருபெருஞ்சுடரினேற்றுமொளிவளர்சுடர்கண்மீட்டுந்
தருமதனிடனிற்சாரிற்றயங்கியொன்றாற்போலப்
பொருவிலப்புரத்திற்றோன்றும்புரங்களும்பொருளுமீள
வொருவுகாலங்களிற்சென்றொடுங்கவுட்கரத்தலாலே. (எ)

கரபுரமெனநூல்வல்லோர்கழறலினாலுமேனை
வரனுறுதலன்மற்றெல்லாம்வைத்துமுன்னவறழிற்பின்னைத்
தரனுறுகருவூர்தன்னைச்சாற்றினஞ்சாற்றற்கொண்ணாக்
கரனுறுதவத்தோயென்னக்காலவனுரைக்குமீட்டும். (அ)

துகளறநோற்றதேவத்துதிமுனிவரனேவேதப்
புகழ்விரவமலன்கெர்ப்பபுரிதனிற்புலவர்போற்று
நிகரறுதீர்த்தம்யாவுநிகழ்த்தியந்நீருண்மூழ்கிப்
பகவனைப்போற்றிப்பெற்றோர்பலத்தையும்பகர்தியென்ன. ()

கதிவரநோற்றுயர்ந்தகாலவமுனிவகேட்டி
நதிமதிபுனையும்வேணிநாயகனுறையும்வஞ்சிப்
பதிவருதீர்த்தங்கூறிற்பற்பலவவற்றுளாடும்
விதியுடையாறுதீர்த்தம்விசிட்டமாம்விளம்புகின்றாம். (க௰)

மாநதிவிசிட்டமேனும்வஞ்சிசூழெல்லைகாறுங்
கோநதிதீர்த்தமுன்னர்க்கூறவற்றினுள்விசிட்ட
மாநதியதனிலாடியமலனைப்போற்றிசெய்யி
னூனதினுற்றயாக்கையொழிந்துவீடுயர்ந்துவாழ்வார். (கக)

கிளர்நவநீதவெற்பின்கீழ்த்திசைதேனுதீர்த்த
முளததினிடபத்திங்களுற்றபூரணையின்மூழ்கித்
தளர்பவர்தம்பார்க்கஞ்சமொருபிடிதானளிப்பி
னளவறுவெய்யபாவமகன்றுபாசரையசராவார். (க௨)

பொருகடலாடைவையம்பொருவறவகுத்தஞான்றிற்
பெருகருமறைகளோதும்பிதாமகன்பிஞ்ஞகன்முன்
மருவுசேதிமத்தின்றென்கீழ்மாதீரத்தமைத்தமுக்க
ணொருதிரிசூலிதண்டாயுதன்பூசையுஞற்றுவித்து. (க௩)

கடவுடன்பூசைதிங்கட்கலையுபசாரத்தாற்றி
யிடனுடற்கோயிலெண்ணான்மவுனத்திலியன்றுசூழிற்
புடவியினுளதானங்கள்பொழியுமப்பயனியாவு
மடையுமன்றியும்வேறொன்றைவிழையினுமதுவுமெய்தும். ()

வள்ளலாலயத்தின்பூருவத்தின்மாநதியின்மேற்கிற்
கள்ளவிழ்கோபிதாரவனத்திடைக்கதிர்வேலண்ண
லொள்ளிதினமைத்ததீர்த்தமொன்றுளததனின்மூழ்கிற்
றள்ளரும்பாவமெல்லாந்தணக்குமாறளிக்குஞ்செவ்வேள். ()

சேயருளத்தடத்திற்சித்திரையாயதிங்க
ளாயபூருவபக்கம்பூரணையிலாதித்தவார
மேயதோர்சோதிநாளிலியன்றசித்திரரேகுத்தர்
பாயொளிமனுவாராய்ந்துபாதுகைதொடுதோலாதல். (க௬)

நுண்டுகில்கவிகையாதனூலுணர்முனிவர்க்கேனுந்
தண்டுகைப்பொறாத்தோர்யாவராயினுமவர்கடம்பாற்
கொண்டளிக்குநர்தம்பண்டைக்கோத்திரப்பிதிராயுள்ளோர்
திண்டிறற்கூற்றின்றண்டஞ்செய்தொழிற்கருகராகார். (கஎ)

அறிதுயிலமர்ந்தமூர்த்தியாலயமதன்றென்பாங்கர்
மறிதிரைகொழிக்குஞ்சூதமாநதிமணித்தீரத்திற்
செறிதருமச்சுவத்தந்திகழ்வனத்திரவியூர்வா
னெறியிலாசினையோர்போதினீழலினுளதோர்தீர்த்தம். (கஅ)

ஆரணவியாதன்மூழ்கியாங்கலயமலர்க்காளாங்
காரணமுனிவனென்னக்கதிவழிநிலைத்தானங்கு
பூரணமாயகாயத்திரியோடப்புனல்படிந்தோர்
நாரணன்முதலாருள்ளநயப்புறுபோகந்துய்ப்பார். (கக)

தாடகைபகவன்கோயிற்சந்நிதிதனித்தொடீஇய
வாடகமிழைத்தகூவலொன் றுளததனீராடிப்
பாடகமணிப்பொற்பாதப்பாவையர்பரிந்துட்கொள்ளி
ஞூடகனிரந்துவேண்டுமகார்தமையுயிர்ப்பருண்மை. (உ0)

காந்தனும்மனைவியும்மக்கூவலினுடிற்கற்பி
னேந்தெழிலாதிநாதற்கியன் றனபொருளளிப்பிற்
சேர்ந்தநன்மகப்பேறுற்றுச்செய்கடனூற்றுஞ்செய்கை
சார்ந்தபின்னிமையோர்வைகுந்துறக்கமுஞ்சரிர்வரன்றே.(உக)

நாற்றிசைவதனன்ஞாலம்படைப்பதுகருதிநாடி
நோற்றஞான்றமலர்க்காட்டிருவலும்வஞ்சளேசனுக்கு
மேற்றிசையிறைகோயிற்குத்தெற்கெனவிதித்ததூய
சேற்றிதழ்க்கமலவாவிதீர்த்தமொன்றுளதுமன்னே. (உ௨)

பிரமமந்திரத்தைமூக்காற்பிறங்கிடவிதயஞ்சேர்த்தி
யரவகங்கணனைஞானவமுதினைப்போற்றியாடும்
வரனுடையவர்தாய்தந்தைவரன்முறைவழியினுள்ளா
ருரவியசிவலோகத்திலுறைவர்மீண்டெய்யார்பாரில். (உ௩)

திங்களைவியாழந்தீண்டுந்திவசமாகுதலத்திங்கட்
பொங்குபேரொளிநாயிற்றிற்பொருந்துநாளாதல்பாவந்
தங்குதற்கரியவத்தோதயமகாவுதயமாத
லெங்கணுநிலவுஞ்சூதலியன்றபூரணையினுதல். (உ௪)

சாற்றியவெதிபாதத்தினுகுதறந்தைதாய்ப்பே
ரேற்றியதிவசத்தாதலிருநிலமிலசயிற்றுந்தாந்
தோற்றியதினத்தினுதல்சுருதிவேதியன்முன்றெட்டுப்
போற்றியவாவியெய்திப்புனிதரீராடினூர்தாம். (உ௫)

விடற்கரும்பாவமெல்லாம்விட்டவிரொளிவிமானத்
தடற்படைவேற்கண்வானத்தாடரம்பையர்மார்போற்ற
மடற்றிகழ்தாருரீழன்முதலியபதங்கண்மன்னி
நடத்தொழிலிறைவன்முத்திவீட்டினைநணுகிவாழ்வார். (உ௬)

கார்த்திகைத்திங்கடங்குகார்த்திகைநாளிற்செய்ய
பூத்திகழ்பிரமதீர்த்தப்புனிதநீர்படிந்துவஞ்சி
மூர்த்திசந்நிதியினன்பான்முயன்றியற்றீபமேற்றி
யேத்திடிற்சிவலோகத்திலெழிலுருமினிரவாழ்வார். (உள)

அந்தமாதத்திற்செவ்வாய்நான்குவாரமுமணைந்து
வந்தருணோதயத்தினிலமகன்மனுமனக்கொண்
டெந்தறுகரிசிசென்னிசேர்த்தியொண்புனலிலாடிற்
சுந்தநோய்வயிற்றுநோவுகுட்டநோய்கிட்டவாரா. (உஅ)

பத்தொடுபத்துறழ்ந்தபவத்துறுவறுமைபாறி
முத்துறுகுடைநிழற்றமுழுதுலகொருங்களிப்பார்
வித்தகமுறவத்திங்கண்முழுவதும்வியந்துமூழ்கி
னெத்திறத்தனவியாதியாவும்விட்டிரிதறிண்ணம். (உக)

அரிவையர்போகந்துய்யாதவர்வயின்விழைவுநீங்கிப்
பொருவறவருட்மொன்றுபூரணைதொறுந்தொறும்பூ
வருமயன்றடநீராடிச்சேதிமம்வலன்சூழ்ந்தன்பிற்
கருவைநாயகன்பொற்பாதங்கருத்துறவணங்கினோர்தாம். ()

இல்லிடையில்லாண்மைந்தரிவருடனிடையூறின்றிச்
சொல்லரும்பருவநூறுசுகோதயரென்னவைகிச்
செல்லுறமுநவமாயோன்றிசைமுகன்றேவர்போற்று
மல்லுறம்கிரீசன்பாதத்தடைகுவரையமின்றால். (௩க)

தாசில்வைகாசித்திங்களுரோகணிகலந்தவுச்சி
மாசறுபோதின்வேதாமனுவுரைத்தரிசிதூர்வை
தேசுறவணிந்துமூழ்கிற்றென்புலத்தவர்சுவர்க்கத்
தோசையோடுறைந்துதேவருடனமுதுண்டுவாழ்வார். (௩உ)

ஆவணிமந்தவாரநண்பகலணங்கன்னூர்மேற்
றுவுறுமனநிறீஇத்தடக்குடைகுநர்பான்மந்தன்
மேவியசென்மமுன்பின்மூன்றினும்விரவாநிற்ப
வோவறவருநோய்பீழையொழிவுறுமுண்மையுண்மை. (௩௩)

கடாகிறங்கறுத்திருண்டகம்பளங்காரெண்ணீலட்
படாமிரும்பிவைபினென்றைப்பங்கயவிரிஞ்சன்கண்ட
தடாகநீடிரத்துற்றோர்தமக்குநன்களிப்பின்மந்த
னடானவர்மகாரிடத்துமளித்திடான்பீழையம்ம. (௩௪)

கண்ணிருநான்குநான்குகவினியமுகமுமுற்ற
வண்ணறன்னிலஞ்சிநன்னீராடியைந்தெழுத்தையுன்னிப்
புண்ணியப்பூதிமேனிபொலிவுறவணிந்துசெம்பொன்
விண்ணுயர்குடுமிக்கோயின்மிளிர்திருமுன்றினிவைகி. (௩௫)

நீலவத்திரன்கோடேரனீணிறநீழற்சாய்கை
போல்பவன்கரியோன்காரிதினகரன்புதல்வனீந்தன்
வாலியகிரகநாயகன்பிரமண்ணியன்சீர்
சால்புறுமுடவன்மேற்கோள்சாவலன்சவரிபங்கு. (௩௬)

என்பனசனியினாமமெடுத்தெடுத்திசைத்துநாவா
லன்புடன்சனியன்றன்னையகந்தினைத்திறைஞ்சினோர்பாற்
றுன்பமுங்கிரகபேதத்தொடர்ச்சியுந்தொடராவாழ்க்கைப்
பொன்புனைமைந்தர்வாணாள்புண்ணியநண்ணுமாதோ. (௩௭)

பூமலர்ப்பொகுட்டுப்புத்தேள்புகரறத்தொட்டநன்னீர்த்
தேமலர்தடத்தினுற்றசேதகமாசுதீர்த்தோர்
மாமணிபுயங்கந்தாங்குமாநிலம்புரந்தெஞ்ஞான்றுந்
தாமலமொருவிஞானத்தனிமுதலுருவஞ்சார்வீர். (௩௮)

அம்மலர்வாவிசுற்றுமணிமலருய்யானங்கள்
செம்மலர்ப்பொதும்பர்வைத்தோர்சிறந்தனபுரிந்தோர்ஞாலம்
விம்மிதம்பெருகவைகிவிண்முழுதளித்துநாளு
மும்மதிளெய்தவில்லிமூதுலகெய்திவாழ்வார். (௩௯)

செங்கலிற்கருங்கலிற்செம்பொன்னில்வெண்பொன்னிற்செம்
றங்குமேனையவுலோகந்தம்மினாகுதல்வயங்குங் [ம
கங்கைநீர்கொழிக்குங்கஞ்சனுவளகங்கவினச்செய்தோ
ரங்கவைசெய்வித்தோர்வீடடைவரீதுண்மையாமால். (௪௦)

காண்டருபிரமதீர்த்தக்கரைமிசையணுகியெம்மை
யாண்டவெம்பெருமான்காட்சியளிப்பரோடியண்ணல்
பூண்டருகுரவரன்பர்பூசனைபுரிந்தோராண்டுச்
சேண்டருமறைகாணுதசிவபதஞ்சேர்வர்திண்ணம். (சக)

வேதநீர்தீர்த்தமாடவெனவழிக்கொளினும்வெய்ய
பாதகமுழுதுந்தீருமுன்பொருபரவையாடைப்
பூதலநிருபனந்தப்புனிதநீர்படிந்துசாபத்
தீதறுகொடுநோய்தீர்ந்துசிவபதமடைந்தான்மன்னே. (சஉ)

என்றிவையிசைத்தலோடுங்காலவனிறைஞ்சிஞானக்
குன்றனமுனிவவேந்தன்கொடும்பிணிச்சாபமேற்று
மன்றலம்புனலிற்றோய்ந்துதீர்ந்தரன்மலர்த்தாள்சேர்ந்த
தொன்றறவருள்கெனத்தேவத்துதியுரைக்கலுற்றான். (சங)

தலதீர்த்தச்சருக்கம் முற்றுப்பெற்றது.

ஆக சருக்கம் கங - இ), திருவிருத்தம் - சஎ0.

கோபிதாரச்சருக்கம்

போரானையுரியுரிவைப்போர்த்தானைப்பூங்கடுக்கைத்
தாரானைவீட்டின்பந்தருவானைப்பொருவில்கரு
வூரானைமழவிடையொன்றூர்ந்தானையருள்பெருந்தேர்ப்
பாரானைமதன்வீழப்பார்த்தானைப்பணிகுவாம். (க)

வேறு.

சுருதியின்முடிவையுள்ளத்துகளறத்தெரிந்தயாருங்
கருதருந்தவங்களாற்றுங்காலவகருவூர்வைகு
மொருதனிக்கடவுட்டாளன்புடையையநீயாதலாலிச்
சரிதையிலிதயம்போக்கிவிழைந்தனைசாற்றுகின்றாம். (உ)

கண்டொடுகுழையார்சாயல்களிமயில்கண்டொளிக்கும்
வண்டொடுபயில்பைங்கானுமாமலர்க்குழல்கண்டஞ்சித்
தண்டொடுபுனற்கஞலித்தரையுகந்தேங்கியோடும்
விண்டொடுபுரிசையுஞ்சூழ்விசாலமாநகர்க்குவேந்தன். (௩)

கராவிடரிழைப்பக்கூவுங்களிற்றுயிரளித்தநேமி
யராவிடனுறையுமாயோனலரவன்முதலதேவர்
பராவிடக்கடுநஞ்சுண்டகண்டனைப்பாவுந்தொல்லைத்
திராவிடமரபிற்றோன்றிச்செய்யகோலோச்சுஞ்செம்மல். (௪)

கொடைதனிற்கமஞ்சூன்மேகங்குணத்தினிலமிர்தமன்ன
நடையினர்க்கனங்கமாரனடுவினிற்றருமன்வீறு
மடையலர்க்கசனிகல்விக்கசலமாமுனிவன்வாசத்
தொடைபுனைகோபிதாரத்துசனனுஞ்சுடர்செய்பூணோன். (௫)

வேறு.

கறைதாழ்கண்டன்றொண்டர்தமைக்காணிலெழுந்துகசிந்
துமுறை, முறைதாழ்ந்தெழுந்துபணிவிடையின்முயல்வோன்
முனிவரிருடியர்நான், மறைதாழ்செய்யவாய்மையினர்முதலி
னோர்முன்றிலின்வரினோ, ரிறைதாழ்வின்றியெதிர்ந்துகுறைவி
னவியுளதேலதுகடிவோன். (௬)

கலிமாநிலம்வந்துறினுமதுகடிந்துவரிசையாநோக்கி
மெலிவாராய்ந்தேழையரடைந்தோர்தம்பால்விழையுமனஞெகி
வலிவாளரசர்திறையளப்பவயவாளரியாதனமேவி
யொலிநீராடையுலகமொருங்களிக்குநாளிலொருஞான்று. (௭)

விந்தாசலத்தையடக்கிவென்றிவாதாவியையின்னுயிர்வீட்டிக்
கந்தார்களிற்றின்வலியுடைவில்வலனைக்காய்ந்துகறங்கருவி
மந்தாநிலக்கன்றசைந்துதளர்நடைவந்துலவிமணமுயிர்க்குஞ்
சந்தார்சோலைதவழ்பொதியவரையினுறையுந்தமிழ்முனிவன்.

கட்டுச்சடையர்மரவுரியர்கலையாதனத்தர்கதிவழியி,லெட்
டுமெனத்தர்கடிந்தேழையிகழ்ந்தோராறையைம்புலத்தைச், சுட்
டதவர்நாலெனுங்கரணங் குணமூன்றொருங்குதொகவிரண்டு,
நட்டவினைகடுலைநேரநாடியஞ்சிநலஞ்சிறந்தோர். (௯)

உடுத்ததுவராடையர் திருநீற்றொளியர் தெளிநீர்க்குண்டிகைய
ரெடுத்தவேய்ந்தண்டினர் தருப்பையினர் காலசனர் மறைவசனர்
தடுத்தபொறியாமலமூலமகழ்ந்தநெறியர் தரைவாழ்வு
கெடுத்தவிதயர் செபவிரதங்கெடாதமுனிவர் நனிசூழ. (க0)

தூயமறைகளாகமங்கடொடர்புராணமரியதமி
ழாயவருணூ ணுணர்வுடைமாணாக்கர்போற்றியருகுவர
மாயவினைதீர்தவமுருவம்வயங்கிநடைவந்தியங்குதல்போ
னேயமுடனாணிலம்புரக்குநிருபற்காணுநெகிழ்மனனாய். (கக)

அரசனுறையத்தாணியவண்புக்கான்புகுமவ்வளவினின்முன்,
னுரைசெய்யூழிற்பெருவலியாவுளமற் றொன்றுசூழினுந்தான்,
றரையினிடைமுந்துறுமெனுஞ் சொன்னிலைப்பத்தரணிதாங்கி
யுயர்,வரைசெய்புயனூழ்வினைவழியைமறைத்துள்ளநிலைமய
க்குதலால். (கஉ)

எய்தற்கரியானெய்தினனென் றெண்ணாதியன்றமுறையி
ன்றிச், செய்தற்கரியசிறப்பிலொன்றுஞ்செய்யானாகித்தினந்
தினமும், பொய்தற்புகுதும்பொதுமகளிர்போகந்துய்க்கும்படி
ற்றொழுக்கா, னுய்தற்குணருமுணர்விலர்போலொன்றுமுறை
யாதிருந்தனனால். (கங)

இருக்கும்வேலையெழுவேலைபருகியுமிழ்ந்தவிருந்தவத்தோ
ன், செருக்குமுளத்தனிவனெனக்கண் சீறிவெகுளித்தீப்படர்
ந்து, பெருக்குமலைத்தெண்டிரைபுரட்டும்பெருநீர்க்கடலைநனி
நுகரக், குருக்கும்வடவையெனக்கொழுந்துகொழுவிவளரக்
கொதித்தெழுந்தான். (கச)

சீறியெழுந்துநிருபனவைதீர்ந்துமுன்றிற்கடையெய்திப்
பேறிலரியமுனிவர்தம்மிற்பிரமிட்டன்றன்முகநோக்கி
வீறுதவத்தின்முனிவநமக்கின்றோர்விரதமுண்டதனா
லாறுபுனைகோடீரனடியவரைமதியாதவணிருந்த. (கரு)

கொடுங்கோலரையன்றனைவெய்யசாபங்கூறிவருகெனவு
மடுங்கோபத்தியெனமூளவரையனவையையணுகிமதம்
படுகோட்டொருத்தவுரிபோர்த்தபரமனடியர்ப்பணியாது
கடுங்கோளிழைத்துமனச்செருக்காலுலகமளிக்குங்கடியோனே

குட்டநோயிற்குளித்துடலம்வருந்துகென்றுகொடுஞ்சாப
மிட்டவேள்வித்தழற்றாமங்கமழுமேனியிலங்குபிர
மிட்டன்மீண்டுதமிழ்முனிக்குவிளம்பமுனிவன்முனிவருடன்
சிட்டர்சூழத்தமிழ்மலயச்சிமையவரையைச்சேர்ந்தனனால். ()

மொய்த்தமுனிவர்தமிழ்மலயமுனிவற்போற்றித்தவமுயலுந்
தந்தமிருக்கையாம்பன்னசாலைபுக்கார்பிரமிட்ப.
னித்தனெனக்கும்போதயனைநின்றுவணங்கிப்பணிதலைமேல்
வைத்துமறைமாதவம்புரிகான்வதியுஞ்சாலமருவினன். (கஅ)

பேசவரியமுனிவர்தவமெளிதோபிரமிட்டன்னிறையை
யேசியகளுமதுபோழ்தின்யாருமிகழ்ந்துநோக்கியகண்
கூசியிதயமருவருப்பக்குட்டநோய்மெய்குடிகொண்டு
வீசியுடற்றநெட்டுயிர்ப்புவீங்கிவீங்கிமெலிவுற்றான். (கக)

மதியோடரவுவிரவமுடிவைத்தோனடியரடிபூண்டு
துதியோடிறைஞ்சலின்றேடுந்தொலைந்தவாறுந்தூய்தவத்தின்
முதியோன்கொடியசாபமெனைமுனிந்துமொழிந்தவாறுமுன்
விதியோசிவனேயரசாளும்வினயமாகாவெனவயர்ந்தான். [னே

வேறு.

வீழ்ந்தான்றுயருழன்றானறமெலிந்தான்பிணிக்கடலுட்
டாழ்ந்தானிலைகுலைந்தானுடறளர்ந்தான்கருவிகளாற்
சூழ்ந்தாருயிர்துடிப்பச்சுடுதொழிலேனெறிழிலுருவைப்
போழ்ந்தாலெனப்புலர்ந்தானுளம்புழுங்கிப்புலம்புற்றான். ()

பதைத்தான்பெரும்புகழைப்புடவியினுட்படர்கலியிற்
புதைத்தான்மிருகண்டுதருபுதல்வற்கறுவியகூற்
றுதைத்தானடியவர்ப்பேணலருறுவாரிடரெனமுன் [ன்
கதைக்காவியத்துரைப்பாருண்மைகண்டோமெனக்கரைந்தா

அந்தோதாவெனவொளிகுன்றினனரவுண்கலைமதிபோ
னைந்தோகையிழந்தாவிநலங்காநடுநடுங்கி
நொந்தோர்புகலிலனாய்த்தனிநுடங்கிச்செயலடங்கிக்
கந்தோடிகன்மதமாரிபெய்களிற்றுண்கனியானான். (உ௩)

மோகாதிகண்முனியுந்தவமுனிவற்கொடுநெடுநாள்
யாகாதிகளியற்றுந்தனவியற்றப்புரிவித்தான்
போகாதிகண்மறையோர்தமக்கூட்டிப்பொருளளித்தான்
சாகாதிகளயின்றுந்தவம்புரிந்துஞ்சலித்தனனால். (உ௪)

தனந்தானியமுதலாயினகேட்போர்தமக்களித்தும்
வனந்தாவியதவரோடலம்வந்தும்முடனொந்துந்
தினந்தாழ்வறமருந்தானவைதின்றும்பணிநின்றுங்
கனந்தாழ்வரைதிரிந்தும்பிணிதணியும்வகைகாணான். (உ௫)

என்செய்குதுமென்செய்குதும்யாம்பாதகமிழைப்ப
முன்செய்ததம்முனிமுன்னிலையாய்முற்றியதென்றே
தன்சிந்தனைதெரிந்தானுடல்சரிந்தானகம்பரிந்தான்
பொன்செய்துணைப்புயமால்வரைபுல்லென்றுபுலர்ந்தான். ()

வேறு.

கிளைகளுந்துணையுந்தானைக்கிளர்ச்சியுமமைச்சுமில்லும்
வளைகடலுலகுநீத்துமழைதவழ்வனமும்பாசத்
தளையறமுருக்குந்தக்கோரிருக்கையுந்தடஞ்சூழ்வெற்பு
முழையுழ்வெம்பிணியுடற்றுமுடல்சுமந்துழலுநாளில். (உஎ)

மன்னவன்கொடுநோய்தீர்வான்மற்றொருபுகலுமின்றி
யின்னலங்கடலின்மூழ்கியினியிதுதுணிபென்றெண்ணி
நன்னரின்முன்னராற்றுநனிதவமிருந்தவாற்றாற்
பின்னலஞ்சடிலந்தாங்கும்பிரமிட்டனிருக்கைசார்ந்தான் ()

சரணமென்றடியில்வீழ்ந்துதமியனேற்குனையல்லான்மற
றரணமொன்றிலையிழைக்குமப்பிழைபொறுப்பதந்தக்
கரணமுங்கடந்தோய்நுங்கட்கதுகடனன்றோநாயே
னிரணவெம்பிணியைநீக்கவேண்டுமென்றெதிர்ந்துதாழ்ந்தான்.

இரந்தவனிற்பவெண்ணீற்றெழின் முனிநோக்கினாலம்
புரந்தருணிருபனின்பாற்சொதிபமால்வரையிற்புத்தேள்
வரந்தரப்புகுந்தான்சற்றுமதித்திலேவினையினைகொட்பா
லரந்தையுறநிடவெஞ்சாபமறையெனவிடுத்தானெம்மை (௫௦)

தேசிகவாய்மையாலுஞ்சிவனடியவரைப்போற்றிப்
பூசியாதகர்தையுள்ளம்பொதிந்தனையிருத்தலானு
மேசினமெம்பாற்றீர்கென்றிரந்தனையெளிதோவிந்த
மாசினைகழுவுநீரோர்யார்கொலோமலிநீர்வைப்பின். (௫௧)

இங்கெனையளித்தியென்றுவெமையடைந்தமையாற்கேட்டி
சங்கவெண்குழையார்பாலன்புறுதமிழ்முனிபாற்போகி
யங்கவர்ப்பரசிநாயேன்குறைபொறுத்தருளுகென்றுற் [து.()
பொங்கழற்பசும்பொன்னென்னப் பொருக்கெனவெகுளிதீர்ந்

வெந்துயருழப்பவிட்டசாபவெம்பிணிதீர்ந்தாவி
யுய்ந்திடுமெதற்குபாயமொழிகளுமுரைக்குமோவவ்
வைந்தவிர்த்துயர்ந்தோர்க்கேதமிழைத்தவரடையிற்காணா
மைந்தரிற்காண்பர்தென்கால்வரைதனிற்போகென்றானல். ()

மாற்றுதற்கரியவேதமறைமுனிகருணைவைத்துச்
சாற்றுதற்கரியவாய்மைதந்தனனெனப்பார்தாழ்ந்து
போற்றியப்பணிமேற்கொண்டுபொருதிரைப்பொருனைமாலை
நாற்றியபொதியமெய்தும்வழிக்கொடுநடாயினானல். (௫௪)

புகழ்தவமுனிவற்காணிலகலுதிபுலையவென்று
விகழுமோநமையடைந்தானெனத்திருவுளமிரங்கி
மகிழுமோவெய்யசாபமாற்றுமோமருவிலாண்டு
நிகழுதல்யாதோவென்றுநினைதொறுமுயிர்ப்புவீங்கி. (௫௫)

தென்றமிழ்மணமுஞ்சந்தக்குறடுருஞ்சியதெண்ணீரின்
மன்றலுங்கறுத்தனுமவாசமுமணந்துதென்றற்
கன்றகவியமாமஞ்ஞைக்கணஞ்செறிசாரல்வாயி [ன்.()
னின்றுலாவருந்தண்சோலைப் பொதியகீள் வரையைச்சார்ந்தா

பெரிதியமால்வரையினெய்திப்புண்ணியத்தவங்களாற்று
முதியமாமுனிவர்சூழுஞ்சாலையினுப்பண்முன்னை
விதியினலமைத்தவீரைமென்கையினடக்கியுண்டோன்
பதியெனவைகும்பன்னசாலையின்பாங்கர்நண்ணி. (கஎ)

நச்சரவணியுநம்பர்நளினமென்சரணமல்லா
லிச்சைவேறில்லார்யோகத்திருப்பவர்குழாநெருங்கு
மச்சபையணுகிவேந்தனச்சமுள்ளுறுத்தநாளு
முச்சகம்புகழுந்தெய்வமுனிவரன்முன்னர்வீழ்ந்தான். (கஅ)

அடிமிசைவீழ்ந்துகண்களலையெறியருவிவெள்ளம்
படிமிசைவீழ்த்திநெஞ்சம்பதைத்துவாய்புதைத்துவெள்ளைப்
பொடியணியமலனன்பர்தமையவமதிக்கும்பொல்லாக்
கொடியவல்வினையேன்யானுமுய்வனோமுனிவர்கோவே. (கசு)

வேறு.

யாழார்மொழிபாகன்றொண்டரெதிரெய்தினங்ஙன்
றாழாதசென்னிதரித்தேன்றடிந்திலே
னூழாலுணர்விழந்தேனூழிதொறும்வேறொருவர்
வீழாதவெந்நிரயம்வீழத்துணிந்தேனே. (உ0)

பண்டிருவர்காணாப்பரன்றொண்டரைக்கண்டிங்
கண்டிலர்போலன்றிமைத்தகண்ணைக்களைந்திலேன்
றொண்டரிசைகேளாச்செவியின்றுளைவழியிற்
புண்டரவேல்காய்ச்சிப்பொதுத்தேனிலைப்புல்லேன். ()

சேவையுயர்த்தசிவனன்பர்சேவடிமென்
பூவைமுரலாப்புழைநாசிகொய்திலேன்
பாவையுறுந்தொன்னூற்படிறென்றவாய்புழுக்க
நாவையரிந்துஞமலிக்கிட்டேனுமில்லேன். (உஉ)

அல்லார்கிரீசனடியாரையவமதித்த
பொல்லாதநெஞ்சுளைப்போழ்ந்தேனிலையுலையே
னல்லாரெதிரினெதிர்நாடிமுகிழாக்கரத்தைக்
கொல்லாடல்வாளாற்குறைத்தேனிலைகொடியேன். (உங)

வேளாட்டிலாவிபருகும்விழிநுதலார்க்
காளானவர்வரவேற்றன்றெதிர்செல்லாதிருந்த
தாளானவைகடறித்தெறியாமேதடறும்
வாளானதுபிடித்துப்பேபடியெனவாழ்ந்தேனே. (௪௪)

அத்தநினைநிற்சூழ்தவரையவமதித்து
மத்தெறியுந்தாவெண்டயிர்போன்மதிதுழங்கிச்
சித்தமுளைநோயினுற்றியவுடல்படுவ
தித்துயரமோநரகினைதுபடாதின்னுமே. (௪௫)

மன்போலவணிபுரக்குநாள்வந்தவுனை
யுன்போலுநரையிகழமெலிவுற்றநா
ளன்போடறியாமைநீர்கென்றழுதிரங்கா
வென்போல்வாரிலையில்லையானேயிறையவனே. (௪௬)

[illegible]

மந்தமாலூருமலயத்தமிழ்முனிவன்
சிந்தைதேர்ந்தன்புங்கழமகிழ்தூங்கி
யந்தவேன்மன்னற்கபயமளித்தருளி. (௪௭)

வேறு.

மன்னநீயினிவருந்தன்மனுநெறிவழாமைநோக்கி
யின்னுயிர்போலஞாலமளித்தனையெனுமுவப்பா
னின்னுழையடைந்துஞ்சற்றுநினைத்திலையதனுமென்னை
யன்னதுகிடப்பநம்மோடடைந்திடுமிவர்களெல்லாம். (௪அ)

விமலனன்புடையரன்றிமிளிர்குருமொழிவழாமை
மூமலமுமூருக்குஞானமுனிவரர்முராரியுஞ்செங்
கமலனுங்கீழ்மேலோடிக்காண்பருஞ்சுடராய்நின்ற
வமலனென்றியாரும்பூசையாற்றுதற்குரியரானோர். (௪௯)

ஒன்றினைத்தாபித்தாரேல்யாரெனுமுவப்பத்தனைப்
பின்றவழ்சடையினுனும்பெயர்த்திடல்புரியானென்னின்
மன்றுளானடியார்தன்மையாவரேமாற்றுநீரார்
யின்றலைவேல்வல்லோய்நீயுணர்ந்திலைவிதியின்கொட்பால். ()

ஆதலின்வெய்யசாபமறைவித்தாமேற்றநீயும்
போதமுள்ளனையாயீண்டெப்போக்கனைபோக்கவாற்றான்
மாதவமுனிவர்ப்போற்றப்பெற்றனைமன்னனின்பாற்
பாதகமொழியுங்காலமாயதுபகர்துங்கேட்டி. (ருக)

உதியர்கோனாட்டினாப்பண்மாநதியுத்தரத்தின்
முதியவர்வதியுமாதிபுரமென்னுமூதூர்தன்னில்
வெதிரிநீள்வனத்தின்மேவிவியாதனைப்போற்றியந்தச்
சதுமறைக்கிழமைமிக்கோன்சாற்றியவாறுசார்ந்து. (ருஉ)

மண்பொதுத்துக்கைதந்தமலர்பொதுளியவிலஞ்சித்
தண்புனல்படிந்துவேளைத்தழலெழவிழித்தோன்பாதம்
பண்பெறப்பழிச்சினுன்னைப்பற்றியபாவமெல்லாம்
விண்படர்பருதிமுன்னர்ப்பனியெனவிளியும்வேந்தே. (ருங)

சார்கெனும்பணிமீக்கொண்டுதமிழ்முனிவரனைப்போற்றிச்
சீர்கெழுமுனிவர்தம்மைத்தனித்தனிசிறப்பினோக்கிப்
பாரிடைமுறைமுன்றாழாவடிக்கடிபரவியேத்தி
வார்கெழுமருவிதாங்குமலயமால்வரையைநீங்கி. (ருச)

நீங்கினன்ஞிமிறுந்தேனுமிறைமணமுயிர்க்கும்பொங்கர்ப்
பாங்கரின்னிசைகடேரும்பாண்டிநாடதனைச்சேர்ந்தான்
பூங்கமழாரும்வேம்புங்குவிதரப்பொலியுமுன்றிற்
றேங்கமழ்போர்ந்தைவேய்ந்தசேரர்கோனாடுதன்னை. (ருரு)

இலகெரிக்கடவுட்டொல்லையெழுபவவனத்திற்கேற்ற
கலனிடர்க்கடலைவிட்டக்கரையினைக்காட்டற்கென்றாழ்
மலவிருட்கேணிஞானவழிசெலுங்கதிக்கென்றோர்ந்து
புலவரும்புகழுமாதிபுரத்தினைப்பொருந்தினானால். (ருசு)

பொருந்தினன்றிருந்துகர்ப்பபுரியினைப்புணரிநஞ்ச
மருந்துநம்பரன்முன்றாழ்ந்தானெழுந்தனன்றும்பிணிக்கு
வருந்தினனாகிமாழ்குநாளினப்பிணிவிடற்கோர் [ன்.
மருந்துகையுறக்கண்டோன்போன்மலர்ந்தனன்வதனமன்ன

நனிமகிழ்வெய் திரொய் தினனிதிரைப்பரவையுண்ட
முனிவரன்மொழியுமாற்றுன்மூரிவிற்பருவவேற்கட்
பனிமதிநுதலிபாகன்கோயிலின்றென்கீழ்பாலிற்
கனிபொதிவதரிமூவெனாந்தனைக்கண்ணிற்கண்டான். (ருஅ)

வேறு.

அந்தநள்வனத்தாசறுமளவின்மாணக்கர்
சிந்தைதேர்ருந்தவத்தினர்திசைதிசைமொய்ப்பப்
பைம்துழாய்ப்புயற்கலையெனவரும்பராசரன்றன்
மைந்தனுதனத்திருத்தலைக்கண்டனன்மன்னன். (ருகூ)

கண்டகண்கணீர்ருவியிற்சொரிதரக்கரைந்து
மண்டனிற்சிரந்தாழ்வுறப்பன்முறைவணங்குந்
திண்டிறற்சடர்வாட்படைச்செம்மலைவேதங்
கொண்டமாதவக்குரிசிறுன்குறித்தெதிர்நோக்கா. (சுo)

வருகவோபிதாரக்கொடிமன்னவவென்று
வருகழைத்தனனுர்கலியுலகெலாமளிக்கு
மொருபெருங்குடைக்குரிசினீயொருவருக்கடாத
பெருகுவெம்பிணிதொடர்ந்திடவினைத்ததென்பேசாய். ()

பேசலாயதென்பேசுதற்கரியமாமுனிவ
வாசைநீருலகளித்திமெரையருக்கடாத
மாசிழைத்தனனியாதெனின்மலயவெற்பொருவ
னேசைமாதவக்குழுவொடுமுற்றனனென்பால். (சுஉ)

வெய்யதீவினைப்பயத்தினுல்வெற்புறைமுனியை
யையர்தங்களைமதித்திலன்மூங்கைபோலதனுற்
றுய்யவம்முனியேவலிற்பிரமிட்டன்றோன்றி
யையவுற்றதிக்குட்டநோய்கூற்றெனவருத்தும். (சுங)

ஒன்றினுலுமீதொழிதரலின்றியொண்பொதியக்
குன்றிலெய்தியம்முனிவரற்குறுகின்றிரப்ப
நின்றனக்கிதுமிகழ்த்துகென்றுகூரத்தனனின்பா
லின்றடைந்தனனளித்தியென்றேத்தினனிறைவன். ()

வேறு.

ஏத்துமானவேலிறைமொழிபுகுமுனமிருசெவிபுதையக்கை
சேர்த்தினன்சிவசிவவெனச்செப்பினன்சிவனடியவர்தம்மை
நீத்தபாதகங்கேட்பினுங்கீழ்புகுந்ரயமூழ்குதலுண்மை [றும்.
பார்த்திபூர்க்கிஃதடுக்குமோவடுத்ததிப்பார்த்திபன்றனக்கென்

யாவராயினுங்கண்டிநீறணிபவரெம்மிறையெனவெண்ணி
யாவலோடெதிர்ந்திறைஞ்சிடல்வேண்டுமெற்றவர்கடம்மொழு
ளோவினுங்கருத்தெந்தவாறேதெரியாதெனவுன்றுமே [க்கங்க
நாவினூற்பழியுரைத்திகழ்ந்தவர்நரகிடைநணுகுவரென்றும். ()

தூயநெஞ்சிடைத்தெரிந்தரன்றொண்டரைத்தொடாதிகழ்
திருபன்றன், மேயவிம்முகம்பார்க்கவுமொருமொழிவிளம்பவும்
விதியின்று, லாயினும்மவைபுரிதரவழக்குமுண்டென்னெனி
லடுதெவ்வர்க், காயும்வெங்கணையுமிழ்சிலைக்கொற்றவன்கற்றகே
ள்வியினாலும். (௬௭)

பண்டைநல்வினைப்பயனிவற்கிருந்தவப்பரிவினாலுவராழி
யுண்டமாமுனியிருக்கையினுற்றவனுகளதாமரைத்தாளிற் [று
றொண்டுசெய்தமையான் முனிவொழிந்தருள்சுரந்தருளியவாற்
லண்டர்நாயகனுறையுமிப்பதியினையடைந்திமெதனாலும். ()

இவணிடத்துமாசிரிதரக்காலமின்றெய்தியதிறத்தானு
மவமதிப்பதன்றினியுயிருய்யுமாறறைகுதலழகென்னாக் [கித்
கவலைகூர்ந்துடல்வெதுப்பியகுட்டநோய்க்கடலிடைதனிமூழ்
திவலைமாரிசந்ததம்பொழிகட்புயச்செம்மலைமுகநோக்கி. (௬௯)

வேறு.

என்னைநீகருதிப்பேதாயிப்பிழைவிளைத்தாய்நாளு
நின்னைநீங்காதபோதநெஞ்சறைபோயிற்றேயோ
வன்னைபோலவனிகாத்தலந்தியோவந்தோவந்தோ
முன்னையூழ்வினையையாரேவென்றுளார்மூரிவேலோய். (௭௦)

அந்தணர்ச்செருத்தல்கோவையாவைவாம்பரியைக்காய்தல்
தந்தைதாய்மொழிதிறம்பல்தமர்க்கலக்கண்ணிழைத்தல்
மைந்தரைவதைத்தல்வாதைமருவுதல்விருந்தற்கோறல்
முந்தையோர்மொழிநூல்பொய்ம்மைமொழியெனமுனிவுகூறல்.

பன்னியைநீத்தல்கூத்தியோர்ப்புணர்படிற்றொழுக்கம்
வன்னியையிகழ்தல்கற்புமகளிரைவலிதிற்றோய்தல்
பொன்னிறுவெழிலான்மூத்தபூவையின்போகந்துய்த்த
லன்னியமாயநீசமகளிர்பாலன்புபூத்தல். (எஉ)

பூப்பினள்போகம்மற்றைவிலக்குநாட்போகந்துய்த்தல்
பார்ப்பனமகளிர்கொங்கைநோக்குவெம்பாவம்வெய்ய
தீப்பதிதொறுமடுத்துச்சிதைத்திடுந்தீயவஞ்சக்
தோப்பலர்த்துடவைகூவல்குழியைத்தடிதறார்த்தல். (எங)

உயிர்குறைத்திடலூன்விற்றல்கொண்டுணவுண்ணுமுள்ளச்
செயிர்குறைத்திடல்விடுத்தோன்றனையுணச்செப்பல்செப்பும்
பயில்வினைமறுமையுண்டல்பாதகர்குழுவிற்போகித்
தயவறப்பேசல்பேசிகடுவையோர்சார்பிற்கூறல். (எச)

பிறர்மனைவிழைதல்வேறுபுறத்தொழுக்கியையும்பெண்டீர்
திறனொருங்குணர்ந்துமன்னமவளிடவுண்ணுந்தீமை
யறநிலைபுரிதல்போரிலரசரைவிடுத்துப்போதல்
கறவைகன்றூட்டுமுன்னர்க்கறந்துபால்களிப்பவுண்டல். (எரு)

அதிதியர்க்குணவுநல்காதருந்துதல்பலியிடாமை
முதியருன்மகளிர்கொங்கைமுயங்குதலவரைக்காய்தல்
கதிர்வெயில்விரிகாலத்திலரிவையர்கலவிவேட்டல்
பொதிகலன்கழித்துமாசுபுனைமடவாரைப்புல்லல். (எசு)

நட்பிடத்திடர்வினைத்தனன்பகற்பசிக்கூட்டாமை
கட்குடித்துழலுந்தீமைபலபொருள்களவிற்கோடல்
புட்குலம்விலங்குசோரக்கண்ணியிற்படுக்கும்புன்மை
கொட்புறவரைவில்லாமேகொலைத்தொழிலாற்றுங்குற்றம். ()

நஞ்செனக்குறனைபேசியாரையுகலிவுசெய்த
றஞ்செனவடைக்தோர்க்காற்றும்பாதகந்தாவில்கற்பு
வஞ்சியர்தம்மைவிற்றல்பற்றியில்வாழ்க்கையாற்ற
னெஞ்சிலொன்றினையிருத்திவாக்கிலொன்றினைநிகழ்த்தல். ()

விரதமேற்கொடுவிடுத்தல்விரதத்துக்கழிவுசெய்தல்
பரவையிற்கலனிற்போகல்பழிபடக்கோறற்பார்த்த
லரவுகைப்பிடித்தலாட்டனீர்விளையாடலேற்கு
மிரவலர்க்கீதலின்மையீதலைவிலக்கும்புன்மை. (௭௯)

உடனிருந்துணவுமாந்திப்புறனுரைத்துழலும்பாவ
மடல்கெழுமமைச்சன்வேந்தையடக்கிநாடளிக்கும்பாவம்
விடலருமமைச்சைவீணில்விழுங்குவாளரையன்பாவங்
கடலுலகதிற்செங்கோல்வெங்கோன்முறைகாட்டும்பாவம். ()

இவைமுதலாயவெய்யபாதகம்யாவுந்தொன்னூ
லவைப்பகர்சாந்தியாலுமரியமாதவங்களாலும்
புவனியினாளினாளிற்றீர்தரும்புகலிற்றீரா
நவைசிலவுளநீகேட்டிகாமவேற்றானைவேந்தே. (௮௧)

கருவழியுழலாவண்ணங்கண்ணருள்பரிசம்வாய்மை
பொருவில்பாவனைநூல்போகம்புகலவத்திரியாற்பாச
விருள்கெடுத்துதயமாம்பேரின்பவீடருளுஞானக்
குருமொழிபெயர்த்துவேறுகூறுதல்குருத்துரோகம். (௮௨)

சிவனதாலயமிடித்துச்சிவபூசைக்கரிட்டஞ்செய்தல்
சிவனணியிழைதூசாதிதிரவியங்கவர்ந்துகோடல்
சிவனுறைபதிபூஞ்சோலைதிகழ்நந்தனவனங்கள்
சிவநதிவாவிகூவல்விளைபுலஞ்சிதைத்ததீமை. (௮௩)

சிவபணிவிடைக்கென்றேற்றுவேறொருதிறமையாற்றல்
சிவனதைந்தெழுத்துநீறுகண்டிகைபழித்ததீமை
சிவனைமான்முதலினோருளொருவனென்றிசைக்குந்தீமை
சிவநெறிவழுவிச்செப்பன்முதலியசிவத்துரோகம். (௮௪)

குரவன்வாய்மொழியுளத்துட்கோடலுங்கொண்டவாற்றாற்
பரசிவனருளிற்றோய்ந்துபற்றியபற்றுமாகி
விரவுமவ்விரண்டினுக்குமுரிமையாமென்மையன்ப
நரவியபெருமையாரேயோர்ந்துணர்ந்துரைக்குநீரார். (௮௫)

அவர்தமைசீராயுள்ளாரவர்களேயவர்கடம்மைக
கவரறமதித்தல்போற்றல்வழிபடல்கருத்திலெண்ணு
துவர்படமதித்தடாதபழிமொழியுரைக்கும்பாவந்
துவர்படுகுருதிவேலோய்சங்கமத்துரோகமென்பார். (அசு

அறையுமிப்பாவமூன்றுமாற்றினோர்சாத்திரங்கண்
மறைமுதலிய நூல்யாவுமனாந்தினைத்தோதினுந்தேர்ந்
திறைமனந்தணவாயோகமெத்தனையியற்றினும்வாம்
பிறைதவழ்கானினூடாறிருதுவும்பிறங்கினாலும். (அஎ)

மலைகளினுறினுஞ்செந்தீநள்ளிடைமருவினுங்கா
லலைவறப்பருகினும்பாலலையெடுத்தெறியுநீணீர்
நிலைவறநிறப்பினும்பார்நெளியினுநெளியாவண்ணந்
தலைநிலத்துறநிறீஇத்தவம்பலவாற்றினாலும், (அஅ)

ஊர்தொறுமந்தணாளர்முனிவரர்க்கூட்டினாலுஞ்
சீர்மணிமண்டபங்கோபுரஞ்சினகரஞ்செய்தாலு
நீர்மலிவாவிதூவிநிறைமடநிமலர்க்கேற்ற
தேர்விடுப்பினுமப்பாவந்தீருமோதீராவேந்தே. (அகூ)

ஆதலிற்கும்பயோனியம்பிகாபதிபதத்தின்
மேதகுமாண்புபூண்டதொண்டரின்விழைவுமிக்க
மாதவமுனிவனென்றுமறிந்தவமதித்தாய்நீயப்
பாதகவெய்யசாபம்யாவரேமாற்றற்பாலார். (கூO)

வேறு.

குருவைவெள்விடைப்பாகனையன்பரைக்கும்பிடாரிகழ்ந் தோரைக், கருவியாற்குறைத்திடல்கொலையன்றதுகைவரல் வலியின்றேல், வெருவிவெந்நிரயம்புகச்சபித்தவர்மேவியமூதூ ரை, யொருவிவேறொருபுலத்திடையருந்தவமுனுற்றுதல்வழக் காமால். (கூக)

அறைகடற்கநெஞ்சமுண்டரியயனமரர்கடமைக்காத்துச், கறைபழுத்தகண்டன்றிருத்தொண்டரைக்கண்கெண்டிலர்போ லக், குறையிழைத்தனையாற்குறுமுனிவரன்கொதித்தெழுந்தெ ழுந்தனன், மறைதரும்பிரமிட்டனைவிடுத்தனைவைதனன் வயவேந்தே. (கூஉ)

மாயனுன்முகன்முதலபுத்தேளிருமாதவநணியாற்றி
ஏயுமாறரிதாகிவந்தெய்தினரிப்பதிதனைவெற்பின்
றூயமாமுனிநிமித்தமாயெளிதில்வந்தெய்திநீதொழப்பெற்றாய்
மேயசெய்வினையிலருமேம்படுவரிம்மேதினிதனிலம்ம. (௧௩)

உரைக்குமாறெவனித்தலப்பெருமையையுரைக்குதுமறை நான்கு, மிரைக்குமாதிமாபுரங்கருவூரெனவிவைகிடக்கிடமேரு, வரைக்குநேர்புயமானவேலிறைவநின்வல்வினைப்பிழம்பெல்லாங், கரைக்குமோர்மருந்துரைக்குதுமுட்கொளாயினியுளங்கவலாமே. (௧௪)

தளஞ்செறிந்தசெந்தாமரைச்சதுமுகன்சராசரந்தரவேண்டி, வளஞ்செறிந்தமாதவம்புரிந்தாங்கிலைவள்ளல்பூசனையாற்றிக், களஞ்செறிந்தமங்கலந்திகழ் வாணியைக்கடிமணம்புரிஞான்றி, னுளஞ்செறிந்தபேருவகை யோடளித்ததோரொண்புனற்றடமுண்டால். (௧௫)

பூத்தவுந்தியனைத்தருநீழலிற்பொலிபவன்புத்தேளிர்
மீத்திகழ்ந்தமாமுனிவரர்நணிதவர்விஞ்சையர்சிவயோக
ரார்த்ததெண்டிரையார்கலியுலகின்மேவந்தணர்முதலாயோ
ரேத்தியேத்திநின்றுதேற்கு ரியவவ்விலஞ்சிதானிறையோனே.

ஊசலொந்தழல்பிறப்பிறப்பெனுமலைவையொழிப்பதுபிறப்பெல்லாம், பாசவல்வினையாலெழும்பிணிகளைப்பறிததெறிவதமூழ்கு, மாசலைத்துளோர்முத்திவீடடைவதற்காயதுகமழ்கொன்றை, வாசமொய்த்ததாரமலனதருவமாய்வயங்குவதயர்வேலோய். (௧௭)

சாற்றுமாநிலைநாயகன்சேதிமர்த்தனக்குநீடென்பாலி
னேற்றுவிற்கணைமும்முறையெய்வுழியெய்துமாயிடைவெய்ய
மாற்றலார்நிணங்கமழ்ந்துயிர்பருகியமதுகைவேல்வயவேந்தே
கூற்றமன்னவெம்பிணிகணிதொலைந்திடக் குளிர்தடங்குடைந்
தாடி. (௧௮)

சீதவெண்ணெய்மால்வரையதனுத்தரத்திசையினான்முக
ன்குண்ட, மாதுபாகனாலயமிவைமூன்றையுமொருங்கைமாம
ணித்தேரு, ராதவன்குணக்கெழும்பொழுதாதியாக்குடக்கினு
ள்ளடைகாறு, மேதமொன்றுருவகையிருநான்குநாளிறைவனை
வலஞ்சூழ்ந்தே. (௯௯)

வஞ்சியெம்மிறைமலரடியருச்சனைவழாமையினனியாற்றி [தி
லிஞ்சொன்மாமுனியிடுங்கொடுஞ்சாபமுமிரிந்தெழிலுருவெய்
யஞ்சலார்திறையளப்பமாநிலம்புரந்தமலனார்மலர்த்தாளி
லுஞ்சுவாழ்குவையுண்மையீதுண்மையீதுரைத்த வாறியற்றெ
ன்றான். (௧௦௦)

இயற்றுகென்றமாமுனிவரன்பணிதலையேற்றிலஞ்சியினா
டிப், புயல்கிடந்தவப்பொருப்புமக்குண்டமுங்கோயிலும்பொலி
வெய்த, நயப்பினால்வலஞ்சூழ்ந்தனனானிலைநாயகன்மலர்த்தா
ளில்; வயக்களிற்றினான்வந்தனைபுரிந்தனன்வானவர்வியப்பெ
ய்த. (௧௦௧)

நாலிரண்டுநாளியற்றலுமாநிலைநாயகனிளமென்றோட்
சேலிரண்டனவிழியுமைபாகமுஞ்செஞ்சடாடவிப்பொற்பு [ன்
றாலிரண்டினோடொன்றொளிர்மார்பமுநோக்கிய விழியொன்ற
மேலிரண்டுமொமழுவரதாபயமென்கையுமிளிர்வெய்த. (௧௦௨)

கொற்றவெள்விடைமிசையிலோராயிரங்கோடிசூரியரொன்
று, யுற்றபேரொளிமழுங்கவோரோங்கொளியாயுதித்தெழவொ
ன்னார்ச், செற்றவாட்பெருஞ்சூரிசிறன்னுடற்பிணிதீர்ந்தெழிலு
ருவாய்ந்து, முற்றுநோக்கினானிருகணீரருவியின்மூழ்கிவீழ்ந்
தெழுந்தானால். (௧௦௩)

கண்டகண்களுமுகிழ்த்தசெங்கைகளுங்கனைகழற்றிருப்பாத
முண்டகங்களிற்செலுத்தியநெஞ்சமுமுழுவதுநெகிழாமே
கொண்டவேட்கையனாகிமெய்விதிர்த்தனன் குளறிவாய்குளிர்
கொன்றைப், பண்டரங்கன்முன்னாடினனாடினன்பாடினன்று
திவீற. (௧௦௪)

வே று.

நடியகரியமாலுநீண்டவெண்கணனுமுன்னக்
தேடியசிவனேபோற்றிசெழுமறைமிருதியெல்லாம்
பாடியபரனேபோற்றிபரிபுரமொலிப்பமன்று
ளாடியவமுதேபோற்றியாகிலநாதாபோற்றி. (கoரு)

கரணமேகடந்துநின்றகடவுளேபோற்றிநாகா
பரணனேபோற்றியைந்துபதமெனநின்றாய்போற்றி
பிரணவவொளியேபோற்றிபிஞ்ஞகாபோற்றிபேறு
ரரணமூன்றடுபுன்மூரலாகிலநாதாபோற்றி. (கoசு)

மன்னிராசதகுணத்திலயனெனவகுத்தாய்போற்றி
யுன்னுசாத்துவிதத்தாழியோனெனவளித்தாய்போற்றி
முன்னுதாமதத்திலாதிமூர்த்தியாய்முடித்தாய்போற்றி
யன்னிலைகடந்தாய்போற்றியாகிலநாதாபோற்றி. (கoஎ)

பண்ணியதெல்லாம்வெய்யபாதகம்பாவிநெஞ்சி
லெண்ணியதெல்லாம்பொல்லாவஞ்சகமல்லாலென்ன
புண்ணியஞ்செய்தேனுயேன்பொழியருள்சுரந்தபோர்வேற்
கண்ணியோடெதிர்ந்துகாட்சியளித்தனைகருணைவாழ்வே. ()

இத்துதிபெருகவேத்துமிறைவனைநோக்கியீசன்
கொத்திலகியதார்வேந்தேகுரவனதுவளகத்தி
னத்திலகியநீராடிநமையும்வந்தனைபுரிந்த
வத்திறமையினுற்சாபமகன்றனையன்பின்மிக்கோய். (கoகூ)

கேட்குதிகருதுமின்னும்வரமெனக்கிளத்தலோடும்
பூட்கைமால்யானைவேந்தன்போற்றிநின்றடியேனுய்ய
வாட்கொளுமமுதேயுன்றனடியருக்கடியர்செய்ய
தாட்கமலங்களுள்ளந்தரித்திடலளித்தியென்றான். (ககo)

அவ்வரமகிழ்வினல்கியருள்கொடுத்தயன்மாலுள்ளம்
வவ்வியவிலிங்கந்தன்னின்மறைந்தனன்மறையுணின்றேன்
றெவ்வடுவேலினுனுந்திருவளர்கருவூரீச
னெவ்வமில்பூசைநின்னுளாற்றியாண்டிருந்தபின்னர். (கக௧)

கொடிநெடுங்கொடிஞ்சியந்தேர்கொலைமதக்களிறுபாய்மா
வடிபடைத்தலைவருற்றாரமைச்சர்வந்தெதிரிறைஞ்சக்
கடிபொழிற்புயல்கண்டாலுங்களிமயில்கவலக்காமர்
துடியிடைமடவாராடுந்தொன்னகர்விசாலைபுக்கான். (கக௨)

புகுந்துவாளுளைமடங்கலாதனம்பொலியமேவி
முகுந்தனுமெனக்குயிற்றுமுழுமணிமகுடஞ்சூடித்
தகுந்தனிக்கவிகைவட்டச்சசியெனநிழற்றவெற்பின்
மிகுந்திரைவேலைஞாலஞ்செய்தொழின்மிளிரவோச்சி. (கக௩)

அந்தணர்பசுவிரப்போரதிதியரமலனன்பர்
தந்தமக்குதவிவேட்டவளவெண்டிருநீறுடி
வந்தனைநாளுநாளும்வளம்பெறவளஞ்செலுத்து
யிந்திரதருவினோங்கிவெறுத்திடநீப்பவெண்ணி. (ககச)

மூசளிமுரல்பூங்கொன்றைமுகிழெருக்கணியும்வஞ்சி
யீசனைப்பூசையாற்றும்பேற்றினாலீன்றதோன்ற
லாசைசூழுலகங்காப்பவணிமணிமகுடஞ்சூட்டிக்
காசினிமதில்வல்லோர்பாற்கையடைகொடுத்தபின்னர். (கக௫)

திருக்கிளர்கருவூரெய்தித்திகழ்தவமுஞற்றியன்னோ
யுருக்கிளர்கருவூர்தன்னிலுதித்திடாதரவுவெள்ளை
யெருக்கிளமதிதாழ்சென்னியெம்பிரானும்பர்காணா
மருக்கிளர்தளச்சரோசமலர்ப்பதமருவலுற்றான். (ககசு)

கொண்டலையனையசெங்கைக்கோபிதாரத்வசன்றான்
புண்டரிகத்தோன்வாவிகுடைந்தரன்பூசைமுற்றித்
தண்டமிழ்முனிவனிட்டசாபமதொழிந்தவாறு
கண்டனன்யானுமன்றுகாலவமுனிவர்கோவே. (ககஎ)

விரிந்ததொல்வேள்வியாற்றும்விரிஞ்சனதுவளகத்திற்
பரிந்துநீராடிவஞ்சிப்பசுபதிநாதற்போற்றிப்
பிரிந்திடற்குளம்வாராமேபெட்பொடுந்தவங்களாற்றி
யிருந்தனன்றிவசமூன்றுண்டிருந்திடாமுனிவருண்டோ ()

இச்சரிதையினையேட்டிலெழுதினோர்படித்தோர்கேட்டோ
ரச்சமிலரசனுதிநாதனையகத்திலன்பு
வைச்சுமுன்றுதித்தபாட்டைவழுவறக்கற்றோர்நாளு
நச்சரவணிந்தோன்முத்திவீட்டினைநணுகிவாழ்வார். (கககூ)

மலரயன்றொழுமிலஞ்சிமானவேலரசன்மூழ்கிச்
சலமுறுபாவநீங்கிமுத்தியைச்சார்ந்தவாறு
பலனுறவுரைத்தசோரனொருத்தனேபரமன்சாத்துங்
கலனவைகவர்வான்புக்குப்பெற்றவைகழறுகின்றாம். (கஉ0)

கோபிதரீத்துவசன்சருக்கம்முற்றுப்பெற்றது.

ஆ சருக்கம் கச-இதிருவிருத்தம்-ருகo.

விபண்டகச்சருக்கம்.

பரசுதரர்கருவூரர்வேலைக்காய்ந்தார்பஃறலைராவணன்வலி
தாளுகிரிற்கண்டார், கிரவிகூரெயிறுகுத்தார்மதியைத்தேய்த்தா
ரெரிகையறுத்தார்கூற்றையுதைத்தார்காலா, னரகரியைச்சரப
வுருவெடுத்துமாய்த்தார்நான்முகன்சென்னியைக்கொய்துகபா
லமேற்றூ, ரரணமூன்றினையுமிழநகையால்வென்றாரானுலுமரு
ளியுமன்புராமே. (க)

வேறு.

அண்டரியசண்டனவனன்றியடுபோரி
லெண்டருவிபண்டகனெனும்பெயரினானு
முண்டொருசமன்படியிலென்றிடவுலாவிக்
கண்டபொருள்கொண்டுயிர்கவர்ந்துதிரிசோரன். (உ)

செஞ்சுடுசெரஞ்சிலைசெறிந்தகரனீடும்
வஞ்சகநிறைந்தகொடுநெஞ்சகனுள்வாடி
யஞ்சினர்சரண்புகவடைந்தவர்களேனும்
வெஞ்சினமுதிர்ந்துயிர்விழுங்குகொலைவேடன். (ஙு)

பிறந்தவர்கடங்களினடும்பழிபிறங்கச்
சிறந்தவனிருந்தவதர்சென்றவர்களங்க
மிறந்தவருநன்பொருளிழந்தவருமன்றி
மறந்துமுயிருய்ந்தவர்களில்லர்சிலர்மன்றே. (௪)

நெடுங்கலிநிலக்கொளநிரந்தரம்விரைந்தங்
கடுங்களவினெண்பொருள்கவர்ந்துநனிதங்கும்
விடுஞ்சுடரினன்றிசைவிலங்கவழல்பொங்குங்
கொடுஞ்சுரநடுங்கிடுமெவன்கொடுமைகண்டே. (௫)

மானுடர்களாயபசுமாயவலிதாய
வூனுடலைநூறிவிழிசீறியுளம்வீறி
வேனிலெழுநாடரெனும்வேடர்குலநீடுங்
கானினிடைசேருமொருகாருழுவைநேர்வான். (௬)

கோச்சுரபியாவிகொளல்கோட்டியகன்னெஞ்சான்
பூச்சுரியலாரையுயிர்கோக்கவுளமெஞ்சா
னச்சிரமம்வேவமனைதீக்கொழுவவஞ்சான்
மாச்சலதியோவியெரிகாட்டின்வருநஞ்சான். (௭)

வீட்டினிறையூடுதிரிவித்தைபலகற்றோ
னோட்டநடையால்விசைமருத்துவினையொத்தோன்
வாட்படைகளைவிலகவைத்தவதகத்தோன்
கோட்களவிலேபுரிகுருத்துவமிகுத்தோன். (௮)

நீடுவரையூர்புறவனீணகர்முன்னீரூர்
நாடுவயல்சூழ்மருதநானிலமுமோடி
மாடுதுகில்பூண்முதலவாயபொருள்வாரி
யோடுலைவைவேகமெனவோரிரவின்மீள்வான். (௯)

செப்பரியசிற்சிலதலத்திடைதிளைக்கு
மப்பொருளளப்பிலவெடுத்துடனழிப்ப
னிப்பரிசினைத்தவிரெனப்பிறர்விலக்கின்
வெப்புறவிழித்தவரைவெட்டியெறிதுட்டன். (௧௦)

வே று.

சுற்றிநாற்படையினூற்சூட்சியாற்சூழ்ந்துகைப்
பற்றினர்நேத்திரம்பார்த்திடப்பாறுவான்
மற்றையார்செய்வதென்வன்கொலைக்கஞ்சிமுன்
பெற்றதாய்தந்தையார்பேசவாய்கூசுவார். (௧௧)

தென்றிசைக்கோமகன்றிண்கையிற்றங்குறும்
வென்றிவெம்பாசமேவீக்கினல்வீக்குறுந்
துன்றுமக்கூற்றுவன்சூலமேயாவியைக்
கொன்றவனுக்கையைக்குத்தினூற்குத்துறும். (௧௨)

பாரின்மற்றேறவரேபற்றுவார்குத்துவார்
சோரருட்சோரவேசோர்வுகொள்சோர்வினு
ஞாரழற்காயநீரற்றவெம்பாலைசற்
றீரமுண்டெனினுநெஞ்சீரமில்லாதவன். (௧௩)

கண்களின்றொழியுண்காயழன்மூட்டுவ
னெண்கலைவாக்கிடியோற்றினைக்காட்டுவ
னுண்குழூனுந்தியாமுயர்புறங்காட்டின
னெண்குபோற்பங்கிமெய்யீட்டியவேட்டுவன். (௧௪)

மோகமேமூலமாய்மொய்கொள்வஞ்சங்கொடுஞ்
சாகையாய்ச்சோர்வெலாந்தாம்பணைக்கொம்பராய்
வேகமேபூவலிக்காய்கொலைவெங்கனி
யாகமாபாவநீடாருவேயாயினன். (௧௫)

எக்குலத்தாயினுமேரத்தொழில்பூண்டுளா
ரக்குலத்தார்கள்போலத்தொழிலாற்றிடத்
தக்ககோலங்களிற்சார்ந்துசார்ந்தேயவர்
மிக்கவாம்பொருளெலாம்வேறுகொண்டேகுவான். (௧௬)

வே று.

செறம்பாற்றிபகுரவற்சேர்ந்தடியார்போலொழுகி
யுற்றன்பாற்றீக்கையும்பெற்றெனதுபொருளுடலாவி
மற்றன்பாற்கொண்மெனநீர்வார்ப்பவர்போல்வார்த்தங்க
னற்றம்பார்த்தவர்கள்பொருளுடலாவியவைகொள்வான். (௧௭)

அண்ணலார் திரவியமோரணுவளவுகவரமன
மெண்ணினோர்நீசரினிலைடப்புகுவரெனப்பிறர்தம்
மூண்ணிலாவிடவுரைத்தாலயத்துரியார்யோன்றுறுதற்
கண்ணினான்பொருள்கவர்ந்தகள்வனையாரளவிடுவார். (க௮)

அங்கணன்சேரடியவர்பாலணுகியுங்களடிபணிவோா
தங்களடிமலர்பணியுந்தமியன்யானெனச்சாற்றி
யிங்கினியுய்ந்தேனெனத்தாழ்ந்திறைஞ்சிநுகர்சேடமெல்லா
நுங்கியவர்பொருள்கவர்ந்தகள்வனையார்நுவலுவார். (க௯)

இவ்வியல்புபிறழாமேயிருநிலனீடுயிருழப்ப
வவ்வியநெஞ்சினனாகியவனுறையுநாட்கருவூர்ச்
செவ்வியநாடகனவிலுஞ்சிவபெருமான்பதசேர்வை
வவ்வியமார்கழித்திருவாதிரைவிழவுமருவியதால். (௨௦)

அணிவிழாத்தொழுதுகதியடைவானந்தணரையர்
வணிகர்சூத்திரர்முதலமற்றையயாவரும்பகுவாய்ப்
பணியின்மேற்கிடந்தபுவிதருங்கருவூர்ப்பதியினுளந்
தணிவிலாமையினடந்தார்சகரர்கொடுங்கடல்போல. (௨க)

செருமிநிரைநிரைதொக்குச்சேர்ந்ததரின்வருவோரை
மருவுதிரெங்கெனவினவியானும்வருகுவலென்றே
பெருவினையொன்றுயவுருப்பிறங்குவிபண்டகனுமுட
னொருவருளமறியாமேயுறுங்களவுகொளவேண்டி. (௨௨)

சென்னியின்பின்றாழ்குடுமிசேர்த்திமுந்நூலுரநாற்றி
வன்னிவளர்ப்பவரணியுமணியிழைத்தகுழைதாழ்த்தி
யன்னெறிவெண்டுசமருங்கசைத்துத்தரீகம்வரை
துன்னுபுயத்தோட்கலர்த்துதுலங்கவெயிலிலங்குவித்து. (௨௩)

வெண்டிருநீற்றொளிநுதலின்மிசையிசையவசையிறிரி
புண்டரமேவரப்புனைந்துபுயமுருமங்கரமாதி
கொண்டுவனைந்துரமிடறுவுதோட்சிரஞ்செவிகைக்
கண்டிகைபல்விதத்தணிந்துகரமிசைப்புத்தகமேந்தி. (௨௪)

மெய்வேடமெனப்பலரும்விரும்பவரும்பொருள்கவரப்
பொய்வேடம்புனைந்துமலர்ப்பூங்கணைதாங்கியகருப்புக்
கைவேடனுடல்கடிந்தகண்ணுதலோன்கருவூரி
னுய்வேடத்தவரிடையவ்வொருவேடன்மருவினான். (௨௫)

மருவுமணிமாளிகையுஞ்சூளிகையுமாடமுநீ
டெருவருமுன்றிலுமனையுந்தெற்றியுமுற்றெருங்குறைவோ
ரருகணைந்துமவர்கணினைவாராய்ந்துமவ்விரவிற்
பொருள்கவர்தற்கிடமின்றிப்புந்தியிலொன்றினைநினைந்தான்.()

தாமநறுங்கொன்றையினான்றனைப்போற்றத்தரணியுள்ளோர்
பூமருவிமண்டபத்திற்புகுதுவார்புகுநெருக்கின்
மாமணியினாலிழைத்தவரதனணியாபரணம்
யாமெளிதிற்கொளலாமெனக்கோவிலெய்தினான். (௨௭)

வேறு.

வாணனார்குடமுழவொலிவானொலிமறைப்ப
நாணவார்கீடலெழுமொலிவளையொலிகரல
நீணிலத்திடைப்பல்லியநிரைநிரைதுவைப்ப
வீணைவிஞ்சையர்நரம்பிசைவரவிரலுளற. (௨௮)

இத்தலத்தருமறையவரிமையவரொழிந்தோர்
பத்தர்மொய்த்தரகரவெனப்பன்முறைபோற்றிக்
கைத்தலஞ்சிரமுகிட்புறக்கண்கணீரருவி
தத்திமெய்ப்படிப்பார்மிசைதாழ்ந்தெழுந்திறைஞ்ச. (௨௯)

முக்குறும்பெறிந்தைம்புலனடக்கிமூச்சவித்து
மிக்குறுந்தவமிழைக்குநரருள்வெள்ளமூழ்கி
மைக்குறும்பனமலவிருளிரித்தமாமுனிவர்
நெக்குநெக்குருகிப்புடைநெருங்கிக்கணீருகுப்ப. (௩0)

எழுதவம்புரியிருடியரெண்வகைவசுக்கள்
வழுவில்கிம்புருடாதியர்மருத்துவரிருவர்
தழுவுசாரணருரகர்கோசரர்சித்தரியக்கர்
பழுதிலாரணமறையவர்யாவரும்பரவ. (௩௧)

அடுக்கிவைத்தபேரண்டங்களவைதமக்காணி
கொடுத்துவைத்தனநிலைபெறுகுரைகடற்புடவி
நடுத்திகழ்ந்தபொன்னசலத்தைவலன்கொடுகடவு
மடுத்தபேரொளிச்சூரியரளப்பிலர்வணங்க. (௩௨)

அண்ணலார் திருவுருவிலோருருவியைந்தண்டத்
தெண்ணிலாதபுத்தேளிருக்கின்னமுதளிக்கும்
வெண்ணிலாமதிக்கடவுளும்வேள்விகட்குரிய
தண்ணிலாவெரிக்கடவுளுஞ்சரணெனத்தாழ. (௩௩)

குண்டுகட்பொறிப்படர்மருப்புறுகவைக்குறுந்தாட்
டிண்டிறற்கருமேதியின்வெரிநிடைத்திகழ்ந்
தண்டுமுத்தலைச்சூலமுந்தரித்தகைச்சண்டன்
பண்டுதைத்தபூங்கமலமென்பதமுறைபணிய. (௩௪)

தென்றிசைக்குடபாலுறைநிருதிசேவிப்பத்
துன்றலைச்சுறவிரலையூர்தலைவருந்துதிப்பப்
பொன்றலைப்புறுமளகைவச்சிரவணன்போற்றக்
கன்றுழைக்கையீசானனுங்கண்டுகண்களிப்ப. (௩௫)

பாய்திரைக்கடற்பயோததிவயிறலைத்தெழுந்த
தூயதெள்ளமுதாசனர்சுடர்முடித்தொகையின்
சேய்மணித்திரளுருஞ்சிலீழ்தரச்சென்னிதாழா
வாய்பிழிச்செழுமலர்பொழிந்தஞ்சலித்திறைஞ்ச. (௩௬)

செங்கண்மாயவன்கைமலர்சென்னியின்முகிழ்ப்பப்
பங்கயன்சதுமாமறைப்பனுவலேத்தெடுப்ப
வெங்களுன்மருப்படுகளிறூர்விசும்பிறைவன்
கொங்கிவர்ந்தபைந்தாருவின்கொழுமலரிறைப்ப. (௩௭)

இடர்கடர்தரமுன்றிலின்வெள்ளிடையின்றிப்
படரும்வானவர்மேனியிற்பசும்புணீரொழுக
விடல்குழைந்தவெம்பிறைமுடியொருவனதுருவக்
கடவுணத்தியெம்மடிகள்கைப்பிரம்பொலிதறக்க. (௩௮)

நாடிநாரணனான்முகனாதியோர்பதமுங்
கோடிகோடியண்டங்களுங்குடங்கையினடக்கி
யாடியர்டிமன்றாடியையமலனையேத்திப்
பாடியம்மனையாடியப்பூதங்கள்பணிய. (௩௯)

உடனிருந்தவியுண்ணவேட்டவருயிருலப்ப
விடலருந்தவத்தாற்றியவேள்வியிற்றக்க
னடலவிந்தொருமுடிபெறவொருமுடியறுத்த
தடறுவாட்படைவீரபத்திரன்புடைதயங்க. (௪0)

படுமதங்கவிழருவிபோலிருகவுட்பாயு
மடுபெருங்களியானையூரையனுந்துதிப்ப
மடிசெவிக்கடுங்குரற்சுருள்வால்புனலுமிழ்
முடுவல்வெம்புரிவடுகனுமுடுகிவந்திறைஞ்ச. (௪௧)

குழுமிவண்டினங்கூட்டுணைநறவுகொப்பளிக்குஞ்
செழுமலர்த்தொடைச்சேட்டிளங்கொன்றைசூழ்வேணி
மழுவலத்தருண்மானிடத்தோருழைவைத்த
முழுவெண்ணீற்றொளிப ழுத்தமெய்யுருத்திரர்மொய்ப்ப.

இழைதயங்குரக்குடவயிற்றிளம்பிறைமௌலிப்
புழைநெடுங்கைவெண்புகர்முகத்தொருபெருங்கோட்டுத்
தழைதருஞ்செவியிச்சையாதியதழங்கருவி
மழைமதஞ்சொரிகளிற்றுருபான்மகிழ்வெய்த. (௪௩)

இருபெருந்துணைவியர்மனங்கவர்ந்தபேரெழிலுங்
கருணையங்கடலலையெறிகண்களீராறும்
பொருவிகந்தவேன்முதலியபடைகளும்பொலியு
மொருசிகண்டியூர்முருகவேளொருபுடையுலவ. (௪௪)

சிவபரம்பரைதிரிபுரைதிகழ்தனுகரண
புவனபோகங்கடாங்குகாரணிபுலன்போக்குந்
தவமிருந்தவருளமலர்த்தவிசில்வீற்றிருக்கு
முவமையொன்றிலாவுமையவளமைவுறவொருபால். ()

வந்துருத்திரகணங்கடாம்வளைந்திருமருங்கு
மிந்துவேணியினையிலையெறிவதுபோலச்
சந்தமால்வரைப்பிறந்துபைந்தமிழொடுபழகி
மந்தமாருதமுலாவரக்கவரிகாலசைப்ப. (௪௬)

கீற்றிருந்தவெண்டிங்களிற்கெழுசுவைதயமுத
மூற்றிருந்தவேணியிற்பகீரதியுவட்டெடுப்ப
நோற்றிருந்தவெண்மதிக்கலைமூன்றெனநுதலி
னீற்றிருந்திரிபுண்டரநிலவுகால்விரிப்ப. (௪௭)

அங்கியென்றொருவிழியிருள்பருகிடவலரிப்
புங்கவன்வலன்விழியெனப்பொலிதரநிலவுத்
திங்களென்றொருவிழியிடனிகழ்தரச்செழும்பொன்
றங்குகுண்டலத்தோடிலைகன்னங்கடாழ. (௪௮)

உழுவலன்பினுலவையுட்புகுந்துமீண்டலைவு
விழையுமாதவரிருந்தவாவெனத்துண்டமிளிர
வெழுதருஞ்சதுவேதமுமாகமமனைத்து
முழுதுமோதுசெம்பவளவாய்ப்புன்னகைமுகிழ்ப்ப. (௪௯)

மறுத்தவிர்ந்தவிரொளிதிகழ்சுவைதமதிவதனம்
பொறுத்தபேரெழிறங்கமான்முதலபுங்கவர்பால்
வெறுத்தழன்றுயிர்பருகவேலையினெழுந்து
கறுத்திருண்டவெங்காளமுங்கண்டமுங்கவின. (௫௦)

அண்டகீள்சுவர்ப்புறங்களினுடகச்சிகரி
திண்டிறற்கிரிநான்கெனத்திரள்புயமுரிஞ்சத்
தண்டரும்புரிநூலும்வெண்டரளமாலிகையும்
வண்டலம்புதார்க்கடுக்கையும்மார்பமும்வயங்க. (௫௧)

வடவையிற்கொழுந்தெழுசிகைக்கொழுந்தழல்வனப்பு
முடல்சுருங்கியதமருகப்பறையுமொண்கரமு
மிடர்கெடத்தனிவீசுகைத்தலமுமேலிருந்த
தடமலர்க்கரவபயமுந்தனித்தனிவயங்க. (௫௨)

மனம்விழைழத்தொளிருதரபந்தனநனிவனப்புஞ்
சினவுடற்பொலிபுலியதளாடையுந்திருநீர்க்
கனைகடற்கடுவிருந்தபற்கட்செவிக்கச்சும்
புனைமருங்குமாடகத்தெழுதொலியலும்பொலிய. (ருங)

குஞ்சிதத்தாடனெடுத்தபொற்றாமரைக்குனிப்பும்
வெஞ்சமம்புரிமுயலகன்வெரிநுரனெளிப்பச்
செஞ்சவேசிலத்தூன்றுபொற்பாதமுந்திகழ
வஞ்சிலம்பிடைச்சில்லரிமறையொலியார்ப்ப. (ருச)

உலகெலாம்படைத்தளித்தழித்துடன்றிரோபவித்தே
யுலகினூர்வழியனுக்கிரகிக்குமைந்தொழிலு
நிலவுநீடுதத்துவம்புணர்ந்தகன்றுநின்மலமா
யிலகுபேரளியிமைப்புறநிலைத்தவெம்பெருமான். (ருரு)

கண்டுளோர்பவங்காணுறாதனுதினங்குனிக்கும்
விண்டொடுங்குடுமிப்பொதுமண்டபமீதி
னண்டர்நாயகனணியிழைகவருவானணைந்து
தொண்டர்சூழ்நெருக்கிற்றுயரெய்தியச்சோரன். (ருசு)

பெயரவோரிடனின்றிவெவ்விழித்துணைபிதுங்கி
யயருநெஞ்சனாய்நிலத்தில்வீழ்ந்தழுங்கிமெய்சோர்ந்து
மயரறத்தொழுபவர்பதமிதிப்புறமாழ்கிச்
சயமொழிந்துநெட்டுயிர்ப்புவீங்குறக்கிடந்தனனால். (ருஎ)

கிடந்தவன்றனைக்கிட்டிநின்றார்களிகாண
மடந்தைபாகனைத்தொழவந்திம்மறையவனந்தோ
வடர்ந்தபேர்நெருக்குழியகப்பட்டயர்ந்தனனென்
றுடன்கொணர்ந்துவாயிலிற்செலுங்காலுயிருலந்தான். ()

வேறு.

ஆவிபோனபின்னரினரியநுண்ணிடைமடத்
தூவியன்னமென்னடைத்தூங்கருமால்வரைத்
தேவிபாகனேவலிற்றிகழ்சிவகணங்கடா
மேவினார்தன்முன்னர்விபண்டகன்னுயிர்கொள்வான். ()

கூற்றுவன்றனைவலிற்குழுமிக்கொள்சினக்கொடுங்
காற்றுவந்ததோவெனக்கடிதின்வர்தறுதுவர்
சேற்றமுமிழந்துகட்சிவப்புமாறிவீறுபோ
யாற்றலின்றிவெள்கிமீண்டடந்தகற்குரைப்பவே. (சுo)

அந்தகன்றுளங்கிநெஞ்சமஞ்சிமாகவற்சியுற்
றெந்தையன்பனுவதற்கேதுவேதென்றெண்ணுறச்
சந்ததமவன்வினைசலிப்பறவெழுதிய
கந்தமாமலர்க்கரக்கணக்கரும்மயக்குற. (சுக)

தீட்டியகணக்கெலாஞ்சிதைந்துசெல்லரிப்பவே
கூட்டியபடைக்கலங்களியாவுங்கூர்மழுங்கிவே
வாட்டிவாட்டியாவிமையவகிர்ந்துசூழ்ந்திடவென
வீட்டிவைத்தவெங்குழியெரிநிரயம்பாழ்பட. (சுஉ)

ஆண்டுவேந்தணைந்தவெம்மண்ணலார்கணங்கடாங்
கூண்டுவெங்கொலைபுரிக்கொடுஞ்சிலைக்கிராதனைத்
தீண்டரியசோதிரூபஞ்சேர்த்திமாமணியினுற்
காண்டகவிளைத்தபொற்கதிர்விமானத்தேற்றியே. (சுரு)

வேறு.

ஆடகந்திகழணிநகரிமையவராணுகித்
தோடகஞ்செறிகற்பகநறுமலர்தூவிப்
பாடகஞ்செறிபதமலர்விஞ்சையர்மகளிர்
மாடகம்பொலிமகரயாழ்வரிசையினிசைப்ப. (சுச)

சுரர்மனங்கவர்சுரிகுழற்பணைமுலைத்தொடித்தோட்
சரமடர்ந்துபைங்குழைமுகந்தடவிநஞ்சூறு
முரவுவாள்விழித்திலோத்தமையுருப்பசிமுதல
வரமடந்தையர்நடஞ்சதிவிதிமுறையாற்ற. (சுரு)

வரைபொருந்தடவிளமுலைவரையரமாதர்
விரைமலர்க்கரஞ்சேப்புறச்சாமரைவீசக்
கரைபொருங்கடலொலிகொலோகார்ப்புயலசனி
யரவமேகொலோவெனமுரசந்தரத்தார்ப்ப. (சுசு)

துயிலுமாயனுந் தூயநான்முகவனுந் துதிக்குங்
கயிலையங்கிரிச்சிகரியிற்கலந்திமகிரிவாழ்
குயிலிருந்தொருபுடைகளிப்புறவருள்கொழிக்கு
மயின்மழுப்படையண்ணல்பா லுய்த்திறைஞ்சினரால். ()

சுருதிசேர்கருவூரிலாருயிர்துறந்தோனைக்
கருணைநாயகன்விழிக்கடைசாத்திநங்கணங்கட்
கொருபெருந்திருத்தலைமைசார்ந்துறைகுதியென்னா
வருளினானிதற்கையமின்றுண்மையாமறிநீ. (௬௮)

புண்ணியப்பொடிமேனியன்புனைகலன்கவர்வா
னெண்ணிவந்துயிர்துறந்தவன்பேறிதுவென்றான்
மண்ணிலத்திதைப்போலொருதலமிலைவணங்க
நண்ணினோர்பெறும்பேற்றினையாவரேநவில்வார். (௬௯)

சோரன்முத்திபெற்றுய்ந்தவிச்சரிதையைத்துணிந்து
பாரினிற்படித்தோரிதுகேட்டுளோர்பரமன்
சாருமக்கயிலாயமெய்துவர்சதுமறையோய்
சேருவாய்கருவூரினீசெய்தவப்பயனால். (௭௦)

நீதவப்பயனுடையையாலிதுநிகழ்த்தினம்யாஞ்
சீதநண்புனற்றீர்த்தயாத்திரையின்மேற்செல்கே
மாதவத்தினோயென்றுதேவத்துதியகன்றான்
வேதமாமுனிவிடைகொண்டுமேவினனிருக்கை. (௭௧)

அறவன்வாய்மைகாலவன்றெரிந்தாதிமாபுரத்தி
னுறவணைந்தொருதனிமுதற்பொருளினையொருங்கே
மறைபயின்றருச்சனைபுரிந்துய்ந்துமண்ணினாற்
றுறவிர்காளெனச்சொற்றனன்சூதமாமுனிவன். (௭௨)

விபண்டகச்சருக்கம் முற்றுப்பெற்றது.

ஆக சருக்கம்-௧௫-இ, திருவிருத்தம்-௮௧௨.

நியமச்சருக்கம்.

வரியிதழிமௌலிவஞ்சிநாதர்தாயன்வாள்கொடுதன்மிட
றுபோழ்ந்திடவிலக்கார், கரியவன்செங்கண்ணிடந்துசாத்தக்
கண்டார்கண்ணப்பன்விழிகுலப்பழியென்றெண்ணார், தெரி
வையர்நாசியுங்குழலுமரியப்பார்த்தார்சிறுத்தொண்டன்சிறும
ழலைக்குதலைச்செவ்வா, யரியமகவினையரியவிருந்தாளானாரானா
லுமடியார்க்குநல்லர்தாமே. (க)

வேறு.

முயறவத்தினர்முகமுனிமீளவுநோக்கித்
தயவுகந்துமாமுனிவிர்காடமணியப்பொதுவி
ளியமுழக்கெழகடாவில்பசுபதீச்சரன்று
ணியமமுற்றிறைஞ்சுநர்விதிநிகழ்த்துதுங்கேண்மின். (உ)

எல்லுதிப்பதன்முன்னரைங்கடிகையென்றெழுந்து
சொல்லலுற்றவத்தொழின்முறைசுசிவரமுற்றிப்
பல்லின்மாசெறிந்தலர்மிசைப்பண்ணவன்றீர்த்த
நல்லெழிற்பொலியாம்பிரநதியிலைவபடியின். (ந)

அரையின்மேற்றுணைத்துகில்புனைந்தமலநீர்துளங்காத்
திரைவுறுதுகையாற்குடைந்திமிழ்திரைபுரட்டுங்
கரையினெய்திநீர்நனைதருங்கலைகள்வேறகற்றிச்
சிரமுதற்புலர்துகில்கொடுதிகழ்வுறப்புலர்த்தி. (ச)

புலர்ந்ததூசிரண்டரைமிசைப்பொலிதரப்புனைந்து
நிலந்தயங்குமாறொளிவரநெருங்கிருளிரிய
வலர்ந்தசெங்கதிராதவனணைவதன்முன்னர்க்
கலந்துநித்தியமெய்த்தவக்கடன்புரிகாலை. (ரு)

சிற்பரம்பரன்விளம்பியசிவாகமப்படியி
னற்பொடுந்திகழ்கோமயமாசறக்கொணர்ந்து
தற்பரன்றிருமனுக்கொடுசொல்புறவமைந்த
கற்பமுன்றெனக்கழறியவிபூதிகளாதல். (சு)

அம்பினுட்டிகழ்சாம்பரையங்கையாற்பிசைந்து
வடித்துமற்றொருதசும்புழிவடிவுறப்பெய்து
தொடுத்திசைத்தபஞ்சப்பிரமத்தொடர்மனுக்க
ளெடுத்திசைத்தமைத்திலங்கியவெண்பொடியாதல். (௭)

வேறு.

இந்திரனயன்மாலேனையர்யாருமேத்தகல்லெரியழலோம்பு, மந்தணர்விரசாமந்திரத்தமைத்தவங்கிகுண்டத்துநீறுதல், சந்திரசேகரன்றன்றிருமடைப்பள்ளிதனில் விளைதிருவெண்ணீறுதல், விச்சைசேராதிபுரத்திடைப்பிரமகுண்டத்துவிளைந்தநீறுதல். (௮)

பூசுரர்மனையிலங்கிகுண்டத்திற்பூத்தநீறுகுதன்ஞான,தேசிகர்மடத்துவேள்விகளாற்றுஞ்சிறந்தகுண்டத்துநீறுதல், பாசவல்வினைவேர்பறித்துநாதாந்தப்படரொளிப்பரப்பினையகத்துளாசறநோக்குஞ்சைவசித்தாந்தரவரிடத்திருந்தநீறுதல். (௯)

எவ்வணமேனுஞ்சிவபரம்பரமனெழில்வளர்சந்நிதிவிளங்கு, மவ்வணவெண்ணீறுத்தமோத்தமமதாதல்பூதலத்தனுவளவு, கைவணவிரற்கோடெடுப்புழித்தவறிவீழினுங்கதழெரிநரகி, னுய்வணமின்றியருந்தவரேனுமுளைக்குவருண்மையென்றுணர்ந்து. (௧0)

மனனிடையச்சமுறத்திடப்பேணிமதிப்புடனெடுத்துமாமறையோர், புனைகவுத்தூளமரையருந்தியின் மேற்புனைகதொல்வணிகர்பட்டம்போ, னினைவுறவணிகட்பின்னவர்மூன்றங்குலிவரநீறணிந்திடுக, வினையவென்றரனாகமம்பகர்வழியினண்ணிவெண்ணீறுமெய்பூசி. (௧௧)

செய்வனகடன்களாற்றுதன்முற்றிச்சிரஞ்செவிகளனுரந்திணிதோட், கைவரவமலன்விழிமணிகலினக்கடவுடன்றியானசிந்தையரா, யுய்வகைகோயிற்கேகுழிசிரோசாதியவுதயவெல்லுமிழும், வெய்யிலாற்சுசியென்றுணர்ந்துதாடப்பிமிதிப்பினுமுளங்கவலாமே. (௧௨)

அணுகிவான்குடுமிக்கோபுரமசலலிங்க மென்றலர்ச்சூடி
றைஞ்சி, நணுகியட்டாங்கமைந்தலான்முக்காணுனிலந்தோய்
வுறத்தாழ்ந்து, மணிகிளர்வாயிற்படிமிதியாமைமருவியாங்கத்
திறன்வணங்கித், திணிமதிலசலலிங்கநீடுவசமாந்திருமண்டப
ஞ்சிறந்த. (கச)

சிகரநீடுலேலிங்கமங்கணன்றேய்தீர்த்தநிர்மாலியமுதல
பகர்பசுவிடபம்பூசுரர்குரவர்படர்த்வமுனிவரர்முதலோர்
புகரறுநீழலடிமிதியாமேபொருவில்சேதிமவகம்படிமை [து.
மகளிரைப் பரிசாரகரையீன்றெடுத்தமாதர்தந்தையரெனமதித்
அடையிலைபருகன்மயிர்வகுந்திடுதலரிவையருடன்களித்
தாட,லுடைநெகிழ்த்திடுதலுடுத்தலுட்கவரவுடலின்மாசுகுத்தி
டலூரிஞ்சல், குடைதனக்கிடுதறிலநெய்தேய்த்திடுதல்குழீஇப்
பிணங்கிடல்சரிந்திடல்கண்,படைகொளலுகிர்சூழ்ந்திடலிவை
முதலபற்பலகுற்றமும்பாற்றி. (கரு)

புன்முதலியபுன்மலாதியகிடப்பினெடுத்தவைபுறனிடை
ப்போக்கித்,தன்மையினலகிட்டாசறமெழுக்குத்தழைதறப்பன்
மறைதெளியா, வன்மொழியினரைப்படிற்றொழுக்கினரைக்கா
ண்பினுமுகங்கவிழ்ந்தகன்று, நன்மைநான்மறையாகமநவிலொ
ழுங்கினவையுளயாவையுநீக்கி. (கசு)

ஒன்றிரண்டளவேவலஞ்செயிற்றீதென்றுணர்ந்துமூன்று
தியவியன்ற, நன்றுறக்கோயில்வலன்வரின்முதுசூனுரியோதி
யின்மிசைத்தாலந், துன்றியதயிலஞ்சுமந்துமண்மேற்போம்ப
டியடிமேலடிதோயச், சென்றுசூழ்வலம்வந்திறைதிருமுன்றி
ன்முன்புபோய்ச்சென்னிதாழ்ந்தெழுந்தே. (கஎ)

அந்துகிலொதுக்கியொருங்கியுள்ளச்சமரும்பிடவெகுளி
யேயாதி, வந்தமாகுற்றங்காண்டமைபகர்ந்துவடிவுடைநாயகியு
டன்கா, ருந்துமாமிடறன்சந்நிதானத்தி னெதிருறுதொருபு
டைசார்ந்து, முந்துறவிரைஞ்சிலெத்துணையேனுமியல்பொரு
ண்முன்னரினமைத்தே. (கஅ)

அழுப்பதொன்றிலதேலாலயமனுகியகங்குழைர்தென்புநெக் குருகிச், சிமிழ்ப்புறுபாசத்தொடாபிணையொருவிச்சிலிர்ப்புறம யிருடல்விதிர்ப்ப, விமைப்புறமனுதியொருங்குறநோக்கிபிருக ண்ணீரருவியினொழுக்கித், தமக்கெனவருமோர்செயலுமற்றங் ஙன்பரவகூச்சலதியிற்றாழ்ந்தே. (௧௯)

குழறிவாய்குடந்தம்பட்டடிக்கடிகூத்தாடியும்விம்மிதம் பெருகி, விழைபழம்பொருளேபொருள்விளைவியோமவியாபிம ந்திரவுருவாய, கழிபொருந்தாலரூக்குமபஞ்சாக்கரவகண்டிதப சுபதியே, யழக்கமைஞானானந்தநாடகனேயருவுருவாயவற்புத னே. (௨0)

அணுவினுககணுவேயணுவினுக்குணர்வேயணுக்களிற்கல ந்தகன்றருளி, னுணுகியபொருளேநுணுகுணர்வுடையோர் நூல்களிற்கிடந்தொளிர்பயனே,நணுகுதற்கரியவெளியினுளொ ளியேஞாலகீர்தீவளிவெளியா, யெனுமவையாகிநிறைவியாபக மாயிலங்கியபசுபதீச்சுரனே. (௨௧)

எனத்துதிபலவுமெடுத்தெடுத்தோதியேத்தியஞ்சலித்திரு வினைகண், மனத்துதியாமைவணங்கிவெண்ணீறுவழங்கிடச் வாங்கிமால்விடையோன், முனர்த்தறியாமையொருழிவைகிமு றைதரித்திறைபடிக்கமலந், தினைத்துணைபிரியினழுங்கிமுன்பி ரியாச்செங்கரமுகிழ்ப்பொடுபோழ்ந்து. (௨௨)

தாதைதாடடிந்ததண்டியைப்போற்றிச்சந்நிதிவிளங்குமு ன்றிலின்வாய்ப், பூதலத்துடலம்படவிழுந்தெழுந்துபுடையிரு ந்திறைவிழிமணியி, லாதரம்பெருகிமுகன்முகனர்தமர்தமாயி டைமணியமைத்த, வேதமினூரைம்பானிருபான்மேலெட்டு நானகேழிவையேற்றி. (௨௩)

காயகம்வேறுதனித்தனியமைத்தநறுந்தொடையவைகளி னொன்றை, மேயமென்கையிற்சேர்தநியாங்கொருவர்விழிபடிற செபபலன்குன்றித், தேயுமென்றுணர்ந்துமானதமந்தமுறை யெனச்செப்பியவாற்ற, லாயவங்குலிமூன்றடைவினங்குட்ட மமைத்துமூலங்கொடுசெபித்தே. (௨௪)

சீர்மலிமணியிற்குயிற்றபொற்கோயில்வடைப்பிரதெக்ஷி ணம்புரிந்து, பார்மிசைவீழ்நட்படாமையிவ்வாறுபரவினோர்ப னிவரைபயந்த, வார்புனைதரளவடங்கிடந்திமைக்கும்வளரிள வனமுலைவனிதை, யோர்புடைதரித்தோனிருபதாம்புயத்திலு லப்பறவந்துறைகுவரால். (உரு)

ஆரன்ஞாயிறுசங்கவன்றிகழ்வாரமட்டமிதுவாதசியோணம் பூரணைமதியெற் புகுந்தினமதற்கு முதற்றினம்புகல்வெதிபாத ஞ், சேருநாண்மாதமுதற்றினமாதித்திதிக்கதிர்தோற்றியகா லைச், சார்வறப்பதினெண்கடிகையாதியநாட்டள்ளிறால்சாற் றியவாற்றால். (உசு)

புலரியினெழுந்துபுதியநீர்படிந்துபுண்ணியவெண்பொடி சாற்றி, மலிசெழுமலர்பெய்கூடையோர்கரனும்வருபுன்றநசு ம்பொருகரனும், பலனுறவேந்திப்பதிதர்சண்டாளர்பரமனைப் பழித்தவர்க்கண்டா, லலரியைநோக்கியைந்தெழுத்துன்னிய ணிவெண்ணீறொளிநுதலணிந்தே. (உஎ)

நந்தனவனத்திலணுகிமென்கமலநான்முகனரணனமல, னுந்துமாதவர்மாமுனிவரர்வலாரியும்பருமொருங்குவீற்றிருக் கும், பைந்துழாயடியினறும்புனல்பெய்துபரவிமுக்கால்வலஞ் சூழ்ந்து, முந்துறத்தமியேன்மலர்கொயுங்காறுமகலுவீரெனக் கரமுகிழ்த்தே. (உஅ)

தேசவிர்கொத்தின்றலைகளைக்கொய்யிற்செங்கண்மால்செ ழுமுடிகொய்யு, மாசறுபாவமொருபொழுதறினுந்நிரகனுரு மென்றறிந்து, பாசிலையொவ்வொன்றாய்வுறக்கொய்துபனிமல ர்நாட்கதிரிணைசேர், மாசறுமிலையோடவைமுறைகொய்துவாய் த்தபைங்கூடையிற்பெய்து. (உகூ)

அருமறைக்கிழவன்முதலியர்தமையீண்டெழுந்தருள்கவெ னவேண்டி, யிருகரமுகிழ்த்தாகமமுறையாவுங்கூவிளையெம்பி ரானுருவ, மருமலரிலைகாய்மாமரத்தொடவேரதன்மணமுதலிய வனைத்து, நிருமலற்குவப்பென்றறையுமென்றுன்னிவில்லுவகி ழன்மிதியாமே. (௩௦)

` ஒருபுடைமருவியிறைஞ்சியொன்றிரண்டுநான்குறுகிளைக ளையொருவிச், செருமுமுள்ளிரிற்பல்பொறிப்புலியாவர்இண்ப ணைமுறிந்திடிணிரய, மருவுவரிலையிற்பழுதுளவேனும்பழுதல நாகரவண்டீண், கிருமியின்கூடெபழுதெனவகற்றியிலையைமுக்கி ளையொடுங்கொய்து. (கூக)

பெய்துகூடையினுட்சினகரம் போகிப்பிறங்கவோர்சாரி டைவைகி, யையுறலொழியமீளவுமாய்ந்தாய்ந்தரியதண்புனலி டையலசி,மையறுமுளத்தராகிவெற்பீன்றவடிவுடைநாயகியெ னவாழ், தையலோர்பாகற்களித்துளோர்சாருபத் தினைச்சார் குவர்திண்ணம். (கூஉ)

அன்புசேர்கன்னிமதிவருபூரட்டாதிபூரணையில்லைவகறைய லின்புசேராதிநாயகன்முன்னரெய்துமாம்பிரவதிகுடைந்து [த துன்பறுகெந்தத்துவாரவாரணமாமனுக்கொடுகோமயத்தோய்ந் நன்புனறலையிற்றெளித்துமீளவுமாம்பிரவதிநதியினுட்படிந்து.

வடிவுடைமங்கைபங்கனைத்தொன்னூல்வழியின்முக்கால் வலஞ்சூழ்ந்து, படிமிசைவீழ்ந்துவணங்கிநின்றிறைஞ்சிப்பரவி நாடகம்பயில்சரணக், கடிமலர்த்தேனையிதயவண்டுண்டுகளிப்பு டனுறைதரவிடுத்த, முடிவிலோர்பிரதெக்கணம்புரிகுவர்தாமு த்திவீடடைகுவருண்மை. (ரு.ச)

தொழுகுலத்தவனைக்கோவினைப்பரியைத்தோகையைச் சூன்முதியவளைப், பழிபடக்குரைத்தபாதகமவைமாபாதகம நிந்தநியாமே, யிழிவுறவிழைத்தபாதகமுப்பாதகமிவைகோடி யுற்பவத்தி, லொழிவறச்செயினும்பசுபதீச்சுரன்றாளுகளதாம ரைகளையுன்னி. (கூரு)

அந்தணான்றதனிலடியனேனன்றொல்லைவினைகளையறுத்தி டுகென்று, முந்துறமலர்தூய்வணங்கினக்கணத்தின்முடிந்திடு முடிந்திடுமென்று, வெந்தைதொல்வேதவியாதமாமுனிவனெ மக்கருளியதுமக்குரைத்தாம், பந்தவாணவந்தீர்முனிவிர்காளந் தோபரவிலீர்பசுபதிப்பொருளை. (கூகூ)

பருவமொன்றலது திங்களொன்றேனும்பக்கமொன்றேனுந் துஞான்றேனு, மொருதினமேனும்வனமலிநறும்பூப்பத்திரமெனுமிவையொன்று, னிருமலற்போற்றிநறுங்கனிமூலமுதலனைவேத்தியமுதவி, மருவுசெஞ்சாலிவிதைகையிற்கொண்டுவயங்கிடவருக்கியம்வழங்கின். (௩௭)

தமக்கெனவுதவும்புதல்வரைப்பெறுவர்தனையருளவர்பெருந்திருவுஞ், சுமக்கருந்தனமும்படைப்பர்தெவ்வேந்தர்வலியினற்றேற்றபாரிருப, ரிமைப்பினுனிலமும்புரப்பர்வெம்பிணியர்பிணிகடீர்ந்தினிதுவீற்றிருப்ப, ரமைப்புநல்குரவர்வறுமைதீர்ந்தவனியளித்திடுமரையராகுவரால். (௩௮)

வஞ்சுளேசற்குப்பாயசந்தூயவமுதெனவாய்ப்புடனளித்து, விஞ்சியபசுவினிழுதுவினுதல்விளங்குமெட்டயிலமாகுதல்வார்த், தஞ்சிறைநூலினிறைதிருமுன்னரணிவிளக்கேற்றியஞ்சலித்தோ, ரெஞ்சலின்முத்தியடைகுவருண்மையென்றருளினனெமதாசான். (௩௯)

கமலமெல்லிழையாற்கபிலைநெய்பெய்துகடிமலர்ப்பூம்பொழிற்கருவூரமலர்முன்னரிநேர்திருவிளக்கேற்றுமவர்கள்சங்காரமுள்ளளவும், விமலருறைநையுஞ்சிவபுரிமேவிமீண்டுபாரிடைப்பிறவாமே, தமலமுமொருவிச்சிவனருண்ஞானந்தழைப்புறமுத்தராகுவரால். (௪௦)

ஐப்பசிமேடமதிமுதற்றினஞ்சங்கிராந்தியின்மகம்வெதீபாதம், வைப்புறுமத்தோதயமகாவுதயமதிகதிர்மண்டலம்புகுநான், செப்பிவையொன்றிலெவகையமிர்தந்திகழுமைவகையகவ்வியத்தோ, டொப்பின்மாவிளதுசம்பீரமென்கனிச்சாறுகுசுத்தோதகமுதலா. (௪௧)

கருணையங்கடலுக்கிவையபிடேகமாட்டினோர்கவலுறுசிறைதீர், திருள்கெடவிமைக்கும்பருதிவானவன்சூழ்ந்தெண்டிசைமுகங்களுங்குளிர்ப்ப, வொருதனிக்கவிகைநிழற்றிநீராடையுலகளித்தும்பரேத்தெடுப்பத், தருநிழலரசுபொலிவுறத்திருத்திச்சசிமுலைப்போகமேதுய்ப்பார். (௪௨)

சித்திரைத்திங்களடுத்தபூரணையிற்றிலநறுந்தைலமாமலக வித்தகம்வெண்மாவரிசிநற்காப்புவெண்டயிர்பானவநீதம்,வைத் திருக்கியநெய்கௌவியமைந்துவகையமுதடைபொதி கன்ன ன், மொய்த்தபால்சுத்தோதகங்குளிரிளநீர்முதலியமுன்னர்நூ ல்வழியால். (சங)

வேதமந்திரங்கொண்டிறைவனுக்காட்டிவிரைகமழ்சந்த னத்தேய்வை, பாதநீள்வேணிமுழுவதுஞ்சாத்திப்பனிமலரில ஞ்சிசண்பகத்தின், முதிணர்கரவீரத்துணர்மணமூர்தடங்கொ ணீலோற்பலமுகிழ்த்த, போதிவையலங்கலாயலங்கரித்தோர்பு ராரிபொற்பதமலர்புகுவார். (சச)

ஆரமுலவபுரையுமவிர்சடைப்பெருமானுநிலைநாயகன்முன் னர்க், காரகிற்றுகளுஞ்சந்தனத்துகளுங்கலந்தகுங்குலுக்குமஞ் சாநெய்,யேருறுதூபங்கமழ்தரப்பணிதோர்யாவராயினுஞ்சி வபுரியிற், சேருவரொருநூறுயிரமங்கோடிதிகழ்தருகற்பகாலந் தான். (சரு)

பன்னியாம்பகர்வதென்னினிமுனிவீர்பசுபதிப்பரஞ்சுட ர்முன்னர், மின்னிவர்கபிலைநெய்கொடுமூன்றுவிளக்கிடும்பலத் தினைவிளம்ப, முன்னிநான்முகவனரணமரர்முதல்வர்வாய் திறந்திடாரிமயக், கன்னியோர்பாகமன்னுபூங்கயிலைக்கடவுள் வாய்மலர்ந்திடவேண்டும். (சசு)

மார்கழியடுத்தபூரணைத்திருவாதிரைதனில்வெள்ளிடிமலி நெய், சார்வுறுகுளத்தோடட்டவைசம்பாத்தண்டுலஞ்சருக்க ரைநறுநெய், சீர்கொளச்சமைத்தவோதனஞ்சிவனுக்களித்தவர் தேவர்வாழ்வருட, மோரறுபதினுபிரஞ்சிவலோகத்துறைந்தி னிதுறைகுவருண்மை. (சஎ)

ஒருமதிபக்கமொன்றுதான்றிவசமொன்றிரண்டொன்று தானமலன், குருமணிக்கோயிற்றிருவலகிட்டுக்கோமயங்கொடு மெழுக்கிட்டோர், ரருளுடனொருவற்கொடுபுரிவித்தோரவிர்கி லாக்கதிருமிழ்கடவுட், பருதியங்கடவுளிவருளகாறும்பரசிவ னுலகில்வீற்றிருப்பார். (சஅ)

நாடிநாடோறும்புரிதலின்றேனுநவிலுமேழ்தினத்தொன்றொரு ஞான்று, தேடிமுன்னிருவரலம்வரவுருவிச்செழுந்தழற்பிழம் பெனநின்றோ, னீடியசிகரத்தமனியக்கோயினியமமாச்சூழ்வல ன்வந்தோர், கோடியுற்பவத்திலிழைத்தவெம்பாவமக்கணந்த னிற்குலைந்தோடும். (௪௯)

சோதியாயொளிருமிலிங்கமோரைந்துதனித்தனிசூழ்வல ன்புரிந்து, பேதியாதெல்லாவிலிங்கமுமொன்றாயொருபிரதக் கணம்புரியின், மேதினிவலன்சூழ்பலத்தினையடைவர்கடனி றுத்திடவிதியிலர்பா, லோதியபாவமின்னணம்புரியிலொழிக் கிடுமுண்மையென்றுணர்வீர். (௫௦)

துகிற்கொடிகுடைபொற்றூசுகோசிகம்வெண்டுகிறுவரா டைதூபஞ்சீர், மிகுத்ததீபம்பாத்திரங்குடங்கலசமெரிமணித் தளிகைநீள்விளக்கு, முகிழ்த்தகண்ணாடிகெண்டிகைசெம்புவட் டகைபடிக்கமொய்மலர்க, டொகுத்திடுதட்டுவிசிறிசாமரைவா கனஞ்சுவல்கொடிபடர்முரசு. (௫௧)

மண்டபஞ்சிகரங்கோபுரம்புரிசைமணிமுடித்தேர்முதலா ய, வெண்கலஞ்சுற்பம்வெள்ளிபொன்னிவையின்மிளிர்வரவிய ற்றுவித்தளித்தோர், வண்கபிலையின்பாற்பசுவிடைவிடுத்தோர் வடிவுமைமகிணன்முன்றிலின்வாய்ப், பண்கனிந்தொழுகுமொ ழிநடநவிலும்பாவையர்தமைக்கொணர்ந்தளித்தோர். (௫௨)

நிறைசுடர்கவின்நறுமணியிமைத்தபூணணியாதிநீண்மௌ லி, யிறைதிருவுருவமெழில்பெறச்சாத்தியேத்தினோர்பூத்திகழ் தோட்ட, நறைகமழ்நீலோற்பலமலர்கமலநறுமலரோடைபூஞ் சோலை, சிறைபுனற்பழனமுதலியபலவுமமலனுக்கெனத்திகழ் வித்தோர். (௫௩)

சங்குபங்கயநீணிதிபொழியளகைத்தலைமைபூண்டடைந்தரு நீழற், புங்கவனரசுதிருத்திசான்முகவன்புரமடைந்தவன்றொழி லாற்றிச், செங்கண்மால்பதத்திலிருந்துலகளித்துச்செழித்தபி ன்கொழித்தெழிகருணை, யங்கணனுலகையடைந்துசாமீபம்பரி த்துருவெடுத்தடிசேர்வார். (௫௪)

ஒருவன்யாதேனுமனுவளவாதிபுரந்திகழமலனுக்குதவி, னி
ருதயத்தேதுவிலைழுந்தனனதுவந்தெய்திநீடிருவொடும்பொலிவ
ன், மருவுருத்திரன்பேர்வயுங்கபிடேகம்வடிவுடைவாமனுக்கா
ட்டிற், கருணைசேர்நாட்டமூன்றுடையத்தக்கடவுடன்பதத்தி
ல்வீற்றிருப்பார். (௫௫)

அருமறைமுனிவீரின்னமொன்றுரைக்கேமந்தணமதுபி
ளிரசியம், வருமதிதனிலாதிரைத்தினத்திரவுவள்ளலைமூலமந்
திரங்கொண், டொருமையினபிடேகத்தலங்காரவுமைதனக்கி
திருகியதலையினசிலநடமிடுவன
குருதிகளலையெறிகுரைகடல்பொருவன. (௩௫)

எருவைகளொருசிறைதிரிவனவிரிவன
மருவியகழுதுகண்மகிழ்வனபுகழ்வன
கருகியகொடிபலகளனிடையிடைவன
வெருவியநரிகளும்விரையுறவருவன. (௩௬)

வேறு.

இருகடற்றுனைவெள்ளமின்னணமிகலுமேல்லைப்
பொருகரிவயமாவெய்யபோர்த்தொழில்வயவர்பொன்ற
வெரிநதுகொடுத்துச்சாய்ந்துவிறலிழந்தரணும்விட்டு
மருவினனதிகன்யாருமருவருஞ்சுரத்தின்மன்னோ. (௩௭)

போய்வனத்துறைதலும்போரமைச்சரப்புரிசைமூதூர்
தீமடுத்தரணமூன்றுளெழச்சினத்திடித்துவெற்றிக்
காய்சினக்களிறுமாவுங்காசுநீணிதியுங்கொவ்வை
வாய்மணிமுறுவன்மங்கைமாரையுங்கவர்ந்துகொண்டு. (௩௮)

செங்களத்தடையார்ச்செற்றுத்திருகுசெந்தலையினீட்ட
மங்கெழுகுவியலெல்லாமளவிலபொதியினேற்றித்
திங்கள்கண்படுக்குஞ்சோலைத்திகழ்கருவூரிஞரின்
கொங்கலர்தெரியலார்முன்கொணர்ந்தனித்திறைஞ்சினுரால்.

வேறு.

இறைஞ்சிநிற்றலுமிகலடலரசரைமுருக்கி
மறஞ்செய்வீரர்கடலைசெறிபொதியின்வாய்விடுத்தாங்
கறஞ்செய்கோரியர்திருமுனர்க்குவிதரவளிப்பப்
புறஞ்செய்யாதவைநோக்கினர்நோக்குமப்போதின். (௪௦)

வேறு.

தருசென்னியவையிளெருசடைத்தலைகாண்டலுமொழிந்தோர்
வருசென்னியமலரடியவர்சென்னியெனமாழ்கி
யொருசென்னிமரபுநலந்தலையெய்ப்பவுடற்றினன்போர்
பொருசென்னியரிலெனில்யார்புகழ்புனைந்தார்பழிபூணை. (சுக)

ஒன்றுரைத்தெறலரசர்க்குலகவழக்கெனவுணர்வற்
றிந்நாளத்திறனுற்றியிமயவரையிகல்வருங்
கைகாகவுரியரடியவராவிகடிந்துகளத்
தென்றுவிதரித்திருந்தேனெனவுள்ளம்பதைபதைப்பார். ()

விண்கணீர்சொரிதரல்போல்வேணிமுடிகாண்டோறுந்
தங்கணீர்சொரிவர்கரமுகிழ்ப்பர்கவலுவரேழு
மண்கொணீருவரியெதிர்வரினுமுளமலைவில்லா
வெண்கொணீர்மையராய்நின்றினைந்திதயத்திதுநினைந்தார். ()

மடைத்தலைவாளைகள்பாயும்வயற்கருவூர்வருமரன்முன்
கடைத்தலைவெவ்வழற்சிகையகனன்மூழ்கினுலொழிய
விடைத்தலைவரடித்தொண்டிவிரும்பியவன்புடையவர்தஞ்
சடைத்தலையையறுத்தபழிதவிருமோதவிராதே. (சச)

எனநுதலினுதலியவாறியன்மதிநூற்கடறினைக்கு
மனைவியரைக்கூஉயடியர்முடியறுத்தவரும்பழியைக்
கனலிடையென்னுடன்மறுத்துக்கழுவுகின்றேன்கவலாதென்
றனையனுக்குமுடிசூட்டித்தரணியளிப்பீரென்றார். (சரு)

என்றவாசகங்கேளாவியலமைச்சரெதிரிறைஞ்சி
நின்றுநேரியர்க்கிறையேநீதுணிந்ததுணிபந்தோ
சென்றகாலத்தரசரிழைத்தனரோதிருஞாலம்
பொன்றிடாதோமனுநூற்புகன்றவாபுரிகென்றார். (சசு)

அவ்வுரையைமனக்கொள்ளாரமைச்சர்களறிவுபிறழ்ந்
திவ்வுரைபேசத்தகுமோவெழுதருதொன்மறைவேதச்
செவ்வுரையரடியவரைச்செகுத்தபழிதீருமதற்
கொவ்வுரையோதாமையிஃதுரைக்குமோவொழிதிரென்று. ()

துணைடமதிமிலைச்சுமுடித்தோன்றறிருமுனைர்த்தோண்டக்
குண்டமதிற்சிகைவரச்செங்கொழுங்கனலைவளர்ப்பித்து
வெண்டிருநீற்ருெளிவழியமேனிமுழுவதும்பூசித்
தெண்டிரைநீர்மருங்குடுத்ததிசையெட்டுடீபுகழெட்ட. (௪௯)

துணிசடிலமுடியைநறுந்தூசுகொடுபொதிந்துசெழு
மணிதருபொற்பரிகலத்திலமைத்தததனைமௌலியின்மே
லணிபெறவைத்தாங்கிலையெம்மடிகளைச்சூழ்வலன்கொண்டு
தணிவிலெழுகிதாவின்றபனவெரியினுட்குளித்தார். (௫௯)

சிகையெழுசெந்தழன்மூழ்கித்தேவரலர்மாரிபெயத்
தகைபெறுமந்திரமுழவந்தயங்குமொலிமுழங்கியெழப்
பகையரணமெரியநகும்பசுபதிநாயகன்பாத
முகையவிழாயிரந்தோட்டுமுளரிமலர்கிழலடைந்தார். (௫0)

வேறு.

புகழ்வளர்பொன்னித்துறையினருறையூர்ப்புரவலர்புலிக்கொடியுயர்த்தி, மகிழ்வரவுலகம்புரந்தரன்கமலமலரடியணைந்தவாறுரைத்தாந், திகழ்வரவினிமாதவம்புரிகருவூர்த்தேவரானிலைத்திருக்கோயிற், பகவனதடியிலணைந்தவாறதனைப்பகருதுநிகழ்வுறும்பரிவால். (௫௧)

புகழ்ச்சோழச்சருக்கம்முற்றுப்பெற்றது.

ஆகசருக்கம் உ0௫ திருவிருத்தம் கஎஉ.

கருவூர்த்தேவர்கதிபெறுசருக்கம்.

தாவுமெரிபுரைமேனியலதுகாணுக்கண்ணுந்தனதுகீர்த்தி
மூவர்முதலியர்பாடலலதுமொழியாவாயுமுருகுதூற்றும்
பூவலர்தூஉய்ச்சிவபூசையலதுபுரியாக்கரமும்புலவர்போற்றுஞ்
சேவடியல்லாதுவணங்காமுடியுந்தவனைச்சிந்தைசெய்வாம்.

வேறு.

ஒழிக்கும்புலத்தார்க்குறுதுணையாயுணர்வுமுழுதுமறைக்
குமிருள், கழிக்குந்தனிமெய்ஞ்ஞானத்தின்மணியாயக்கருப்ப
புரிதன்னிற், சுழிக்குந்திரைத்தீம்புனற்குடபாற்சுடருஞ்சுட
ரோற்குகுத்துநித்தங், கொழிக்குஞ்சதுமாயமறைக்கேள்விக்குல
த்திலுதித்தாரொருசித்தர். (௨)

தெள்ளந்தணர்தேர்மறைநெறியிற்றிவசந்தோறுஞ்சிறந்த
ருளின், வெள்ளங்கெழுமிக்குளிர்பருவமிளிர்ந்துமேலாங்கதி
விழைந்து, கள்ளந்தருபுன்சமயவிருளொழிந்துகலைகளுடன்க
விணி, யுள்ளங்களங்கந்தவிரமிர்தினொருவெண்டிங்களென்னவ
ளர்ந்தார். (௩)

உலகாயதமாதியசமயமுழுதுமொருங்கவுணர்ந்தோதி [வர்
யிலகாரணமாகமம்பொதுவுஞ்சிறப்புமெனத்தேர்ந்தெழுமுனி
பலகாலிறைஞ்சுஞ்சிவசமயம்பரித்தானிலையார்பதிமேவி
விலகாதுறையுமிருமுப்பான்வேதமறையோர்தமின்மிக்கார்.

காவல்புரிமாதவமீடக்காமிகாதியாகமநூன்
மேவியொளிர்வைதிகசைவம்விளங்கவேதநிலைவீறப்
பாவநனிதீர்திருவிசைப்பாவுலகம்பரவப்படர்விசும்பிற்
றேவர்முனிவர்தொழுங்கருவூர்த்தேவரெனப்பேர்நிறுவினார். ()

இயமநியமாதியுமனுமாதியுமேற்புறவேற்றியநோன்பின்
சயமுஞானபோதகர்யாண்டுளரென்றெடுத்ததபனுமுங்கா
மியமுமாயைவலியமலவிருளுமிரியவிளங்குசிவ
மயமுளுணருமுணர்வுதருங்குணனுமுளமாதவங்கெழுமி. (௬)

சித்தருளிற்பொய்ந்நெறியிற்றிரிந்துபிரிந்தூண்புரிந்துபணி
முத்தருழிப்போய்த்தவநதியின்மூழ்கிமுழைகானுழைவதிந்து
பித்தரடியர்ப்பாசநெறிபிறங்கிப்பிறந்தையரந்தையருன்
மத்தரிவர்தாமெனச்சிவத்தின்வய்த்தராய்நிலைத்துறைவார்.()

எண்ணருந்தரும்பல்சமயமும்போயினையத்தாரெனினுமிமையோ
ரெண்ணத்தினுங்காண்பரியவிமலன்சமயநிலைநிற்பார் [ரும்
வண்லைங்கரியகுழற்றிருவார்வளருங்களபமுலைப்போகந் [வார்
தண்ணம் புனலுஞ் சரோருகப்பாசடையும் பொருவத்தானுகர்

வேறு.

மும்மைமலத்தைமுருக்குகுணத்தின்முகிழ்த்தார்தஞ்
செம்மைதெரித்தகருத்தைமதிப்பொடுதேராதே
தம்மறிவுக்கொருமிப்பயனுற்றவர்தாந்தாமே
மம்மருளத்தினராயுரைவேறுமதிப்பாரால். (௯)

வேதநெறித்தலைவிட்டுவிறற்கருவூர்த்தேவ
னேதமிழைத்தனன்வாமநிலைத்தனனெனநீத்தே
யாதிமறைக்குலவாணர்பிதற்றினராயன்மாய
னோதருமுத்தருளத்தினையாவருரைப்பரே. (௧௦)

காமமடக்கொடியாரொடிருந்துகளித்தாலும்
வாமமுதற்பிறகுற்றமுறப்புவிவாழ்ந்தாலு
மாமையெனப்புலனைந்துமடக்கியகத்துள்ளே
தாமலமற்றறிவோடுதமைத்தெரிசிப்பாரே. (௧௧)

ஆரமணிக்குடைநீழலின்மேதினியாண்டாலும்
போருடையாருயிர்வவ்வுகொலைத்தொழில்பூண்டாலுந்
தாரியல்பூங்கமலாசனன்மாலிவர்தாங்காணு
நேரியனுண்பொருளோடுதிளைப்பதுநீங்காரே. (௧௨)

வெந்தழலேனுழிமுளிசினையிந்தனம்வேவாவே
யுந்தலரிக்கதிரோன்வரினீடிமமோடாவே
வந்துநிலாக்கதிர்வானெழிலாரிருண்மாயாவே
சிந்தைதெளிந்தவர்பால்வினையாவுந்தீராவே. (௧௩)

ஒன்றுமிவற்றினுணர்ந்திலைவேதமுணர்ந்தேயுங்
கன்றிவெகுண்டனர்கண்டனராங்கவர்கண்முன்னே
பின்றுவிஞேதவினைத்தொழிலாற்றுதுமென்றென்றே
பின்றவழுஞ்சடையானருளான்மழைபெய்வித்தார். (௧௪)

செங்கதிர்வெம்மைதணித்துநிழற்புவிசேர்வித்தா
ரங்கலரற்றுழிநன்புனலாற்றிலழைப்பித்தார்
சங்கரர்கோயிலடைத்தமணிக்கடைதானீங்கப்
பொங்குமிசைத்தமிழ்பாடினராடினர்பூசித்தார். (கடு)

ஆனிலையாரடியாரடிதாழ்வரருச்சிப்பார்
கானிலையாயகடிக்கணமோடுகளிப்பாரா
ஞானிலமுந்திரிவார்பிரிவார்குறணற்பூதம்
வானினெருங்குநிழற்குடைதாங்கவகுப்பாரால். (கசு)

வரைகளுநாலிருதிசைகளுமேலையவானும்
விரவுவரோரிமையளவினுண்மேதினிமீள்வார்நற்
பரசிவயோகினர்தமையுணர்பான்மையர்படிமீதி
லுரவியராமிவர்பெருமையையார்பிறிதோர்வாரே. (கஎ)

வீறுமுளப்பரிவார்சிலர்நன்னர்விளைத்தாலுஞ்
சீறுசினத்தினராய்ச்சிலரின்னறிழைத்தாலு
மீறிலருந்தவரின்பிதுதுன்பிதுவென்றெண்ணார்
பேறுபெறும்படியாருயிருக்கருள்பெய்வாரால். (கஅ)

வேறு.

உற்றநற்றவப்பெற்றியாரிவ்வாறெழுகுநாட்சிவசினகரங் கடற், சுற்றுமண்டலங்கண்டிறைஞ்சுவான்றுணிவுகொண்டரு ளியுமன்பரைப், பற்றிமுற்றுமான்பொருளையக்துறைப்பன்றி மால்வரையொன்றுகோயிலும், பெற்றகொங்கின்மீதுளதலன் களும்பீடுசேர்குடநாடும்போற்றியே. (கக)

விஞ்சுகன்னடந்துளுவமாகதம்விசாலைகோஜிகங்கோசலந் திக, மூஞ்சைவர்திசாளக்கிராமமாளுவங்கஞ்சேசியாரியமராட் டரு, விஞ்சிசூழ்குருக்கேத்திரம்மிலாடம்மயோத்தியேமாங்க தம்பொழின், மஞ்சுசேர்க்வுடதேசம்பல்லவம்மத்திமம்முதலு ற்றதேயமும். (உo)

கொடிமுழங்குகான்மிடைதடங்களுநீர்வறந்தவெம்பாலை யுந்திறற், கடிமுழக்குகான்யாறுங்கூர்பரற்கடறுங்கல்லணைக் குகைகளுந்தடித், திடிமுழங்கிவீழடவியுந்திரிந்திகல்விலங்கி னுடுறைவிலங்கெனும், படிமுழக்குகேசரிவிளங்குவெம்பழுவ மும்புனலொழுகுகுன்றமும். (உக)

சென்றுசென்றருந்தவமுனூற்றியுந்தேவராலயம்பூவர் தாவியுந், துன்றுமாமுனித்தொகையினெய் தியுந்தூயநன்னதித்துறைகளாடியுங், குன்றவில்லிகேதாரங்கங்கைசூழ்குலவுகாசிகாளத்திகாஞ்சியு, மின்றருந்திருவருணையும்பிறமேயகோயிலும்போயிறைஞ்சியே. (உஉ)

புலிபதஞ்சலிபுரிதலன்றிருப்பொருவின்மாதவம்புரிதலன்புனன், மலியுநாடதிற்பிறதலன்களும்மன்னிமீனவன்கன்னிநாடுறீஇப், பொலியுமாலவாய்ச்சேதுவும்முதற்புங்கவன்றலமெங்குமேத்திநீ, ரொலிதருந்திரைப்பொருனையந்துறையோதுருங்குருகூரைமேவினர். (உங)

வேறு.

அங்குறைபைந்துளபமுகிலடியார்பாற்கனவிடைச்சென்றிங்கடைந்தார்சிவயோகரெனப்பாகவதர்குழுமித்தங்களிலோர்ந்தெதிர்ந்தவரைத்தாழ்தலுமுண்மகிழ்ந்திவ்வூர்வெங்கண்ணுமலியுஞ்சுவர்க்கமேவுகவென்றருள்புரிந்து. (உச)

பனவர்திகழ்ப தியதனையொருவிவரைபகவெறிந்தசினவுவடிவேற்குழகன்செந்திலைவந்தணையாற்றிக்கனைகடற்றென்குமரிமரீஇக்கன்னிகைதீர்த்தங்குடைந்துசுனையயற்சசீந்திரமுந்தொழுதுபதிதொறுமிறைஞ்சி. (உரு)

வளம்படுதெண்கடலெனநீடொலிபடுதாம்பிரபன்னிசூழ்கரைகாதவமென்னத்தோன்றியபொற்சுடிகைமணியேழ்நிலைக்கோபுரங்காணுவிறைஞ்சியெம்பிரான்வைகிவாழ்திருநெல்வேலியொருகுரோசமெனவலன்கொண்டே. ()

அத்தலனுத்தரமெய்தியவாசிமுகநோக்கிமலர்க்கைத்தலனுச்சியின்முகிழ்ப்பக்கண்ணருவிசொரிந்துரணிற்றத்தியலைகொழித்தெறியத்தாழ்சடையார்சேவடியில்வைத்தமனத்தினராகிவருதியெனவிளித்துநின்றார். (உஎ)

பூங்கமழ்தண்டலைநெருங்கும்பொருவில்கருவூர்த்தேவர்பாங்கரினென்புருகநின்றுபரிவசராய்விளித்திடலுமாங்கணைந்தாரிலரெம்மையாளமலனடியார்பெருமையோங்குதிரைக்கடல்சூலவுலகமறிந்திடல்வேண்டி. (உஅ)

மருக்கமழ்கொன்றையன்விளிப்புவந்திலன்வந்தவேயாற்றுந்
திருக்கிளரந்தணர்முதல திருக்கூட்டஞ்செறிந்திலவாற்
சுருககமில்கேள்வியர்சுருங்கித்தொலைந்துவளன்கூன்பசுங்கா
யெருக்கெழுமீசனுமிலனிங்கெனச்சாபமிடுமேல்வை. (உக)

கழைத்தரளமணியிறைவர்கனவினடியவர்க்கெல்லா [னீர்
மழைத்தன னெய்தின னிலையென்றருந்தவத்தோன்சபித்தன
தழைத்திடவம்மின்களெனச்சாற்றியருள்பொழிகுழைபாய்
மழைக்கணுமையொடுங்காட்சிவழங்கினார்மழவிடைமேல். ()

வேறு.

விமபநேரிதழிபாகவிமலனேபோற்றிமேலை
யுமபனேபோற்றியண்டருறுதுயர்தணிக்குமெண்கை
யம்பரபோற்றியாடலங்கம்பையாற்றில்வைகு
நமபனேதிருநெல்வேலிநாதனேபோற்றிபோற்றி. (கக)

போற்றியென்றிசைப்பவண்ணல்புரிவரநல்கிவிண்மீ
தேறறினமேலிகளுமேல்வைபுரியுளார்யாருமென்னற்
றேறறியகனவுதம்மிற்றுகளறத்தெரிந்துவேதஞ்
சாறறியகருவூர்த்தேவர்தம்முழிச்சார்ந்துமொய்த்தார். (கஉ)

மொய்த்தவரெதிர்காலுச்சிமுகிழ்த்தகையினராய்நிற்ப
மெய்த்தவரன்றேநென்னற்கனவிடைவிமலர்சொற்ற
சித்தரன்றேவிம்மூதூர்திளைத்தமாதவர்தானன்றே
வித்தினமிறைவற்போற்றவருகவென்றிசைக்குமேல்வை. (கங)

அந்தரமுழவந்தேவரார்த்தெழப்பானுகம்ப
னந்தரவொலியுங்கேளாநடுக்குளத்தினராய்நாடி
யந்தரவணிந்தோர்சித்தரிடத்தெழுந்தருளிமீளச்
சுந்தரவிடையிற்போகின்றாரெனத்தொழுதுநின்றார். (கச)

தொழுதுநின்றரெல்லாருந்துணைவிளக்கெரிகட்பேழ்வாய்க்
கழுதுநின்றார்வெங்கானிற்குனிப்புவுற்கருதிநெஞ்ச
மிழுதுநின்றரவெய்யிற்குருகுமாறிரங்கிவிம்மி
யழுதுநின்றரைக்காணுவதிசயித்தேத்தினார்கள். (கரு)

ஏத்தநீள்முகன் மால்போற்றுமீசர்சீருறுமன்றத்துக்
கூத்தனுருடன்போமின்களெனத்திருக்கூட்டம்யாவுந்
தீர்த்தநீயறைந்தசாபந்தீர்த்தியென்றிரப்பச்சித்தர்
பூத்தருண்முறுவலோடும்புகன்றனரிந்தமாற்றம். (கசு)

செப்பருந்திருநெல்வேலிச்செல்வர்வீற்றிருப்பகோன்பி
ஞெப்பருமுனிவீர்நீவிரொருங்குறவிளங்கிவைக
விப்பதிக்கிடருமுண்டோவின்றியாமிசைத்தசாப
மப்பொழுதகன்றுபோயிற்றருளொடும்வாழ்மினென்றார்.(கஎ)

என்றவர்க்கருள்வழங்கியகன்றிருகுரோசமென்னச்
சென்றனர்குடபாலாங்கோர்திப்பியலிங்கங்காணு
நின்றெதிர்தழுவிக்கொள்ளக்குழைந்தநெடுவோனும்பர்
துன்றலர்பெய்தார்வேதந்துதித்தனமுனிவரார்த்தார். (கஅ)

இருக்குமற்றவ்வரைப்போற்றித்தணக்துமேற்கொருகுரோச
முரைக்கருந்தவத்தர்சந்தக்குறடுமொள்ளிணருங்கொடும்
வரைக்கதிர்மணியுமுந்திவருபுனற்பொருனைவாசத்
திரைக்கரநீட்டுந்தீரத்திருப்புடைமருதூர்சேர்ந்தார். (ககூ)

ஆனதொல்பதியிலாருமருச்சுனநீழன்மேவி
மோனமாமுனிவரோதமுதுமறைச்சுரும்பர்மூசு
ஞானவானந்தத்தீந்தேன்றுக்கமழ்நாறும்பூவே
யீனவல்வினைகடிர்க்குமிறைவனேயெனவிளித்தார். (உo)

வேறு.

படியின்மாதவத்தோர்சித்தனுர்விளிப்பப்பார்விசும்போடியு ங்காணு, நெடியமாலயனுமதிசயித்திரங்கிருமலனொருமதியிலை ச்சுஞ், சடிலநீண்மௌலிசாய்த்தநின்றேலவோலவென்றனரு ளஞ்சாயா, வடியவர்பரிவுமாண்டவரருளுமவர்களேயன்றியாரறிவார். (உக)

புனிற்றிளங்கன்றுவிளிப்புழித்தரியாதிரங்கிமுன்பொழிசுறுந்தீம்பாற், றனிப்பெருஞ்சுரபியனிக்குவானனுருத்தன்மை போற்றவளவாண்முறுவற், கனித்துவரித்ழிபங்கனுர்காட்சியுதவலுங்கண்கணீரருவி,பனித்துள்ம்புளித்துடல்விதிர்விதிர்த்துப்பரவசச்சலதியுட்படிந்தார். (உஉ)

ஆடினார்கரங்கள்கொட்டினாரழுதாரகங்குழைந்தார்புலப்ப
கையைச், சாடினார்தளர்ந்தார்தழுதழுதழுத்துச்சாற்றினார்போ
ற்றினார்தமைத்தாக், தேடினார்திகைத்தார்தியங்கினார்சிரித்தார்
தெரிசித்தார்திகழ்திருவிசைப்பாப், பாடினார்பேரானந்தவார
முதம்பருகினாருருகினார்பணிந்தார். (சங)

வேறு.

உமிழ்சுடர்மணியேபோற்றியுணர்வரும்பொருளேபோற்றி
திமிரமோகாஞ்சிதைத்ததினகரபோற்றிதெள்ளா
ரமுதமேபோற்றியாண்டவமலனேபோற்றிவெய்ய
தமியனேற்கிரங்கிமேனிசாய்ந்தநாயகனேபோற்றி. (சச)

நாயினேன்பாசமூறுநாதனேபோற்றிநெஞ்சங் [று
கோயில்கொண்டிருந்தாய் போற்றிகுணங்கலந் தென்னையென்
னாயுமாறுஞய்போற்றியத்தனுமாகியீன்ற
தாயுமாயளித்தாய்போற்றிசாய்ந்தநாயகனேபோற்றி. (சடு)

எங்கணுற்றுயென்றுள்ளமிருக்குநிற்பெருதவென்னை
யங்கையாமலகம்போல்வந்தாண்டவங்கணனேபோற்றி
பொங்கழலுருவபோற்றிபுடைமருதூரபோற்றி
சங்கவெண்குழையாய்போற்றிசாய்ந்தநாயகனேபோற்றி. ()

கடவுளேபோற்றியென்றுட்கனிந்துநெக்குருகுங்காலை
யடல்விடைக்காட்சிநல்கியடியிணைமுடிமேற்சேர்த்தி
யிடவியகருவூர்தன்னில்வருதியென்றிசைத்துமேலோன்
மடமயிலனமென்சாயலுமையொடுமறைந்தான்வானில். (சஎ)

குறைமதிமிலைந்தவேணிக்குமிழ்முத்தலைவேற்செங்கை
யிறையவர்மறையுங்காறுமறையவரிறைஞ்சியப்பாற்
கறையடிப்புழைக்கைநால்வாய்க்கலுழ்மதக்களிநல்யானை
முறையெனவிடங்கர்க்காய்ந்தமுராரிதனிருக்கைசார்ந்தார். ()

ஆண்டெழுந்தருளிவைகுமமலர்முன்றீசர்ப்போற்றி
நீண்டவனேடற்கொண்ணாநிமலனேயெனவிளிப்ப
மாண்டருமனத்தோய்வந்தாம்வழங்குதுமென்னைவேண்டிற்
றீண்டறைகெனத்தீந்தேறலிதுபொழுதருளுகென்றார். (சக)

புறங்கர்க்காவலாற்றும்பொங்கழற்சூலிதன்னை
யறநிலைபிறழாயோகிக்காய்பிழியளித்தியென்னப்
பிறைநுதற்கன்னிநல்கிப்பெயர்ந்தனளவள்கோட்டத்தி
னுறைசிலகருமயோகருற்றனர்சித்தர்தம்பால். (௫௰)

மற்றவரிறைஞ்சிநிற்பவம்மின்கணீவிர்செஞ்சே
லுற்றமந்திரத்துக்கேற்பக்கொணர்மினென்றுரைப்பமாடே
சுற்றினர்நேடிக்காணார்சூட்சியென்றுணர்ந்தியாரு
மிற்றைநாளிதுபோழ்தையகிடைத்திலதிசைந்ததென்றார். ()

என்றவர்கவலித்துட்கவேய்ந்துசிற்றிலைகடுற்று
நின்றபோதார்வன்னிதன்னைநீதருகென்றபோழ்தின்
மின்றருவானம்பூத்தமீனிலனிழிதலேய்ப்ப
வன்றளித்ததியார்மேலோர்கருத்தினையளவுகாண்பார். (௫௨)

நேடினோமென்றாரஞ்சியெஞ்சிநெஞ்சயர்ந்துமேனி
வாடிநீடுயிர்ப்பநோக்கிவாமிகாளிதனையாற்ற
நாடிநீர்முயலீரெங்ஙனன்னரிற்றிகழ்ந்துபொய்ம்மை
மூடினீர்மூடநீக்கிமுத்திசாதிப்பீரென்றார். (௫௩)

எச்சமயத்திலுற்றுமெத்தவமிழைப்பினுந்தா
னச்சமயங்களின்பதுன்பினையருத்துவிக்கும்
பொய்ச்சமயங்கணீத்துப்போதகர்க்காளாய்ச்சைவ
மெய்ச்சமயத்தினிற்றல்வீட்டின்பமிலைசதறிண்ணம். (௫௪)

பின்னலங்கனிந்தென்கானிற்பிறங்கலிற்றிரிந்தென்றேய
முன்னலம்வந்தெனீரின்மூழ்கியென்முளரிமேனின்
றென்னலங்கிளருந்தொன்மையிருக்குடனிருக்கும்வேதச்
சொன்னலங்கிடைத்துஞானச்சுகோதயந்திளைத்திடாரே. ()

மாதர்பூண்முலைமுயங்கிவாழிலென்வாய்மைகுன்றி
யேதமூர்பழிகளாற்றிலென்கலைவழுவினுலென்
சீதரன்முதலினோர்தாந்தேருதற்கரியதேவன்
பாதமாருயிருட்பார்க்கும்பான்மைகூர்மேன்மையோரே. ()

என்றிவைசிவயோகீசரிசைத்தலுங்கருமயோகர்
சென்றடிதாழ்ந்தியாங்களிழைத்ததீத்திறனியாவும்
பொன்றநீயளித்தியென்னப்போகின்றும்பொதியவெற்பின்
மன்றநீர்வருதிசென்றுவழங்கியோர்மருங்கிற்சார்ந்தார். (௫௭)

அங்கறிதுயில்கூர்மாலைவிளிப்பவந்திலன்மாலன்பர்
வெங்களியுளத்தராறுரென்றுளம்வெகுண்டியோகர்
செங்கணன்பூசைதீர்கவிலைபுலன்சிதைகவாண்டு
தங்கினர்மெலிகவென்னச்சபித்தொருபுலத்தைச்சார்ந்தார். ()

அற்றைநாடொடங்கியவ்வூர்வளந்தொலைந்தந்தணாளர்
சுற்றமும்பொன்றிமாயன்பூசையுந்துறந்ததென்றாற்
கற்றைவார்சடையெம்மண்ணல்கனைகழற்கமலபாதம்
பற்றினோர்பெருமையெம்மாற்பகர்ந்திடும்படிமைத்தாமோ. ()

பதிபலபரவிவானோர்பணிதிரிகூடவெற்பிற்
கதிதிகழ்குற்றாலத்தெங்கண்ணுதல்கமலத்தாளிற்
றுதிதருதிருவிசைப்பாச்சொற்றனரருவிதூங்கு
நதிவருபொதியமீதுநண்ணினார்நனுகுறுலார். (௬௦)

குடங்கையினடக்கினீரைக்குடித்துமிழ்கடத்திலோங்கு
மடங்கலைவணங்கிவேங்கைமதகரிதிரிதண்சார
லிடங்களினுறைவர்தம்மாட்டிருந்தடைந்தோரைவாழ்வித்
தடங்கியங்கமர்ந்தாரிப்பாலடுத்தவாறெடுத்துரைப்பாம். (௬௧)

வேறு.

தேவர்பிரான்புனைகங்கைசிவணியதீம்புனனாட்டின்
மேவருதொல்சீர்வாவிவிளங்குதஞ்சைமூதூரிற்
பூவலயம்பொறுத்தபுயப்புலிக்கொடிமேருவிற்பொறித்த
காவலனோர்குறிநிறுவக்கருதியுளந்தனைவலித்தான். (௬௨)

நேமிநெடுவரைகிவக்ககிறைமணிமாமதின்கோலிப்
பூமியினெண்டிசைகிலைத்தபொருப்பெனக்கோபுரநிறுத்திக்
கோமிளிர்பொற்கிரியெனப்பொற்கோயில்வகுத்தேமகிரி
யாமிதெனவேர்குவித்தாங்கமைத்தொருமாமணிச்சிகரம். (௬௩)

ஆயசூதுமாமறைதொல்லாகமநூலருளியவா
றேயவொளிர்சிவலிங்கமிழைத்துமற்றுவுடையாண்
மேயவிருநான்காதவிளம்புமருந்தவையொருங்கத்
தோயமதித்தாதிசைவர்க்கொடுதொகுமாறியற்றுவித்தான். ()

பாகுவரவினைத்தமருந்திளகியதுபற்றுமை
யேகுழிரோரியர்க்கிறைவன்யாதுகுறையெனக்கவலித்
தாகுதியாரழல்வேள்வியாற்றுவித்துமந்தணர்க்கும்
யோகுறுமாமுனிவருக்குமூட்டியரும்பொருளளித்தும். (சுரு)

பந்தியாதிளகமுனம்பருவரலுற்றுழையலைக்கூடி
யுந்துமாரணியமுன்கன்முழையுமுறுவோர்க்குறுதி
மூந்தியாமழைத்துமெனமொழிந்தவர்க்கொண்டணையுமெனச்
சந்தியாவருந்தவரைக்கொணர்ந்தார்கடணந்தோரே. (சுசு)

பொருந்தியனித்தரைநணியபோதகரைமாதவரைப்
பருந்திலேவேற்குரிசிலெதிர்பணிந்துகுறைதிருமென்றுன்
மருந்துமணிமந்திரங்கொண்டமைத்தனர்கைவாராமை
யருந்தவருஞ்சலித்திருந்தாராசனுமஞ்சலித்துநின்றுன். (சுஎ)

வேறு.

யாவருந்துணிவுற்றெவன்கொலியற்றுமாறெனுமேல்வையிற்
றேவரும்புகழ்மாதவன்கருவூர்வருஞ்சிவயோகிவந்
தோவறப்பரிவோடுநூற்றினலாதுறுதெனுமோசையான்
மேவருந்திருவீக்கெழுந்துவிசும்பின்மீளமறைந்ததே. (சுஅ)

மாகநாதமெழுந்தபோதனரஞ்சினர்வளவன்சிவ
யோகநாதனிருக்கையாண்டுளதோதுமாதவிரென்றலும்
போகநாதனுக்கரந்தொருபுடையம்படைகொண்டுநின்
றேகநாதனியம்புமன்பனையிக்கணத்திவணுய்க்குதும். (சுக)

எனநகைத்திடுமுனைவருந்திறலிறைவனுங்கவலுறமனங்
கனைகூறக்கருமேனிவீறியகாரியின்சிறுகாலிடைத்
துணைவினீர்வருகென்றுரோலைதுவக்கியேகவிடுப்பவே
யனையதச்சிறுவரைதனிற்பொதியாசலத்தையணைந்தரோ. ()

முன்னரிற்படர்காரிகாலின்முடங்கலைக்கையடங்கவே
நன்னரிற்றொழுதார்பிணிப்பைநெகிழ்த்துநன்கொடுநாடினார்
புன்னெறித்தமியேனையோர்பொருளாய்நினைந்தனரோவெனாத்
தன்னிகர்த்தவரோலையக்கணம்வந்துசார்ந்தனர்தஞ்சையே. ()

புத்துருக்கொடணைந்ததுந்தனிப்போகநாதசுவாமிதன்
சித்துருக்கொடெழுந்ததுங்கருவூரர்வந்துசெறிந்தது
மத்திறத்தினிகழ்ந்ததுஞ்சிலராலறிந்தடலரசனும்
பத்திகூரவெதிர்ந்துவந்தனையாற்றினன்பகர்கின்றனன். (௭௨)

அணுவுமேருவெனச்சிலம்புமொரணுவெனப்பரகாயமு
நணுகுநாயகநீயெனைப்பொருளாய்நடித்தனையென்னெனாத்
தணிவிலாவருளுடையையாலிதுதானியற்றினமென்றுநற்
புணியசித்தரினிலைபெறுஞ்சிவபோகநாதனுரைத்தனன். (௭௩)

அனையகாலையிலபயன்மீளவுமடியில்வீழ்வுறுமளவிலன்
னினைவறிந்திருள்கருமமாயையுநீத்தவன்றனைநேர்ந்துநந்
தனையனாயினுமெமர்களிற்றலையாயவன்சிவயோகிநீ
யுனைவிளித்ததுமிதினிமித்தமுனாற்றுவாய்குறியொண்மையின்.

அந்தவாய்மைமனக்கொளாவபயன்குயிற்றுபொனாலயஞ்
சிந்தையாதரமுற்றணைந்தனர்சென்றபோதவணின்றுளார்
முந்தையோர்தவசித்தர்மொய்த்துமுடிக்கொணாததைமுற்றுவா
ரிந்தவேதியராமிதற்புதமறிதுமென்றுடனெய்தினார். (௭௫)

மாமலைத்தலையதகமூலிமணிக்குழாமலிநெய்க்குடந்
தாமநாறியகுண்டமங்கிசுருக்கினோடுசுருபமுந்
தாமமுஞ்சிதருப்பைகுண்டிகைதண்டமண்டலவேதிகை
யோமமார்திரவியமுமாயிடையுளதெரிந்திளநகைசெய்தே. ()

பெருமைகூர்கருவூரராவுடையாள்பிறங்குமிலிங்கமென்
றிருமைகூரிடனெய்தியேயிவைவீந்துநாதமெனத்தெளிந்
தொருமைகூர்தருபாவகத்தினுள்வைத்துவாயுமிழ்தம்பலை
யருமைகூர்விடரூடுபெய்தனரதிசயித்தனருலகெலாம். (௭௭)

உம்பருந்துணர்மாரிபெய்தனரோடைவைத்தழலூடெழுஞ்
செம்பொனாயிரமாற்றெனப்புரை சென்றுபற்றியதுமிழுவாய்த்
தம்பலின்னணமேயெனிற்றனிமாமுதற்பொருளாய்விளங்
கெம்பிரானருளன்பர்தஞ்செயல்யாவரேயறிவார்களே. (௭௮)

வேறு.

மாசறுமுனிவர்வணங்கினர்மாதவரிதனைவியந்தன
ராசறுமறுதொழிலந்தணராரணமறைகளறைந்தனர்
தேசவிர்திசைதிசைவந்தவர்தேர்மணிமறுகுதிகழ்ந்தனர்
காசணிபணிகள்கந்துகில்காவலன்முறையில்வழங்கினன். (௭௯)

மங்கலமுழுதுமுழங்கினமங்கையர்நடனமுயன்றனர்
சங்கரனடியர்குவிந்தனர்தண்டமிழ்க்கவிஞர்திரண்டன
ரிங்கிதுபுதுமைபுரிந்தவரெங்குளரெனவெதிர்கொண்டன
ரங்கவரடியிலிறைஞ்சினரன்புடையுவகைமலிந்தனர். (௮௦)

நிருமலவசலவகண்டிதநிகழ்குணநிலையினிருந்தவர்
கருவருமசரசரந்தருகரபுரமுறைமறையந்தண
ரிருபதமௌலிபுனைந்தொளிரிரவிதொல்குலபதியன்புட
னருள்பெறுமொழிகள்புகன்றனரயலுளபதியிலகன்றனர். ()

யானைவணங்கியகாவையுமேனையவண்பதியாவையு
மானநறுந்துணராலுளமாரவிறைஞ்சினர்காவிரி
வானொலிகொண்டிருபாலுறமாயவர்கண்படைகூர்திரு
ஞானவரங்கமெனுநன்மறைநாடுதலந்தனைமேவினர். (௮௨)

அங்கவர்சென்றணைபோதுபொன்னம்புயமென்கொடிபோ
மங்கையெதிர்ந்திருபார்வைவழங்கிமயங்கினள்வேதிய [லொரு
ரிங்கிவரரங்கனைமானுமின்புறநன்கெழுமேனியர்
நங்கடவர்தெரியாதினிநண்புபுரிந்திடுவோமென. (௮௩)

வேறு.

அந்தணிரெவ்வூரிர்நுமரார்தொடர்பிங்கெழுந்தருளி
வந்ததெவனரங்கர்தமைவணங்குதுமென்றணைந்தீரோ
சிந்தைவிழைந்தனதமியேன்றெரியுமாறருண்மினெனப்
பைந்தொடிகையான்மலர்க்கைபற்றினளிற்கொடுபுக்காள். ()

புக்கபுனையிழைவழியிலொழுகுவார்போலொழுகி
நக்கமனத்தினராகிநறியமலரமளியின்மேற்
றொக்கனர்பூண்முலைப்போகந்துய்த்தனர்சட்குணந்திளைக்கத்
தக்கவொருசுகானுபவந்தணப்பில்லாத்தவமிக்கார். (௮௫)

தெரிவையொடுமிரண்டுகோட்செறியுமலரமளியின்கண்
மருவியிருந்தவர்மறைந்தார்வனிதைதுனிகனிபெருகி
வெருவினளாயிடைதேடிமெலிந்தனள்விம்மினளில்ல
மொருவிமணிமறுகுதொறுமுழிதராலுற்றுறையுள்வைகி. (௮௬)

பூங்கணைவில்வளையாழிபொருவிலறுமுகமுடற்கண்
டாங்கரந்தவேளோதாமோதரனோதனிவேற்கைக்
காங்கெயனோவமரர்பதிகாவலனோவேதியன்போ
லீங்கணுகியெனதுயிர்கொண்டிடையிருளிலகன்றோனே. ()

மாயமோகனவோதொல்வல்வினையின்மதிமயக்கோ
நேயமோடணைந்ததும்பின்னீத்ததுவும்பொய்யேயோ
காயமோதரிக்கிலேன்காண்பதுமற்றுளதோவென்
றாயமோகானலின்வெப்பாலயர்ந்தாளதுபோழ்தின். (௮௮)

கரந்தரவெண்டிரைகொழிக்குங்காவிரியாற்றிடைத்துயிலும்
பரந்தாமன்றிருமுன்றிற்படர்ந்தரங்கவெனவிளிப்பச்
சுரந்தான்கேட்புழித்தோன்றித்தொழுகுலத்தோயிதுபோழ்தி
னிரந்தாரவேண்டியதென்னிகழ்த்துதியென்றானடியோன்.

சீதரன்றிருமார்பத்திகழுமணிப்பூணா
ரீதரல்செய்குதியென்னாநிகழ்த்துரையஞ்செவிப்புகுமுன்
னாதரமுட்கொடுகொடுப்பவாங்கியலர்சுணங்கலர்பொற்
பூதரமாநில்சுமந்தபொலன்கொடிமாளிகைபுக்கார். (௯௦)

கண்டனளெங்குற்றீரிக்கணைபிருளினிடையெனவுட்
கொண்டவுவகையளானள்கூப்பியகோகனகமலர்
விண்டலரயிலிர்மணிப்பூண்விண்மணிவீசினரேந்தித்
தண்டரளநிலவரைதமிழுதிப்பித்தாடயக்க. (௯௧)

பஞ்சடிய நூபுரத்தாட்பணியாயகிதம்பமதிப்
பிஞ்சாய நுதற்கூந்தற்பிடியாயநடைமஞ்ஞை
யஞ்சாயலணங்கேயித்தினம்போல்வந்தடுத்தெனைநீ
நெஞ்சாயவருதுமெனநிகழ்த்தியெழுந்தருளினார். (கூஉ)

தென்பராய்த்துறைபடிந்துதிருவீங்கோய்மலைபோற்றி
யன்பராய்மாணிக்கவசலத்தையஞ்சலித்து
முன்பராய்த்திருக்கடம்பந்துறைமூழ்கிமுயன்றேத்திப்
பொன்பராய்த்தொழுந்திருமுக்கூடலையுந்தொழுதிறைஞ்சி. ()

ஆதிபுரந்தனிற்போகியலங்காரவதிவனிதை
பாதிபுரந்தருளருள்பசுபதிநாதன்பசும்பொற்
சோதிபுரந்தெறுமுறுவற்சுகோதயன்மாதவன்சுருதி
யோதிபுரந்தரன்போற்றுமொருவனிருதாள்வணங்கி. (கூச)

தீந்தமிழின்றிருவிசைப்பாத்திருவுள்ளமதுதுங்க
வாய்ந்தமிர்தமெனச்செவிகட்கருத்தியிருந்தனரிப்பால்
வாய்ந்தமுதாசனர்போற்றுமணிவண்ணன்றுயிலரங்க
மேய்ந்தமிர்தமொழியிடையூறிரித்தவாறியம்புவாம். (கூரு)

போர்புரிவேளிற்கலவிபுரிந்துபரிந்தருள்சுரந்து
பேர்குவர்வீழ்குவர்மம்மர்பெருக்குவார்பெயர்ப்பரா
லோர்சிசியிற்புதுமையொன்றேவொருகோடிவிதம்பயில்வார்
யார்கொலெனத்தேர்ந்தணங்குமிருந்தனள்வைகறைகாறும். ()

காயபுலத்தார்சிவபோகங்கவர்ந்தகருவூர்த்தேவர்
தேய்சிறுவெண்பிறைக்கோட்டுச்சிலைமலிவானுதற்களித்த
வாய்பசும்பொனணிஞெப்பணமைத்தசெழுஞ்சுடர்மணிபோற்
பாய்புரவிக்கொடிநெடுந்தேர்ப்பருதியுங்கீழ்பாலெழுந்தான். ()

புலரியெனப்பாகவதர்பொன்னிநதித்துறைபடிந்து
குலவுசினகரம்போகிக்குயிற்றுமணிக்கடைநீக்கிச்
சலசமலர்த்திருமுயங்குந்தடமார்பிற்கிடந்தபெருங்
கலனவையிற்பேராரங்காணுமேகவலுற்றார். (கூஅ)

குருமணிவான்குடுமிநெடுங்கோபுரவாயிலிற்குழுமிச்
செருமிநெருநலிற்கதவந்திளைத்தமணிக்காப்பிருப்பப்
பொருவருமுட்காவல்புறக்காவல்புரிவோர்போர்ப்ப
வொருவனணியிழைபோயதெவன்கொலெனவோருங்கால். ()

சித்தருதவியமணிப்பூண்டிகழுதயகிரியுதித்த
மொய்த்தகதிரவன்பொருவமுலைமுகட்டிற்கிடந்திமைப்பத்
தொத்தலர்மென்குழற்றெரிவைசுதைமாடத்திருந்துமுத்தக்
கொத்துநிரைமறுகணைந்தாள்கோகனகத்திருமகள்போல். ()

அணைந்தவணங்கின்னகலத்தவிர்மணிப்பூணணிகாணு
நிணங்கொள்வடிவேற்கண்ணாய்நினக்கிதியார்கொடுத்தன்றென்
றுணங்கவளைத்துறுதண்டமுஞற்றுவார்சிலர்கொடுபோய்ப்
பணங்கொளணையான்கோயிற்பாகவதர்பாலுய்த்தார். (௧௦௧)

உய்த்தலுமத்தலையுற்றோரொளிவளைநல்லாயுனது
கைத்தலத்திலிதுவருமாகழறுகெனநெருநல்லோர்
மெய்த்தவவேதியன்றமியேற்குதவிவியன்முலைப்போகந்
துய்த்தனனல்லிருளிலின்னுமணையுமெனச்சொற்றனளால். ()

சொற்றலுமிச்சுடர்த்தொடிபொற்சுதைமாடப்புறக்காவ
லுற்றுறைமினரையாமத்தொருசோரனவணெய்தும்
பற்றியிவணுய்க்குதிரென்றலும்பதிகாவலர்போகி
மற்றையவட்பொதிந்துவைகுமாளிகைச்சூழலிற்பொதிந்தார்.

மங்கையுழியருந்தவத்தோர்வழங்குமணியிழைவனப்பை
யங்கெழுந்துபார்த்துப்பார்த்தகல்விசும்புமுகட்டிடைநின்
றிங்குவமைக்காற்றாயிரிதல்போற்குடதிசையிற் [தான்.
செங்கதிரைச்சுருக்கிவெய்யோன்றிரைக்கடலிற்சென்றொளித்

சிவசித்தர்திருவிசைப்பாச்சிவணவெழுந்ததுசெக்க
ரவரைவிழிக்கணம்படைத்தன்றகல்விசும்புநோக்குதல்போற்
றவழ்தாராகணங்களெழுந்தனபோயச்சையத்திற்
றுவளுமனுருறுமுளத்திற்றுறுமியதுகருங்கங்குல். (௧௦௫)

வந்ததுபேரிருளின்னும்வந்திலர்வேதியர்வந்தான்
மூர்ந்துறுதண்டம்புரிந்துமுருக்குவரேமுருக்காமே
யந்தமின்மாநிதிகொடுத்துமளிக்குதுமென்றலர்முலையாள்
சிந்தைகவலுறக்கருவூர்த்தேவர்திருவுளத்துணர்ந்தார். (௧௦௬)

செறிந்தமரிழிவிடைப்பாகர்திருவத்தயாமத்தி
லறிந்தனரங்கிலைபிறழாதணியரங்கடணைந்துகடை
யெறிந்துகுழைமுகந்தடவியிகலியரிபாந்துகுமிழ்
மறிந்துமதர்மதத்தபிணைமறிநோக்கிமனைபுக்கார். (௧௦௭)

புகுந்ததுகாணாவரிவைபோற்றியமளியிற்சேர்த்தி
மிகுந்தவவேதியர்நீவிரளித்தமணிமிளிரார [யுந்
முகுந்தனணிகலிழைகொணர்ந்தோர்த்தருதியென முனிந்தெனை
தொகுந்தறுகணாளர்குழீஇத்தொக்கனரிற்செறித்தென்றாள். ()

என்றவுரைகேளாவந்தெழின்மாடம்புகுந்துபுலன்
வென்றவரைத்தண்டத்தார்வளைந்தனர்வீங்கிருளிரிந்தாற்
சென்றணைதுஞ்சினகரமென்றிருந்தனர்செங்கதிர்ப்புத்தே
ளன்றைவிநோதம்புவியிலறிவிப்பான்போலெழுந்தான் (௧௦௯)

அக்காலைத்தண்டத்தாரருமுனிவற்கொடுமறுகிற்
புக்காரங்கனையுமயற்போயினளப்புரியுறைவோர்
மைக்கார்மேனியன்கலனைவவ்வினோற்காண்டுமெனத்
தொக்கார்தத்தமக்கேற்றவாபுகலத்துணிந்தாரால். (௧௧௦)

வேறு.

இவனோவரங்கர்திருமணிமார்பிருந்தவணியிழைசோர்வு
கொண்டகரவோ, னிவனோநெடுங்கணிளமுலையாரணங்கனைய
விவளோடிணங்குபடிறோ, னிவனோவனங்கனெழில்கவர்காளை
மங்கையரிலெவர்காதல்கொண்டுதொடரா, ரிவனோதெளித்தகர
வடனாகுமென்பர்சிலரிவன்யோகியென்பர்சிலரே. (௧௧௧)

வேதியர்குலக்குரிசிலோவலதுசேணில்வருவீணைவிஞ்சைக்
கிழவனோ, மாதிரக்கிழவர்தமிலொருவனோவரியமுனிவரிலுரிய
விரதியேயோ, வாதியரியுருவங்கரந்துவிளையாடலோவலதுசி
த்தேசனிவனோ, வேதிலனொருத்தனுருவம்பலவெடுத்துநடையி
லெவனென்றிடுவோர்சிலரே. (௧௧௨)

காலங்கண்மூன்றும்வென்றவனென்பர்சிலரெனிற்கரவு
கொண்டிரவிலினிய, பாலின்சொலார்காமநுகர்வனேவென்பர்
சிலர்பற்றுமற்றற்றபடிவன், சீலன்தனைப்படியிலெப்படிதெரித்
திடுதல்செப்பவரிதென்பர்சிலபே, ரேலரிற்காண்டொறுமிழும்
பூதிழைக்குமனம்யாரைநீயென்பர்சிலரே. (கக௩)

அந்தோவிவன்புவியளந்தோனிவர்ந்தமணியாரங்கவர்ந்திவ்
வூரிற், பைந்தோகைதன்பால்வழங்கிப்புணர்ந்துமறுநாளுமிப்பா
வைமனையில், வந்தோனெனிற்கரவுகொண்டோனலன்சதும
றைக்குலமுதித்தவனலோன், முந்தூழடுங்களிற்றுரித்தவர்க்கடிய
னினிமுடியுமவனென்பர்சிலரே. (கக௪)

இன்னணம்பலருமெதிரெதிர்புகுந்திருப்புடையுமேற்றுவு
ரைசாற்றியருகே, துன்னிநிரைநிரைதொகத்தண்டத்தர்நானம
றைத்தூயவாதமைப்பொதிந்தே, தென்னரங்கேசர்திருவாயிலி
ற்பாகவதர்செறியுமுன்றிலினுய்க்கவே, வந்நிலையிலிவ்ரோமதா
ணிவவ்வினவரெனவாமெனக்காவலர்சொனார். (கக௫)

வேறு.

சொன்னவாசகங்கேளாத்தொகுமவையுள்ளார்துளங்கி
யென்னைநீரிசைத்ததுமற்றிதுபுரிந்தோரிவரல்லர்
பன்னகாபரணனடியவர்பனவர்தமின்மிக்கா
ரனனமேகரவாமேநிகழ்ந்தவாறறைதியென்றார். (கக௬)

மறுகிலிவர்க்குளமயங்கிவலிதின்மனைகொண்டணைந்தே
னுறுமிரவிற்பிரிந்தணிதந்துடனகன்றாரிதுநிற்க
நறுமணிப்பொற்றுவைகளுளநல்குவனன்னகருடையீ
ரறுதொழிலந்தணரையென்பாலளிக்குதிரென்றனளரிவை. ()

மற்றவள்சொற்றலும்பாகவதர்புழுங்கிமனங்கொதியா
விற்றைவரையிழையாததிவனிழைத்தானெனநெருங்கிப்
பற்றுதிர்பற்றுதிரென்றேபதைப்பவவர்தமைவேதங்
கற்றதொழுகுலத்தொருவன்கரனமைத்துக்கழறுவான். (கக௮)

அந்தணரிப்பொலன்றிருவுக்களித்தமணிக்கேயூரந்
தந்தனர்யார்நுமக்கிதயங்கரவாதுசாற்றுமெனச்
சிந்தைதெளிதருகருவூர்த்தேவரிளநகையரும்பப்
புந்தியிலீரிகிரிவலன்பொறுத்தவன்[illegible]ர். (கக[illegible])

எள்ளிமதியிலிர்திருமாலெமக்கணிநல்கினனெனலுந்
துள்ளியெழுர் தனரிதயந்துடித்தனர்கிந்தனையறையுங்
கள்ளியநெஞ்சினனுலகுக்கேலாமைகழறுகின்ற
னள்ளிருளிலேதியற்றனலிதுமெனநணுகலுமே. (கஉ0)

மீட்டுமறைக்கிழவனவர்தமைவிலக்கிமெய்த்தவத்தீர்
தோட்டுளபத்திருமாயன் சுடரிழைநல்கினனென் நீர்
கேட்டிடுமாறீண்டவையிற்கேசவனின்றுரைத்திடுமேன்
மீட்டுமருமுனிவரர்நீர்யாங்களுநிற்பணிதுமென்றன். (கஉக)

மட்டலம்புனைதுளபமணமுயிர்க்குந்திருவரங்கப்
பெட்டகமுள்ளுறைவேதப்பெருப்பொருளேயிருங்கலநீ
யுட்டகவுபெறவளித்ததுலகறியுமாறுவணப்
புட்டகவீண்டிருவிசும்பிற்போந்துபுகலுதியென்றார். (கஉஉ)

கோமளித்தோதியவேதங்குலவுகருவூர்த்தேவர்
தாமளித்தோமறநோற்றதவத்தினுயர்தவர்தம்பாற்
றேமளித்தோடவிழ்துளபச்சிகழிகையோடணியாரம்
யாமளித்தோமெனவரங்கரிசைத்தனர்விண்ணிடைநிலைத்தே. ()

கொத்தேறுமலரயனுங்கோமகனுந்தானிறைஞ்ச
நத்தேறுகரத்தரங்கர்நவிற்றிவிசும்பிடைநின்றார்
சித்தேசர்புகழ்கருவூர்த்தேவர்சகமேற்சுவர்க்கப்
புத்தேளிர்கற்பகப்பம்பூமாரிபொழியநின்றார். (கஉச)

விண்ணமரும்பசுந்துளபமிலேந்தமாதவர்தமையுந்
தண்ணமர்பாருலகில்விளைதம்பயின்மாதவர்தமையும்
பண்ணமர்தொன்மறைபாடும்பாகவதர்முதலாயோர்
மண்ணமரவீழ்ந்துமனம்வெருஉக்கொண்டுவணங்கினர். (கஉரு)

விட்பாகசாதனனும்வேதவிரிஞ்சனும்போற்றும்
டிட்பாகனணிகாட்சிபுரிந்துமறைந்துழிநெஞ்சிற்
பெட்பாகமம்பயிலும்பெருமானன்பினர்ப்பரவி
[illegible]முகையக்கிளவி (கஉகூ)

குவித்தகரத்தினராயாங்குயிற்றுபெரும்பிழைபொறுத்தி
ரவித்தபுலத்தினிரென்றாக்காயிடையனபளித்திசைதேர்
கவித்தலைவரவனொருவிக்கடலுலகமுதலியவுற்
பவித்தகர்ப்பபுரியிறைவற்பரவியிருந்தனர்சின்னாள் (கஉஎ)

செல்காலத்தெதிர்காலத்திறனுணர்ந்துசிவயோகம்
பல்காலமிழைத்துயிருட்பரஞ்சுடரைப்பார்த்திருப்ப
வெல்காலநெறிபிறழ்ந்தவேதியர்குழீஇயிரவி
யில்காலமிவர்வைகுமில்லுழைவந்திறுத்தனரால். (கஉஅ)

வந்தவுயர்குலத்தினரைமாணுக்கரெதிரவணங்கி
யந்தணீர்சமாதியினையடைந்துகருவூர்தேவர்
சிந்தையொருங்குறவெழுதீபமொத்தாரெனவயிரத்துத்
தந்தமினிந்தனையறைந்துசாரந்தனர்வேந்துறைகோயில்.(கஉகூ)

சயதரசெம்பியர்கோவேதயங்குகருவூர்த்தேவ
னுயர்குலத்திலுதித்துமிழிபுறுவாமமியற்றுகின்று
னியமமிதுபுரிகுநரைநீப்பதியல்பென்றார்க்கு
மயர்வறநோற்றவர்த்தடுத்தல்வறிதென்றான்வயவேந்தன். ()

வேதியரித்திறனிழைப்பவேதமியற்றியதுண்டே
னீதிதிறம்பினர்த்தடியுநிருபனோநிருபனென்ப
சோதியிதுசோதித்தபின்னுமனுச்சொற்றமையாற்
சாதியினுக்கேற்றபெருந்தண்டமிழைக்குதியென்றார். (கங)

தாபதரைச்சோதிப்பிற்றவவலியிற்கண்சிவந்து
சோபமிகுஞ்சாபமிடிற்றொலைக்குநர்யார்சொன்மினெனும்
பூபதியைப்பார்த்திடம்பம்போர்த்தபுறத்தொழுக்கினன்வெங்
கோபவுரையாமதுமேற்கோடுமெனக்கூறினார். (கஙஉ)

செல்வர்கருவூர்த்தேவர்சித்தராருந்தவத்தரென்னும்
பல்வினைதம்புரியும்பான்மையர்மேன்மையராயன்மால்
வில்வவேணியர்கூடவினையாமெவ்வித்தனர்சீர்
சொல்வதெதுகளவாக்குந்தகளுன் [illegible]

நீவிர் நவிற்றியதறிதுமெனநிருபனீங்கியவை
மேவியருமறையரொடுமெய்த்தவர்வைகிடனுய்த்தே
யோவியமொத்துறங்கிவிழித்துலகவியல்புறப்பூசை
காவிமிடற்றோர்புரியுங்காலையிற்காவலனடைந்தான். (க௬௪)

அடைந்தவன்றயனையவனையமரரையெண்ணுதருளிற்
றடைந்தமனத்தினராய்வந்தனையாற்றிமுற்றியபின்
மிடைந்தவர்ப்பார்த்திதுபோதின்மேவியதென்னெனவிதப்ப
முடைந்துபணிப்புறவேந்தனொடுங்கியிறைஞ்சினனுரைத்தான்.

வேறு.

மாதவமுனித்தலைவநிற்பணியவந்தனன் மறைத்தலைவர்நம் மொடெனலுஞ், சோதனைநிமித்தமிஃதென்றுள நகைத்தருகு தொண்டுபுரிமாணவர்தமை, மேதகவிளித்தரியமாமுனிவர்தாமு யலுமெய்த்தவவொடுக்கமுநனி, யேதகமிடத்துளசிறப்புமிவை காட்டுமெனவெய்தியறிவிப்பவிறையும். (க௬௫)

ஆண்டணுகிவேண்டியவருந்தவமிருந்தவரகங்குழையவா ற்றுதிறனுங், காண்டநிறைகுண்டிகைகரங்கெழுமுதண்டுதுவரா டைகலையாதனமிகப், பூண்டிலகுகண்டிமணிபூதிசிவபூசைபுரி புண்ணியருநண்ணுமிடனு, மாண்டகுசிவாகமபுராணமவைகற் றிதயம்வைப்பவரிருக்கைபலவும். (க௬௭)

அங்கிவளர்குண்டமணிமண்டலமருக்கியமொடாச்சியநிறை த்தகுடநீர், தங்குகலசங்குலவுதந்துபொதிகும்பநவதானியநறுந றியவீத், துங்கமுறுமாபயமுதற்குசைசமித்தரிசிதூர்வையசுருக் கொடுவிரும், பைங்கனிபழக்குலைகளாறுசுவையுண்டிமுதலாய வைபரித்தவிடனும். (க௬௮)

ஐந்தெனவிதித்தசிவதீக்கையுபதேசதசகாரியமையந்திரி பறச், சிந்தைதெளிவந்திடவினாவிடைகொடுத்தொருவருக்கொ ருவர்தேர்ந்[illegible]களும், பந்தமறுமுத்தர்முதலாயவரிருக்கைகளும் பார்த்ததிசயித்தவனவ, னெந்தைதமியேன்குறைபொறுத்தரு [illegible]ருந்தவர்சொல்வார் (க௬௯)

வல்லியமுயர்த்தகொடிமன்னவமறைக்குலவர்வாழ்மனைக டோறுமருவி, யொல்லைவருகென்றவரையுட்கொடுறைகானமது ஆறுதசைநூறுபுலவும், புல்லியபுலைக்குடிலெனத்திகழ்வகண்டி றைபொறாதுவிழிசீறியிதுபோ, தெல்லிருமயற்புலனிலேகுதிரி ருக்கிலுறுதண்டமுமினிப்பெறுவிரால். (கச0)

ஈனர்புரியித்தொழிலியற்றினரிருந்தவரையேசுமொழி பேசிவறிதே, தானெமையவர்க்கொடுசபித்திடமனக்கவடுதங்கு தறுகட்கொடுமையே, யானதுகளத்தினிமறைக்குலம்விடுத்து னிரகற்றினிரொழுக்கின்வழியே, கானிடைவயிற்றினைவளர்க்கு திர்நுமக்குறவுகானவரெனக்கழறியே. (கசக)

நீத்தவரைநீத்தவரைநேர்ந்திருபதந்தொழுதுநீசருறைவா சலெனவே, பூத்தைவெறிதுற்றமதுவார்த்ததடமுங்கடமுமூனு ணவுமாயுறுதலாற், றீத்தெறுவனத்துறைகிராதரொடுசோமி னெனவோதியவராயமொருவி, மாத்தவவடைந்தனன்மறைக் குலமடாதினியவர்க்கெனவகுத்துரைசெய்தான். (கசஉ)

வேறு.

உரைசெய்தகிருபனைப்பார்த்தோரைந்தும்வென்றுயர்ந்தார்
கரைசெய்துமணிகொழிக்குங்காவிரிநாட்டுறைவேந்தே
திரைசெய்தகடலுலகிற்செயற்கரியதியவினைப்
புரைசெய்தாலும்பொறையிற்பரித்தளிப்பதேபுகழாம். (கசங)

காவலன்காவாதொழியிற்காரொடுபைங்கூழறங்கும்
பூவருவேதியரோதிபொன்றுமாபயங்குன்றுந்
தேவர்சிறப்பொடுபூசைசிதையுமென்றுற்சிதையாமே
யாவரையும்யாவையையுமின்றளிப்பதேயறனும். (கசச)

ஓத்தினையோதியுமறையோராயிருந்துமுபநிடதம்
பாத்துணராப்பொதுவுணர்வுபற்றுவார்பற்றவரை
நீத்திகழ்வரவர்கடிருவுளநிகழ்வையாராயார்
காத்திருப்பிசேவிற்றறிஞர்கருவதற்காளாயினர். (கசரு)

யாதுபுரியினும்பொறுப்பதிசையரசர்க்கெனவிறைஞ்சி
யாதுபுரிகுதலெனவேக்தகன்றனஞ்ஞன்விருள்போ
யோர்துமருந்தவருழிஞர்[illegible]
போ[illegible]

கறைகெழுமாமணிமிடற்றார்கனைகழற்சேவடிமலரின்
மறையவரின்றடைகின்றாரென்பனமங்கலவார்த்தை
யறையுவரிநீருலகிலறிவிப்பான்போலெழுந்து
முறைமுறைறவைகறையின்மறைமுகர்துமுழங்கியசங்கம். (கசஎ

ஆதித்தனெழுமமையத்தந்தணர்தத்தமிற்குழுமிச்
சாதித்தன்மையைநீங்கிச்சாதித்தன்மையுணுகிப்
போதித்தாரணிதிணிதோட்புரவலற்குமறையெல்லாம்
பேதித்தாரணியுமுறப்புரிவித்தான்பெரிதுமென்றே. (கசஅ)

ஏற்றவனையுறுந்தண்டமிழைத்திதுபோழ்தெல்லோரும்
வேற்றொருநன்புலத்தடைதலவியப்பெனவான்பொருனைநதி
யாற்றொருதீரத்தடைந்தாருந்தவரன்றடைகின்ற
பேற்றினையோர்ந்திலர்வேதம்பிதற்றியபிராமணரெலாம். (கசகூ)

முற்றுமருந்தவத்தினருமுநிதிரையாம்பிரவதியி
னுற்றனரவ்வுழியடர்ந்துநெருங்கமறையோரையுளந்
துற்றபுலப்பகையெனக்கண்டகன்றுசுடர்க்கோயில்புக்கார்
மற்றவர்கண்மருண்டுதிசைமயங்கிமறுகிடைநின்றார். (கருo)

கங்கைபுனைவார்கோயிற்கலந்தகருவூர்த்தேவர்
பொங்கருள்கூர்சிவயோகம்புரிந்ததுமுற்றியதேயோ
வங்கவரன்போதவமோவாதரமோயாதுகொல்லோ
தங்கைகொடுதிருவுருவைத்தழுவினாசரணடைந்தார். (கருக)

படர்ந்தெழுதுந்துமியார்த்தபனிமலர்சிந்தினவானந்
திடர்ந்தகடற்புவிகுழுமிக்கெழுமியதிசயம்விளைத்த
தொடர்ந்தமறையவர்துளங்கித்துகடீர்ந்ததூயவரை
யடர்ந்தனமென்றழுதுவிழியருவிசொரிதரநின்றார். (கருஉ)

எங்குற்றீர்துகடீர்ந்தீரிதுதெரியாதிடரிழைத்தே
மங்குற்றேநவிலென்றேவருந்துமறையவர்தேறத்
தங்குற்றீர்கருவூரார்தமதுகுலமாதலினு
[illegible]ற்றீர்தனைதுவன்றவிசும்பிடைவாணி. (கருங)

மறையுயிர்த்தாரழல்வேள்விவளர்ப்பவரும்மகிழ்தூங்கத
கறையணக்கர்கோதாருங்கணத்தர்மணிகுயிற்றுமறை
யறைகழற்றுண் மலரிலருச்சனையாற்றியாதிசைவத்
துறைகெழுமாகமச்சலதிதுளைந்துசுகோதயராஞர். (கருச)

வேறு.

அந்தணர்தொகுதிவாழ்கவானினந்தழைகமாரி
சந்ததம்பொழிகசைவந்தலையெடுத்திடுகவேந்த
ரிந்திரதருவினேங்கவெம்பிரானன்பர்சூழ்க
சிந்துவெண்டிரைநீர்ஞாலந்திருமகள்வளர்கமன்னோ. (கருரு)

வெண்டிருநீறுபாரில்விளங்குகமிளிர்செவ்வேணி
யண்டர்நாயகனூர்நாமவைந்தெழுத்தருளினோங்கப்
பண்டைநான்மறையுமாகமங்களும்படர்கவெங்குந்
தொண்டருந்தொண்டர்சாற்றப்புராணமுஞ்சூழ்ந்திலங்க. ()

ஞானதேசிகர்சீர்மல்கநாற்பெருங்கவிதைசூழ்க
தேனலர்ப்பொழில்சூழ்வஞ்சித்திருநகர்வளஞ்சிறக்க
வானவர்நாதன்பூசைவளப்பெருந்திருவினோங்க
தானமுஞ்சமயமாறுந்தலத்துளோர்யாரும்வாழ்க. (கருஎ)

கருவூர்த்தேவர்கதிபெறுசருக்கம்முற்றுப்பெற்றது.

ஆகசருக்கம் உக-க்கு திருவிருத்தம்-கக௨கூ.

கருவூர்ப்புராணம் முற்றிற்று.

மெய்கண்டதேவர்

மெய்யடிவாழ்க.

சிவஞானயோகிகள்திருவடிவாழ்க.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

—o—

கருவூர்ப்புராண வசனம்.

காப்பு.

வஞ்சிவனத்தின்வளங் கூறுவாமதில்வாழ்
குஞ்சரத்தின்பாத முளங்கொண்டு.

புராணவரலாறு.

கலைமாமதிசூடியகடவுள் கடல்சூழுலகத்திடையமரும்
தலமான்மியத்தையருணந்தி தம்பாலுணர்ந்தசனற்குமரன்
சொலவாங்கதுதேர்வியாசமுனி சூதர்க்குரைப்பவவர்வழிச்சேர்
பலமாமுனிவர்தொழுங்கருவூர்ப் பசுபதீசப்பெருமானே.

கருவூர்த்தலமான்மியமானது கிருபாசமுத்திரமாகிய திருநந்திதேவர் சனற்குமாரமகாரிஷிக்கும், அவர்வேதவியாசமுனிவருக்கும், அவர் சூதபுராணிகருக்குந் திருவாய்மலர்ந்தருளிய பதினெணபுராணங்களுள் பிரமகைவர்த்தமென்னு மகாபுராணத்திலே சிவக்ஷேத்திரகாண்டத்திலே நூற்றொன்பதாம் அத்தியாயத்திலே கூறப்பட்டுள்ளது.

இரண்டாவது,

வராககிரிச்சருக்கம்.

மகவாயுயர்காசிபமுனிதன் மரபினுதித்தவராகமுனி
மிகவேயோகசித்தியினை விரும்பிச்சிவபூசனையாற்றி
யிகலொன்றின்றிமுத்தியினை யெய்தும்வராககிரிச்சாரற்
பகலோனுழையாப்பொழிற் கருவூர்ப்பசுபதீசப்பெருமானே.

முனிபுங்கவராகிய சூதபுராணிகர் ஒருநாள்நைமிசாரண்ணியத்தை யடைந்தபொழுது சவுனகாதிமகாரிஷிகள் வந்தனவழிபாடுசெய்து வஞ்சுளாரணியமாகிய கருவூர்மான்மியத்தைமுன்னொருகாற்கேட்டு மறைவுபெற்றிலோம் மீட்டுந்திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்யச் சூதபுராணிகர் சொல்வராயினர், வெண்கொற்றக்குடையினையுடைய சேரராஜனால் அரசுபுரியப்பட்டகொங்குநாட்டிலே கருவூர்,பேரூர்,அவிநாசி, பவானிகூடல், திருச்செங்கோடு, திருப்பாண்டிக் கொடுமுடி,திருமுருகன்பூண்டி,வெஞ்சமாக்கூடல்,முதலியபலதலங்களும் தென்புறத்திலே வராககிரியென்னும் மலையுமிருக்கின்றன. அவற்றின்வளமைசொல்லுதற்கரியன. அம்மலையிடத்துப் பற்பலசித்தர்களும் முனிவர்களும் வசித்தலினாலும் சிவபெருமான் திருக்கோவில்கொண்டெழுந்தருளி யிருத்தலினாலும் சிரேட்டமுடமைபெற்றது. அதன்வரலாறு சொல்லுதுங் கேட்பீர்களாக. காசிபகோத்திரத்திலே துறவறத்திற்சிறந்தவராகிய வராகமுனிவரென்பவர் ஒருவரிருந்தார். அவர்சரியாபாதம் கிரியாபாதங்களில் வல்லவராகிச் சிவயோகம்செய்தற்கு நல்லதலம்நாடிஇந்தக்கிரியைஅடுத்து வன்னிமரத்தருகில் சிவலிங்கமொன்றுதாபித்து பூசித்துவந்தார். சிவபெருமான் பிரசன்னராய் யாதுவேண்டுவதெனவினவ, பெருங்கருணைத்தடங்கடலே? உமதுதிருவருளால் சரியைகிரியையென்னும் இரண்டுபாதங்களுமுணர்ந்தேன். சிவயோகத்தைஅடியேனுக்கு அனுக்கிரகஞ்செய்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்யச்சிவபெருமான் கிருபைகூர்ந்து வராகமுனிவனே? யோகமானது இயமம், நியமம, ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம்,' சமாதியென எட்டங்கங்களையுடையது. என்று அதன்விரிவையும் திருவாய்மலர்ந்தருளி இம்மலையானது யோககிரியாக ஆதியிலேயே படைக்கப்பட்டதாதலின் இதனிடத்து நீயோகசித்திபெற்றுமுத்தியடையக்கடவை.உனக்குயோகீசனென்னும் பெயரும்இம்மலைககு நீபூசித்தகாரணத்தால்வராககிரியென்னும் பெயரும் உண்டாகதாகவென்று அனுக்கிரகம்செய்து மறைந்

தருளினர். அவ்வாறே வராகமுனிவர் யோகீசராய் முத்தி பெற்றார். இம்மலையும் வராகமலையென்று வழங்கப்பட்டு வருகிறது.

மூன்றாவது,

ஆம்பிராவதிநதிச்சருக்கம்.

வேதம்பரசுங்கிரியிடத்துவிமலையருளேயுருவாகிச்
சூதநதியாம்பிரநதியென்றுயர்பேர்சூடித்தோய்ந்தவர்தம்
மேதமகற்றிழருங்கிருபாலெண்ணில்சிவத்தானம்மருவிப்
பாதம்பணியக்கிருபைசெயும்பசுபதீசப்பெருமானே.

ஓர்காலத்திலே மழைபெய்யாதுமன்னுயிர்கள் வருந்தும் பொழுது சிவபெருமான் உமாதேவியைநோக்கி நீவராககிரியைச்சூழ்ந்த நாடனைத்து முய்யும்பொருட்டு அக்கிரியினின்றும் உனதுகலையை நதியுருவமாகவரும்படிசெய்யக் கடவாயென்றாஞ்ஞாபிக்க, அவ்வண்ணமே உலகமாதாவாகிய உமாதேவியானவர் வராககிரியினின்றும் தமது அருளையே நதியுருவாக ஒழுகச்செய்தனர். அந்நதியினிருமருங்கிலும் பல்லாயிரம் முனிவர்கள் மாவிருக்கமாகவிருந்து தவஞ்செய்தார்கள். அந்நதி அம்மையின்திருவருளேயுருவாய்வருதலின் அம்பாநதியென்றும், ஆம்பிரமென்கிற பெயரையுடைய மாமரங்களினது நீழலில்வருதலின் ஆம்பிரமாநதியென்றும்பெயர்பெறும். காமதேனுவானது கருவூரையடைந்து பூசிப்பதற்குமுன்னர் இந்நதியையடைந்து இருமருங்கிலுமுள்ள பலசிவத்தானங்களைப்பூசித்தபடியால் இந்நதிக்குப் பொருனையென்னும் பெயரும்உளது. அந்நதிவராககிரியினின்று மிழிந்து இருகரையிலுமுள்ள பலசிவஸ்தலங்களையும் வணங்கிக் காவேரிநதியுடனே திருமுக்கூடல்என்னு மிடத்திற்கலத்தலைச்செய்யும். அந்நதிக்கரையில் வராகமுனிவராற்பூசிக்கப்பட்ட யோகலிங்கமென்னுந் தலமுதலாக திருமுக்கூடலீறாகத்,தேவர்கள்,இருடிகள், சித்தர்கள், வாலகில்லியரென்னும் இயக்கர்கள்; விநாயகசுப்பிரமண்யர்கள்; பிரமவிட்டுணுக்கள்,

முதலாயினோர்பூசித்த அளவிறந்ததலங்களுள்ளன. அவற்றுள் சந்திரன் குருபத்தினிசாபந்தொலையப்பூசித்த சோமேசலிங்கமும், அநந்தகணேசனென்னுமொருஇலிங்கமும், வெண்மணலைக்குவித்து அகத்தியர்பூசித்த அகத்தியலிங்கமும், காஞ்சேசன் என்னும் இலிங்கமும், அபிந்தபிரம்புவனத்திலே தெய்வீகஆரிஷலிங்கங்களும், கொங்கணேசமென்னுந்தலத்தில் கொங்கணேச்சுரன்என்னும் இலிங்கமும், காளீசனென்னுமிலிங்கமும், தாரகாசுரங்களாற்பூசிக்கப்பட்ட தாரகேச்சுரனென்னுமிலிங்கமும், வீரபத்திரர்பூசித்த வீரேசனென்னும் இலிங்கமும், விசாலலிங்கம், காட்சிலிங்கம், திலகுலேச்சுரலிங்கம் முதலியவிலிங்கங்களுஞ்சிறந்தன. அவற்றுள்ளும் ஆதிமாபுரமாகிய கருவூரிலே பஞ்சலிங்கங்கள்என்னும் ஐந்துஇலிங்கங்கள் மிகச்சிறந்தன.

அவைவருமாறு:—

க. புற்றிடங்கொண்டெழுந்தருளிய ஆதிநாயகனென்னும் பசுபதிலிங்கம்.

உ. அதன்கீழ்பால் கோடீச்சுரலிங்கம்.

ங. அதன்கீழ்பால் கயிலாயநாதலிங்கம்.

ச. அதன்தெற்கே கரியமாலீசர்என்னுமிலிங்கம்.

ரு. அதற்கு அக்கினிதிக்கில் ஆம்பிராநதிக்கரையில் வஞ்சுளேச்சுரலிங்கம், என்பவைகளே.

அன்றியும் வஞ்சுளேச்சுரத்துக்குக்கிழக்கே அரசவனத்திலே திருமால்பள்ளிகொண்டருளியதலமும் ஒன்றுளது. அந்நதி காவேரிநதியுடன்கலக்குமிடத்திலே மணியீசன்என்னும் சிறந்த லிங்கமொன்றிருக்கின்றது. இவ்வாம்பிரமாநதியொன்று, மணிமுத்தாநதியொன்று, காவேரிநதியொன்று, ஆகமூன்றுநதிகளும ஒருங்குகூடுதலாலவ்விடத்திற்குத் திருமுக்கூடலென்று பெயர். இத்தனைமாகிய ஆம்பிராநதியின் வளங்களையும் அதிலாடினோர்பெறும்பேற்றையும் இனித்தெரிக்கூறுதலரிது.

நான்காகாவது,

சராசரச்சருக்கம்.

மேலாம்பிரமன்றுயில்கூரவிளிந்தசரத்தோடசரமெலாம்
மாலாய்ப்படைக்கக்கருதிவெண்ணெய்வரையின்பாங்கர்ச்சுரபி
தவம், கோலாநின்றுசராசரத்தின்சுவடுநோக்கிச்சிருட்டிசெய்
து, பாலாற்பூசைபுரிந்தேத்தும்பசுபதீசப்பெருமானே.

உலகத்தின்கண்ணுள்ள நால்வகையோனி யெழுவகைத் தோற்றமாகிய சராசரங்களனைத்தும் பிரமதேவரானவர் துயில் கூரும்இரவில் அந்தரப்பிரளயத்தினு லழிவுபெற்றன. பிரம தேவர் துயிலொழிந்து சராசரங்களின் விளிவைநோக்கிப் பெரி தும்வருந்தி முன்போலமறுபடியும்படைக்கத்தொடங்கினார். அத் தொழில்கைகூடாது இடர்ப்பட்டு அதனைவிடுத்துக் கைலையங் கிரியிலே சிவபிரானைநோக்கித்தவஞ்செய்தனர். அதனமுன்ன ரே சிவபெருமான்சிருட்டியை நினைந்தபொழுது காமதேனுவந் துவணங்கியது. அதனைநோக்கி நீபூமியின்கண்சென்றுபிரமதே வனைப்போல் சிருட்டித்தொழில்செய்யக்கடவாயென்று ஆஞ் ஞாபித்துவிடைகொடுத்தனுப்பினார். பின்னர்ப்பிரமதேவருக்குப் பிரசன்னராகப்பிரமதேவரானவர் அடியேன் துயின்றமையால் சராசரங்கள்அழிந்துபோயின. அதனாற்பாவமுமறதியும் சம்ப வித்தன. அப்பாவம் நீருமபொருட்டுஞ் சிருட்டித்தொழிலை வரும்பொருட்டுந் தேவரீரை அருச்சிக்க விரும்புகிறேனென்று விண்ணப்பஞ்செய்ய, எம்பெருமான் அங்ஙனமே நீ ஆ, பிரா நதிக்குவடகரையிலுள்ள கருவூரையடைந்து அங்குநம்மைபூசிப் பாயாகவென்று அருளிச்செய்தார். அவர்பூசித்தவாறும சிருட்டி பெற்றவாறும் பின்னர்க்கூறப்படும் அதுநிற்க. முன்விடைபெ ற்றகாமதேனுவானது பூலோகத்திலே தென்றிசையையடைந்து தவஞ்செய்யநல்லதலம்யாதென்று நாடுங்காலையில் நாரதமக ரிஷியானவர் அதனையெதிர்ந்து, தேனுவே? ஆம்பிராநதிக்கரை யில் வஞ்சுளாரணியமொன்றுள்ளது, அங்குச்சென்றுதவம்புரி

வையாயின் இஷ்டசித்தியெளிதிற்பெறுவாயெனக் காமதேனு வராககிரியையடுத்து அங்கிருந்தும்ஆமபிராநதிக்கரையிலுள்ள பலதலங்களையும்வணங்கி வஞ்சிவனத்தைக்கண்ணுற்று நாரதர் மொழிப்படி தவஞ்செய்துகொண்டிருந்தது. ஓர் நாள், காம தேனுவே? இந்தவஞ்சிவனத்திலே ஒருபுற்றினிடத்திலே பாத லத்தினின்றுந்தோன்றிய ஆதிலிங்கமென்னும் ஒருமுதாலிங்கம் இருக்கின்றது. அதனைப்பூசிப்பாயாகவென்று ஆகாயத்தினின் றும் ஒருவாக்குளழுந்தது. அவ்வாக்கின்படியேசென்று புற்றி னிடத்தெழுந் தருளியிருக்கும் சிவலிங்கப் பெருமானைக்கண்டு அத்தியந்தபரவசமடைந்து அந்தமகாலிங்கத்துக்கு பால்முத லியஉபகரணங்களால் அபிடேகநைவேத்தியமுதலியனசெய்து வசித்துகொண்டிருந்தது. பின்னர் ஓர்நாள் சிவலிங்கப்பெரு மானது திருமுடியின்வாமபாகத்திலே காமதேனுவினது காற் குளம்புபட்டு -உதிரஞ்சொரிந்தது. அதனைநோக்கி, ஆ, கெட் டேன் இதற்கெனசெய்வேனென வருந்தாநிற்புழி, சிவபெரு மான் பசுவே! உன்மீதுபிழையிலது அதுநமது திருவிளையாட் டானிகழ்ந்ததாதலின் அதற்காகநீவருந்தற்க. இன்றுமுதல்நீபூசி த்தகாரணத்தால் எம்மைப்பசுபதிநாயகனென்று முப்புவனங்க ளும் போற்றக்கடவன. நாம்இருக்குமிவ்விடத்திற்குத் தென் கீழ்த்திசையிலே சராசரங்களின் அடிச்சுவடுகள் அடையாளங் களாகவைக்கப்பட்டிருக்கின்றன. பிரளயங்கள்தோறும் பிரம தேவன்முதலாயினோர் படைத்தற்றொழிலை நமதனுக்கிரகத்தி னால் அவ்வடையாளங்களைநோக்கியே செய்யாநிற்பர்.நீயுமங்குச் சென்று நம்மைச்சிந்தித்தால் படைக்குமாற்றல் பெறுவாய் என்று அருளிச்செய்து மறைந்தனர். காமதேனு அவ்வாறே தென்கீழ்த்திசையையடைந்து சராசரங்களின் அடிச்சுவடுக ளிருத்தலைநோக்கிச் சிவத்தியானஞ்செய்து படைக்கத் தொடங் கிற்று. சராசரங்களனைத்தும் பழமைபோலவே படைக்கப்பட் டன. 'அவைகளின்புசிப்புநிமித்தம்வடதிசையிலேவெண்ணெய மலையென்று ஒருமலையைவகுத்து அதன்கீழ்த்திசையிலே தேனு

தீர்த்தமென்று ஒருதீர்த்தமகழ்ந்து சிலகாலஞ்சிவார்ச்சனை செய்துகொண்டிருந்து பின்னர் சுவர்க்கலோகஞ்சென்றது. வெண்ணெய்மலையானது தரிசிப்போர்க்கு இட்டசித்திகளைவேண்டுவோர் வேண்டியவண்ணங் கொடுப்பதுமன்றி உட்டினகாலத்துந்தண்ணென்றிருத்தலால் அதன்பெயரை விளக்கும்.

ஐந்தாவது,

அலங்காரவதிச்சருக்கம்.

மண்ணின்மீது சிவதலத்துள்வஞ்சிவனமேசிறந்ததென
வண்ணலருளவலங்காரவதிகேட்டிந்தத்தலனடைந்து
பெண்ணினல்லார்தம்மோடும்பிரசமலர்தூய்ச்சிவபூசை
பண்ணவவட்குப்பாகமருள்பசுபதீசப்பெருமானே.

கைலையங்கிரியிலே எழுந்தருளியிருந்த எம்பெருமானை எம்பிராட்டியெழுந்து வணங்கிச் சர்வலோகைகநாயகரே பலவிதமாகிய தவங்களினும் உயர்ந்ததாய் செய்தற்கெளியதாயரிய பலனைத்தரத்தக்கதவம்யாது, அதனைத்திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்யச் சிவபெருமான் எல்லாத்தவங்களினுஞ்சிறந்தது சிவார்ச்சனைசெய்தலொன்றேயாமென்றருளிச்செய்தனர். மகாதேவியார் மீட்டும்வணங்கி அடியாள் சிவபூசைசெய்தல்வேணடும். எந்தவிடத்திற்செய்வது விசேடமாகுமென்பதனையும், அருளிச்செய்யவேண்டுமென்றிரப்பமகாதேவரானவர் வஞ்சுளாரணியஞ்சூழ்ந்தகருவூரே அதற்குத்தக்க தலமென்று அனுக்கிரகஞ்செய்தருளினர். உமாதேவியார் வணங்கிவிடைபெற்று இலக்குமி சரஸ்வதி முதலிய சேடியர்கள்சூழ அலங்காரவதியென்னும் பெயரோடு பூலோகத்தை யடைந்து வஞ்சுளாரணியத்திலேசென்று ஆம்பிராவதிநதியிலேவிதிப்படி நானஞ்செய்து திருநீறுஅக்கமணிமுதலிய சிவசின்னந்தரித்து ஆகமவிதிவழாமற்பசுபதிநாயகரைப்பூசித்தார். இலக்குமிசரஸ்வதிமுதலிய தேவமாதாகளும் பூசித்தார்கள். சிவபெருமான்

அலங்காரவதியார்பூசையையுவந்து அவருக்குப்பிரியாவரந் தந்தருளி யுடனிருந்தினர். மற்றதேவமாதர்களுக்கும் அவரவர் விரும்பியவரங்களைக் கொடுத்தருளினர்.

ஆறாவது,

பிரமச்சருக்கம்.

வையம்படைக்குமாற்றலினை மறந்துமலர்மெல்லணைக்கிழவன் றுய்யவரம்பெற்றொருவேள்விதொடங்கிச்சொல்லின் கிழத்திமணஞ், செய்யச்சிருட்டிதந்தவன்செய்தீர்த்தமுவந்துபடியுணர்க் குப், பையப்பழுக்குமருட்கனியேபசுபதீசப்பெருமானே.

முன்னர்க்கூறியபடி பிரமதேவரானவர் ஸ்ரீகயிலாயத்திலே சிவபெருமானிடத்திலே உத்தரவுபெற்றபின்னர்க்கருவூரையடைந்தார். பாவங்களுக்குப் பகையாகவொழுகும் ஆம்பிராநதியிலேமூழ்கி விபூதியுருத்திராக்கமுதலிய சின்னங்கள்தாங்கி ஆதிலிங்கப்பெருமானைமெய்யன்போடுவிதிப்படி பூசித்துக்கண்களானந்தவருவிசொரிய மெய்யுரோமாஞ்சிதங்கொள்ளநாத்தழுதழுப்பநின்று பலவாறுபுகழ்ந்து தோத்திரித்தனர். சிவபெருமானெதிர்தோன்றி வேண்டியவரங் கேட்பாயாகவென்று திருவுளம்பற்றப்பிரமதேவரானவர் ஆண்டவனே? யான்றுயின்ற காலையில் சரீரங்கள் அழிந்தமையானேர்ந்தபாவமும் யானே முதல்வனென்றுஎன்னுள்ளத்தேயெழும்புமகந்தையும், படைத்தற்றொழிலை ஒவ்வோர்காலத்தில்மறக்கும்பொச்சாப்பும், நீங்கியருளவேண்டுமென்று பிரார்த்திக்கச்சிவபெருமான் அங்ஙனமேவரந்தந்தருளி மற்றும்பிரமதேவனை நோக்கி இவ்விடத்து நீயொருவேள்விபுரிந்து கலைமாதைமணந்து படைத்தற்றொழிலைச்செய்திருந்து பின்னர்நின்னுலக மடைவாயாகவென்று பணித்துமறைந்தருளினர். பிரமதேவர் அப்பணிதலைமேற் கொண்டு ஆம்பிராநதிக்குவடக்கேவஞ்சுளேச்சரத்துக்குக் கிழக்கே பசுபதீச்சரத்துக்குத்தெற்கே பிரமதீர்த்தமென்று தம்பெயரால்

லொருதீர்த்தமுண்டாக்கி அதன்கரையில்சிலநாள் தவஞ்செய்து வதிந்து வெண்ணெய்மலையையடுத்து அதன்வடக்கேஒருயாக குண்டஞ்சமைத்து அனேகமுனிவர்களுந்தேவர்களுஞ்சூழவேத விதிப்படி யவ்வேள்வியைமுடித்துக் கலைமாதைக்கலியாணஞ் செய்து பின்னர்ச்சின்னாள் கருவூரில்வசித்துப் பசுபதீசருக்குத் திருக்கோவில்சமைத்துத் திருத்தேர்முதலிய திருவிழாக்களும் நடத்தித்தென்றிசையிலே அரிகரபுத்திரனையும் பத்திரகாளியை யுந்தாபித்து வழிபட்டுவந்தார். அவரதுகாதல்நிறைவேறியபின் னர்ப்பிரமலோகஞ்சென்றார்.

ஏழாவது,

பதரிவனச்சருக்கம்.

முதியதவத்துவியாதமுனிமுன்னோன்பூசைமுயன்றொருபால்
வதியநல்லதலமருளின்வழங்கவேண்ட வவற்கிரங்கி
நதியின்வடக்கேசிற்றிலையுநறியசிறியகனியுமுடைப்
பதரிவனந்தந்தருள்கருவூர்ப்பசுபதீசப்பெருமானே.

பிரமதேவரியற்றிய யாகத்திற்காக வந்திருந்த மகாரிஷிக ளில் வேதவியாசரொழிந்த மற்றையோர்கள் தத்தம்மிருக்கை யிற்சேர்ந்தார்கள். வேதவியாசரானவர் நிரந்தரமாய்க்கருவூரில் வசிக்கக்கருதிப் பசுபதீசப்பெருமானை வந்தித்து உள்ளன்போடு தோத்திரஞ்செய்து. அஞ்சலியஸ்தராய் நிற்புழிப் பசுபதீசர் வெளிப்பட்டு வேண்டும்வரம்யாதென்றுகேட்ப வேதவியாசரா னவர் இறைவனே? உம்மைச்சதாகாலம்பூசித்து நீங்காமலிவ் விடத்திலேதானே இருத்தல்வேண்டுமென்னும் பேரவாவுளதா யிற்று. அதற்குத்தக்கவிடம்நியமித்தருளவேண்டுமென்றுவேண் டச்சிவபெருமான் நமதாலயத்திற்குஅக்கினிதிக்கிலே ஆம்பிரா நதிக்குவடகரையிலே ஒரு இலந்தைவனமிருக்கிறது. அவ்விட த்துவதிந்து நம்மையருச்சிப்பாயாகவென்று அருளிச்செய்து மறைந்தார். வேதவியாசமுனீந்திரரானவர் அவ்விலந்தைவனத்

துழிச்சென்று அதன்விம்பிதங்களைநோக்கிவியந்து அவ்விடத்துத்தமது சீடரோடும் வசிப்பாராயினர்.

எட்டாவது,

திக்குப்பாலகச்சருக்கம்.

சீருந்திருவுமுடையவராந்திக்குப்பாலரொனுந்தேவர்
நீரும்பூவுங்கொடுபூசைநிகழ்த்தவவர்கடமக்கிரங்கி
யாரும்பெறாதவவாபதவியருளுந்தன்மைவியந்துநிதம்
பாரும்விசும்பும்புகழ்கருவூர்ப்பசுபதீசப்பெருமானே.

சிருட்டித்துவக்கத்திலே கருவூரிலே - இந்திரன்-அக்கினி-யமன்-என்னுந்தேவர்கள் பசுபதீச்சுரனைபூசித்து முறையே கிழக்குத் தென்கிழக்குத் தெற்கென்னுந் திசையாதிபத்தியமும் பலவளன்களும்பெற்றார்கள். திருமாலுடனே உயுத்தஞ்செய்த முராசுரனென்பானது மரபிலே அக்கினிபக்கண னென்னும் அசுரனொருவனிருந்தான். அவனுக்குமிக்கவல்லமையுடையதுற்சயன்என்னும் புத்திரன்பிறந்து குலநடைமுதலியன பயின்று வல்லோனாய்ப் பலவிடங்களிலுஞ்சென்று தேவர்முனிவர் முதலாயினோருக்கிடுக்கண்விளைத்து வருகையிலொருநாள் நல்வினையயத்தாற்கருவூரையடைந்தான். அவ்விடத்துப்பல்முனிவரர்கள் சிவபூசைசெய்தலைக் கண்ணுற்றவளவில் அவனது இயற்கைத் துற்குணங்களனைத்தும் அவனைவிட்டகல அவன் அந்தமகரிஷிகளைப் பூசிப்பானாயினன். அப்பூசையின்வலியால் நிருதியாகித் தென்மேற்றிசையாதிபத்தியம்பெற்றான். வருணன்பூசித்துமேற்றிசையாதி பத்தியம்பெற்றான். வாயுவானவன் திருவாநிலைநாதன் திருக்கோவிலைத்திருவலமிட்ட பெரும்புண்ணியத்தால் வாயுவென்னும்பதவியும் வடமேற்றிசையாதிபத்தியமும் பெற்றான். குபேரன்சிவபெருமானுக்கு இரத்தினாபரணங்கள் சாத்தி

யலங்கரித்துப் பூசித்த தவவலியால் வடதிசையாதிபத்தியம்பெற்றுச்சங்கநிதிபதுமநிதியாதிநிதிக்கோனாயினன். ஈசானன்பூசித்துவடகீழ்த்திசையாதிபத்தியம்பெற்றான்.

ஒன்பதாவது,

கடவுளரருச்சனைச்சருக்கம்.

அலரிசோமனாதிபிரமராகண்டலனேமுதலமர
ரிலகுமிருடிகணமூவரொன்னுந்தமிழ்நாட்டரசரொடு
குலவுமறையோர்முதற்றேவர்குழுமிச்சிவமாக்குறிநிறுவிப்
பலரும்பூசைசெயுங்கருவூர்ப்பசுபதீசப்பெருமானே.

மகாவிட்டுணுவானவர் திருவாநிலையுடையானைப்பூசித்து இலக்குமிதேவியை மணந்து எவ்வுயிரையுங் காத்தலாகிய அதிகாரம்பெற்றுக் கருவூரிலே திருக்கோவில்கொண் டிருப்பாராயினார். வேதங்களானவை பசுபதிநாயகனை வழிபட்டு உண்மை பேசுதலென்னும் வரம்பெற்று மூவுலகத்தும் வழங்காநிற்பன. அனேக ரிஷிகள் திருவாநிலைநாதற்குத் தென்கீழ்த்திசையிலே வேள்விகள்புரிந்து அளவிறந்த சிவப்பிரதிட்டைகளுஞ்செய்து வாழ்வடைந்தார்கள். சுப்பிரமணியக்கடவுள் ஆநிலையடிகள் திருவாலயத்துக்குக் கீழ்பாலும், ஆம்பிராநதிக்கு மேல்பாலுமாகத் தம்பெயரால் தீர்த்தமுண்டாக்கிப் பூசித்தார். அத்தீர்த்தக்கரையில் அளவிறந்தவர்கள் தவஞ்செய்து சித்திமுந்திகளைப் பெற்றார்கள். தாடகையென்பாள் பசுபதீச்சுரர்ஆலயத்துள்ளே ஒருதீர்த்தம் உண்டாக்கிப் பூசித்து மாரீசனென்னும் பிள்ளையைப்பெற்றாள். சேரசோழ பாண்டியர்களென்னும் மூவேந்தர்களும்பூசித்துத் திருவாலயத்திருப்பணி முதலாயினசெய்து க்தியடைந்தார்கள். சூரியன் சந்திரன்முதலிய நவக்கோள்களும்பூசித்து வேண்டும் வரங்களைப்பெற்றார்கள்.

பத்தாவது,

சுக்கிரனுபதேசம்பெற்றசருக்கம்.

இச்சைமிகுத்துப்புகர்பூசையினிதிஞற்றவுவற்கிரங்கி
மச்சைபோர்ததவு--னுயிர்கண்மாய்ந்தவிடத்துமொழப்பவல்ல
விச்சையருளியதைக்கசனும்வியாழன்மகனுக்குணர்த்தவருள்
பச்சைச்செழும்பூம்பொழிற்கருவூரப்பசுபதீசப்பெருமானே.

அசுரகுருவாகிய சுக்கிரன் கருவூரிலே பூதரிவனத்திலே ஒரு அக்கினிகுண்டமமைத்து அதன்மததியிலே ஒற்றைககாலில் நின்று ஐம்புலன்களையுமடக்கிப் பஞ்சாக்ஷர தியானபரனுய் நூறுவருடம் அரியதவத்தைச்செய்தான். அவன்து தவத்திற் கிரங்கி மஹாதேவரானவர் உமாசமேதராய்த்தோன்றிச் சுக்கிரனைநோக்கி நீ இறந்தோரை யெழுப்புதற்குரிய மிருதசஞ்சீவினியென்னும் மந்திரத்தைவிரும்பித்தவஞ்செய்தனை, அதனையுபதேசிக்கப் பெறுவாயென்று உபதேசித்து இம்மகாமந்திரத்தை நின் சீடர்களாகிய அசுரர்களுக்கு உபதேசியா தொழியக்கடவாயென்று ஆஞ்ஞாபித்து மறைந்தருளினர். பின்னர்ச்சுக்கிரன் தனது பதியினையடைந்து வாழ்ந்திருந்தான். சிலநாட் சென்றபின்னர் ஒருகாலத்திலே தேவர்களுக்கு மசுரர்களுக்கும் பெரிய உயுத்தமுண்டாகித் தேவப்படையால் அளவிறந்த அசுரர்கள் மாண்டார்கள். அஃதுணர்ந்த சுக்கிரன் தான்கற்ற மிருதசஞ்சீவினிஎன்னும் மந்திரவல்லமையால் இறந்தொழிந்த அசுரர்களைப் பிழைத்தெழும்படி செய்தான். இறந்த அசுரர்களுயிர்பெற்றெழுந்ததைநோக்கித் தேவர்கள்பயந்து தேவகுருவாகிய வியாழனையடுத்து நடந்த வரலாறுகூறினர். வியாழன் சுக்கிரன்கற்ற மந்திரவலியை வியந்து தன் குமாரனுகிய கசன் என்பவனைநோக்கி நீ சுக்கிரனையடுத்து அவன் மனதுக்கிசையவொழுகி மிருதசஞ்சீவினி மந்திரத்தை உபதேசிக்கப்பெற்று இங்குவருவாயாகவென்று விடுப்பத் தேவர்கள் அக்கசனைநோக்கி நீ நுந்தைமொழிப்படி மந்திரங்கற்று வருவா

யாயின் நினக்கும் யாகத்தின்கண்ணவிப்பாகம் தருவேமென்று மொழிந்தார்கள். அவ்வாறேகசனும் சுக்கிரனது இருக்கையையடைந்து அடியேன் தேவரீரைச்சரணடைந்தேனென மிகப் பணிவோடுவணங்கி மொழியச் சுக்கிரன் இரக்கமுற்று நீயாவன்? இவண்வந்தவாறென்னை? எனவினவ, கசன் ஐய? யான் வியாழனுடைய குமாரன் என்பேர் கசன் உமக்கடிமைசெய்யும்பொருட்டு வந்தேன் என, சுக்கிரன் மனமுவந்து ஆனிரை மேய்க்கும்படி பணித்த பணிவிடையைக்கசன் ஆயிரவருடஞ் செய்திருந்தான். இவ்வாறு ஒழுகுறும்நாளிலே வியாழனது புத்திரியாகிய தேவயானியென்பாள் கசனிடத்திலே பற்றுடையாளாய் அவனைத் தினந்தோறுஞ் சோலையிற்சென்று புதுமலர் கொய்துதரும்படி வேண்டிப்பெற்றும், யாழ்வாசிக்கக்கேட்டு மகிழ்ந்தும் காலங்கழிப்பாளாயினாள். கசன் மிருதசஞ்சீவி மந்திரத்திற்காகக் குருபணிவிடைசெய்து வருதலையுணர்ந்ததைத்தியர்கள் பொறாராய் அவனைக்கொன்று புலிக்கிரையாக்கினார்கள். அன்றிரா கசன்வாராமையால் தேவயானி சுக்கிரனிடத்து மொழியச் சுக்கிரன் உணர்ந்து மிருதசஞ்சீவி மந்திரத்தாற்கசனை வரவழைத்தான். மற்றொருநாள் தைத்தியர்கள் அவ்வாறே கசனைக் கடலிலமிழ்த்திக்கொன்றார்கள். அன்றுந் தேவயானி வேண்டுகோளால் சுக்கிரன் கசனை எழுப்பினான். பின்னொருநாள் தைத்தியர்கள் கசனைக்கொன்று தீமடுத்து நீறாக்கி அச்சாம்பரைச் சுராவுடன்கலந்து அச்சுராவை ஒருபொன்வள்ளத்திற்பெய்து சுக்கிரனிடத்துக் கொணர்ந்து உண்ணக்கொடுத்தார்கள். சுக்கிரன் அம்மதுவை யருந்திக் களித்திருந்தான். அற்றைப்பகல்கழிய விரவிற் கசன்வாராமையைத் தேவயானியாலுணர்ந்த சுக்கிரன் முன்போல மிருதசஞ்சீவி மந்திரத்தையுச்சரித்துக்கசனை அழைத்தான். கசன் சுக்கிரனது வயிற்றிலேயுயிர்பெற்றெழுந்து அடிகளே! யான் எவ்வாறு வெளிப்படுவதெனச் சுக்கிரன் இம்மோசம் தைத்தியர் செய்கையானேர்ந்ததென்றுணர்ந்து, தன்வயிற்றினிடத்திருக்குங் கசனுக்கு மிருதசஞ்சீவிமந்திரத்தை யுபதேசித்துத் தன்வயிற்றைப் பீறிவெளி

யில்வரக் கற்பித்தான். அவ்வண்ணமே சுக்கிரனது வயிற்றி னின்றும் வெளிவந்த கசனானவன் அம்மிருதசஞ்சீவி மந்திரத் தைக்கொண்டு சுக்கிரனை எழுப்பினன். உயிர்பெற்றெழுந்த சுக்கிரன் இனி இம்மதுவையருந்தினோர் சண்டாளராகவென்று சபித்துக் கசனைநோக்கி நினதெண்ணம் முற்றியது. இனி நின் னிருக்கைக் கேகக்கடவாயென்று விடைகொடுப்பக் கசன்வண ங்கி விடைபெற்றுச்செல்லுழித் தேவயானி தடுத்துத் தன்னை வதுவையாற்றிச்செல்லும்படி வேண்டினள். கசன் தேவயானி யைநோக்கி நீ குருபுத்திரியா யிருத்தலி னின்னை மணத்தல் தகுதியன்று அன்றியும் நின்றந்தை வயிற்றினின்றும் நீயும் நானும் தோன்றினமையால் சகோதரியுமாவாயாதலின் நின்னை வேட்டல் முறையன்றென்று மறுத்தான். தேவயானி சினந்து கசனே நீ என்றந்தையின்பாலுணர்ந்த மந்திரத்தை மறந்து விடக்கடவாயென்று சபித்தனள். கசன்வருந்தித்தேவயானியை நோக்கி நீ வியபசாரியாகக் கடவாயென்று சபித்துவிட்டுப் பொன்னுலகம்சென்று தாதையைவணங்கி நிகழ்ந்தவையனைத் துங்கூறி அம்மிருதசஞ்சீவி மந்திரத்தை வேறொரு மறைய வனுக்குபதேசித்துத் தேவர்கள் வாக்குத்தத்தஞ் செய்தபடி யாகத்தின்கண் அவிப்பாகம்பெற்று வாழ்ந்திருந்தான்.

பதினொன்றாவது.

முசுகுந்தச்சருக்கம்.

வில்லுவத்தினிலைபறித்துவிமலன்றிருமேனியிலெறிந்த
புல்லவுணர்வின்முசுக்கலையைப்புவியாளரசர்தமின்மேலாம்
நல்லவரசாய்முடிபுனையநல்கியாண்டதனிமுதலே
பல்லவஞ்சேர்பொழிற்கருவூர்ப்பசுபதீசப்பெருமானே.

முசுகுந்தச்சக்கிரவர்த்தியானவர்பூர்வசன்மத்திலே குரங் காயிருந்தபொழுது வில்வமரத்திலேறி அதன் இலைகளைப்பறித்து கீழேயிட அவைசிவபெருமான் திருமேனியிற்பட்ட புண்ணிய

வசத்தால் அவ்வுணர்ச்சிமறவாதிருக்கும்வண்ணம் குரங்குமுக
மும் மானிடவடிவமும் அருளப்பெற்று அரசனாகப்பிறந்து கரு
வூரிலே அரசுசெலுத்திக்கொண்டிருந்தார். அவர் ஸ்ரீசிதம்பரம்,
திருவாரூர், திருமறைக்காடு,முதலிய பலதலங்களிலும்சென்று
வணங்கி மீண்டுங்கருவூரையடைந்து வசித்தார். அக்காலையில்
தேவேந்திரன் மாற்றலன்போருக்கு ஆற்றாதுடைந்து வருந்து
தலையுணர்ந்து அவனுக்குப்படைத்துணைசெய்து வெற்றி பெறு
வித்தார். அவ்விந்திரன் ஆன்மார்த்தமாகப் பூசிக்கப்பட்ட ஸ்ரீ
தியாகராசப்பெருமானை அவனாற்பெற்றுத்திருவாரூரிலேதாபித்
தார். திருப்பரங்கிரியிலே ஸ்ரீ முருகக்கடவுள் தெய்வயானை யம்
மையைத் திருக்கல்யாணம் செய்தபொழுது அத்திருவோலக்
கத்தை கண்டிறைஞ்சிக் கண்களிகூர்ந்தார். பின்னர்க்கருவூரை
யடைந்து நீதிகோடாதுபன்னாளரசாண்டு முத்தியடைந்தார்.

பன்னிரண்டாவது.

தீர்த்தச்சருக்கம்.

காசிதனிலேகங்கைமணிகன்னிகைப்போர்த்தீர்த்தமுத
லாசில்பல்வாந்திருத்தலனுமதனுக்கிசையவாங்காங்கே
தேசுமலியும்பலபலவாந்தீர்த்தமமைத்தேயெம்மனோர்
பாசவினையைப்பறிக்கவல்லபசுபதீசப்பெருமானே.

கௌதமகந்திரத்திலே காசிப கோத்திரத்திலே காலவ
முனிவரென்பவ ரொருவரிருந்தார். அவரிடத்துத் தேவத்துதி
யெனனும் முனிவரர்வந்தார். அவருக்கு அர்க்கியபாத்திய ஆச
மனங்கொடுத்து இனியமுகமன்கூறி ஆசனத்தெழுந்தருளச்
செய்துவணங்கி தவக்கடலே தேவரீர் எங்குநின்றும் எழுந்
தருளாநின்றீர்? என்று விண்ணப்பஞ்செய்ய தேவத்துதி மக
ரிஷியானவர் தீர்த்தயாத்திரைசெய்துவருகின்றேம் எனத்தேவ
ரீர் சென்றுடியதீர்த்தங்களையும் அவைகளிருக்குந் தலங்களையும்
திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று காலவமுனிவர் வேண்
டத் தேவத்துதிமுனிவர் சொல்வாராயினர்.

கேதாரத்திலே - புட்கரதீர்த்தம்.
காசியிலே - கங்கையிலேமணி கனனிகைதீரத்தம்.
பிரயாகையிலே - திரிவேணிதீரத்தம்.
கயையிலே - பிதிர்தீர்த்தம்.
அலம்புதியிலே - வன்னிதீர்த்தம.
மணிகூடததிலே - திரிபுட்கரதீர்த்தம், நர்மதை, கோதாவரி, துங்கபத்திரை, யமுனைமுதலிய தீர்த்தங்கள்.
ஸ்ரீபருப்பததத்திலே — அம்பாதீர்த்தம்.
மாளவததிலே - பானுதீர்த்தம.
சத்தாரணியத்திலே - பிரமதீர்த்தம்.
சீகாளத்தியிலே - பொன்முகலித்தீர்த்தம்.
பிற்பாசகத்திலே - வருணதீர்த்தம்.
திருவாலங்காட்டிலே - குகதீர்த்தம்.
காஞ்சிபுரத்திலே - வேகவதிமுதலியதீர்த்தங்கள்.
அருணசலத்திலே - பிரமதீர்த்தம் துர்க்கைதீர்த்தம்.
விருத்தாசலத்திலே - மணிமுத்தாநதி
சிதம்பரத்திலே - சிவகங்கைமுதலியதீர்ததங்கள்.
திருவாரூரிலே - தேவதீர்த்தம்.
வேதாரணியத்திலே - மத்தியானமணிகன்னிகை, வேததீர்த்தம் கோடிதீர்த்தம்முதலியதீர்த்தங்கள்.
திருப்புகலூரிலே - அக்கினிதீர்த்தம்.
திருவெண்காட்டிலே - காயத்திரிதீர்த்தம்.
திருச்சாய்க்காட்டிலே - சாயாதீர்த்தம்.
திருக்கடவூரிலே - யமதீர்த்தம்.
சீகாழியிலே - பிரமதீர்த்தம.
திருமயிலாடுதுறையிலே - காவிரியிலே துலாமாசத்திலேகங்கை யுதிக்குந்தீர்தம்.
புள்ளிருக்கும்வேளூரிலே - சண்முகதீர்த்தம்.
திருவாவடுதுறையிலே - காமதேனுதீர்த்தம்.
திருவீழிமிழலையிலே - சக்கரதீர்த்தம்.
திருவாஞ்சியத்திலே - சூரியதீர்த்தம்.

திருவிடைமருதூரிலே-காருண்ணியதீர்த்தம், காவிரியிலேபூசத்தீர்த்தம்முதலியதீர்த்தங்கள்.
திருநாகேச்சுரத்திலே-முருகதீர்த்தம்.
கும்பகோணத்திலே-மாமகதீர்த்தம்.
திருச்சத்திமுற்றத்திலே-வேலாயுததீர்த்தம்.
திருவலஞ்சுழியிலே-வலஞ்சுழிதீர்த்தம்.
திருவையாற்றிலே-பஞ்சநதிதீர்த்தம்.
திருவானைக்காவிலே-சம்புநதி, சந்திரபுட்கரணி, முதலியதீர்த்தங்கள்.
மதுரையிலே-பொற்றாமரை, வைகைமுதலியதீர்த்தங்கள்.
கந்தமாதனத்திலே-சேது,தனுக்கோடிமுதலியதீர்த்தங்கள்.
திருக்குற்றாலத்திலே-சித்திராநதிதீர்த்தம்.
திருநெல்வேலியிலே-தாம்பிரவர்ணியிலேசிந்துபூந்துறை, ஏமபுட்கரணி,சர்வதீர்த்தம்முதலியதீர்த்தங்கள்.
கன்னியாகுமரியிலே-கன்னிகைதீர்த்தம்.
திருவனந்தபுரத்திலே-தர்மதீர்த்தம்.
கேரளத்திலே-பாண்டுமகாதீர்த்தம்.
கோகன்னத்திலே-கோடிதீர்த்தம்.
கொங்குநாட்டிலே-காஞ்சிநதிகுடகநதிஆம்பிராநதிமுதலியதீர்த்தங்கள்.

கொங்குநாட்டிலே மேற்சொன்ன ஆம்பிராநதிக் கரையிலே திருக்கருவூரென்னும் திவ்வியக்ஷேத்திரமானது அனேக தீர்த்தங்களுடன் சிறந்துவிளங்குகிறதென்று தேவத்துதி மகாரிஷியானவர் காலவமுனிவருக்குத்திருவாய்மலர்ந்தருளினார்.

பதின்மூன்றாவது,
தலதீர்த்தச்சருக்கம்.

சிவமார்வஞ்சிவனத்தினிடைத்திகழாம்பிரமாநதியுடனே
தவமார்தேனுமுருகவேள்சதுமாமுகத்தோன்றுடையா
மிவராற்கண்டநாற்றீர்த்தமிலகுமரசதீர்த்தமுடன்
பவநோய்தீர்க்குந்தீர்த்தமருள்பசுபதீசப்பெருமானே.

காலவமுனிவர் மீட்டுந்தேவத்துதி முனிவரை வணங்கிச் சுவாமீ! அனேக தலங்களையுந் தீர்த்தங்களையுங்கூறி யீற்றிலே ஆம்பிராநதிக்கரையிலே திருக்கருவூரென்னுந் திவ்யக்ஷேத்திரமானது பலதீர்த்தங்களோடு விளங்குகிறதென்று கூறிவிடுத்ததென்னை திருவுளம்பற்றவேண்டுமென்று வினவ, நன்றுவினுயினீர் கேட்கக்கடவீரென்று தேவத்துதிமுனிவர் சொல்வாராயினுர். உலகத்தினுள்ளே எல்லாப்பதிகளுந்தோன்று முன்னர்த்தோன்றி ஆதிபுரியென்னும் பெயர்பெறுகையாலும், பிரமதேவன் கற்பந்தோறும்படைத்தற்ருெழில்செய்யக் காரணமாயிருந்து கர்ப்பபுரியென்னு நாமம்பெற்றமையாலும், ஓர்விளக்கிலேதோன்றிய பலதீபங்கள் ஒடுங்குங்காலத்தில் தோன்றிய முறையேயொடுங்கி ஒன்ருனற்போல ஆதிலிங்கமாகிய பசுபதீச்சுரரானவர் தன்னுற்ருேற்றுவிக்கப்பட்ட பலதலங்கள் தீர்த்தம் மூர்த்திகளையும் தன்னுட்கரத்தலினுலே கரபுரியென்னும் பெயர் பெற்றமையாலும், கர்ப்பபுரியினுஞ் சிறந்ததலம்பிறிதொன்றில்லை, அதன்பெருமை தோன்றுமாறு மற்றெல்லாத்தலன்களையு முன்னரொடுத்தோதிக்கர்ப்பபுரியினை யீற்றிற்கூறினுமெனக், காலவமுனிவர் அத்தலனிலுள்ள தீர்த்தவிசேடங்களைச் சாங்கோபாங்கமாய்த் திருவாய்மலர்ந்தருள வேண்டுமெனத், தேவத்துதிமுனிவர் சொல்லத்தொடங்கினுர்.

ஙெ்கக்கரூவரிலே அநேகந்தீர்த்தங்களுள்ளன. அவற்றுள் ஆறுதீர்த்தங்கள் மிகச்சிறந்தன. அவைவருமாறு:—

க. ஆம்பிராநதி-இதுதோன்றியொடுங்குங்காறுஞ் சிறந்த தீர்த்தமேயாயினும் வஞ்சிவனத்தெல்லையில் அந்நதி சர்வோத்கிருஷ்டமாகையால் மகாதீர்த்தமெனப்படும்.

உ. தேனுதீர்த்தம் - இதுவெண்ணெய்மலைக்குக் கிழக்கேயுள்ளது.

ங. முருகதீர்த்தம் - பசுபதீச்சுரத்துக்குக்கிழக்கே ஆம்பிராநதிக்கு மேற்கேயுள்ள கோபிதாரவனத்திலிருப்பது.

ச. அரசதீர்த்தம் - பதரிகாச்சிரமத்துக்குமேற்கே ஆம்பிராநதிக்கரையிலே அரசவனத்திலுள்ளது.

ரு. தாடகைதீர்த்தம் - இதுஆதிநாயக ராலயத்துள்ளே பூர்வதிக்கிலேயுள்ளது.

சு. பிரமதீர்த்தம் - இதுவஞ்சுளேசராலயத்துக்குக் கிழக்கேயுள்ளது. இதனை அவ்வாலயத்திற்குமேற்கே யிருந்ததாகப் புராணத்துட்கூறப்படுகிறது. ஒருகால்பூர்வத்தில் பிரம தீர்த்தத்துக்குக்கிழக்கே இருந்தவஞ்சுளேச்சுர ஆலயமானது நதிப்பெருக்காற் பழுதுபட்டுப்பின்னர் அத்தீர்த்தத்தின்மேல் புறத்திற்கட்டப்பட்டிருக்கிறதுபோலும்.

இத்தீர்த்தங்கள் மிகவும்விசேடித்தவைகளாதலின் இவற்றிலொன்றின் புனலைச்சிரத்திற் புரோக்ஷித்துக்கொள்ளினும், தொடினும், உட்கொள்ளினும் சகலபாவங்களையும் போக்கிப் புண்ணியத்தைத்தருமானால் இவற்றில்விதிப்படி நீராடுவோர் பெறும்பலனை நம்மனோரால் அளவிடற்கெளிதோ? அன்று.

பதிநான்காவது,

கோபிதாரத்துவசன்சருக்கம்.

வழிமிக்குடையவிசாலைநகர்மன்னன்கோபிதாரனெனு
மழிவில்புகழோனகத்தியனுரடையவவரையவமதித்துப்
பொழியுங்கருணைநோக்கிழந்துபொல்லாக்குட்டநோயடைந்த
பழியைத்தொலைத்ததிருக்கருவூர்ப்பசுபதீசப்பெருமானே.

மிகுந்த வளமைபொருந்திய விசாலைஎன்னும் நகரத்திலே திராவிடமரபிலே தோன்றிச் சகலசற்குண சம்பன்னனாகிய கோபிதாரத்துவசன்என்னும் அரசனொருவனிருந்தான். அவன் சிவபத்தி யடியார்பத்தியுடையோனாய் மன்னுயிர்களுக்கன்னை போன்று மனுநெறிகோடாது அரசுபுரியுநாளிலோர்நாள், சிவனடியாரிற்சிறந்த அகத்தியமுனிவரானவர் பலமகாரிஷிகள் தம்மைச்சூழ்ந்துவர அவ்வரசனைக் காணும்பொருட்டு எழுந்தருளி

அரசனிடத்துவந்தார். அரசன்சிவபத்தாக்ரகண்யராகிய அகத்தியனையும் முனிபுங்கவர்களையுங்கண்டு எழுந்து வந்தனைவழிபாடுசெய்திலன். ஊழ்வினை அறிவைமயக்குதலால் வாளாவிருந்தான். அகத்தியமகாமுனிவரானவர் தம்மை அவமதித்ததையுந் திருவுள்ளங்கொள்ளாது தம்முடன்போந்த சிவனடியார்களை அவமதித்தற்குப் பொறுதவராய்ச் சென்றவழியேமீண்டு தம்முடனுறையும் பிரமிட்டனென்னும் முனிவர்பிரானை நோக்கிச் சிவனடியார்களை மதியா தகந்தைகொண்டிருந்த அவ்வரசனைச் சபிக்க நினைந்தேன். இன்றுவிரதகாலமாயிருத்தலினு லங்கனஞ் செய்திலேன், நீபோயவ்வரசனைச்சபித்து வருவாயாகவென்று ஏவ அவ்வாறே பிரமிட்டமுனிவரானவர் கோபிதாரத்துவசனிடத்துச்சென்று சிவனடியாரை அவமதித்திருந்த மன்னவனே? நீ குட்டநோயால் வருந்தக்கடவையென்று சபித்து மீண்டனர். பின்னர் முனிவர்கள்யாவரும் பொதியமலையையடைந்தார்கள். கோபிதாரத்துவசனுக்கு யாவரும் அருவருக்கத்தக்க குட்டநோயானது மேற்கொள்ள அரசன் துணுக்குற்று நோயின் வருத்தஞ்சகிக்கலாற்றுது வருந்தினன். அந்நோய்நீங்கும் பொருட்டுப் பற்பலபிராயச்சித்தங்கள்செய்தும் அதுசற்றும் நீங்கிலது. பிணியின் வருத்தஞ்சகிக்கலாற்றுது நாடுநகரந் துறந்து வனத்திற்றிரிதருகையில் முன்செய்த புண்ணியவசத்தால் பிரமிட்டமகாமுனிவரது ஆச்சிரமத்தையடைந்தான். பிரமிட்டமுனிவரைக்கண்டு அவரதுபாதங்களில்வீழ்ந்து பணிந்து இறைவனே யான்செய்தகுற்றத்தைப் பொறுத்தருளவேண்டும் என்று பலவாறுவேண்டினன். ஓ? அரசனே நின்க்குஇக்குட்டநோய் வரும்படி சபித்தவன்நானேயாயினும் அதனைஎன்மனசோச்சையாகச் செய்திலேன். எனதாசிரியராகிய அகத்தியமுனிவரது கட்டளைப்படிசெய்தேன். அச்சாபநீங்கியுய்யவேண்டுமானல் அகத்தியமகாமுனிவரது பாதத்திற்சரணடையக்கடவாயாக என்றுவிடைகொடுத்தார். கோபிதாரத்துவசனானவன் அகத்தியமுனிவரது ஆச்சிரமத்தையடைந்து அவரதுபாதங்களிலே தண்டாகாரமாய்விழுந்து மனங்கசிந் துருகிப்பணிந்தான்.

அகத்தியமுனிவர் அரசனைநோக்கி மனமிரங்கி, வருதிகோபிதா ரத்துவசமன்னனே? சிவனடியார் நிந்தைசெய்த பெருங்கொடும்பாவத்தால் இச்சாபம்பெற்றனை இது தீரவேண்டுமாயின் சேரநாட்டிலே ஆம்பிராநதிக்குவடகரையிலேயுள்ள கர்ப்பபுரியையடைக்கடவாயாக, அங்குப்பதரிவனத்திலேவசிக்கும் வேதவியாசமுனிவரையடுத்து அவர்கூறுமாறு ஒழுகிப்பிரமதீர்த்தத்திலேமூழ்கிப் பசுபதீச்சுரனைப்பூசிப்பாயாகவென்றுதிருவாய்மலர்ந்தருளிவிடைகொடுப்ப அரசன்வணங்கிவிடைபெற்றுக்கருவூரையடைந்தான். அங்கு, பதரிவனத்திலே அடியார்குழாங்களோடு வீற்றிருந்தருளிய வேதவியாசமுனிவரைக்கண்டு வணங்கியெழுந்து அஞ்சலியஸ்தனாய்நிற்ப அவன்முகநோக்கி வியாசமுனிவரானவர் கோபிதாரத்துவசனே நீ இங்ஙனம் பொலிவழிந்து குட்டநோயால்வருந்தி யடைந்தவாறென்னை என்று வினவக் கோபிதாரத்துவசன் சொல்லுவானாயினன். சுவாமி! அடியேன் செல்வச்செருக்கினாலே சிவனடியார்களாகிய அகத்தியமகாமுனிவர் முதலாயினோரைக்கண்டும் எழுந்து வந்தனை வழிபாடுசெய்யாதிருந்தேன் அதுகண்டு அகத்தியமுனிவர் பிரமிட்டமுனிவரால் இந்நோய்கொண்டுழலுமாறு சபிப்பித்தார். அதனாற்சேர்ந்த இக்கொடுநோயானது எவ்விதபரிகாரஞ்செய்துந் தீராது அகத்தியமுனிவரையே சரணமடைந்து அவருத்தரப்படி தேவரீரிடத்து இங்குவந்தேன் என்று விண்ணப்பஞ்செய்ய வேதவியாசரானவர் சிவசிவவென்று இருகன்னங்களையும் பொத்திச் சிவனடியாரைநிந்தனைசெய்த பாவிகளைக்காணவும் பேசவும் விதியில்லையாயினும் அகத்திய மகாமுனிவரோ பிராயச்சித்தங் கூறி இவ்விடத்திற்கனுப்பிய காரணத்தால் இவ்வரசனைப்புறக்கணித்தலுங் கூடாதெனவெண்ணி, அரசே! எவ்வகைப்பாவங்கள்செய்யினும் அவைகளுக்கெல்லாம் பிராயச்சித்தமுள. குருத்துரோகம், சிவத்துரோகம், சங்கமத்துரோகம், என்னு மூன்று துரோகங்களும் சாற்றருங்கொடிய மகாபாதகங்களாதலின் அவைகள் எவ்வகைச்சாந்திகளாலுந்தீரா நீ அகத்தியமுனிவர் அனுஞைப்படி கருவூரையடைந்தமையால் அப்பாவம் நீங்கு

தற்கு உபாயங்கூறுதும்கேள் தினந்தோறும்பிரமதீர்த்தத்திலே மூழ்கிக் காலைமுதல்மாலை வரையில் பசுபதீச்சுரத்தையும், வெண்ணெய்மலையினையும், பிரமகுண்டத்தினையும், பிரதக்கணஞ் செய்து, பசுபதிப்பெருமானையும் பூசிப்பாயாக, இவ்வாறு எட்டு நாட் செய்வாயாயின் உய்வாய்என்று திருவாய்மலர்ந் தருளினர்.

கோபிதாரத்துவசன் அவ்வண்ணமேயொழுகி எட்டாநாள் சிவார்ச்சனைசெய்து தோத்திரம்செய்கையில் சிவபெருமான் பிரசன்னராய் அரசன்வேண்டும்வரங்களைக்கொடுத்தருளி மறைந்தார். கோபிதாரத்துவசன் மறுவொழிந்தமணிபோல் விளங்கிச்சின்னாள் கருவூரிலேவதிந்து அப்பால் விசாலையென்னுந் தனதுநகரத்தையடைந்து, அங்குஒருபுத்திரனைப்பெற்று அவன் றேண்மேல் இராச்சியபாரத்தைச்சுமத்திப் பின்னர்க்கருவூரையடைந்து சிவபூசையே நியமமாகச்செய்திருந்து ஈற்றிலே முத்தியடைந்தான்.

பதினைந்தாவது,

விபண்டகச்சருக்கம்.

அஞ்சாக்கொடியகொலைசெய்விபண்டகனும்வேடனுதிரைநாள்
கஞ்சார்களத்தெம்பெருமான்றன்திருமேனியிலார்நகைகவரும்
னெஞ்சான்னெருக்கமுண்டிறப்பநிகரில்கைலையடைவித்த
பஞ்சானனனேதிருக்கருவூர்ப்பசுபதீசப்பெருமானே.

யமனையொத்துமாக்களது உயிரையும் பொருளையும் ஒருங்குகவருங்கள்வனாய் வேடுவகுலத்திற்பிறந்த விபண்டகனென்பவனொருவனிருந்தான், இவ்வேடன்செய்யும் வன்கொடுஞ்செய்கைகளை நினைப்பினுங்கூசும். இவ்வாறொழுகுநாளில் மார்கழித் திருவாதிரை மகோச்சவம்வர அவ்வுச்சவத்திற்குச் செல்லும் அடியார்கூட்டத்துடன்சேர்ந்து அவர்களைப்போலச் சிவசின்னந்தாங்கிக் கள்ளவேடம்பூண்டு கருவூரையடைந்து ஸ்ரீநடேசப்

பெருமான்மீ தணிந்திருக்குந் திருவாபரணங்களைக்கவரச் சமயம்பார்த்துக் காத்திருந்தான். அப்பொழுது தாண்டவேசப் பெருமான் சகலவைபவங்களுடனே திருவிழாக்கொண்டருளினுர். அக்காலத்திலே விபண்டகனுகிய வேடன் நெருக்குண்டு கீழேவிழ அடுத்து நின்றோர்சிலர் அவனை எடுத்துபசரித்தும் நெருக்கத்தில் துவைப்புண்ட காரணத்தால் இறந்தான். அவனைப்பற்றவந்த யமதூதர்களைத்துறத்திச் சிவகணங்கள் அவனை விமானத்திலேற்றிச் சிவபுரத்தை அடைவித்தார்கள்.

பதினறுவது,
நியமச்சருக்கம்.

எற்றுதிரைத்தீம்புனன்மூழ்கியெழுத்தைந்தோதிநீறுபுனைந்
துற்றவனநன்மலர்கைக்கொண்டுயருஞ்சிவபூசனையாற்றிக்
குற்றந்தீரத்திருக்கோயில்சூழுநியமம்கொண்டவர்க்குப்
பற்றுக்கோடாந்திருக்கருவூர்ப்பசுபதீசப்பெருமானே.

நியமமாவது விடியற்காலத்திலெழுந்து ஊர்ப்புறத்துச் சென்று மலசலமோசனஞ்செய்து சவசமுடித்துப்பற்கோலிட்டு வாய்பூசி ஆம்பிராநதிக்கட்சென்று விதிப்படிநீராடிவிபூதி யுருத்திராக்கமணிந்து திருவைந்தெழுத்தைத்தியானித்து நந்தனவனத்துட்சென்று பத்திரபுட்பாதிகளை விதிவிலக்கறிந்தெடுத்துத் திருப்பூங்கூடையிற்பெய்து இல்லத்தின்கட்சென்று சிவபூசைவழாதுசெய்து திருவாலயத்தையடைந்து விதிப்படி பிரதக்கணமாதியசெய்து சிவலிங்கப்பெருமானையும் அம்மை விநாயக சுப்பிரம்மணியராதிகளையும் விதிப்படி மெய்யன்போடு நமஸ்கரித்துப் புறம்போந்து வீட்டின்கண்ணே விருந்தினர் முதலாயினரோடும் புசிக்கலாகாதனவிலக்கி யமுதருந்திநண்பகலிலே கண்துயில்கொள்ளாது சிவபுராணசிரவணஞ்செய்து மாலையிலும் சந்தியாவந்தனுதி சிவதரிசனமீறுகச்செய்து போதருவதேயாம். இதனைச் செய்தொழுகுவோர் நித்தியானந்த முத்தியைப்பெறுவது திண்ணம்.

பதினேழாவது,
தலமகிமைச்சருக்கம்.

கயிலாயம்மந்தரம்மதுரைகாசிகாஞ்சிபிரயாகை
நயிமிசக்காசேதுவுடனகராங்கருவூரொனுமொன்பான்
செயிர்தீர்நல்லதலங்களுள்ளேசிறந்ததலமாங்கருவூரிற்
பயிலாநிற்போர்க்கருள்பழுத்தபசுபதீசப்பெருமானே.

கயிலாயகிரி-மந்தரகிரி-மதுரை-காசி-காஞ்சி - பிரயாகை-நைமிசாரணியம்-சேது-கருவூர் - என்னும் ஒன்பந்து தலங்களும் உலகத்திலுள்ள மற்றெல்லாத்தலங்களிலுஞ் சிறந்தன. அவற்றுள்ளுங் கருவூர்மிகச்சிறந்தது. கருவூரொழிந்த மற்றெட்டுந் தலங்களையுந் தெரிசிக்கும்பேற்றைக்கருவூர் ஒன்றே எளிதிற் கொடுக்கும், கருவூரிலே சிவபெருமான் திருவாநிலையென்னுந் திருக்கோயிலில் எழுந்தருளியிருத்தலானும், திருநெடுமால்பள்ளிகொண்டிருத்தலினானும் அதனைபாற்கரபுரம்என்ப. மலை, ஆரணியம், நதி, தீர்த்தங்கள், நகரம், திருக்கோயில், என்னும்ஆறு மங்களங்களையு முடைத்தாயிருத்தலின் அதற்கு ஷண்மங்கல க்ஷேத்திரமென்றும்பெயர். அத்தலத்தைச்சுற்றிலும் ஐங்குரோசம்வரையில் பவித்திரமாகையால் அதிலுள்ள சராசரங்களனைத்தும் பரிசுத்தமானவைகளேயாம். இத்தலத்திற்செய்யும் புண்ணியங்கள் மற்றதலங்களிற்செய்வதினும் ஒன்றனந்தமாய் விருத்தியாகும். பாவங்கள்தேய்ந்துபோம். குறுநிலமன்னவர் கொடுங்கோல்செலுத்தி உலகங்கலியின் மூழ்கவருங்காலத்திலே ஆதிப்பெருமானது திருவுருவத்திலே கலையான்ஏன்னுஞ்சிதல் படரும். என்று இத்தலமான்மியத்தைச் சூதபுராணிகர் நைமிசாரணியவாசிகளுக்கு உணர்த்தியருளினர். இப்புராணத்தைப் படித்தோர்கேட்டோர் படிப்பித்தோர் கேட்பித்தோர் எழுதினோர் எழுதுவித்தோர் முதலாயினோரும் பேரானந்தப் பெருவாழ்வடைவார்கள்.

பதினெட்டாவது,

கருவூர்ச்சிறப்புச்சருக்கம்.

கடிசேர்மதிலுநெடுமாடங்களினுந்தெருவுமாடமிசைக்
கொடியார்நிரையுந்திருக்கோயிற்குலமுமடவார்கொழுனருடன்
குடிசேர்நலனுந்தபோதனர்கள்குழுவும்பல்வளமையிலே
படிமீதுயர்ந்ததிருக்கருவூர்ப்பசுபதீசப்பெருமானே.

மிகுந்தசிறப்புற்றோங்கிய சோலைகளாலும் மருதநிலஞ்சூழ்ந்த வளப்பமிகுதியினாலும் இந்திரன்நகரத்துக்கு மேலான எழில்வாய்ந்த கருவூர்நகரமானது அநேக வேதப்பிராமணர்களும், தபோதனர்களும், முடிமன்னர்களும், வணிகர்களும், சூத்திரர்களும், மற்றொழிந்த மரபினரும் தத்தம்மனைவி மகாருடனே தத்தம்வருணாச்சிரமங்களுக்கு விதித்தவிதிப்படி ஒழுகலினாலும், நெல்முதலியனபயிரிடுவோர் செய்யும்கிருஷிகத்தொழிலினாலும், அரசர்பயிலும் படைக்கலத்தொழிலினாலும், பிறவாற்றானும், ஓசைமலிந்து தனக்கிணையில்லாததாய் விளங்கும்.

பத்தொன்பதாவது,

எறிபத்தச்சருக்கம்.

அத்தர்க்காகுமலர்சிதைத்தயானைபாகரோடமையாழ்
தொத்திங்கெனையுமடுகவெனவுடைவாள்வளவன்கொடுப்பநெகி
சித்தராகியவ்வாளைத்தமதுகளத்திற்செறித்தவெறி
பத்தர்க்கிரங்கியருள்கருவூர்ப்பசுபதீசப்பெருமானே.

உறையூரிலே அரசாக்ஷிசெய்துகொண்டிருந்த புகழ்ச்சோழரானவர் தமதாக்ஷிக்குள்ளாகிய கருவூரிலே மேனாட்டரசர்கள் திறையளத்தலைக்காணும்பொருட்டு வந்திருந்தார். கருவூர்த்திருவானிலைநாயகரைத் தரிசித்து வாழ்ந்திருக்குநாளிலே சிவனடியார்களுக்கு இடர்நேர்ந்தழியின்மெனப்போந்து, இடர்செய்வாரைக் கடியும்பொருட்டு மழுப்படையேந்திய கையையு

டையராகிய எறிபத்தரென்னும் பெரியவரொருவரிருந்தார். அக் காலத்திலே பிராமணகுலத்திற் றோன்றியவராயும், நித்தலும் பொழுதுவிடியுமுன்னெழுந்து ஸ்நானஞ்செய்து விதிப்படி நந்த னவனம்புகுந்து திருப்பூங்கூடையிலே பலவிதபத்திரபுஷ்பங்க ளெடுத்து அதனை இண்டைதொடையல் முதலியமாலைகளாக்கிச் சிவபெருமானுக்குக்கொடுத்து வருநியமமுடையவராயும் இரு ந்த சிவகாமியாண்டாரென்பவர் தந்நியமப்படி பூக்கொய்தமை த்த பூங்கூடையைக் கோலிற்றூங்கவிட்டு அதனைத் தோளிற் சுமந்து தெருவீதியிலே செல்லாநின்றார். அன்றுமகாநவமி யா கையால் நகரமலங்கரிக்கப்பட்டிருந்ததுமன்றிப் புகழ்ச்சோழ ரது பட்டவர்த்தனமென்னும் பெயரியயானையானது அலங் கரிக்கப்பட்டுப் பாகர்களுடன் தெருவிற்பவனிவராநின்றது. அக் காலையில் அவ்வியானைக்குச் சிவகாமியாண்டார் எதிர்ப்பட யா னை அவரதுதோளிற்கிடந்த திருப்பூங்கூடையைப்பறித்து அத னுள்ளிருக்குமலர்களைச் சிந்திச்சிதறிவிட்டுத் தெருவிற்போயது சிவகாமியாண்டார் அதனுடன்தொடர்ந்து பற்றலாற்றாது சிவ தா? சிவதா? என்றுமுறையிட்டனர். அதுகேட்டுவந்த எறிபத் தர் அங்குநிகழ்ந்தனவற்றைச் சிவகாமியாண்டாருணர்த்த வுண ர்ந்து மழுப்படையோடு யானையின்முன்னர்க்குதித்து அதனது துதிக்கையைத்துணித்து வீழ்த்தினர். பட்டவர்த்தனமென்னும் யானை அலறிக்கீழேவிழுந்து மாய்ந்தது. அதன்மேற்கொண் டிருந்த இரண்டுபாகரையும் அதனயலில்வந்த மற்றிருவரையுந் தடிந்து வீழ்த்தினர். அதனைக்கண்ட சிலரோடி பட்டவர்த்த னம்பட்டதென்று அரசருக்கறிவிக்க அரசர் அதுமாற்றலரானி கழ்ந்ததாகவெண்ணிச் சிம்மாசனத்தினின்றுமிழிந்து ஒருபரிமீ தேறி யானைபட்டகளத்தையடைந்தார், அங்குப் பகைவராவார் யாவரையுங்காணாது தமதுடல்பொருளாவி மூன்றினையுமடிமை படைத்துடைய சிவனடியார் நிற்பக்கண்டார். உடனே பரியி னின்றுமிழிந்து சிவனடியாரது பாதங்களிலேவீழ்ந்துவணங்கி சுவாமி! அடியேன் நிரவிசாரியாமையால் இவ்வழியடைந்தேன் தேவரீர் செய்கையென் றுணரப்பெற்றலிங்கு வருவேனல்

லேன். யானைசெய்த சிவாபராதமென்னையோ அதுவுமுணர்ந்தி லேன் என, எறிபத்தர் அரசரே சிவகாமியாண்டார் சிவபெரு மானுக்காகக் கொணர்ந்த செழுமலரை இவ்வியானைபறித்துச் சிதறியது. பாகர்முதலாயினோர் அதுகண்டும் விலக்காதொழிந் தார்கள். ஆதலின்யானையையும் பாகரையுந்தடிந்தேன் என்று கூறினர். புகழ்ச்சோழர்மீட்டும்வணங்கி அடிகளே! இப்பெருங் கொடுஞ் சிவாபராதத்திற்குக் காரணஸ்தன்யான். என்னையுங் கோறல்அமையும். தேவரீர் கையிலுள்ள மழுப்படை மிகப்பரி சுத்தமானதாகையால் அதுபாவியாகியவடியேனைச் சிதைத்தற் கொல்லாது. எனதுடைவாளைத் தருகின்றேன் அதுகொண்டு என்னைத்தடிந்து குற்றந்தீர்த்தல்வேண்டுமென்று மொழிந்து உடைவாளைக்கொடுப்ப எறிபத்தர் அரசரது திருவுள்ளக்கிடை யையுணர்ந்து வாளைவாங்காதொழியின் அரசிறந்துபடுமென் றுணர்ந்து கருணையோடு வாளைவாங்கினர். அரசர் உய்ந்தேன் உய்ந்தேனென்று மகிழ்ந்து குனிந்து நின்றனர். வாளைவாங் கிய எறிபத்தர் வேறொன்றுஞ் செய்தற்குத் தோற்றுதவராய்த் தமதுகளத்தை யீருதலேதுணிபென்றுதுணிந்து களத்திடை வாட்பூட்டி அரியலுற்றார். அதனைக்கண்ணுற்ற புகழ்ச்சோழர் மிகவும்அஞ்சி எறிபத்தரது திருக்கரத்தைப்பற்றிக்கொள்ள எறி பத்தரும் விடாராய்க்களத்தைக்கொடுப்ப இவ்வன்பர்களதுஅன் புக்கிரங்கி ஆகாயவாணியானது அன்பர்காள் உங்களது மெய் யன்பினையுலகமீறிந்துய்யுமாறு இந்நிகழ்ச்சி நிகழ்ந்தது; என்று எழுந்தது. அக்காலையில் எறிபத்தர் புகழ்ச்சோழர்என்னு மிர ண்டுண்மை நாயன்மார்களும் ஒருவரையொருவர்வணங்கி யிரு வரும் ஆகாயவாக்கைவணங்கிச் சிறந்தார்கள். உடனேபட்டி றந்தயானையும் பாகரும் உயிர்பெற்றெழுந்தார்கள். சிவகாமியா ண்டாரது திருப்பூங்கூடையும் புஷ்பங்களால்நிரம்பிற்று. தேவ துந்துமியார்த்தன. தேவர்கள் புஷ்பவருஷம் வருஷித்தார்கள். அடியார்கள் ஆரவாரித்தார்கள். இவ்வற்புதம் நிகழ்ந்தபின்னர்ச் சின்னாள் எறிபத்தர்சிவத்தொண்டுசெய்திருந்து முத்திபெற்றார்.

இருபதாவது,

புகழ்ச்சோழச்சருக்கம்.

காய்ந்தசுடர்வேற்புகழ்ச்சோழர்கண்ணூர்நுதலோனடியார்கள் வேய்ந்தசடையாதிகளிடத்துமெய்யன்புடையார்பெரும்போரி ன், மாய்ந்ததலையொன்றினிற்சிறுபுன்சடைகண்டயர்ந்துவளர்ந் தெரியிற்,பாய்ந்துகதிபெற்றிடுங்கருவூர்ப்பசுபதீசப்பெருமானே.

வளவர்பிரானாகிய புகழ்ச்சோழரானவர் கருவூரிலே அழ கிய அத்தாணிமண்டபத்திலே அமைச்சர் முதலாயினோர்சூழக் கொலுவீற்றிருக்கையில் மேற்குநாட்டரசர்கள் வரிசை வரிசை யாகவந்து திறையளத்தலைக்கண்டு மகிழ்ந்து அமைச்சர்களை நோக்கி மேற்றிசையிலே இன்னும் நமக்கடங்காத வேந்தர்களு முளரோவென்று வினவினார். அமைச்சர்கள்வணங்கி ஆண்ட வனே! மலையரணமுடைய அதிகனென்பானொருவனிருக்கின் றான் என, அங்ஙனமாயின் அவனோடுயுத்தஞ்செய்து வெற்றி பெற்று வருவீர்களாகவென்று மந்திரிகளுக்கு விடைகொடுத் தார். விடைபெற்ற மந்திரிகள் இரதகஜதுரகபதாதிகளாகிய நால்வகைச்சேனைகளோடுஞ்சென்று அதிகனது நகரத்தைவளை ந்துகொண்டார்கள். அதனைஅதிகனுணர்ந்து தனது சேனையோ டெதிர்த்துப்போராடினான். கடைசியாக அதிகன்போருக்குடை ந்து புறங்காட்டியோடியொளித்தான். வெற்றியடைந்த அமை ச்சர்கள் அதிகனதுநகரத்துட்சென்று பற்பலவளங்களையுங்கவர் ந்து படுகளத்திறந்த பகைவர்சிரங்களைப்பொதிகளிலேற்றி அர சர் பெருமான்முன்னர்க்கொணர்ந்தார்கள். அவர்கள்கொணர் ந்தபகைவர் படையின்றலைக்குவியலை அரசன்நோக்குழி ஓர்தலை யில் சிறியசடையொன்றிருத்தலைக்கண்டார் ஆகெட்டேன் சிவ னடியார்களைக்கொன்று பழிபூண்டேனேஎன்று மிகவும் வருந் தினார். அடிக்கடி அத்தலையை நோக்கிநோக்கிக்கண்ணீர்சொரிந் தார். இப்பழியை யான்தீக்குழித்தொழித்தாலல்லது நீக்குத லரிதுஎன்று திர்மானித்தார். அமைச்சர்கள் அண்ணலே இதனை மனுநூல் வழிப்பிராயச்சித்தஞ்செய்தொழித்த லமையாதோ

இதற்காகத் தேவரீர்பிராணத்தியாகம் செய்தல்வேண்டுமோ என்றுவணங்கிக்கூறப் புகழ்ச்சோழர் சிவனடியார்களைச் சிதைத்ததோடத்திற்குப் பரிகாரமுமுளவோவென்று மறுத்து புத்திரனுக்கு இராச்சியபட்டாபிஷேகம்செய்யக் கற்பித்துத் திருவாலயத்திலே அக்கினிக்குண்டம் சமைப்பித்து வெட்டுண்ட சடைத்தலையை நல்லபொற்றம்பாளத்திலேவைத்து பட்டினுலேயலங்கரித்து அதனைத்தமதுமுடிமேற்றாங்கித் திருவாலயத்துட்போய்த் திருவானிலையுடையாரை வலம்வந்து அக்கினியிலேமூழ்கினார், தேவதுந்துமிமுழங்கத் தேவர்கள் புஷ்பமாரிபெய்யப் புகழ்ச்சோழரானவர் சிவபெருமானது ஸ்ரீபாதாரவிந்த நீழலையடைந்தார்.

இருபத்தோன்றாவது,

கருவூர்த்தேவர்கதிபெறுசருக்கம்.

வரமார்கருவூர்த்தேவனெனுமௌனசிவயோகியர்வேதச்
சிரமாரிசைப்பாபலமொழிந்துசிவத்தானங்கள்பலவணங்கிக்
கரமார்நெல்லியெனச்சித்திகாட்டிவதியவவர்க்குமுத்திப்
பரமானந்தந்தருங்கருவூர்ப்பசுபதீசப்பெருமானே.

கருவூர்த்தேவரானவர் கருவூரிலே மறையவர்குலத்திலே பிறந்தவர். இவர் உலகாயுதமுதலியபலசமயங்களையும் நன்காராய்ந்துணர்ந்து சைவசமயமேசற்சமயமென்றுதேறி அதன்வழியேயொழுகுவாராயினார். வேதம் ஆகமமென்னும் முதனூல்வல்லோராய் வைதிகசைவந்தழைத்தோங்கத் திருவிசைப்பாபாடியருளினார். இவர் சிவயோகங்கைவந்த சித்தராகையால் எச்சமயங்களிற்சென்றாலும் எத்தொழில்புரிந்தாலும் மாதவஞ்செய்தாலும் மாதர்பாலிருந்தாலும் தாமரையிலையினீர்போல் பற்றற்றிருப்பர். இவர் திறத்தையுணராத புன்மதியினராகிய பிராமணர் சிலர்கூடி இவர் மதுவூணருந்தும் வாமமார்க்கத்தவரென்று இகழ்ந்தார்கள். அவர்களைத்தெருட்ட நினைத்து அவர்

கள்கான அகாலத்திலே மழை வருஷிக்கச்செய்தும், நதிபெரு கிவரப்பண்ணியும், சிவபெருமானது திருக்கோயிற்றிருக்கதவந் தாள் திறக்கச்செய்தும், பூதங்கள் குடைபிடித்துவரக்கற்பித் தும், இவ்வாறுபல அற்புதங்கள்செய்தனர், மலைகளிலும் வன ங்களிலும் சஞ்சரித்தனர். பற்பலநாட்டகத்துஞ்சென்று சிவ தெரிசனம் செய்யக்கருதி, கொங்குநாடு, குடநாடு, கன்னடம், துளுவம் மகதம் கோசிகம் கோசலம் உஞ்சை அவந்தி சாளக் கிராமம் மாளவம் ஆரியம் மராடம் குருக்கேத்திரம் இலாடம் அயோத்தி ஏமாங்கதம் கவுடம் பல்லவம் மத்தியம் முதலிய தேயங்களிலும் அவற்றை யடுத்தவனமுதலியவைகளிலும் செ ன்று காசி காஞ்சி காளத்தி அருணாசலம்முதலிய பலதலங்களை யும் சிதம்பரமுதலியதலங்களையும் தரிசித்துப் பாண்டிநாட்டை யடைந்து மதுரைமுதலிய தலங்களைவணங்கித் தாம்பிரவர்ணி நதிதீரத்திலே குருகூரென்னும் வைணவாலயத்தையடைந்தார். அப்படியவரடையுமுன்னரோ திருமாலானவர் அடியார் கனவிற் றோன்றிக் கருவூர்ச்சிவயோகியார் இங்குவருகின்றார் அவர்க்கெ திர்சென் றுபசரியுங்கள் என்றருளப் பாகவதர்கள் பரிவாரங்க ளோடு எதிர்சென்றுவணங்கி ஆசீர்வதிக்கப்பெற்றார்கள். அங்கு நின்றுந் திருச்செந்தூரைவணங்கி கன்னியாகுமரியையடைந்து குமரிதீர்த்தமாடிச் சுசீந்திரத்தைப்போற்றித்திருநெல்வேலியை யடைந்தார். நெல்லையப்பரை யன்போடழைக்க அவர் அன்பர் பெருமையை யுலகிற்கறிவுறுத்துமாறு வராமற்றாழ்ந்தார். ஈச னிங்கில்லாமையால் நல்லோர்குறைந்து நகரம் எருக்கெழக் கடவதென்று சபித்தனர். சிவபெருமான் அடியார்களைக் கருவூர் த்தேவரிடத்துத்திரண்டுவரும்படி ஆஞ்ஞாபித்துத்தாம்அவருக் கெதிர்தோன்றி அனுக்கிரகித்தருளினர். கருவூர்த்தேவர் ஆனந்த க்கடலில் மூழ்கினவராய்த் திருவிசைப்பாபாடித்துதிசெய்தார் அப்போது சிவனடியார்களும்வந்து வணங்கி அவர் முன்ன ரிட்டசாபம் நீக்கியருளப்பெற்றார்கள். அதன்மேற்கே ஒரு குரோசதூரத்தில் ஒருசிவலிங்கத்தைக்கண்டு யோகியார் தழுவ அவ்விலிங்கங்குழைந்தது. அங்குநின்றுந் திருப்புடைமருதூரை

யடைந்து சிவபெருமானை யழைத்தபொழுது கன்றின்குரல் கேட்ட பசுவைப்போல ஓலஓலவென்றருளி எதிர்வந்து காட்சி கொடுத்தருளினார். அங்கு திருவிசைப்பா பாடிப்பணிந்தார். அங்குநின்றும் கசேந்திரமோட்சமென்னும் விஷ்ணுவாலயத் யடைந்து அப்பால் முன்றீசரைவணங்கி அழைத்தார் அவர் எதிர்தோன்றி வேண்டுவதென்னையென, மதுவேண்டுமென்ன அவர் காளியைநோக்கிக் கருவூர்த்தேவருக்கு மதுக்கொணர்ந்து திருவடிபணித்தருள, காளி மதுவைக்கொணர்ந்தாள். இதனை யுணர்ந்த காளி கோட்டவாசிகளாகிய கருமயோகிகள் கருவூர்த் தேவரையடுத்துவணங்கத் தேவர் அவர்களைநோக்கி மீன்கொணரும்படி கூறினார். அவர்கள்போய்த்தேடியும் அகப்படாமல் கருவூர்த்தேவர்பால் விண்ணப்பஞ்செய்ய அருகேயிருந்த ஒரு வன்னிமரத்தைநோக்கி மீன்வருஷம் வருஷிக்கும்படி கட்டளையிட அவ்வாறே வருஷித்தது. கருவூர்த்தேவர் கருமயோகிகளை நோக்கி நீங்கள் இவ்வாறு செய்யலாற்றாது மயங்கி மதுபானாதிகள் செய்துழலுவதென்னையென்று அறிவுறுத்த அவர்கள் முத்திநெறி யடையும்படி அனுக்கிரகிக்க வேண்டு மென்று வேண்ட அவர்களைப் பொதியமலைக்கு வரும்படி யுத்தரவு செய்து அருகிலுள்ள ஒருவிஷ்ணுவாலயத்தையடைந்து அவரைவிளித்தும் அவர் வராமையால் அவருக்குப் பூசையற்றுப் போகவெனச் சபித்தார். அங்ஙனமேயாயது. பின்னர்த் திருக்குற்றாலஞ்சென்று திருவிசைப்பாபாடியருளிப் பொதியமலையையடைந்து அகத்தியனாரைத்தரிசித்து அங்கொருசார் எழுந்தருளியிருந்தார். அப்பொழுது தஞ்சையிலே சோழராஜனாற் சமைக்கப்பட்டஒருபெரியஆலயத்திலே சிவப்பிரதிஷ்டைசெய்யப்பலவாறு முயன்றும் மருந்திளகிப் பந்தனமாகாது வருந்தினான். கருவூர்த்தேவர்வந்தாலல்லது காரியம்சித்தியாகாதென்று ஆகாசவாக்குப்புறப்பட்டது. அங்கிருந்த பெரியோர்களுள் உருவமறைத்தெழுந்தருளிய போகநாதரானவர் கருவூர்த்தேவருக்குக்காக்கையின்காலிற்கட்டி ஓலைவிடுத்துக் கருவூர்த்தேவரை வரவழைத்தார். கருவூர்த்தேவர் அங்குவந்திருந்த போகநாதர்

முதலியோர் அனுமதிகொண்டு ஆலயத்தினுள்ளே பிரவேசித்துச் சிவலிங்கப்பெருமானை ஆவுடையாளுடன் சேர்த்துச்செவ்வனே நிறுத்தித்தமது திருவாய்த்தம்பலத்தை யுமிழ்ந்து பந்தனம்செய்தருளினர். அப்பந்தனம் பசும்பொன்னுருக்கி யமைத்ததுபோலிருத்தலை நோக்கி யாவரும் வியந்தார்கள். தேவர்கள் புஷ்பமாரி பெய்தார்கள், அவ்விடம் விட்டுத்திருவானைக்காவை வணங்கித் திருவரங்கத்திற்கு வந்தார். அவர் எழிலைக்கண்ட ஒரு பொதுமாது அவரிடத்து உள்ளன்புடையாளாய் அவரிடத்துச்சென்று தன்னெண்ணத்தை அறிவிப்ப அவரும் இயைந்து அவளதுஇல்லத்திற்சென்று அவளதுபோகத்தைநுகராது நுகர்ந்திரண்டுநாளிருந்தனர். இரண்டாநாளிரவிலேமறைந்து விட அவள் அவரைத்தேடிப் புலம்புவாளாயினள். அவரோதிருவரங்கனுடைய திருக்கோயிலையடைந்து திருமாலையழைத்து அவரது மார்பகத்தணிந்திருந்த விலையேயறப்பெற்ற மாணிக்கமாலையை அவர்தரப்பெற்றார். அதனை அம்மாதுக்குநல்கி அவளைநோக்கிப்பெண்ணே யாம்செல்லுதும் நீஇன்றுபோல என்று நம்மைநினைப்பினும் நாம்வருவேமென்றுகூறி அவ்விடம்விடுத்துத் திருப்பராய்த்துறை திருவீங்கோய்மலை திருவாட்போக்கி திருக்கடம்பன்துறைதிருமுக்கூடல் முதலியதலங்களைத்தரிசித்துக் கருவூரையடைந்து இனிதுவீற்றிருந் தருளினர். திருவரங்கத்திலே திருப்பள்ளியுணர்த்தும் அடியார்கள் திருமால் திருமார்பகத்திருந்த அரதனவடங்காணப்பெறாது மயங்கிப்பாகவதர்களுக்கறிவிப்ப அவர்கள் ஒருங்குகூடி ஆராய்வாராயினர். அப்பொழுது அப்பொதுமாது அவ்விரத்தினமாலையை மார்பகத்தணிந்தவளாய் வெளியேபோதர அவளைப்பிடித்துக்கோவிலார்முன்னர்க் கொணர்ந்தார்கள். அவளைவிசாரித்த பொழுது அவள்ஒருபிராமணர் கொடுப்பப்பெற்றேன். அவர் இன்றும் என்மனைக்குவருவாரெனப் பாகவதர்கள் அவளை அவள்வீட்டிற்கனுப்பிவிட்டு நகர்காவலனைநோக்கி அவள்வீட்டைக்காவல் செய்யவும் கள்வன்வருமேல் பற்றிக்கொணரவுங் கற்பித்தார்கள். அன்றிரவிலே கருவூர்த்தேவரை அப்பெண்ணுனவள் நினைக்க

அஃதுணர்ந்துபோந்த அவருடன் அவள்உரையாடா நிற்புழி
நகர்காப்போர் அவரைச்சென்றுபற்றி மறுநாள் கோவிற்கூட்
டத்தாரிடத்திலே ஒப்புவித்தார்கள். பாகவதர்கள் கருவூர்த்தே
வரைநோக்கி இப்பெண்ணணங்கிற்கு இவ்விரத்தினவலியைத்
தந்தவர்நீர்தாமோவென அவர் ஆமென்றார். அற்றேல் இதனை
உமக்குத்தந்தவர் யாவரெனக் கருவூர்த்தேவர் இதனைஎனக்குக்
கொடுத்தவர் திருவரங்கேசரேஎன்றார். அவர்கள்நகைத்து இம்
மாலையையுமக்குத் திருவரங்கேசர்தந்தருளிய துண்மையாயின்
அவனை இச்சபையகத்தழைத்துச் சொல்லுவித்தல் வேண்டு
மென்றார்கள். கருவூர்த்தேவர் திருவரங்கப்பெருமானை அவ்
வண்ணஞ் செய்யுமாறுவேண்ட அவர் ஆகாயத்திலேதோன்றி
யாவருங்கேட்ப இவ்விரத்தினமாலையைக் கருவூர்த்தேவருக்கு
நாமேகொடுத்தோம் என்றருளிச்செய்து மறைந்தார். பாகவ
தர்கள்பயந்து கருவூர்த்தேவரைவணங்கி அபராதம்க்ஷமிக்க வே
ண்டினார்கள். அவ்வாறே அனுக்கிரகம்செய்து கருவூரையடைந்
து வசித்திருந்தார். ஒருநாள்இரவிலே கருவூர்த்தேவரது குலத்
தினராகிய பிராமணர்கள்சிலர்கூடிஅரசனிடத்துச்சென்று கரு
வூர்த்தேவர் மரபுக்கடாத மதுவூனருந்தி வாமபூசைசெய்கின்
றார். அதனைநோக்கி அவரைக்கண்டித்தல் வேண்டுமென்றுகூற
அரசன்ஒருவாறுஇசைந்துகருவூர்த்தேவரதுஆச்சிரமத்தையடை
ந்து அவருத்தாரப்படி அவர்மாணுக்கர் அவரிருக்கையின் ஒவ்
வோர்பாகத்தையுங் காட்டக்கண்டான். அங்கு வேதாகமமுணர்
ந்த தபோநிதிகளும் அவர்கள்பூண்பனவும் பூசையாகமுதலிய
வைதிகசற்காரியங்கள் செய்தற்கான உபகரணங்களும் மலிந்
திருத்தலைக்கண்டான். அரசன்பயந்து கருவூர்த்தேவர் பாதங்
களிலே வீழ்ந்துவணங்கி தான்செய்த பிழையைப் பொறுக்க
வேண்டுமென்றுமன்றாடினான். கருவூர்த்தேவர் அரசனைநோக்கி
இப்பொழுது இவ்விடத்துள்ள பிராமணர்கள் இருக்கையைப்
பரிசோதித்துவாவென்று பணித்தருள அங்ஙனமேசென்று பா
ர்க்கும்பொழுது அங்கு மதுக்குடங்களும் புலால்களும் நிறைந்
திருத்தல்கண்டு அவர்களைமுனிந்[illegible]கரத்தைவிடுத்து வேட்

ரோடு காட்டகத்தழலும்படி துறத்தினான். இதனைக் கருவூர்த் தேவருக்குணர்த்த அவர்அரசனைநோக்கி அவர்களைநீத்தல்கூடாது. அரசன்யாவரையும் பொதுவாகப் புரத்தல்வேண்டுமென்று கூறியனுப்பினார். அரசனாற்கடியப்பட்ட அந்தணர்கள் திரண்டு ஆம்பிராநதிக்கரையையடைந்து கருவூர்த்தேவருக் கிடர்செய் யக்கருதிக்காத்திருந்தார்கள். கருவூர்த்தேவர் ஆம்பிராநதிக்குச் சென்றும் அவர்களிடத்து அகப்படாமல் திருவானிலைக்கோயிலை யடைந்தார். அவர்களும் பின்தொடர்ந்து ஆலயத்தையடைந் தார்கள். கருவூர்த்தேவர் கதியடையவேண்டியகாலம் சமீபித்த படியால் அவர்பசுபதீச்சுரரைத்தழுவிக்கொள்ள அவ்வளவில் சிவ பெருமான் தம்முள்ளே இரண்டறக்கலந்துகொண்டருளினார். அப்பொழுது தேவதுந்துமியார்த்தன. தேவர்கள்பூமழைசெய் தார்கள். பிராமணர்கள் அவரதுமெய்யன்பையும் சிவபெருமா னது திருவருளையுங்கண்டுபயந்து தங்கள்பிழைக்காகப் பரிதபித் தார்கள். அப்பொழுதுஆகாசவாணி அவர்கள்தப்பிதங்கள் மன் னிக்கப்பட்டனவென்று விளம்பிற்று. அன்பர்கள் அதிசயித்துக் கொண்டாடினார்கள்.

திருச்சிற்றம்பலம்.

கருவூர்ப்புராணவசனம்
முற்றுப்பெற்றது.

மெய்கண்டதேவர்மேலடிவாழ்க.
சிவஞானயோகிகள்திருவடிவாழ்க.

இஃது.
கோயமுத்தூர்வித்துவான்
கந்தசாமிமுதலியாரியற்றியது.

சோதனைபத்திரம்.

பக்கம்.	பாட்டு.	அடி.	பிழை.	திருத்தம்.
3	8	3	பூத்தக்கவுணி	பூத்தகவுணி
4	14	2	களிரும்	களிறும்
	15	4	சோழநார்	சோழனார்
9	8	4	யேற்றி	யேத்தி
	12	3	வணந்தரு	வளந்தரு
10	17	2	மிழைத்தனன்	மிழைத்தனை
12	29	1	வனமொரு	வனவொரு
14	41	2	யேற்றுடன்	யேத்துடன்
	44	4	புகன்றன்பால்	புகன்றனமால்
15	49	3	றற்பணம்	றர்ப்பணம்
16	55	2	வகுக்குறு	வகுக்குது
17	61	1	கொண்டெடம்	கொண்டடம்
19	14	1	செங்கோல்	செங்கால்
23	37	1	கவரிதழ்	கவிரிதழ்
24	46	3	லறிரு	விறிரு
31	32	1	சுளைநறு	சுவைநறு
33	45	2	யின்பசுந்	யிற்பசுந்
	47	2	துளையுஞ்	துறையுஞ்
	48	2	பிறந்தைவாரு	பிறந்தைவாரி
38	10	3	தெய்வை	தேய்வை
40	7	3	ஷை	ஷை
41	13	2	பரபரனே	பராபரனே
	18	2	குணக்கென	குடக்கென
42	21	1	பின்புதிய	பிற்புதிய
	25	1	சனாந்தகனுந்	சனாந்தனனுஞ்
45	5	1	உற்றுளையு	உற்றுறையு
		2	றுளதவனி	றுளதவணி
48	2	4	படைத்ததனால்	படைத்தனனால்
52	9	1	சூர்க்கோக்குரு	சூர்க்கொக்குரு
		4	கொழூத்தெறி	கொழித்தெறி
53	20	2	றளைகுற்றூந்	றறைகுற்றூந்
	21	2	புகன்றனன்	புகன்றனம்

பக்கம்.	பாட்டு.	அடி.	பிழை.	திருத்தம்.
56	17	1	வாணீணில	வானீணில
57	19	4	நிலைவு	நிலவு
	20	4	னொந்தகன் றனன்	னோர்ந்தகன் றனன்
58	26	2	ருயறிங்	ருயரிங்
	27	2	திற்புக்கா	திர்புக்கா
60	1	4	வயனிடை	வயினிடை
62	10	3	கற்பபுரி	கர்ப்பபுரி
	12	3	நாழும்	நாளும்
	13	1	மதிற்தோற்றம்	மதித்தோற்றம்
64	28	3	கேழ்வி	கேள்வி
65	1	1	வண்டுநாண்	வண்டுணை
67	13	1	துணிரின்	துணரின்
		3	கெழிமி	கெழுமி
70	30	2	கொழுத்தெறி	கொழித்தெறி
74	20	1	தனித்தொடீ	தனிற்றொடீ
	24	1	வியாழங்	வியாளங்
79	13	4	லொன்றுமுறை	லொன்றுமுனா
.80	21	1	றுயருழன்ரு	றுயருழந்தா
81	26	4	புலர்ந்தான்	புலந்தான்
	28	4	சாந்தான்	சார்ந்தான்
82	33	3	தவிர்த்து	தவித்து
84	45	2	துழங்கி	துளங்கி
86	58	2	விற்பருவ	விற்புருவ
	63	4	யையவுற்ற	வையவுற்ற
90	87	3	யியற்றினும்வாம்	யியநீறினும்வான்
	88	3	நிலைவறநிறப்பி	நிலைவுறநிற்பி
95	1	4	மிழநகை	மிளநகை
96	7	3	கொழுவ	கொளுவ
98	20	1	டுயிருழப்ப	டுயருழப்ப
	21	4	கொடுங்கடல்	தொடுங்கடல்
100	88	3	விடல்குழை	வுடல்குழை
101	45	3	தவசில்	தவிசில்
107	10	3	விரற்கோ	விரற்கொ
108	18	4	விணாஞ்சி	விறைஞ்சி

பக்கம்.	பாட்டு.	அடி.	பிழை.	திருத்தம்.
109	20	3	கழிபொருந்நூல	கழிபெருந்நூல
	22	3	தறியாமை	தரியாமை
		4	போழ்ந்து	போந்து
110	27	1	சாற்றி	சாத்தி
111	31	2	முள்ளிரிற்	முள்ளிறிற்
	35	2	குரைத்த	குறைத்த
		3	முப்பாதக	முபபாதக
113	47	1	னெய்	நெய்
117	1	3	பிறைதாள்	பிறைதாழ்
119	14	2	புணந்துமென	புணர்துமென
	15	3	பதிகளிகிற்	பதிகளிற்
131	30	1	முதிறமுக்	முதிருமுக்
132	40	1	வாயினுந் [ட	வாயிலுந்
143	52	4	தொக்கத்தொண்	தொக்கதொண்ட
146	6	3	வாணகைப்பலரு	வாணகைப்பரு
147	12	2	தனர்வாது	தனரலாது
152	45	1	நுதலினுதலி	நுதலிநுதலி
155	10	4	ருணைப்பரோ	ருணைப்பாரோ
156	18	2	றிழைத்தாலு	றிளைத்தாலு
157	26	2	காதவ	காவத
159	40	3	தேன்றுக்கமழ்	தேனறுக்கமழ்
162	62	4	தனைவலித்தான்	தனில்வலித்தான்
163	66	1	யனைக்கடஇ	யனைக்கடஉ
164	76	2	சுரூபமு	சுருவமு
167	97	3	பொனணிஞப்ப	பொனணிநாப்ப
173	134	4	மிடற்றோர்புரி	மிடற்றோற்புரி
174	141	1	வியற்றினரிரு	வியற்றினிரிரு

☞ 31-37-40-65-82-100-146-149 பக்கங்களில், உருஞ்சு,, என்றுவருபவைகளை உரிஞ்சு,, என்றுகொள்க.

சோதனைபத்திரம்.

வசனம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
6	7	ஆகாயாத்தி	ஆகாயத்தி
11	13	பசுபதிஞயக	பசுபதிநாயக
23	23	ராதிகளையு	ராதியர்களையு
28	24	அரசன்	அரசர்
30	22	ஜுழ்ந்தார்	ஜுழ்த்தார்
31	4	வாலயத்	வாலயத்தை
33	30	அங்கும்துக்	அங்குமதுக்